ISSN 3049-0723 (Online)

தமிழ்மணம் சர்வதேச தமிழ் ஆய்விதழ்

TAMILMANAM INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL STUDIES

தொகுதி 1 இதழ் 08 மே 2025
Volume 1 Issue: 08 May 2025

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும்
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
A Widely Indexed Open Access Peer Reviewed
Multi disciplinary Monthly Scholarly Indian Journal
Indexed by Google Scholar and many other research databases.

Available online @
www.tamilmanam.in

Published by
Dept of Library and Information Science & Dept of Tamil,
Nallamuthu Gounder Mahalingam College,
90, Palghat Road, Pollachi 642001, Tamilnadu, INDIA
Website: https://www.ngmc.org/

Vol. 1 No. 08 (2025): Tamilmanam May 2025

அறிவுப் பெருவெளியில் ஒரு புதிய அலை: தமிழ்மணம் மே 2025 இதழ் ஒரு பார்வை

அறிவியல், இலக்கியம், சமூகவியல் எனப் பல்வேறு துறைகளிலும் புதிய ஆராய்ச்சிகள் வெளிவரும் காலமிது. இத்தகைய சூழலில், 'தமிழ்மணம்' எனும் ஆய்விதழ், தனது முதல் தொகுதியின் எட்டாவது இதழாக, மே 2025 சஞ்சிகையை வெளியிட்டுள்ளது. கடந்த ஏப்ரல் 24, 2025 அன்று வெளியிடப்பட்ட இவ்விதழ், பன்முகத்தன்மை கொண்ட ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கி, வாசகர்களுக்குப் புதிய சிந்தனைகளையும், ஆழமான பார்வைகளையும் வழங்குகிறது.

இவ்விதழில் சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரை பரவலான தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. டாக்டர் கே. சிங்காரவேலுவின் ‘நெய்தல் நிலப்பொருட்களும் மருத்துவப் பயன்களும்’ எனும் கட்டுரை, நெய்தல் நிலத்தின் தாவரவியல் மற்றும் மருத்துவ முக்கியத்துவத்தை ஆழமாக ஆராய்ந்து, பண்டைய அறிவை நவீன காலத்துடன் இணைக்கிறது. மேலும், திருமதி கே. சுகன்யா மற்றும் டாக்டர் டி. லதா ஆகியோர் ‘ஆற்றுப்படை நூல்கள் காட்டும் விருந்தோம்பல் திறம்’ குறித்து ஆய்வு செய்து, சங்க கால விருந்தோம்பலின் சிறப்பையும், அதன் சமூக முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்துகின்றனர். எம். மகேஸ்வரி மற்றும் டாக்டர் ஜி. சாந்தமூர்த்தி ஆகியோர் ‘நற்றிணையில் உடன்போக்கு’ என்ற தலைப்பில் சங்க கால அகவாழ்வின் ஒரு முக்கியப் பகுதியான உடன்போக்கு நிகழ்வைப் பற்றிய நுண்ணிய பார்வையை முன்வைத்துள்ளனர்.

நாடக இலக்கியப் பிரிவில், இர. கீதா மற்றும் முனைவர் க. சிங்காரவேலுவின் ‘சேரதாண்டவ நாடகத்தில் கதைப்பின்னலும் பாத்திரப்படைப்பும்’ எனும் கட்டுரை, நாடகத்தின் கருப்பொருள், கதை அமைப்பு மற்றும் கதாபாத்திரங்களின் வளர்ச்சி ஆகியவற்றை விரிவாகப் பகுப்பாய்வு செய்கிறது. ப. குருமூர்த்தி மற்றும் டாக்டர் எஸ். வைத்தியேஸ்வரன் ஆகியோர் ‘சங்க இலக்கியத்தில் உலகாயதம்’ என்பதைப் பற்றிய ஒரு தத்துவார்த்த அணுகுமுறையை வழங்கி, பண்டைய தமிழ்ச் சமூகத்தில் உலவிய உலகாயதக் கருத்துக்களை வெளிக்கொணர்கின்றனர். நவீன இலக்கியத்தில், திருமதி சு. லாவண்யா மற்றும் முனைவர் இரெ. இளங்கோவன் ஆகியோர் ‘ஜி. நாகராஜன் சிறுகதைகளில் உணர்வுகளால் சிறக்கும் கதைகள்’ குறித்து ஒரு விரிவான ஆய்வை மேற்கொண்டு, ஜி. நாகராஜனின் படைப்புலகின் தனித்தன்மையை எடுத்துக்காட்டுகின்றனர்.

சமூகவியல் மற்றும் மானிடவியல் சார்ந்த கட்டுரைகளும் இவ்விதழில் முக்கிய இடம்பிடித்துள்ளன. கே. விஜயகுமாரி மற்றும் டாக்டர் எம். பிரேமா ஆகியோர் ‘இனக்குழு மக்களின் நம்பிக்கை - மகிமைப் பொருள்கள்’ குறித்து மானிடவியல் அணுகுமுறையில் ஆய்வு

செய்து, பழங்குடி சமூகங்களின் நம்பிக்கை முறைகளை விளக்குகின்றனர். சமூகத்தில் புறக்கணிக்கப்படும் பிரிவினரைப் பற்றிய ஆய்வாக, முனைவர் கி. அய்யப்பன் ‘சமூகத்தில் கைம்பெண்டிர் நிலை’ குறித்து ஒரு சமூகப் பார்வையை வழங்கியுள்ளார். இதேபோல், முனைவர் சு. அனுலெட்சுமி ‘கொல்லிமலை மலையாளி பழங்குடி மக்களின் வாழ்வியல் போராட்டங்கள்’ குறித்து ஆழமான கள ஆய்வை மேற்கொண்டு, அந்த மக்களின் அன்றாட சவால்களையும், போராட்டங்களையும் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார்.

சமகால முக்கியத்துவம் வாய்ந்த தலைப்புகளும் இந்த இதழில் இடம்பெற்றுள்ளன. செ. குகநாதன் மற்றும் செ. மகேஸ்வரி ஆகியோர் ‘சுழலியல் மாசுபடுதலும் தீர்வுகளும்’ குறித்து ஆய்வு செய்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதற்கான நடைமுறைத் தீர்வுகளையும் முன்வைக்கின்றனர். கிருபாசக்தி. க. சி. ‘இசைக்கருவிகளின் இயங்கியல்’ குறித்து ஒரு தனித்துவமான பார்வையை முன்வைத்து, இசைக்கருவிகளின் அறிவியல் மற்றும் கலை அம்சங்களை விளக்கியுள்ளார். இறுதியாக, அருள்மதி இலெனின் ‘வகுப்பறை கற்பித்தலில் தகவல் தொடர்பு தொழில்நுட்பம்’ எனும் கட்டுரையின் மூலம் நவீன கல்வியில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் பங்களிப்பு, அதன் பயன்கள் மற்றும் சவால்கள் குறித்து விரிவாகப் பேசுகிறார்.

மொத்தத்தில், தமிழ்மணம் மே 2025 இதழ், இலக்கியம், சமூகம், அறிவியல், சுற்றுச்சூழல் மற்றும் தொழில்நுட்பம் எனப் பல்துறைகளிலும் ஆழமான ஆராய்ச்சிகளைத் தாங்கி வந்துள்ளது. இது ஆய்வாளர்களுக்கும், தமிழார்வலர்களுக்கும் பயனுள்ள ஒரு தொகுப்பாக அமைகிறது. புதிய கண்டுபிடிப்புகளையும், பன்முகப் பார்வைகளையும் உள்ளடக்கிய இவ்விதழ், அறிவுலக வளர்ச்சிக்கு ஒரு சிறந்த பங்களிப்பாகும் என்பதில் ஐயமில்லை.

DOI: https://doi.org/10.63300/m98f8y13

Published: 04/24/2025

TABLE OF CONTENT:

S.No.	Article Title (English & Original Tamil Title)	Author(s)	Page Range	DOI
1	Neithal Landscape Objects and Medicinal Uses நெய்தல் நிலப்பொருட்களும் மருத்துவப் பயன்களும்	Dr. K. Singaravelu	364-379	10.63300/tm0108202501
2	Hospitality Depicted in the "Aatrupadai" Literature ஆற்றுப்படை நூல்கள் காட்டும் விருந்தோம்பல் திறம்	Mrs. K. Suganya, Dr. D. Latha	380-389	10.63300/hqqzny11
3	Natrinaiyil Udanpokku நற்றிணையில் உடன்போக்கு	M. MAGESWARI, Dr.G.SANTHAMOORTHY	390-397	10.63300/22mn8864
4	The Story Structure and Character Development in the CheraThandavam Drama சேரதாண்டவ நாடகத்தில் கதைப்பின்னலும் பாத்திரப்படைப்பும்	இர.கீதா, முனைவர் க. சிங்காரவேலு	398-404	10.63300/tm0108202504
5	Beliefs of Ethnic Groups - Objects of Glory Anthropological Approach இனக்குழு மக்களின் நம்பிக்கை - மகிமைப் பொருள்கள் மானிடவியல் அணுகுமுறை	K. Vijayakumari, Dr. M. Prema	405-414	-
6	ULAGAYATA IN SANGAM LITERATURE சங்க இலக்கியத்தில் உலகாயதம்	ப.குருமூர்த்தி, Dr.S.VAITHEESWARAN	415-427	-
7	Analysis of story of impression of G. Nagarajan's Short stories ஜி. நாகராஜன் சிறுகதைகளில் உணர்வுகளால் சிறக்கும் கதைகள் – ஓர் ஆய்வு	திருமதி சு. லாவண்யா, முனைவர் இரெ. இளங்கோவன்	428-439	10.63300/tm0108202506
8	Environmental pollution and solutions சுழலியல் மாசுபடுதலும் தீர்வுகளும்	செ குகநாதன், செ மகேஸ்வரி	441-453	-
9	The Dynamics of Musical Instruments இசைக்கருவிகளின் இயங்கியல்	கிருபாசக்தி.க.சி.	454-467	-
10	ICT Integration in Classroom Teaching வகுப்பறை கற்பித்தலில் தகவல் தொடர்பு தொழில்நுட்பம்	அருள்மதி இலெனின்	466-477	10.63300/tm0108202510
11	Status of widows in society சமூகத்தில் கைம்பெண்டிர் நிலை	முனைவர் கி. அய்யப்பன்	478-493	10.63300/tm0108202511
12	The Life Struggles of the Malayali Tribal People of Kolli Hills கொல்லிமலை மலையாளி பழங்குடி மக்களின் வாழ்வியல் போராட்டங்கள்	முனைவர் சு. அனுலெட்சுமி	494-503	10.63300/tm0108202512

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
A Monthly Peer-Reviewed International Research Journal
E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

Neithal Landscape Objects and Medicinal Uses

Dr. K. Singaravelu

Assistant Professor, Department of Tamil, Thiruvalluvar University, Serkkadu, Vellore – 632 115

Email: tamilsingam80@gmail.com, Mobile: 9486619899

Abstract

The word "Thinai" signifies land. Tholkappiyar mentions four types of land, excluding Palai.When discussing Purathinai, he refers to Palai as the external thinai of Vanji, thus mentioning five types of land. We can understand from Silappathikaram that Palai land is a transformed state of the Kurinji and Mullai lands. Among the five lands mentioned by Tholkappiyar, the Neythal land is where the people engaged in sea and sea-related livelihoods resided. The people of the Neythal land, based on the environment there, consumed plant-based food items and seafood. This research aims to bring to light the medicinal properties resulting from consuming the plants and marine organisms found in the Neythal land.

Keywords: *Kethakai, Tharuviragam, Punnagam, Palakarai, Varaadi, Sogi.*

நெய்தல் நிலப்பொருட்களும் மருத்துவப் பயன்களும்

முனைவர் க. சிங்காரவேலு

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம் சேர்க்காடு, வேலூர் – 632 115

மின்னஞ்சல் : tamilsingam80@gmail.com, அலைபேசி : 9486619899

ஆய்வுச் சுருக்கம்

திணை எனும் சொல் நிலம் என்னும் பொருளைக் கொண்டதாகும். தொல்காப்பியர் பாலை நிலத்தைத் தவிர்த்து நான்கு நிலங்களைக் குறிப்பிடுகிறார். புறத்திணைகளைக் குறிப்பிடும்போது வஞ்சியின் புறமான அகத்திணையாக பாலை என ஐந்து நிலங்களைக் குறிப்பிடுகிறார். பாலை நிலமானது குறிஞ்சி, முல்லை எனும் இரு நிலங்களின் இயல்பு திரிந்த தன்மையுடையது என்பதை சிலப்பதிகாரம் குறிப்பிடுவதை அறிய முடிகிறது. தொல்காப்பியர் குறிப்பிட்ட ஐந்து நிலங்களில் கடலையும் கடல் சார்ந்த வாழ்வியலை மேற்கொண்டவர்கள் நெய்தல் நில மக்கள். நெய்தல் நிலத்தின் மக்கள் அங்குள்ள சூழலின் அடிப்படையில் தாவர வகை உணவுப்பொருட்கள்,

E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

கடல்சார் உயிரின உணவுப்பொருட்கள் போன்றவற்றை உண்டு வாழ்ந்தனர். நெய்தல் நிலத்தில் கிடைக்கும் தாவரங்களையும், கடல்வாழ் உயிரினங்களையும் உண்பதால் ஏற்படும் மருத்துவத் தன்மையை வெளிக்கொணர்வதாக இவ்வாய்வு அமைகிறது.

திறவுச்சொற்கள்

கேதகை, தருவிராகன், புன்னாகம், பலகறை, வராடி, சோகி,

முன்னுரை

“உடம்பை வளர்த்தேனே உயிரை வளர்த்தேனே” என்பது திருமூலரின் வாக்காகும். உயிர்நிலை பெற்றிருக்க உடல் அவசியம் ஆகும். உடல் நலமாயிருக்க உணவு அவசியமாகும். பழந்தமிழர்கள் தங்களது உடலுக்கும் நிலச்சூழலுக்கும் காலநிலைக்கும் ஏற்ற உணவுப்பொருட்களை உண்டு வாழ்ந்ததால் நோயின்றி நீண்ட நாள் வாழ முடிந்தது. உடல் வலிமையைத் தீர்மானிப்பதில் நிலம் தழுவிய சூழல் முக்கியப் பங்கு வகுக்கிறது. நெய்தல் நிலம் உப்புத்தன்மை நிறைந்த காரணத்தினால் குறைவான தாவர உணவுப்பொருட்களே விளைந்ததால் ஏனைய குறிஞ்சி, முல்லை, மருதம் நிலங்களைச் சார்ந்தவர்களிடமிருந்து பண்டமாற்று முறையில் பெற்ற பொருட்கள் மூலமாக தங்களின் அன்றாட வாழ்க்கைமுறையை மேற்கொண்டனர். நெய்தல் நிலத்தில் தோன்றிய பொருட்கள் குறைவானதாயினும் மருத்துவத் தன்மை அதிகமாகவுள்ளது என்பதை மருத்துவ நூல்களோடு ஒப்பிட்டு ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

நெய்தல் நிலத் தாவரப்பொருட்களும் மருத்துவமும்

தாழை

தாழையின் அறிவியல் பெயர் **Pandanus odaratissimus,Linn.F** ஆகும். இதன் வேறுபெயர்களாக கண்டல், கேதகை, முடங்கல், முண்டகம், முகடக்கன் என அழைக்கப்படுகிறது.

“கைதை வேலி நெய்தலங் கானல்” (**சிலம்பு** 6.150)

“கைதையைத் தன்புனற் சேர்ப்பன்” (**குறுந்.**304.7)

என்ற பாடல் வரிகள் மூலம் கைதை என்ற பெயரைத் தாழை கொண்டுள்ளதை அறியலாம்.

அலைநீர் தாழை அன்னம் பூப்பவும்” (**சிறுபாண்.**146)

Copyright (c) Author

E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

என்ற பாடல் வரிகள் மூலம் கடற்கரை ஓரங்களிலுள்ள உப்பங்களிகளிலும் நீர்நிலைகள் அருகிலும் வளரும் தன்மையுடையதை அறியலாம்.

தாழைப் பூவில் ஆண் பூ, பெண் பூ என்று இருவகை உண்டு. ஆண் பூ மணம் மிக்கதாகவும், பெண் பூ அன்னாசிப் பழம் போன்று வடிவம் கொண்டதாகவும் அமைந்திருக்கும். இவற்றுள் செந்தாழை, வெண் தாழை என்ற இரு வகை உண்டு.

பழங்காலத்தில் அம்மைநோய் வந்தபோது தாழம்பூவினைக் கட்டிவிட்டு கிருமிநாசினியாகப் பயன்படுத்துவர். தாழையில் இலை, பூ, சோறு, விழுது என அனைத்தும் மருத்துவப் பயன் மிக்கதாகும். தாழை விழுதானது பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் முறையை முறையாக ஏற்படுத்தும், பசித்தீயினை உண்டாக்கும், இரத்த சோகையை போக்கும் தன்மையுடையது, ஆண்மையை அதிகரிக்கும் தன்மையுடையது என்பதை,

> **“மடிச்சோற்றான் மங்கையர்க்கு மாதாந்தப் பூப்பாம்**
> **வெடிச்சபூநற் பசியை விளைக்குந் – தடித்தமுனை**
> **சுக்கிலத்தை நெய்யைத் துலவிக்குஞ் சோபையெனும்**
> **அக்குலத்தை நீக்கும் அறி”** (அ.கு.83)

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம்.

பனை

பனை கடற்கரையின் ஓரத்திலும் மணற்பாங்கான இடத்திலும் வளரம் தன்மையுடையது. பனையின் அறிவியல் பெயர் **Borassus flabellifer, Linn** ஆகும். இதனுடைய வேறுபெயர்களாக தாலம், கரும்புறம், ஏடகம், காமம், தருவிராகன், தாளி என்பதை அறிய முடிகிறது. சேர மன்னர்கள் தங்களுடைய அடையாள மாலையாக பனம்பூவை சூடியுள்ளனர். பனைக்கு போந்தை என்ற பெயரும் உண்டு. ஆண் பனை, பெண் பனை, கூந்தல் பனை, நாட்டுப்பனை, தாளிப்பனை, நிலப்பனை போன்ற பனை வகைகள் உள்ளதாக அபிதான சிந்தாமணி குறிப்பிடுகிறது.

> **“மூட பனையத்து வேர் முதலா”** (புறம்.229)
> **“இரும்பனையின் குரும்பை நீரும்”** (புறம்.-24)

என்ற பாடல் வரியின் மூலமும் குறுந்.பா 173, 248,372, கலித்.104, 138, 142 போன்ற சங்க இலக்கியப் பாடல்கள் மூலம் பனைமரத்தைப் பற்றிய குறிப்புகளை அறிய முடிகிறது.

Copyright (c) Author

E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

இதில் இலை, மட்டை, வேர், பூ போன்ற அனைத்தும் மருத்துவத்தன்மை உடையது. பனை மரத்திலிருந்து கிடைக்கும் நுங்கைத் தின்றால் வியர்க்குருவை நீங்கி, நல்ல பசியைத் தரும். செரிமானத் தன்மையைத் தூண்டும். கழிச்சல் நோயினை நீக்கும் என்பதை,

“நீர்வார் வியர்க்குருவை நீக்குமன லாக்குந்தோற்
சார்வா மயஞ்சீதஞ் தானொழிக்குஞ் – சேர்வார்
விழிக்கரையாந் துஞ்சளிக்கு மென்சுரத மானே
கழிக்கரையாந் தாளியிளங் காய்” (அ.கு.229)

பனங்கழங்கு தின்றால் மேகநோய்கள் தீர்ந்து, உடலுக்கு குளிர்செய்யும், அழகையும் தரும் என்பதை,

“பனங்கிழங்கால் அத்திவெப்பு பன்மேகம் போகும்
இனுங்குளிர்ச்சி யோடழகும் எய்தும்” (அ.கு300)

என்ற பாடலடியின் மூலம் பனைமரத்தின் சிறப்பினை அறியலாம்.

புன்னை

கடற்கரை ஓரங்களில் வளரும் தன்மையுடையது. இதன் அறிவியல் பெயர் **Calophyllim inophyllum** ஆகும். இதன் வேறு பெயர் புன்னாகம், நாகம் என்று குறிப்பிடப்படுகிறது.

“நெடுங்காற் புன்னை நித்திலும் வைப்பவும்” (சிறுபாண்.149)

என்ற பாடல் வரியின் மூலம் நீண்ட தாள்களையுடையதாகவும், இதன் அரும்புகள் முத்துக்கள் போல விளங்குகிறது என்பதை குறிப்பிடுகிறது. இம்மரத்தை வலையர்கள் வளைத்து புன்னைமரக் கொம்புகளை வெட்டி பந்தல் அமைத்துள்ளனர் என்பதை,

“கொடுங்காற் புன்னைக் கோடுதுமித் தியற்றிய
பைங்காய் தூங்கும் பாய்மணர் பந்தர்” (பெரும்பாண்.266-267)

என்பதை அறிய முடிகிறது. கடலில் இறாலைத் தின்ற நாரையானது புன்னை மரத்தில் தங்கியது என்பதை,

“கறவழங்கும் இரும்பௌவத்
திறவருந்திய இனநாரை” (பொருநர்.203-204)

என்ற பாடல் மூலம் அறிய முடிகிறது. நல்ல நிழல் தரும் மரமாகவுள்ளது என்பதை,

“பொலம் பூண் எவ்வி நீழல்” (அகம்.366)

Copyright (c) Author

E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

என்ற பாடல் வரியின் மூலம் அறியலாம். புன்னைப் பூவானது சொறி சிரங்கை நீக்குவதாகவும், மேகநோயினை நீக்கும் என்பதை,

"புன்னைப்பூ பித்தமென்பர் போராடு வன்மேகம்
வின்னப் படர்ச்சித்த விப்பிரமம் – பின்னுங்
கரப்பான் சொறிசிரங்குங் காணா தகற்றும்
உரப்பாம் மயக்கமுண்டாக் கும்" (**அ.கு**369)

என்ற பாடல் வரியின் மூலம் அறியலாம்.

அடும்பு

அடும்பு என்பது ஒரு வகையான படரும் கொடியாகும். இதனை ஆட்டுக்கால் அடம்பு என்றும் குறிப்பிடவர் இது ஒரு இருவித்திலைத் தாவரமாகும். கடற்கரையிலும், வறண்ட மணல் மேட்டிலும் வளரும் இயல்புடையது. நெய்தல் நிலத்தில் இப்படரும் கொடி வளரும் என்பதை,

"குன்றோங்கு வெண்மால் கொடியடும்பு கொய்தும் (**நற்**.254)

என்ற பாடலடி குறிப்பிடுவதை அறியலாம். சிவபெருமான் இப்பூவினை தன் தலையில் சூடியதாக திருநாவுக்கரசர் தேவாரத்தில் குறிப்பிடுவதை,

"அடும்பும் கொன்றையும் வன்னியும் மத்தமும் துடும்பல்
செய் சடை தூமணி சோதியான்" (**திருமுறை** 5.84.96)

என்ற பாடல் வரியின் மூலம் அறியலாம். சித்த மருத்துவத்தில் இது கடலாறை, காட்டாறை என்று குறிப்பிடுகின்றனர். இதன் பூவானது உப்புத்தன்மையை நீக்கும் தன்மையுடையது. உடலின் கை, கால் வலி, வீக்கம் போன்றவற்றை நீக்குவது, உடலில் உள்ள உப்புச்சத்தை நீக்குவதற்கும் பயன்படுகிறது. சிறுநீர் பெருக்கியாகவும், சர்க்கரை நோயைத் தீர்க்கும் தன்மையுடையதாகவும் இக்கொடி விளங்குகிறது.

ஞாழல்

நெய்தல் நிலத்தில் மிகுதியாக பூக்கும். வெண் சிறு கடுகு போல நெய்தல் பூ அமைந்திருக்கும். இதன் அறிவியல் பெயர் **Senna sophera** என்பதாகும். ஞாழல் பூவானது வலியில்லாத குழந்தைப் பேற்றிற்கும், தலைவலியைப் போக்கும் தன்மையுடையது.

ஞாழல் நெய்தல் நிலத்தில் கடற்கரையில் மணற்பாங்கான இடத்தில் நீர் ஓடுகின்ற இடத்தில் நிழல் பரப்பித் தழைத்து வளரும் என்பதையும், இதன் மலரின் முதிர்ந்த பூங்கொத்தை தலைமுடியில் கமழ முடிப்பர் என்பதை,

E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

"ஊர்க்கால் நிவந்த பொதும்பருள் நீர்க்கால்
கொழுநிழல் முதிர் இணர்கொண்டு
கழும முடித்து" (**கலி.**56.1-3)

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம்.

நெய்தல்

நெய்தல் மலரின் அறிவியல் பெயர் **Nymphaea violacea,Lehm,** என்பதாகும். ஆம்பல், குவளை, கொட்டி, நீலம், செங்கழுநீர் என்று வேறு பெயர்களைக் கொண்டுள்ளது. இவையனைத்தும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவை என்று குறிப்பிடுகின்றனர். ஆனால் இலக்கிய வழக்கில் வெவ்வேறானவை என குறிப்பிடுவதை,

"பல் இதழ் நிலமொடு நெய்தல் நிகர்க்கும் (**ஐங்.**213)

"மா இதழ் குவளையோடு நெய்தலும் மயங்கி" (**பட்.**241)

என்ற பாடல் வரிகள் மூலம் குவளை, நெய்தல் என்ற வேறு பெயர்களை அறிய முடிகிறது.

கடற்சார் பொருட்களும் மருத்துவமும்

உப்பு

உப்பின் அறிவியல் பெயர் சோடியம் குளோரைடு ஆகும். உப்பு என்பது உணவின் அடிப்படை பொருளாகும். உப்பில்லா பண்டம் குப்பையிலே என்பது பழமொழியாகும். உப்பு தமிழரின் பண்பாட்டோடு தொடர்புடையதாகும். உப்பினை அகநானூற்றில் '**வெண்கல் அமிழ்தம், கடல்விளை அமிழ்து**' என்று சிறப்பிப்பதன் மூலம் உப்பின் அருமையை உணர முடியும். நெல்லும் உப்பும் ஒரே மதிப்பில் இருந்ததாக அகநானூற்றில் குறிப்பிடுவதை,

"நெல்லும் உப்பும் நேரே ஊரி" (**அகம்.**390.8)

"நெல்லின் நேரே வெண்கல் உப்பு" (**அகம்.**140.7)

என்ற பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது.

உப்பு உருவாவதினை,

"கடு வெயில் கொதித்த கல்விளை உப்பு" (**நற்.**354.8)

என்று நற்றிணைப் பாடல் வரிகள் மூலம் உப்பு உருவான நிலை விளக்கப்படுகிறது.

உமணர்களிடமிருந்து பரதவர்கள் உப்பை விற்று நெல்லைப்பெற்றுக் கொண்டதை நற்றிணைப்பாடல்,

Copyright (c) Author

 E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

"தம்நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து
பிற நாட்டு உப்பின் கொள்ளைச் சாற்றி" (நற்.183)

என்ற நற்றிணைப் பாடல் மூலம் அறிய முடிகிறது.

உப்புப்பொருளானது உணவுகளுக்கு தேவையானது மட்டுமின்றி உணவை பாதுகாப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. உப்பின் பெருமை அறிந்த வள்ளுவரும்,

"உப்பு அமைந்தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீல விடல்" (திருக்குறள்.1302)

என்று உணவில் உப்பானது அளவானதாக இருக்க வேண்டும் அளவுக்கு மீறினால், உணவு பாதித்துவிடும் என்று தலைவன் தலைவியின் ஊடலை சாடுவதை அறிய முடிகிறது. உப்பானது கிருமி நாசினியாக பயன்படுவதோடு தைராய்டு போன்ற நோய்களை நீக்குவதாக அமைகிறது.

"அளத்திலுறை நல்லுப் பனல்வாதம் மாற்றுங்
களத்துநோய் தன்னைக் களையுங் கிளைத்தகப
ஆகடைய வல்லைநோய் அஷ்டகுன்ம மும்போக்குங்
காசினியுள் மாதே கூற்று" (அ.கு.385)

என்ற பாடல் மூலம் பித்த நோய், கல்லீரல் நோய், எட்டுவகையான குட்ட நோய்கள் போன்ற நோய்களை நீக்கும் என்பதை அறியலாம்.

மீன்

நெய்தல் நில மக்கள் தாங்கள் பண்டமாற்று முறையில் பெற்ற உணவுப்பொருட்களோடு அன்றாட உணவாக மீன் கருதப்படுகிறது. சங்க காலத்தில் அயிலை மீன், ஆரல் மீன், சுறா மீன், வரால் மீன், வாளை மீன் போன்ற மீன்களை சமையலில் பயன்படுத்தியுள்ளனர். அயிலை மீனை உணவில் பயன்படுத்தியதை,

"அயிலைத் துழந்த அம்புளிச் சொரிந்து" (அகம்.60)

என்றும், வரால் மீன் மற்றும் சுறா மீனை உணவில் பயன்படுத்தியதை,

"மோட்டிரு வரா அல் கோட்டு மீன் கொழுங்குறை" (புறம்.399)

என வரால் மீனையும் கோட்டு மீன் என சுறா மீனையும் குறிப்பிடுவதை அறியலாம்.

வாளை மீனை சமைத்ததை,

"வலையோர் தந்த இருஞ்சுவல் வாளை
நிலையோர் இட்ட நெடுநாண் தூண்டில்" (மலைபடு.455-456)

E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

எனும் வரிகளில் குறிப்பிடுவதை அறிய முடிகிறது. வாளை மீனின் இறைச்சியானது உடலினை நன்கு வலிமை பெற செய்து ஆண்மையை பெருக்கும் தன்மையுடையது எனவும் காலநிலை மாறி வாளை மீனை உண்டால் உடலில் வாயுவைப் பெருக்கும் என்பதை,

"ஆளை வளர்க்குமதி யாண்மைதனை யுண்டாக்கும்
வாளை வென்ற கண்மாதே வாயுவாம் – வேளை
யறியாம லுண்டால ணுகுமே வாதங்
குறியார்கள் வாளைக் குணம்" (**ப.கு.சி.**368)

என்ற பாடல் மூலம் வாளை மீனின் மருத்துவ குணத்தை அறிய முடிகிறது.

மீனை வெயிலில் காய வைத்து கருவாடாகவும் பயன்படுத்தியதை,

"வல் ஊற்று உவரி தோண்டி தொல்லை
முரவு வாய்க் குழிசி முரி அடுப்பு ஏற்றி
வாராது அட்ட வாடுஊண் புழுக்கல்" (**பெரும்பாண்.**98-100)

எனும் பெரும்பாணாற்றுப்படை வரிகள் மூலம் அறியலாம்.

நண்டு

நண்டு இதன் அறிவியல் பெயர் Brachyura என்பதாகும். இது **களவன், குளிரன், நள்ளி, சுவைத்தால், அலவன்** என்ற வேறு பெயர்களில் குறிப்பிடப்படுகிறது. நெய்தல் நிலத்தில் அவசியமான உணவுப்பொருளாகக் கருதப்படுகிறது. நண்டு கடலோரத்தின் தாழையின் வேரில் வளையமைத்து வாழும் நண்டு பற்றி குறிப்பிடுவதை,

"தாழை வேரனை வீழ்துணைக் கிடூஉம்
அலவற் காட்டி நற்பாற் றிதுவென" (**அகம்.**380.6-7)

என்ற பாடல் மூலம் அறியலாம். சங்க இலக்கியத்தில் நண்டு உணவில் சேர்க்கப்பட்டதை,

"அவைப்புமாண் அரிசி அமலை வெண்சோறு
சுவைத்தாள் அலவன் கலவையோடு பெறுகுவீர்"
(**சிறுபாண்.**194-195)

என்ற பாடலடிகள் மூலம் நண்டை உணவாகப் பயன்படுத்தியதை அறியலாம்.

நண்டு உணவானது பித்தத்தை அகற்றி எல்லா வகை பிணிகளையும் நீக்கி அதிக சிறுநீர் பெருக்கும் தன்மையுடையதாகவும், செரிமானத் தன்மையைத் தூண்டுவதாகவுமுள்ளது என்பதை,

"குன்மவலி வாதங் கொடுங்கரப்பா னுண்டாக்குஞ்

Copyright (c) Author

E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

சன்மச் சொறியைத் தருவிக்கும் – பின்னு
முதிரக் கழிச்சறனை யோங்குவிக்கு மாதே
யதிரக் கடனண்டது" (அ.கு.675)

என்ற பாடலடிகள் மூலம் நண்டின் மருத்துவத் தன்மையை அறியலாம்.

நத்தை

நத்தையின் அறிவியல் பெயர் **Rumina decollata** ஆகும். நத்தை ஊமைச்சி என்ற வேறுபெயராலும் அழைக்கப்படுகிறது. சங்க இலக்கியத்தில் நத்தை நந்து, நொள்ளை எனக் குறிப்பிடப்பட்டுள்ளதை,

"கள்ளியங் காட்ட கத்திடை உழிஞ்சில்
உள்ளுள் வாடிய கரிமூக்கு நொள்ளை" (அகம்.353.7-8)

என்ற பாடல் அடிகள் குறிப்பிடுவதை அறியலாம். நத்தை பற்பமானது மூல நோய், செரிமாண நோய், சளி தொடர்பான நோய்களை நீக்கும் தன்மையுடையதாகும் என்பதை,

"நத்தைக் கறிதனக்கு நாடாது மூலமுத
லொத்தமல ரோகமெலா மோடுங்கா – ணித்தநித்தந்
தின்றாற் செரியாது தேடரிய தாதுவிர்த்தி
நன்றாகு மாதே நவில்" (அ.கு.673)

என்ற பாடலடிகள் நத்தையின் மருத்துவப்பயன்களைக் குறிப்பிடுவதை அறியலாம்.

பலகறை

கடலில் கிடைக்கும் ஒருவிதப் பொருள் பலகறை ஆகும். பலகறை இதன் அறிவியல் பெயர் **Cypraea moneta linn** (**Marine shell**) ஆகும். இது சோகி, சோவி, சோழி, சுவடி, வராடி போன்ற வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. பல நிறங்களை உடையதால் பலகறை என்றழைக்கப்படுகிறது.

"மண்ணிய கவடி சோகி வராடியே பலகறைப்பேர்" (அ.கு.674)

என்ற பாடல் அடிகள் குறிப்பிடுவதை அறியலாம். புளியின் விதை போன்றும், வாதுமையின் கொட்டையின் பருமன் அளவிலும் இருக்கும். மஞ்சள், சிவப்பு ஆகிய நிறங்களில் காணப்படும். வெண்ணிற பலகறையே மிகச் சிறந்ததாகும். இதனை பற்பம் செய்து பயன்படுத்தும்போது ஈளை நோய், கல்லீரல் சார்ந்த நோய்கள், காமாலை நோய் போன்ற நோய்களை

E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

நீக்குவதோடு கண் சார்ந்த நோய்களையும் நீக்கும் தன்மையுடையது என்பதை,

“மந்தந்தா கங்கிரகணி மாவிடச் சுரங்கண்ணோய்
தொந்தம் பரிநாமச் சூலைகய – மித்த
வுலகறையைக் காலொடிவை யோடு நரைத்த
பலகறையை காணினியம் பார்” (அ.கு.675)

என்ற பாடல் மூலம் அறியலாம்.

சங்கு

Turb inella rapa என்பது சங்கின் அறிவியல் பெயராகும். நந்து, சுத்தி, நாகு, வளை, கம்பு, கோடு, வாரணம், இடம்புரி, சங்கம், தேவதத்தம் போன்ற வேறுபெயர்களாலும் அழைக்கப்படுகிறது. இந்திய கடற்கரையோரங்களில் அதிகமாக கிடைக்கிறது. இப்பி ஆயிரஞ் சூழ்ந்தது இடம்புரி என்றும், இடம்புரி சங்கு ஆயிரம் சூழ்ந்தது வலம்புரி என்றும், வலம்புரி ஆயிரம் சூழ்ந்தது சலஞ்சலம் என்றும் சலஞ்சலங்கள் ஆயிரம் சூழ்ந்தது பாஞ்ச சன்னியம் என்றும் குறிப்பிடுவர். சங்கில் பலவகை இருப்பினும் மருத்துவத்திற்கு பயன்படுவது ஊதுகின்ற சங்கே ஆகும். சங்கினால் செய்யப்படும் பற்பமானது கண்ணோய், இரத்த பித்த நோய், கபசன்னி நோய், குன்ம நோய் போன்ற நோய்களை நீக்கும் தன்மையுடையது என்பதை,

“கசிவா மிரத்த பித்தங் கண்ணோய்க ளேகும்
பசியாறும் வாதம் பறக்கு – மிசிவுடனே
தங்கு முளைவிரணத் தானகலு மேவெள்ளைச்
சங்கமது வுண்டாயிற்றான்” (அ.கு.641)

என்ற பாடலடிகளால் அறியலாம்.

முத்து

நவமணிகளில் ஒன்றாகவும் கடல்படு திரவியங்களுள் ஐந்தினில் ஒன்றாகவும் கருதப்படுகிறது. சிப்பியிலிருந்து முத்து பிறக்கின்றது. முத்தின் அறிவியல் பெயர் **Pearl** என்பதாகும். முரிவஞ்சி, தூலகம், சுக்கிரன், நித்திலம், தரனம், ஆழிவித்து, சங்கீன்றபிள்ளை, ஆதித்தன்சோதி போன்றவேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது. முத்தானது ஐப்பசி மாதம் சுவாதி நட்சத்திரம் கூடிய சமயத்தில், கடலில் உள்ளிருக்கும் சிப்பிகள் வெளியில் தம் வாயைத் திறந்திருக்கும் காலத்தில் மின்னலுடன் பெய்யும் மழைத்துளி

E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

அச்சிப்பிகளில் விழ வாய் மூடி உள்ளிறங்கி சூல் கொண்டு எழுபவையே உயர்வான முத்துக்களாகும். முத்துப் பிறக்கும் இடங்களாக சிலர் இருபத்து ஒரு இடங்களையும், சிலர் பதின்மூன்று இடங்களையும் குறிப்பிடுவர். முத்து பற்பமானது எலும்புக் காய்ச்சல், உடல் வன்மை குறைவு, ஆண்மை குறைவு, பித்த நோய்கள் போன்றவற்றை நீக்கும் தன்மையுடையது என்பதை,

"அத்திசுரம் சோபை யருசிதுர்ப்ப லம்கண்ணோய்
பித்துவிடஞ் சீதளநோய் பேசுகபம் – கத்தத்
தயிரியநட் டத்தோடு தாதுநட்ட மும்போம்
உயிருறுநன் முத்திருந்தா லோது" (**அ.கு.**494)

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம்.

பவழம்

பவழம் இதை பவளம் என்பர். பவழத்தின் அறிவியல் பெயர் **Coral** என்பதாகும். துகிர், துப்பு. பிரவாளம், வித்துருமம் போன்ற வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. கடலில் வாழும் உயிரினங்களில் ஒரு வகை நுண்ணுயிரியின் புறக்கூடே பவழம் என்று குறிப்பிடுவதை அறிய முடிகிறது.

பவழமானது மருத்துவ குணங்கள் நிறைந்தவை. பவழம் தோடம், கபம், சன்னிபாதசுரம், இருமல், விட சந்துக்களினால் உண்டாகும் காய்ச்சல், தாது நட்டம், தாகம், நாவிலுண்டாகும் சுரசுரப்பு ஆகியவை நீங்கும் என்பதை,

"சுரதோடம் ஐயமுத் தோடசுரங் காசம்
அருசிகீ டத்தாலாம் ஆலம் – பெருவிந்து
நட்டம் அதிதாகம் நாவறட்சி போமொளியுங்
கிட்டும் பவழத்தாற் கேள்" (**அ.கு.**464)

என்ற பாடலடிகள் குறிப்பிடுவதன் மூலம் அறியலாம்.

கிளிஞ்சல்

கிளிஞ்சல் இதன் அறிவியல் பெயர் **Ostrea edults linn common oyster shell** என்பதாகும். சுத்தி, ஏரல் எனும் வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. கிளிஞ்சலில் சிறுகிளிஞ்சல், பெருங்கிளிஞ்சல் என இருவகை உண்டு. கிளிஞ்சல் பற்பமானது மேக நோய்களைப் போக்கும் தன்மையுடையதாகும். மேகநோய்கள், ரோக நோய்கள் போன்றவற்றைப் போக்கும் என்பதை,

"பொய்யடா மற்றதெல்லா மதுமே கம்போம்
புகலிறுதிக் கயரோகம் போகு மப்பா" (**கொங்கணர்** 300)

E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

எனும் கொங்கணர் முந்நூறு பாடல் மூலம் அறியலாம்.

முடிவுரை

ஐவகை நிலங்களில் நெய்தல் நில மக்களுக்கு விளைபொருட்கள் அதிகம் இல்லாததால் பண்டாற்று முறையில் மற்ற நிலங்களில் இருந்து பெற்ற விளைபொருட்களை கொண்டு தங்களின் அன்றாட வாழ்வை மேற்கொண்டுள்ளனர். நெய்தல் நிலத்தில் உணவுப்பொருட்கள் பெரும்பாலும் கடல் சார்ந்த பொருட்களாகவே அமைந்துள்ளது.

நெய்தல் நிலத்தாவரங்கள் மற்றும் கடல்சார் பொருட்கள் மருத்துவ குணம் நிறைந்தவை ஆகும். நெய்தல் நிலத்தாவரங்களான தாழை, பனை, புன்னை, அடும்பு, ஞாழல், நெய்தல் போன்ற தாவர வகைகள் அந்நிலத்தில் வாழ்ந்த மக்களின் உப்புத்தன்மையினால் ஏற்படும் தீங்குகளைக் குறைப்பதாக இருந்துள்ளதை அறிய முடிகிறது.

தாழையை அம்மைநோய்க்கு கிருமிநாசினியாகப் பயன்படுத்தியுள்ளனர். பனையின் அனைத்து பகுதிகளும் மருத்துவத்திற்கு பயன்படுகிறது. பனையின் நுங்கைத் தின்றால் வியர்க்குரு போக்குவதையும், செரிமான பிரச்சனைகளை சரிசெய்வதையும் அறிய முடிகிறது. புன்னைப் பூவானது சொறி சிரங்கை நீக்கும் என்பதையும், மேக நோயினைத் தீர்க்கும் என்பதையும் சித்த மருத்துவ நூல்கள் மூலம் அறிய முடிகிறது. அடும்பு உடலின் கை, கால் வலி, வீக்கம் ஆகியவற்றை நீக்குகிறது. மேலும் உடலிலுள்ள உப்பு சத்தை நீக்குவதற்கும் பயன்படுகிறது. ஞாழல் குழந்தைப்பேற்றின் போது ஏற்படும் வலியைக் குறைக்கவும், தலைவலியைப் போக்குவதற்கும் பயன்படுவதை அறிய முடிகிறது.

கடல்சார் பொருட்களாகிய உப்பு, மீன், நத்தை, நண்டு, சங்கு, முத்து, பவழம், பலகறை, கிளிஞ்சல் போன்றவைகளும் நெய்தல் நில மக்கள் அவற்றைப் பயன்படுத்தியதன் மூலம் கடல்சார் பொருட்கள் மருத்துவத்திற்கு பயன்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

நெய்தல் என்பது கடல் சார்ந்த உவர்நிலம் ஆகும். உவர்ப்புத் தன்மை இந்நிலத்தோடு தொடர்புடையது. உப்பு எந்தவொரு உணவுப்பொருளையும் வீணாக்காமல் பாதுகாப்பதற்கு பயன்படுகிறது. நெய்தல் நில மக்கள் உப்பின் தன்மையை அறிந்து மீனைப் பதப்படுத்தி கருவாடாக்க உப்பினைப் பயன்படுத்தியதன் மூலம் உணவுப்பொருளை பாதுகாப்பது, பக்குவப்படுத்துவது போன்ற அறிவியல் சிந்தனையைக் கொண்டிருந்தனர் என்பதை அறிய முடிகிறது.

E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

நெய்தல் நிலத்தில் மீன் வகைகளான அயிலை, வரால், வாளை ஆகிய மீன்களைப் பயன்படுத்தியுள்ளதன் மூலம் மீன்களின் மருத்துவத் தன்மையை நெய்தல் நில மக்கள் அறிந்தே உண்டனர் என்பதை சித்த மருத்துவ நூல்கள் மூலம் அறிய முடிகிறது. முத்து, பவளம், சங்கு, கிளிஞ்சல் போன்றவற்றை அனுபவத்தின் வாயிலாக மருத்துவத் தன்மையுடையதாக இருந்ததை அறிந்தே அவற்றைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

பார்வை நூல்கள்

1. தியாகராஜன், இரா., குணபாடம் தாது சீவ வகுப்பு, 1952, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை, சென்னை.
2. முருகேச முதலியார், க.ச., குணபாடம் மூலிகை வகுப்பு, 1936, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை, சென்னை.
3. பிரியா பாஸ்கர், சுவையான சங்க கால தமிழர் சமையல், 2005, கண்ணதாசன் பதிப்பகம், தி.நகர், சென்னை – 17.
4. புலியூர் கேசிகன், சங்க இலக்கிய தொகுதி, சாரதா பதிப்பகம், 2010, சென்னை.
5. மாதையன், பெ., அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும், 2010, பாவை வெளியீடு, இராயப்பேட்டை, சென்னை – 14.

Reference Books

1. Thiyagarajan, R., Gunapaadaam Thaadhu Seeva Vaguppu,1952 Indian Medicine, Derpartment of Homoeopathy, Chennai.
2. Murugesa Mudaliyar, K.S., Gunapaadam Mooligai vaguppu, 1936, Indian Medicine, Derpartment of Homoeopathy, Chennai.
3. Priya Bhaskar, Suvaiyana sanga kaala Thamizhar Samayal, 2005, Kannadasan Padhipagam, T-Nagar, Chennai -17.
4. Puliyur Kesigan, Sanga Ilakkiya Thogudhi, 2010, Saaradha Padhipagam, Chennai.
5. Maadhaiyan, P., Agathinai Kotpadum Sanga Aga Kavidhai Marabum, 2010, Paavai Veliyeedu, Royapettah, Chennai-14.

Copyright (c) Author

E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

ஆசிரியர் பங்களிப்பு அறிக்கை: எதுவுமில்லை.

ஆசிரியர் ஒப்புதல் வாக்குமூலம்: எதுவுமில்லை.

ஆசிரியர் பிரகடனம்: இந்த ஆய்வுக் கட்டுரையின் உள்ளடக்கம் மற்றும் ஆசிரியர்த்துவத்தில் எந்தவிதமான போட்டி நலன்களும் இல்லை என்று நான் அறிவிக்கிறேன்.

உரிமம்

பதிப்புரிமை (c) ஆசிரியர்

கட்டுரையின் உள்ளடக்கம் கிரியேட்டிவ் காமன்ஸ் அட்ரிபியூஷன் 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் உரிமம் பெற்றது.

Author Contribution Statement: NIL.

Author Acknowledgement: NIL.

Author Declaration :I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

License

Copyright (c) Author

The content of the article is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
A Monthly Peer-Reviewed International Research Journal
E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

Hospitality Depicted in the "Aatrupadai" Literature

Mrs. K. Suganya
Ph.D. Research Scholar (Part-Time) Department of Tamil Studies Holy Cross College (Autonomous), Tiruchirappalli - 02.
Dr. D. Latha
Research Supervisor Department of Tamil Studies Holy Cross College (Autonomous), Tiruchirappalli - 02

Abstract:

Hospitality is an exemplary virtue unique to the Tamil people. It is the act of welcoming and treating guests who come seeking help with a pleasant demeanor. Sangam literature reveals that not only kings but also people born into high society and ordinary citizens excelled in hospitality during the Sangam period. Poets, bards, female dancers, and performers, known for their generosity, visited kings and, without directly asking for material things, highlighted their poverty through their unique talents, singing, and receiving gifts. The kings, as patrons, acknowledged the plight of the poets, praised them greatly, and bestowed gold, wealth, mountains, and jewels as gifts. These events are proclaimed in Sangam poems. Sangam period poets, in their "Aatrupadai" works, have highlighted various kings who excelled in hospitality by alleviating the suffering of poverty that plagued the lives of their fellow artists. This study explores the noble virtue of hospitality that has been prevalent among the people for two thousand years, as evidenced by Sangam literature, which serves as a mirror reflecting the lifestyle of ancient Tamils.Seeking generous and munificent kings, poets, bards, female dancers (Viraliyars), actors, and others would go to their palaces. Instead of simply pointing out their impoverished state, they would use their unique talents to sing and receive gifts. In the *Porunararrupadai*, they praised Karikal Peruvalathan, in the *Sirupanarrupadai*, Nalliyakkodan, in the *Perumpanarrupadai*, Thondaiman Ilandhirayan, and in the *Koothararrupadai*, Nannan. Therefore, this research abstract outlines the way in which kings hosted poets and others as guests and the generosity shown by hosting.

Keywords: Aatruppadai, Tamil Lierature, Tamil people, lifestyle of ancient Tamils

ஆற்றுப்படை நூல்கள் காட்டும் விருந்தோம்பல் திறம்

திருமதி கா. சுகன்யா
முனைவர் பட்ட ஆய்வாளர், (பகுதி நேரம்), தமிழாய்வுத்துறை, புனித சிலுவை கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி - 02.
முனைவர் தா. லதா
ஆய்வு நெறியாளர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி - 02.

Copyright (c) Author

E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

ஆய்வுச் சுருக்கம் :-

வாரி வழங்கும் வள்ளல் தன்மை நிறைந்த அரசர்களை நாடிப் புலவர்களும், பாணர் களும், விறலியரும், கூத்தரும் இன்ன பிறரும் அரண்மனைக்குச் சென்று அவர்களிடம் தங்களின் வறுமை நிலையைச் சுட்டிக்காட்டி அவர்களிடம் பொருள் பெறாமல் தங்களின் தனித்திறமையால் பாடிப் பரிசில் பெற்றனர்.பொருநராற்றுப்படையில் கரிகால் பெருவளத்தானையும், சிறுபாணாற்றுப்படையில் நல்லியக்கோடனையும், பெரும்பாணாற்றுப்படையில் தொண்டைமான் இளந்திரனையும், கூத்தராற்றுப்படையில் நன்னனையும் புகழ்ந்து பாடி உள்ளனர். அவ்வாறாக,அரசர்கள் புலவர்களுக்கும் இன்ன பிறருக்கும் விருந்தளித்த திறத்தைப் பற்றி எடுத்துரைப்பதே ஆய்வுச் சுருக்கமாகும்.

முன்னுரை:-

விருந்தோம்பல் என்பது தமிழருக்குரிய சிறந்த பண்பாகும்.தன்னை நாடிவரும் இரவலரை இன்முகத்துடன் வரவேற்று உபசரித்தலே விருந்தோம்பல். சங்க காலத்தில் அரசர்கள் மட்டுமின்றி, உயர் குடியில் பிறந்த மக்களும்,சாதாரண குடிகளும் கூட விருந்தோம்பலில் சிறந்து விளங்கிய திறத்தைச் சங்க இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது. வாரி வழங்கும் வள்ளல் தன்மை நிறைந்த அரசர்களை நாடிப் புலவர்களும், பாணர் களும், விறலியரும், கூத்தரும் அரண்மனைக்குச் சென்று அவர்களிடம் தங்களின் வறுமை நிலையைச் சுட்டிக்காட்டி அவர்களிடம் பொருள் பெறாமல் தங்களின் தனித்திறமையால் பாடிப் பரிசில் பெற்று இல்லம் திரும்பினர். வள்ளல்கள் ஆகிய அரசர்களும் புலவர்களை ஆதரித்து அவர்களின் வறுமை நிலையை உணர்ந்து வெகுவாகப் பாராட்டிப் பொன்னும்,பொருளும் மலையும், மணியும் கொடையாகத் தந்த நிகழ்வுகளை சங்கப் பாடல்கள் பறைசாற்றுகின்றன. சங்க காலப் புலவர்கள்,தம்மோடு ஒத்த கலைஞர்களின் வாழ்வில் நிலை கொண்டிருந்த வறுமை என்னும் கொடிய நோயைப் போக்கி விருந்தோம்பலில் சிறந்து விளங்கிய பல்வேறு அரசர்களைப் பற்றி ஆற்றுப்படை நூல்களில் எடுத்தியம்பி யுள்ளனர். பண்டைக்காலத் தமிழர்களின் வாழ்வியலைப் படம் பிடித்துத் காட்டும் கண்ணாடியாக விளங்கிய சங்க இலக்கியங்கள் வழி ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மக்களிடம் நிறைந்திருந்த விருந்தோம்பல் என்னும் உயரிய பண்பு குறித்து ஆய்வதாக இவ்வாய்வு விளங்குகின்றது.

ஆய்வு கருதுகோள் :-

சங்க காலத்தில் கொடை வள்ளல்களாக விளங்கிய மன்னர்கள் இரவலர்களுக்கும், தன்னை நாடி வருவோருக்கும் இன்முகத்தோடு வரவேற்று விருந்தளித்த பாங்கை எடுத்துரைப்பதே ஆய்வு கருதுகோளாகும்.

விருந்து – புதுமை:-

விருந்து என்னும் சொல் புதுமை என்னும் பொருளைத் தருவதாகும்.விருந்து என்பதைத் தொல்காப்பியர் "விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" (தொல் - பொருள் 237) என்று குறிப்பிடுகிறார். சங்க நூல்களிலும் விருந்து, விருந்திற்கு,விருந்தின், விருந்தினம், விருந்தினன், விருந்துற்ற, விருந்துறந்து, விருந்தொடு என்ற சொற்கள் புதுமை என்னும் பொருளிலேயே வந்துள்ளதை அறிய

முடிகிறது. நற்றிணையில் விருந்தினை,"விருந்தின் தீம் நீர்" (நற்றிணை - பாடல் - 53) என்றும், புதிய காட்டுப் பகுதியை "விருந்தின் வெங்காட்டு" (நற்றிணை - பாடல் - 103) என்றும், புதிதாக வந்த வெண்குருகினை, "விருந்தின் வெண்குருகு" (நற்றிணை - பாடல் - 167) என்றும், புதிதாக வந்த பாணரை, "விருந்தின் பாணர்" (நற்றிணை - பாடல் - 172) என்றும் கூறியுள்ளதைக் காண முடிகிறது.

இல்லறத்தில் விருந்தோம்பல் :-

கணவனும்,மனைவியும் தமது இல்லற வாழ்வில் அன்புடனும், அறத்துடனும் விளங்கி விருந்தோம்பல் என்னும் பண்பை முக்கியக் கடமையாகக் கொண்டு செயல்பட வேண்டும் என்பதைப் ,

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்" (குறள் - 322)

"இருந்தோம்பி இல் வாழ்வதெல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு" (குறள் - 81)

ஆகிய குறள்கள் சுட்டுகின்றன. இல்லறத்தில், கணவன், மனைவி ஆகிய இருவரும் இணைந்து விருந்தோம்ப வேண்டும் என்பதை இளங்கோவடிகள்,

"அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்

துறவோருக்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்

விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை" (கொ.காதை - 71 முதல் 73)

என்ற வரிகள் மூலம் எடுத்தியம்பியுள்ளார்.

மன்னர்களின் விருந்தோம்பல் பண்பு:-

கரிகால் வளவன்:-

சங்கத் தமிழ் மன்னர்களின் தலைச் சிறந்தவன் கரிகாலன் ஆவான். சங்கக் காலச் சோழ அரசர்களில் சிறந்தவன் அவனே அவன் சிறந்த கொடையாளியாகத் திகழ்ந்தான். பொருணராற்றுப் படையில் அவனது சிறந்த விருந்தோம்பல் பண்பு வெளிப்பட்டு நிற்கின்றது. பொருணன் ஒருவன் "தடாரி* என்ற இசைக் கருவியை இசைத்துக் கொண்டு கரிகாலனுடைய அரண்மனையை அடைந்தான். வறுமை அவனை வாட்டி வதைத்தது. எனவே பொருள் வேண்டி அவன் கரிகாலனை நாடிச் சென்றான். அங்கு சென்று இசையை முழக்கித் தன் இசைத்திறனை வெளிப்படுத்தினான். இதனைக் கேட்ட கரிகாலன் விரைந்து வந்து அவனை உள்ளே அழைத்துச் சென்று உட்கார வைத்துப் பல உபசார மொழிகளைப் பேசி மகிழ்வித்தான். அவனை அன்புள்ளத்துடன் நோக்கினான். பின்பு அவன் அணிந்திருந்த கந்தலாடைகளை அகற்றி நுண்ணிய நூலால் செய்த ஆடையை அவனுக்கு அளித்து மகிழ்ந்தான். அச்சமயம் அரசனுடைய ஏவல் மகளிர் அங்கு தோன்றி தங்கத் தட்டில் இருந்த மதுவைக் கோப்பைகளில் ஊற்றி அவனுக்கு வழங்கினர். பொருணனும் களைப்பு நீங்க நன்கு உறங்கினான். அவனுக்குப் பணி செய்ய ஏவல் இளைஞன் ஒருவனும் நியமிக்கப் பட்டிருந்தான். நன்கு உறங்கிய பின் மறுநாள் காலை அவன் உணவுக் கூடம் அழைத்துச் செல்லப்பட்டான். அங்கு அவனுக்கு நன்கு கொழுத்த

செம்மறியாட்டின் மேல் தொடையில் வெந்த இறைச்சியும், சுட்ட இறைச்சியும் கரிகாலன் உடனிருந்து உண்ணச் செய்தான். இது தவிர வேறு பல தின்பண்டங்களையும் அவனுக்கு உண்பித்து மகிழ்ந்தான். அவன் உண்ண முடியாத அளவிற்குப் பலவிதக் கறிகள் அவனுக்கு விருந்தாகப் படைக்கப்பட்டன. இவ்வாறு பொருநன் நன்கு உண்டு மகிழ்ந்து அவ்விடத்து விருந்தோம்பலை வேண்டிய அளவு துய்த்து மகிழ்ந்தான். பல நாட்கள் கழித்துத் தன்னாடு செல்லவேண்டும் என்று அவன் வேண்டிய போது கரிகாலன்மிகவும் மனம் வருந்தி -நீர் என் கூட்டத்தை விட்டுச் செல்கின்றனையோ? என்று மனம் வருந்திக் கூறினான் வேறுவழியின்றி இறுதியாய்ப் பல களிற்றுடன் பிடிகளையும், ஆண் கன்றுகளையும் பரிசிலாக அளித்துத் தானே உடனிருந்து அவனை வழியனுப்பி வைத்தான். இவ்வாறு கரிகாலன் கலைஞர்களை உபசரித்துத் தன் விருந்தோம்பல் பண்பை வெளிப்படுத்தி நின்றான் என்பதை,

“கொல்லை யுழுகொழு வேய்ப்பப் பல்லே

யெல்லையு மிரவு மூன்றின்று மழுங்கி

யுயிர்ப்பிடம் பெறாஅ தூண்முனிந் தொருநாட்

ஊருக்குச் செல்லப் பரிசிலன் விரும்புதல்

செயிர்த்தெழு தெவ்வர் திறைதுறை போகிய

செல்வ சேறுமெந் தொல்பதிப் பெயர்ந்தென

மெல்லெனக் கிளந்தன மாக வல்லே

யகறி ரோவெம் மாயம் விட்டெனச்

சிரறியவன் போற் செயிர்த்த நோக்கமொடு (பொ.ஆ.படை: 117-124).

என்ற வரிகளின் வழி அறியலாம்.

ஓய்மானாட்டு நல்லியக்கோடன்:-

ஓய்மானாட்டை நல்லியக்கோடன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் பெருவள்ளலாகத் திகழ்ந்தான். இவனுடைய அரண்மனை புலவர்கட்கும். பொருணருக்கும், கூத்தருக்கும்.பாணருக்கும் விறலியருக்கும். எப்போதும் திறந்திருக்கும். அவர்கள் தடையின்றி எப்பொழுது வேண்டுமானாலும் அவனைச் சந்தித்துத் தம் திறனைக் காட்டிப் பரிசில் பெறலாம். அவ்வாறு சிறிய யாழை இசைத்துச் சென்ற பாணன் ஒருவன் நல்லியக்கோடனது அரண்மனையை அடைந்தான். அவனை நல்லியக்கோடன் மகிழ்வுடன் வரவேற்றான். அவன் அணிந்த கந்தலாடையை நீக்கி மூங்கில் ஆடை பொன்ற மெல்லிய ஆடையை அளித்து மகிழ்ந்தான் தெளிந்த கள்ளினை அளித்து அவன் களைப்பை நீக்கிப் புத்துயிர் ஊட்டினான். வீமனுடைய மடை நூலில் உரைத்தபடி சுவையுடன் சமைக்கப்பட பலவித உணவுப் பொருட்களை பொற்கலங்களில் அளித்து மகிழ்ந்தான். சிறுபாணன் குடும்பத்தில் அனைவரும் விருந்துண்டு மகிழ்ந்தனர். தானே முன் நின்று அவர்களுக்குப் பலவித உணவளித்து உபசரித்தான். பின்பு அவர்களுக்குப் பொன்னையும், பொருளையும் வாரி வழங்கினான். அவ்விடம் பாணன் பல நாள்

E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

தங்கிய பின்னர் குதிரைகள் பூட்டிய தேரில் பாணனை இருத்தி அவனை மகிழ்வுடன் வழியனுப்பி வைத்தான் (சிறு.பா. 235- 261)

தொண்டைமான் இளந்திரையன்:-

காஞ்சியை தலைநகராகக் கொண்டு தொண்டை நாட்டை ஆண்டவன் தொண்டைமான் இளந்திரையன் ஆவான். அவளை நாடி வரும் புலவர்களுக்கு வாரி வழங்கும் வள்ளலாகத் திகழ்ந்தான். கடையெழு வள்ளல்களுக்குப் பின் இவனே பெருவள்ளலாகத் திகழ்ந்து விருந்தோம்பலில் தன்னிகரற்றுத் திகழ்ந்தான். அவனை வறுமையால் பீடித்த பாணன் ஒருவன் பரிசில் வேண்டி நாடிச் சென்றான். அவனை இன்முகத்துடன் வரவேற்ற இளந்திரையன் அவனது கந்தலாடையை நீக்கினான். பின்னர்ப் பாலாடை போன்ற நுண்ணிய ஆடையை அளித்து மகிழ்ந்தான். பின்பு தலைச் சிறந்த சமையல் கலைஞர்களைக் கொண்டு சமைக்கப்பட்ட செந்நெல்லும் இறைச்சியும் சேர்ந்த உணவைப் பலவிதப் பதார்த்தங்களுடன் தானே உடனிருந்து அவனுக்கு உண்பித்தான். பின்பு அவனை மகிழ்விக்க அவன் தலையில் பொற்றாமரையை அணியச் செய்து அழகு பார்த்தான். அவன் மனைவியான விறலியருக்கு பொன்னாலான பலவித மாலைகளை அணியச் செய்து மகிழ்வித்தான். பின்பு நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் பலவிதப் பரிசில்களைத் தந்து பாணனை வழி அனுப்பி வைத்தான். இவ்வாறு நாடி வந்தவர்களை நன்முறையில் தன் விருந்தோம்பல் பண்பால் உடலும், உள்ளமும் குளிர்வித்து அனுப்பினான்.

நன்னன்:-

செங்கண்மாவை ஆண்டவன் நன்னன். இவன் மாபெரும் வீரனாவான். அதே சமயம் சிறந்த வள்ளலாகவும் திகழ்ந்தான். தான் போரில் வென்று கொணர்ந்த பெரும் செல்வங்களை எல்லாம் புலவர்களுக்கும், பாணர்களுக்கும். கூத்தர்களுக்கும் வாரி வழங்கிப் பெரும் கொடையாளி என்று பெயர் பெற்றான் என்பதை,

“தொலையா நல் இசை உலகமொடு நிற்ப

பலர் புறம்கண்டு அவர் அரும் கலம் தரீஇ

புலவோர்க்கு சுரக்கும் அவன் ஈகை மாரியும்

இகழுநர் பிணிக்கும் ஆற்றலும் புகழுநர்க்கு

அரசு முழுது கொடுப்பினும் அமரா நோக்கமொடு

தூ துளி பொழிந்த பொய்யா வானின்

வீயாது சுரக்கும் அவன் நாள் மகிழ் இருக்கையும்” (மலை 70-76).

என்ற வரிகளின் வழி அறியலாம்.தன்னை நாடி வந்த புலவர்களை அவன் அன்புடன் எதிர்கொண்டு அழைப்பான். பின்பு அவர்களை உயரிய ஆசனங்களில் இருத்தி நீங்கள் என் மீது உள்ள ஆசையால் இங்கு வந்தீர்கள் போலும்" என்று அன்புடன் உசாவுவான். அவர்களை அன்புள்ளம் கொண்டு நோக்கி அருட்பார்வை பார்ப்பான். நுட்பமாக நெய்யப்பட்ட பலவிதக் கலிங்கங்களை அவர்களுக்கு அளித்து அவர்களை இருக்கச் செய்வான். அவர்களைப் பல நாட்கள் தன்னுடன் இருக்கச் செய்து உபசரணைகள் பல புரிந்து மகிழ்விப்பான். அவர்களுக்குத் தேவையான அளவு

Copyright (c) Author

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
A Monthly Peer-Reviewed International Research Journal
E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

உணவும், உடையும்அளித்து மகிழ்வான். கூத்தர் தலைவருக்குப் பொற்றாமரையைத் தலையில் சூடியும். விறலியருக்கு தோளணிகள் பல அணிவித்தும் மகிழ்விப்பான். தேர்கள், யானைகள், பசுக்கள், குதிரைகள், மற்றும் பெரும் செல்வமளித்து அவர்களை இன்முகத்துடன் அனுப்பி வைப்பான். இவ்வாறு நன்னன் தன்னை நாடி வரும் கலைஞர்களுக்குப் பலவிதமான உபசரணைகள் செய்து மகிழ்விப்பான்.

சாமானிய மக்களின் விருந்தோம்பல் பண்பு:-

சங்கக் காலத்தில் மன்னர்களேயன்றிச் சாமானியரும் விருந்தோம்பலில் சிறந்து விளங்கினர். சிறுபாணாற்றுப் படை சாமானிய மக்களின் பலவித விருந்தோம்பல் பண்புகளை எடுத்துரைக்கின்றது. எயிற்பட்டணத்தை அடையும் சிறுபாணர்களுக்கு அங்குள்ள நுளை மகள் காய்ச்சிய அரிய தேரலை அன்புடன் அளிப்பதுடன் குழல் மீன் சூட்டையும் உண்ண அளிப்பாள் (சிறு பா:158-164) அத்துடன் முல்லை நிலத்தைச் சேர்ந்த வேலூர் சென்றால் அங்கு முல்லை நில மக்கள் விருந்தினரை அன்புடன் உபசரித்துப் புளியங்கறியிட்ட சோறும், ஆமானின் சூட்டிறைச்சியும் வேண்டிய அளவு தந்து உபசரிப்பர்.

"உறுவெயிற்கு உலைஇய உருப்பு அவிர் குரம்பை

எயிற்றியர் அட்ட இன் புளி வெஞ்சோறு

தேமா மேனி சில் வளை ஆயமொடு,

ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவிர்"(சிறு பா:174-177). ஆவூர் நாட்டு மருத நில மக்கள் வந்த விருந்தினரை உபசரித்து அமலை வெண்சோற்றை நண்டின் கலவையுடன் அளித்துப் போற்றுவர்.

"அவைப்பு மாண் அரிசி அமலை வெண்சோறு

கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவீர்"(சிறு பா:194-195)

என்ற வரிகளின் வழி அறியலாம்.பசியுடன் செல்லும் பெரும் பாணன் எயிற்றியர் வசிக்கும் பகுதி வழியே சென்றால் அவர்கள் இவனை அழைத்துத் தாம் சமைத்த புல் அரிசி சோற்றுடன் கருவாட்டையும் கலந்து தேக்கிலையில் வைத்து உண்விப்பர் (பெரு பா:99-105) பாலை நிலத்து ஏயினர் வீடுகள் வழியாகச் செல்லும் பாணர்களுக்கு ஈத்தின் விதை போன்று சிவந்த சோற்றை உடும்பின் பொறியலுடன் சமைத்து அளிப்பர். முல்லை நிலத்துக் கோவலர் குடியிருப்பை அடையும் கலைஞர்களுக்கு நண்டின் பார்ப்பைப் போன்ற தினை அரிசியால் செய்த சோற்றுடன் பாலையும் தந்து உபசரிப்பர் (பெரு.பா: 167-168). அத்துடன் அவ்வூர்களில் வந்த விருந்தினர்களுக்குச் சிறிய பருக்கைகளாலான சோற்றையும், வேங்கை பூவை ஒத்த அவரை விதையின் பருப்பைப் போட்டுச் செய்த பருப்பு சோற்றை அளித்து மகிழ்வர் (பெரு பா: 195-196). மருத நிலத்தை அடையும் பாணருக்கு அந்நில மக்கள் செந்நிற நெல் சோற்றையும், கோழிக்கறியின் பொறியலுடன் சேர்த்து வழங்கிச் சிறப்பிப்பர் என்பதை,

"வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி

மனை வாழ் அளகின் வாட்டொடும் பெறுகுவிர்" (பெரு - பா:255-256),

E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

அதே பகுதியில் உள்ள கரும்பு ஆலைகள் நோக்கிச் செல்லும் இவர்களுக்கு வேண்டிய அளவு கரும்புச் சாறும், கட்டிகளும் அம்மக்கள் கொடுத்து மகிழ்விப்பர் என்பதை,

"விசயம் அடூஉம் புகை சூழ் ஆலைதொறும்

கரும்பின் தீம் சாறு விரும்பினிர் மிசைமின்"(பெரு.பா:261- 262).

என்ற வரிகளின் வழி அறியலாம்.

நெய்தல் நிலத்தில் செல்லும் பாணர்களுக்குத் தவிடு நீக்கப்பெறாத சத்து நிறைந்த அரிசியைக் களியாகத் துழாவி, பெரிய பாத்திரத்தில் ஆற்றி, அவற்றுடன் நெல் முளையை இட்டு இடித்துச் சேர்த்து இரண்டு நாட்கள் அப்படியே இரவு பகலும் ஜாடியில் ஊறவைத்துப் பின்னர் வெந்நீர் ஊற்றி வேக வைத்து கைகளால்அலைத்துப் பிழிந்து பக்குவமாய்ச் செய்யப்பட்ட மதுவைப் பச்சை மீன் சூட்டுடன் அளித்து மகிழ்வர் என்பதை,

"அவையா அரிசி அம் களி துழவை

மலர் வாய் பிழாவில் புலர ஆற்றி

பாம்பு உறை புற்றின் குரும்பி ஏய்க்கும்

பூம் புற நல் அடை அளைஇ தேம் பட

எல்லையும் இரவும் இரு முறை கழிப்பி

வல் வாய் சாடியின் வழைச்சு அற விளைந்த

வெம் நீர் அரியல் விரல் அலை நறும் பிழி

தண் மீன் சூட்டொடு தளர்தலும் பெறுகுவிர்" (பெரு பா:275-282).

என்ற வரிகளின் வழி அறியலாம்.மேலும் அங்குள்ள அந்தணர்கள் இல்லங்கள் வழியே சென்றால் நெல் சோற்றுடன் வெண்ணையில் வெந்த மிளகுப் பொடியும் கறிவேப்பிலையும் கலந்து வாட்டிய மாதுளையை ஜாடியில் நன்கு ஊற வைத்த மாவடுவுடன் கலந்தளிப்பர்.

"வளை கை மகடூஉ வயின் அறிந்து அட்ட

சுடர் கடை பறவை பெயர் படு வத்தம்..

சேதா நறு மோர் வெண்ணெயின் மாதுளத்து

உருப்புறு பசும் காய் போழொடு கறி கலந்து

கஞ்சக நறு முறி அளைஇ பைம் துணர்

நெடு மர கொக்கின் நறு வடி விதிர்த்த

தகை மாண் காடியின் வகைபட பெறுகுவிர்.. (பெரு.பா:304-310).

E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

என்ற வரிகள் எடுத்துரைக்கின்றன.பட்டிணங்கள் வழியாகச் சென்றால் பெண் பன்றிகளுடன் புணர்ச்சியில் சேராமல் தனியே குழிகளில் வளர்க்கப்பட்டு நெல்லை இடித்துமாவாக்கி அதை உணவாகக் கொடுத்து வளர்க்கப்பட்ட ஆண் பன்றிகளைக் கொன்று சமைத்த கறி உணவைக் கள்ளுடன் சேர்த்துப் பாணருக்கு அவ்விடத்து மக்கள் அன்புடன் வழங்குவர் (பெரு பா:242-245), இதை அடுத்துள்ள கடற்கரை தோப்புகளில் இனிய பலாப்பழமும், இளநீரும், வாழைப் பழமும், பனையின் நுங்கும் வள்ளிக்கிழங்குடன் சேர்த்து வழங்குவர்.

முடிவுரை:-

ஆற்றுப்படை நூல்களைத் தவிர பிற சங்க இலக்கியங்களிலும் சங்க காலத்தில் வாழ்ந்த அரசர்களின் கொடைப் பண்பையும் ,விருந்தோம்பலையும் காண முடிகிறது. ஆனால் ஆற்றுப்படை நூல்கள் மட்டுமே தமிழர்களின் விருந்தோம்பல் என்னும் சிறந்த பண்பை மிகுதியாகக் காட்டி உள்ளன. மேலும் அக்காலத்தில் வாழ்ந்த மன்னர்களின் அன்புள்ளம் கொண்ட மனநிலையை படம் பிடித்துக் காட்டுகின்றன. சங்க காலச் சமுதாயத்தின் நிலையையும்,நாட்டின் வளங்களையும், புலவர்களின் வறுமைநிலையையும் காண முடிகின்றது. புலவர் வறுமை நிலையிலும் தம் கவி பாடும் திறத்தால் அரசர்களிடம் கொடை பெற்ற திறத்தை அறிய முடிகிறது. சங்க கால அரசர்களுக்கு வீரமும் கொடையும் இரு கண்களாக விளங்கியது என்பதை ஆற்றுப்படை நூல்கள் பறைசாற்றுகின்றன. கலைஞர்களின் வாழ்வியல், விருந்தோம்பல் மற்றும் அரசர்களின் கொடைப் பண்புகளுக்குச் சான்றாதாரங்களாக விளங்குகின்றன என்பதை அறிய முடிகின்றது.

உசாத் துணை நூல்கள்:-

1.சங்க இலக்கியம் பத்துப்பாட்டு நெடுநல்வாடை - டாக்டர்.கதிர் முருகு, கௌரா புத்தக மையம்,சென்னை.

2. மலைபடுகடாம்- டாக்டர்.கதிர் முருகு, கௌரா புத்தக மையம்,சென்னை.

3. சிறுபாணாற்றுப்படை- டாக்டர்.கதிர் முருகு, கௌரா புத்தக மையம்,சென்னை.

4. பொருணராற்றுப்படை- டாக்டர்.கதிர் முருகு, கௌரா புத்தக மையம்,சென்னை.

5. பெரும்பாணாற்றுப்படை- டாக்டர்.கதிர் முருகு, கௌரா புத்தக மையம்,சென்னை.

6. சிலப்பதிகாரம் -மூலமும் உரையும் புலியூர் தேசிகன், சரண் புக்ஸ் (2021)

7. உலகப் பொதுமறை திருக்குறள் - பேராசிரியர் பே.சு. கோவிந்தராசன் - இரண்டாம் பதிப்பு 2002 - ஆதிபகவன் பதிப்பகம்

8. தொல்காப்பியம் - புலியூர் கேசிகன் உரை - ஸ்ரீ பாரதி பப்ளிகேஷன்ஸ்.

9. நற்றிணை புலியூர் கேசிகன் உரை - ராம் பப்ளிகேஷன்ஸ் (2018) சென்னை.

Copyright (c) Author

E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

References:

1. Sangam Literature - Pattuppaatu Nedunalvadai - Dr. Kathir Murugu, Gowra Book Center, Chennai.

2. Malaipadukadaam - Dr. Kathir Murugu, Gowra Book Center, Chennai.

3. Sirupanarruppadai - Dr. Kathir Murugu, Gowra Book Center, Chennai.

4. Porunararruppadai - Dr. Kathir Murugu, Gowra Book Center, Chennai.

5. Perumpanarruppadai - Dr. Kathir Murugu, Gowra Book Center, Chennai.

6. Silappathikaram - Original Text and Commentary by Puliyur Desikan, Charan Books (2021).

7. Ulaga Podhumarai Thirukkural - Professor Pe. Su. Govindarajan - Second Edition 2002 - Adhipagavan Pathippagam.

8. Tholkappiyam - Commentary by Puliyur Kesigan - Sri Bharathi Publications.

9. Nattrinai - Commentary by Puliyur Kesigan - Ram Publications (2018) Chennai.

ஆசிரியர் பங்களிப்பு அறிக்கை: எதுவுமில்லை.

ஆசிரியர் ஒப்புதல் வாக்குமூலம்: எதுவுமில்லை.

ஆசிரியர் பிரகடனம்: இந்த ஆய்வுக் கட்டுரையின் உள்ளடக்கம் மற்றும் ஆசிரியர்த்துவத்தில் எந்தவிதமான போட்டி நலன்களும் இல்லை என்று நான் அறிவிக்கிறேன்.

உரிமம்

பதிப்புரிமை (c) ஆசிரியர்

கட்டுரையின் உள்ளடக்கம் கிரியேட்டிவ் காமன்ஸ் அட்ரிபியூஷன் 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் உரிமம் பெற்றது.

Author Contribution Statement: NIL.

Author Acknowledgement: NIL.

Author Declaration :I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

License

Copyright (c) Author

The content of the article is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

Natrinaiyil Udanpokku

M.MAGESWARI[1], Dr.G.SANTHAMOORTHY[2]

1. Research Scholar (Full Time). Department of Tamil, Kalaignar Karunanidhi Government Arts College, Tiruvannamalai., Affiliated to Thiruvalluvar University, Serkkadu, Vellore – 632115.
2. Associate Professor, Department of Tamil, Kalaignar Karunanidhi Government Arts College, Tiruvannamalai – 606603.

Abstract:
The great contribution of the Tamil society of that time is the Sangam literature. Sangam literature is literature that arose in pure thought in a pure life environment; those literatures are called classical literatures. Sangam literatures that record the life and literary principles of the Tamil people, both inside and outside, can be referred to as paintings that speak. Sangam literatures are helpful in understanding the life and good ideas in harmony with nature. Among these, the news about the trend in the inner works of Sangam literature, such as the Natrinai; is to examine.

Keywords : Sanga literature, Consensus, Consensus situation, Consensus in the family, Leader-leader theft, Consensus expenditure.

நற்றிணையில் உடன்போக்கு

மா.மகேஸ்வரி
முனைவர்பட்ட ஆய்வாளர்(முழுநேரம்), முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி, திருவண்ணாமலை. இணைவு திருவள்ளுர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் – 632115.

முனைவர் கோ. சாந்தமூர்த்தி, (நெறியாளர்)
இணைப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி, திருவண்ணாமலை 606603.

முன்னுரை

அன்றைய தமிழ் சமூகத்தின் அளப்பரிய நன்கொடை சங்க இலக்கியங்கள் ஆகும். செம்மையான வாழ்வியல் சூழலில் செம்மையான சிந்தனையில் எழுந்தவை சங்க இலக்கியம்; ஆகும் அவ்விலக்கியங்களை செவ்வியல் இலக்கியங்கள் என்பர். அகம் புறம் என்ற தமிழ் மக்களின் வாழ்வியலையும் இலக்கிய கொள்கைகளையும் பதிவாக்கிய சங்க இலக்கியங்களைப் பேசும் ஓவியங்கள் என்று குறிப்பிடலாம். சங்க இலக்கியங்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையும் நற்கருத்துகளையும் பற்றி அறிந்து கொள்வதற்கு உறுதுணையாக இருப்பன சய்க இலக்கியங்கள் ஆகும். இவற்றில் சங்க

Copyright (c) Author

E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

இலக்கிய அகநூல்களான நற்றிணையில்; உள்ள உடன்போக்கு குறித்த செய்திகளை ஆராய்வதாகும்.

திறவு சொற்கள்

சங்க இலக்கியம் – உடன் போக்கு – உடன் போக்கு நிலைமை – நற்றிணையில் உடன்போக்கு – தலைவன் தலைவி களவு – உடன்போக்கு செலவு.

சங்க இலக்கியம்

சங்க இலக்கிய அகப்பாடல்களில் உடன்போக்கு பாடல்களை தலைவன், தலைவி, செவிலி, தோழி, நற்றாய், கண்டோர் போன்றோர்களின் கூற்றுகள் மூலமாக விரிவாக்கப்படுகின்றன. சங்க நூல்களின் தொன்மையும், அதன் சிறப்புக்கூறுகளையும் நன்கு அறியமுடிகிறது. சங்க இலக்கிய மங்களின் வாழ்வியலை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற திணை அடிப்படையில் பாகுபாடு செய்து வாழ்ந்தனர் மற்றும் அவர்கள் சார்ந்த இயற்கை சூழலையும் படம் பிடித்துக் காட்டுவதாக சங்க இலக்கிய அகப்பாடல்கள் காணப்படுகிறது. இவ்வாறாக அமைந்த சங்க இலக்கிய நூல்களில் நற்றிணையில் உடன்போக்குப் பாடல்களை இனிக் காண்போம்.

உடன்போக்கு

தலைவனும் தலைவியும் யாரும் அறியாதவாறு களவு வாழ்க்கையில் ஈடுபடுவர். பின்பு அலர் எழுதவற்கு முன்பு தோழியின் உதவியுடன் திருமணம் செய்ய நினைப்பர் ஆனால் பெற்றோர் விருப்பம் தெரிவிக்காதபோது தான் உடன்போக்கு நிகழும். உடன்போக்கு என்பது மனம் ஒத்த தலைவனும், தலைவியும் களவு வாழ்வில் இருந்து கற்பு வாழ்க்கைக்கு நகருதல் முதற் நிகழ்வாகும். உடன்போக்கு என்பது களவு வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள தலைவனும், தலைவியும் சுற்றத்தாருக்கும், வீட்டிற்கும் தெரியாமல் தலைவன் தன் சொந்த ஊருக்கு அல்லது வேறு ஊருக்கோ தலைவியை பாலை நிலத்தின் வழியே கொடிய துன்பம் நிறைந்த பாதையின் வழியே அழைத்துச் செல்வான். காதல் வாழ்க்கையை வீட்டில் மறைத்தபோது தான் உடன்போக்கு சென்றபின்னர் அதனைத் தெரிந்த நற்றாய், செவிலி, தோழி, கண்டோர் போன்றோர்களின் பேச்சுகள் மற்றும் புலம்பல்களை நற்றிணையில் அறியலாம்.

Copyright (c) Author

E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

நற்றிணையில் உடன்போக்கு

நல் + திணை நற்றிணை - நல்ல ஒழுங்கலாறு என்று பொருள். அகநூல் - 400 பாடல்களைக் கொண்டது. கடவுள் வாழ்த்து திருமாலைப் பற்றியது. சிற்றெல்லலை ஒன்பது அடி முதல், பேரெல்லை பணிரெண்டு அடிகள் வரை காணப்படுகின்றன. இந்நூலுக்கு முதலில் உரை எழுதியவர் பினத்தூர் நாராயணசாமிஜயர் ஆவர். நல் என்ற அடைமொழிப் பெற்றதாக கூறுவர். இந்நூலில் உடன்போக்கு பாடலாக மொத்தம் 21 பாடல்கள் காணப்படுகின்றன. அவை

1. தலைவன் கூற்று - 9,162,202,264,362,384 - 6
2. தலைவி கூற்று - 10,12,18 - 3
3. கண்டோர் கூற் - 2 - 1
4. செவிலி கூற்று - 110,179,198 - 3
5. நற்றாய் கூற்று - 26,66,143,184,271,279,293,303 - 8

இந்நூலில் காணப்படக்கூடிய அனைத்து உடன்போக்கு பாடகல்களும் பாலைத்திணையைச் சார்ந்தவையாக காணப்படுகிறது. உடன்போக்கு அகப்பாடல்களில் இயற்கைச் சார்ந்த பேச்சுக்கள், அதனின் பின்புலம் போன்றவை ஆராயப்படுகின்றது.

மகட் போக்கிய தாய் நிலை

தலைவியும் தலைவனும் தோழியின் உதவியால் உடன்போக்கு சென்ற பிறகு தலைவி பாலை நிலத்தி;ல் வெம்மையான தன்மையையுடைய நெடிதான பாலை நிலத்தின் வழியில் எப்படி செல்கிறாளோ!. ஓர் இடத்திலும் நிழல் கூட இருக்காத அந்த இடத்தில் புலி குட்டிகளை ஈன்று பசியோடு காவல் காத்துக்கொண்டிருக்கும் அதுபோன்ற கொடிய பாதையில் தலைவி செல்வதை நினைத்து வருந்துகிறாள் இதனை

நின்ற வேனில் உலர்ந்த காந்தள்
அழலவிர் நீள் இடை நிழலிடம் பெறாதென
ஈன்று கான் மடிந்த பிணவுப்பசி கூர்ந்தென
மான்ற மாலை வழங்குநர்ச் செகீஇய

Copyright (c) Author

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
A Monthly Peer-Reviewed International Research Journal
E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

புலி பார்த்து உரையும் புல்லதர்ச் சிறுநெறி

யாங்குவல் லுநள் கொல் தானே – யான் 1

தலைவனோடு தலைவி உடன்போக்கிலே வீட்டை விட்டு போயினாள் எனக்கேட்ட நற்றாய் தனது மகளது மென்மையை நினைத்து வருந்தும் சூழல் இப்பாடல் மூலம் அறியப்படுகிறது.

தேனைக் கலந்தாற் போன்ற நல்ல சுவை உடைய இனிய பால் உணவை பொன்;னால் செய்யப்பட்;ட பாத்திரத்தில் இட்டு அதனை ஒரு கையில் கொண்டு மற்றொரு கையில் முனையில் பூக்களால் சுற்;றப்பட்ட சிறிய கோலை ஏந்திக். கோண்டு அச்சிறுத்தியும் பாலினை குடிக்க மறுத்து ஓடியவள் அவளது மளாகிய சிறிய பெண். இவள் உடன்போக்கு மேற்கொண்ட மகளை எண்ணி நற்றாய் வருந்த அவள் இல்லறம் நடத்தும் அழகினை கண்டு வந்த செவிலித்தாய் அவள் நிலையை நறறாய்க்கு கூற தன் மகளின் அறிவும் ஒழுக்கமும் நற்றாய் வியந்துவதாகவும் நற்றிணையில் காணமுடிகிறது.

இல்லெழு வயலை ஈற்றுஆ தின்றெனப்

பந்து நிலத்து எறிந்து பாவை நீக்கி

அவ்வயிறு அலைத்த என் செய்வினை குறுமகள்

மானமர்ப் பன்ன மையல் நோக்கமொடு 2

இப்பாடலில் மூலம் தலைமனுடன் சென்றுவிட்ட தன் மகளை நினைத்தாள் நற்றாய். தன் இல்லிலிருத்தவாறு பலவாறாகச் சொல்லி சொல்லி மனம் மயங்குகிறாள். மேன்மையும் இளமையும் கொண்டாளான தன் மகள் எவ்வாறு வழி நடப்பாளோ அவளைப் பிரிந்து தானும் ஆற்றிருப்பதோ என அவள் புலம்புகிறாள்.

தலைவியின் அச்சத்தைப் போக்குதல்

தன் இல்லத்தை விட்டு நீங்கித் தலைவனுடன் உடன்போக்கிற்கு செலடகிறாள். ஆவள் வழியிடை வருத்தத்தைப் போக்குவானாகக் காட்டைக் காட்டித் தலைவன் தலைவியின் அச்சத்தை போக்கி பேசிக்கொண்டு வரும் செய்தியை

கண்டிசின் வாழியோ குறுமகள் நுந்தை

அறுமீன் கெழீஇய அறம்செய் திங்கட

Copyright (c) Author

E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

செல்சுடர் நெடுங்பொடி போலப்

பல் பூங் கோங்கம் அணிந்த காடே! 3

இரவில் முழுநிலவு எறிக்கக் கோங்கம் பூக்களால் அழகுடன் தோன்றும் காட்டைக் காட்டி அவள் தந்தை அறம் செய்யும் கார்த்திகை நாளில் எடுத்த கார்த்திகை விளக்கு வரிசைகள் போல் இருக்கின்றது எனப் பனைந்து கூறி அவளை மகிழ்விக்கின்றான். இதனால் காட்டிடையே இரவில் ஏதும் இடையூறில்லை என்று தலைவியிடம் பேசிக்கொண்டே பாலை நிலத்தை கடக்கின்றனர்.

தலைவன் தலைவியை அவள் தமரறியாமல் தன்னுர்க்கு அழைத்துச் செல்லுகின்றான் இடைவழியில் சோர்வு கண்டு அவளைத் தோற்றுவானாகச் சொல்லகின்ற முறையில் அமைந்த பாடல்

வினையமை பாவையின் இயலி நுந்தை

மனைவரை இறந்துவந்தனை ஆயின்

தலைநாட்டு எதிரிய தன்பெயல்எழிலி 4

இப்பாடல் மூலம் தலைவியின் அச்சத்தையும் சோர்வையும் நீக்கி தலைவனுடன் கொடிய பாலை நிலத்தை கடந்து வரும் செய்தியை கூறுவதாக நற்றிணையில் கூறப்படுகிறது.

தாயின் புலம்பல்கள்

தன் மகள் தான் விரும்பிய காதலனுடனே தன் வீட்டில் இருந்து நீங்கி சென்றுவிட்டாள். அதனால் எழுந்த பழியுரைகளைகட் கேட்டுப் பொறுக்கவியலாதவளாயினாள் அவள் தாய். ஆவள் தாய் தன் மனையிடைத்தே இருக்க முடியாதபடி மனம் மயங்கியவாகப் புலம்புகிறாள் இதனை

அம்பல் மூதூர் அலர்வாய்ப் பெண்டிர்

இன்னா இன்னுரை கேட்ட சில்நாள்

அறியேன் போல உயிரேன்

நறிய நாறும் நின் கதுப்பு என்றேனே. 5

தன்மகளாகிய தலைவி தன் காதலுடனே உடன்போக்கிற் சென்றனள் என்பதை அறிந்தும் நற்றாயின் மனம் பலவகையாக பேதலிக்கிறது. அவளுறவை முன்னரே குறிப்பாக தெரியிருந்தால் அதனை நிறைவு

Copyright (c) Author

E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

செய்தற்கு முயலாத தன் அறியாமைக்கு நொந்து புலம்புகிறாள். இதனை

பெருவிதுப் புறுக மாதோ எம்மில்

பொம்மல் ஓதியைத் தன்மொழிக் கொளிஇக்

கொண்டுடன் போக வலித்த

வன்கண் காளையை ஈன்ற தாயே 6

தன் அன்பு மகளைப் பிரந்த தன் வருத்தம் மேலிடைப் பெரிதும் மனம் நொந்நவளான தாய் தன் மகளது மடமை பற்றியோ அன்றி அவளது காதற் செறிவு பற்றியோ அன்றி அவளைத் தன்னோடு அழைத்துச் சென்ற காளையானவன் அவனது வன்கண்மை உடையவனாக அவனை வளர்த்துவிட்ட அவன் தாயானவள் தானும் தன் மகளைப் பிரந்த தன்னைப்போலவே பெரிதும் வருந்த வேண்டும் என்றே புலம்புகிறாள்.

தன் மகள் அவள் காதலனுடன் வீட்டை அகன்று சென்று விட்டதனால் தாயின் மனத்துயரம் அளவிறந்து பெரிதாகின்றது. அவள் தலைவியின் தோழியிடத்தே தன் அவலத்தைச் சொல்வதாக அமைகிறது. பேற்றத் தாய் தன் மனையிடத்தே மருண்டு சொல்லியது போல அமைகிறது.

முடிவுரை

உடன்போக்கு என்ற செய்தி சங்க இலக்கியத்தில் இருப்பதை அறியமுடிகிறது. நற்றிணையில் காணப்படும் பெரும்பாலும் செய்திகள் நற்றாயின் வருத்தம் புலம்பல்கள் மனம் நொந்து பேசியது போன்ற செய்திகள் அதிகம் காணப்படுகின்றன. தலைவி தலைவனுடன் பாலை நிலத்தில் செல்லும் போது அச்சத்தை போக்க தலைவன் பாலை நிலத்தின் நிகழ்வுகளை கூறிக்கொண்டே செல்லுதல்.

நற்றாய், செவிலி, தோழி, தலைவன், தலைவி கணடோர் இக்கதை மாந்தர்கள் உலக வழங்கில் காணப்படுவதைப் போலவே சங்க காலத்தில் படைக்கப்பட்டுள்ளனர் என்று உடன்போக்கு பாடல்கள் மூலம் அறியமுடிகிறது.

தலைவன் தலைவி களவுக் காலத்தில் சந்தித்த உரையாடுல் தலைவனின் உள்ளம் தலைவியின்; உள்ளம் நற்றாயின் உள்ளம் செவிலியின் உள்ளம் கண்டோர் உள்ளம் உடன்போக்கிற்குக் காரணமாக அமைந்த சூழல்கள் தலைவியின் நிலை உடன்போன

மகளைக் குறித்து தாயின் கணிப்பு பாலை நிலத்தின் கொடுமைகள் தலைவியின் துணிச்சல் நற்றாயின் புலம்பல்கள் போன்ற செய்திகள் எட்டு;த்தொகை அகநூல்களான நற்றிணையில் குறிப்பிடுகின்றன.

அடிக்குறிப்புகள்

1.ச.வே சுப்பிரமணியன் - நற்றிணை -29 ,நற்றிணை மூலமும் உரையும், 31 சிங்கர்தெரு, பாரிமுனை, சென்னை – 600001

2.ச.வே சுப்பிரமணியன் - நற்றிணை 179 ,நற்றிணை மூலமும் உரையும், 31 சிங்கர்தெரு, பாரிமுனை, சென்னை – 600001

3.ச.வே சுப்பிரமணியன் - நற்றிணை 202 ,நற்றிணை மூலமும் உரையும், 31 சிங்கர்தெரு, பாரிமுனை, சென்னை – 600001

4.ச.வே சுப்பிரமணியன் - நற்றிணை 362 ,நற்றிணை மூலமும் உரையும், 31 சிங்கர்தெரு, பாரிமுனை, சென்னை – 600001

5.ச.வே சுப்பிரமணியன் - நற்றிணை 143, நற்றிணை மூலமும் உரையும், 31 சிங்கர்தெரு, பாரிமுனை, சென்னை – 600001

6.ச.வே சுப்பிரமணியன் - நற்றிணை 293,நற்றிணை மூலமும் உரையும், 31 சிங்கர்தெரு, பாரிமுனை, சென்னை – 600001

References:

1.S.V. Subramanian - Natrinai -29, Natrinai Moolam and Text, 31 Singer Street, Parimunai, Chennai – 600001

2.S.V. Subramanian - Natrinai 179, Natrinai Moolam and Text, 31 Singer Street, Parimunai, Chennai – 600001

3.S.V. Subramanian - Natrinai 202, Natrinai Moolam and Text, 31 Singer Street, Parimunai, Chennai – 600001

4.S.V. Subramanian - Natrinai 362, Natrinai Moolam and Text, 31 Singer Street, Parimunai, Chennai – 600001

5.S.V. Subramanian - Natrinai 143, Natrinai Moolam and Text, 31 Singer Street, Parimunai, Chennai – 600001

6.S.V. Subramanian - Natrinai 293, Natrinai Moolamum Urayum, 31 Singer Street, Parimunai, Chennai – 600001

Copyright (c) Author

E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

ஆசிரியர் பங்களிப்பு அறிக்கை: எதுவுமில்லை.

ஆசிரியர் ஒப்புதல் வாக்குமூலம்: எதுவுமில்லை.

ஆசிரியர் பிரகடனம்: இந்த ஆய்வுக் கட்டுரையின் உள்ளடக்கம் மற்றும் ஆசிரியர்த்துவத்தில் எந்தவிதமான போட்டி நலன்களும் இல்லை என்று நான் அறிவிக்கிறேன்.

உரிமம்

பதிப்புரிமை (c) ஆசிரியர்

கட்டுரையின் உள்ளடக்கம் கிரியேட்டிவ் காமன்ஸ் அட்ரிபியூஷன் 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் உரிமம் பெற்றது.

Author Contribution Statement: NIL.

Author Acknowledgement: NIL.

Author Declaration :I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

License

Copyright (c) Author

The content of the article is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
A Monthly Peer-Reviewed International Research Journal
E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்வு இதழ்
A monthly peer-reviewed online multi-disciplinary Tamil journal

சேரதாண்டவ நாடகத்தில் கதைப்பின்னலும் பாத்திரப்படைப்பும்

The Story Structure and Character Development in the *CheraThandavam* Drama

இர.கீதா, முனைவர்[1], க.சிங்காரவேலு[2]

1. முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் – 632115
2. உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் – 632115

R. Geetha[1], Dr. K. Singaravelu[2]

1. Ph.D. Research Scholar, Department of Tamil, Thiruvalluvar University, Serkkadu, Vellore – 632 115
2. Assistant Professor, Department of Tamil, Thiruvalluvar University, Serkkadu, Vellore – 632115

Abstract

Many types of literature are used to tell stories. While literature such as epics, novels, fiction, and short stories also tell stories, drama is entirely different. 'Nadi' (to act) can be taken as the root word of drama. Excellent character development is a fundamental and lasting element of drama, truly enhancing its quality. One of the Tamil dramatic works is Bharathidasan's *Chera Thandavam* drama. Excellent character creations connects events on a cause-and-effect basis. This study aims to investigate the creation of the storyline in the *Chera Thandavam* drama.

Keywords: Cherathandavam, Tamil Drama, Tamil Literature

ஆய்வுச்சுருக்கம்

கதைகளைக் கூறுவதற்குப் பல வகையான இலக்கிய வகைகள் மேற்கொள்ளப்படுகின்றன. காப்பியம், புதினம், புனைகதை, சிறுகதை ஆகிய இலக்கியங்கள் கதைகளைக் கூறினும் நாடகம் அவற்றினும் முற்றிலும் வேறுபட்டது. 'நடி' என்பதே நாடகத்தின் அடிச்சொல்லாகக் கொள்ளலாம். சிறந்த பாத்திரப் படைப்பு உண்மையில் நாடகத்தின் உயர்வினை மிகுவித்தற்குரிய அடிப்படையான, நிலைத்த நாடகக் கூறாகும்.

தமிழ் நாடக இலக்கியங்களில் ஒன்று பாரதிதாசன் அவர்களின் 'சேரதாண்டவம்' நாடகமாகும். சிறந்த பாத்திரப் படைப்புகள் நிகழ்ச்சிகளை ஒன்றுக்கொன்று காரண – காரிய அடிப்படையில் தொடர்புப்படுத்தும். சேரதாண்டவ நாடகத்தின் இக்கதைக் கோப்பு உருவாக்கம் குறித்து ஆராய்வது இவ்ஆய்வின் நோக்கமாக அமைந்துள்ளது.

Copyright (c) Author

E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

முன்னுரை

பாரதிதாசன் அவர்களால் இயற்றப்பட்டது சேரதாண்டவம் என்ற நாடக நூலாகும். மூவேந்தர்களில் சேரன் மற்றும் சோழன் இருபெரு வேந்தர்களின் ஆட்சிச்சிறப்புடன் அந்நாட்டு மக்களின் நாட்டுப்பற்றும் நாடகத்தின் கருவாக அமைக்கப்பட்டுள்ளன.

வரலாற்று சிறப்புமிக்க இந்நாடகத்தின் கதாபாத்திரங்கள் சங்க இலக்கியப் பாடல்களின் கூற்றுகள் வழியாகவும் அறிந்துகொள்ள முடிகின்றது.

சேரதாண்டவம் என்ற தலைப்பின் வழியே சேரமன்னன் ஆடற்கலையில் சிறந்தவன் என்பதை உணர்த்துகின்றது. மேலும் ஓர் இலக்கிய வழி நாடகம் வாசக மக்களிடையே பிரசித்திப் பெற வேண்டும் என்றால் அந்நாடகத்தில் இடம்பெறும் ஒவ்வொரு பாத்திரத்தின் பங்களிப்பினையும் சரிவர அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும். இதில் பாரதிதாசன் அவர்களால் ஒவ்வொரு பாத்திரமும் அதற்குரிய சூழலுக்கு ஏற்ப அதனதன் மனிதப்பண்பாட்டையும் வெளிப்படுத்தியுள்ளனவா? என்றும், நாடகக்கதைப் பின்னலுக்கு அதன் பங்களிப்பு எவ்வாறு துணைநிற்கின்றது என்பதையும் ஆராய்ந்து அறிவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

நாடகத்தின் புற அமைப்பு

சேர மற்றும் சோழ அரசுகள் அவரவர் புகழினை நிலைநாட்ட விரும்பினர். அதற்கு ஏற்ற சரியான போர்க்களச் சூழலை எதிர்நோக்கியும் காத்திருந்தனர். இதற்கிடையில் எதிரி நாடான சோழநாட்டு இளவரசியின்மீது சேர மன்னன் ஆட்டனத்தி எவ்வாறு காதல் கொள்கிறான், அதற்குரியச் சூழல் அவனுக்கு இயற்கையாக அமைந்ததா? அல்லது இரு நாடுகளுக்கிடையே இருந்த முரண் காரணமாக அமைந்ததா? என்ற வினாவிற்கு இருநாட்டு மக்களின் மனிதப் பண்பாட்டுச் சூழல் காரணமாக அமைந்துள்ளதுதான் இந்நாடகத்தின் சிறப்பாகும். “மனிதப் பண்பாட்டை விளக்காத எந்த ஒரு செயலும் பகுதியும் நாடகத்தில் இருப்பது பயனற்றது”[1] என்று ஹென்றி ஆர்தர் ஜோன்ஸும் “மாக்பெத் நாடகம் இலக்கிய உலகியல் அழியாது நிற்பதன் காரணம், அதில் நடைபெறுகிற கொலைகளாலும் நாடக ஆசிரியன் ஒப்பற்ற சூழ்ச்சியாலும் அல்ல. அந்நாடகம் நிலை பெறுவதன் காரணம் ‘மாக்பெத்’ என்ற மனிதனின் பண்பாட்டை விவரிப்பதேயாகும்”[2] என்று ஷேக்ஸ்பியரின் கருத்தும் நாடகத்தின் தன்மையை விளக்குகிறது.

போர் மறவனின் மறச்செயலும் ஆடல் அரங்கும்

நாடகத்தின் தொடக்கம் சேரநாட்டின் ஆடல் அரங்கு. அங்கு சேரன் ஆட்டனத்தி எதிர்வரும் சூழலில் பகைநாடான சோழநாட்டை வெல்ல தன் படை மறவருக்குப் போர்த்திறத்தை அதிகரிக்க வேண்டிய செயலைத் தொடங்குகிறான்.

படை மறவர்க்கு போர்த்திறத்தை அதிகரிக்க ஆடல் அரங்கு போர் பயிற்சி எடுக்கும் களம் அல்லவே. அப்படியிருக்க இது எவ்வாறு? சாத்தியமாகிறது.

Copyright (c) Author

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
A Monthly Peer-Reviewed International Research Journal
E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

சேரன் ஆட்டனத்தி ஆடற்கலையில் சிறந்தவன். அவனது ஆடல் கலையில் தன் முன்னோரின் பழைய வரலாறு தழுவிய ஒரு போர் மறவனின் போர்த்திறத்தை வெளிப்படுத்தும் உத்தியால் அதை சாத்தியப்படுத்துகின்றான்.

போர்க்களத்தில் பிணங்கள் குவிந்துக்கிடக்கின்றன. அப்பிணக் குவியலிலிருந்து செங்குருதிச் சேற்றின் இடையில் ஒரு பிணம் தலையைத் தூக்கியது. மெல்ல எழுந்து கண் உறுத்தி தொலைவில் நோக்கியது. அடுத்த கணமே ஒரு கையால் வாளைத் தூக்கியது. பின், அடுத்த கையால் கேடயத்தைத் தூக்க வேண்டும். ஆனால், இடது கை ஒட்ட அறுபட்டிருந்தது. இருப்பினும், வாளை ஏந்திய ஒற்றைக்கை மறவன் பகைப் படையை நோக்கி ஓடினான். ஓடிய வேகத்தில் தள்ளாடி விழுகின்றான். சடுதியில் விழுந்த அவன் பின்னும் ஓட்டத்தைத் தொடர்ந்தான். அவனுடைய அவிழ்ந்த தலைமுடி கண்ணை மறைத்தது. வாள்முனையால் முடியை விலக்கியப் படி பகைவர்கள் ஆயிரம் பேரை பின் கிடத்தி முன்னேறியவன் இந்நேரம் பிணமாய் கிடந்தவன்.

ஒற்றைக் கை மறவன் நொடியில் பகை மன்னனது தேர் வீரனை இரு துண்டாக்கினான். நொடியில் பகை மன்னனை வீழ்த்தினான். எங்கும் வெற்றி முழக்கம். அந்நேரத்தில் ஒற்றைக்கை மறவனின் உடலில் ஒட்டியிருந்த உயிர் மீளா விடைபெற்றது.

சேரநாட்டு முன்னோர்களின் வீர அடையாளமாகிய போர்க்கள நிகழ்வினை அவையில் சூழ்ந்திருந்த வீர மறவர்களின் கண்முன்னே தன் ஆடலால் உயிர்ப்பித்தான் ஆட்டனத்தி. இதன் விளைவு அனைத்து மறவர்களும் போர் போர் எனக் குதித்தாடும்படி அவையெங்கும் போர் முழக்கம் எழும்பியது. இம்முழக்கத்தின்போது அமைதியாக இருந்த இருவர் (ஒற்றர்கள்) கைது செய்யப்பட்டார்கள்.

போர் மறவனின் வீரத்தை ஆடல் மற்றும் பாடல் மூலம் சேர மன்னன் ஆட்டனத்தியால் வெளிப்படுத்தப்படும் இந்நிகழ்வுதான் எதிரியான சோழநாட்டு ஒற்றர்களை இனங்காட்டியது.

சோழ ஒற்றர்கள் – யாளிக்கொடி – அழகுவேல்

கைது செய்யப்பட்ட சோழநாட்டு இரு ஒற்றர்களுக்கும் விசாரணையில் சிறைத்தண்டனை விதிக்கப்படுகின்றது. மேலும் சிறையில் இவர்கள் இறந்தவுடன் இந்நாட்டின் சுடுகாட்டில் புதைத்துவிட வேண்டும் என்று ஆட்டனத்தியால் தீர்ப்பு வழங்கப்படுகின்றது. அதற்கு, இரு ஒற்றர்களும் இறந்தப்பின் எங்கள் உடலை சோழநாட்டு எல்லையில் எறிந்துவிடுங்கள் என்று கேட்டனர். ஆட்டனத்தியால் அவர்களின் நாட்டுப்பற்றை வியந்து அவ்வாறே ஆகட்டும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

சோழநாட்டு ஒற்றர்களின் இந்நிலைதான் சேரன் ஆட்டனத்தி, வீரத்துடன் சேர்த்து ஆடற்கலையில் சிறந்தவக்ரளை ஒற்றர்களாக சோழநாட்டிற்கு அனுப்ப அடித்தளமிட்டுக் கொடுத்தது. ஏனெனில், எதிரிநாட்டு மக்கள் மற்றும் வீரர்களின் கவனத்தை ஆடற்கலையால்

Copyright (c) Author

E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

ஒருமுகப்படுத்திவிட்டு ஐயம் ஏற்படா வண்ணம் எதிரிநாட்டின் நிலையை ஒற்றறிந்து வர ஆடற்கலை ஏதுவாக அமைத்துக்கொள்ளப் பட்டுள்ளது.

ஆடற்கலைஞர்கள் மற்றும் வேட்டுவர்கள்

ஆடல்கலையில் சிறந்தவர்களான குன்றதோளான் தலைமையில் செங்கண்ணன் உள்ளிட்ட பத்து பேர் சோழநாட்டினை ஒற்றறிந்து வர ஆட்டனத்தியால் அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்களும் செல்லும் வழியில் சோழநாட்டு வேட்டுவர்களிடம் சோழநாட்டு மக்களைப்போல் தங்களை அறிமுகம் செய்துக்கொண்டனர். பின்னர், வேட்டுவர்கள் மகிழும்படி ஆடல்பாடல் நிகழ்த்தி பரிசாக பத்துப்பேரும் ஆடையைப் பெற்றுக்கொண்டனர். இதனால், சோழநாட்டிற்குள் எந்தவித சந்தேகமும் தங்குதடையின்றி அவர்களால் நுழைய முடிந்தது.

சோழ நாட்டிற்குள் நுழைந்து சோழ அரண்மனை, அழகிய தெரு, படைவீடு, இரும்பிடத்தலையார் இல்லத்திலும் மற்றும் ஆதிமந்தியின் தனி அறையிலும் ஆடல் அரங்கேற்றப்பட்டது. பின் ஒற்றறிந்த தகவலுடன் சேரநாட்டை அடைந்தனர். ஒற்றறிந்துத் திரும்பிய குன்றத்தோளான் முதலியவர்களின் வாயிலாகத்தான் சோழன் மகள் ஆதிமந்தி பற்றிய அறிமுகம் ஆட்டனந்தி அறிந்துகொண்டான். அழகின் ஒளியாகிய ஆதிமந்திக்காக ஆட்டனத்தியும் ஒற்றர் வேடம் அணிந்து, ஏற்கனவே ஒற்றராக சென்றவர்களுடன் மைத்துனன் வல்லமனையும் இணைத்து சோழநாட்டை அடைந்தான்.

ஆட்டனத்தி ஆதிமந்தியின் காதல்

சோழ அரண்மனையில் சோழநாட்டிற்குள் நுழைய மக்களுக்கு திருடர்களின் அச்சத்தை ஏற்படுத்தி நுழைத்தான் ஆட்டனத்தி. அந்நிகழ்வையே ஆடலாக அரங்கேற்றம் செய்தான். இந்நிகழ்வில் ஒளிமிகுந்த கழல் அணிந்த கால்களுக்கு உரியவன் ஆடல் மகனா என்ற சந்தேகத்தை ஆதிமந்திக்கு உண்டாக்கியது.

இதன் தொடர்ச்சியாக அடுத்த ஆடல் நிகழ்வு ஆதிமந்தியின் இருப்பிடத்தில் நிகழ்த்தப்பட்டது. இவ்வாறாக ஆட்டத்தி ஆதிமந்தியின் மனதிற்குள்ளும் நுழைந்துவிட்டான். ஆதிமந்தியுடன் ஆட்டனத்தி இருப்பதை தெரிந்துகொண்ட இரும்பிடத்தலையார் அவர்களை ஏற்றுக்கொண்டார். பின் சோழனிடம் அவர்களது திருமணத்திற்கு இசைவும் பெற்றார். சேரன் அன்னை மனோக்கி, சோழன், சோழ மன்னி தலைமையில் மணமக்களுக்கு திருமணம் நடந்துமுடிந்தது.

காவிரி நீர்ப்பெருக்கு விழா

ஆட்டனத்தியுடன் ஆதிமந்தி சோழநாட்டின் காவிரி நீர்ப்பெருக்கு விழாவிற்கு அழைக்கப்படுகிறார்கள். மண மக்களும் சோழநாட்டின் விழாவான காவிரி நீர்ப்பெருக்கில் கலந்துக்கொண்டனர். அங்கு காவிரி தாயால் சேரன் ஆட்டனத்தி அடித்துச் செல்லப்படுகிறான்.

Copyright (c) Author

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
A Monthly Peer-Reviewed International Research Journal
E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

ஆட்டனத்தி நீரில் அடித்துச்செல்லப்பட்ட நிகழ்வு, கதைக் கட்டுக்கோப்பிற்கு அடிப்படையாக அமையும் சிக்கலை நால்வகைப்படுத்துவர் திறனாய்வாளர். அவைகளில் ஒன்று "இயர்கைச் சக்திகளை எதிர்த்து மனிதன் போராடுவது"[3] என்ற சிக்கலினை இந்நாடகம் அடிப்படையாகக் கொண்டுள்ளது.

ஆதிமந்தி காவிரித் தாயின் வழியெல்லாம் தேடி அலைகிறாள். இங்கு கடற்கரைப் பட்டினத்தில் சுயநினைவு இழந்து கரை ஒதுங்கினான் ஆட்டனத்தி. அங்கு நெய்தலி என்னும் (மருதி) பட்டினத்தின் தலைவர் திரையன் மகளால் ஆட்டனத்தி காப்பாற்றப்படுகிறான்.

சிறிது நாட்களில் சாகும் நிலையில் இருக்கும் ஆதிமந்தியும் பட்டினத்தின் கரையில் விழுந்து கிடக்கிறாள். நெய்தலின் தந்தையாலும் மக்களாலும் காப்பாற்றப்படுகிறாள். ஆதிமந்தி அங்கு ஆட்டனத்தியைக் காண்கிறான். இருவரும் அன்புவிழி நீர் பெருக்கி உயிர்ப்புடன் சில மொழிகளை வெளிப்படுத்துகிறார்கள். இவர்களைப் பற்றித் தெரிந்துகொண்டதும் நெய்தலி காதலன் ஆட்டனத்தி அவன் மனைவி ஆதிமந்தியுடன் நன்றாக வாழவேண்டும் என்பதற்காக கடலின் நடுவே கட்டுமரத்தை ஓட்டிச்சென்றாள். கட்டுமரத்திலிருந்த கல்லைக் கடலில் உதைத்துத் தள்ளுகிறாள்.

"நாடகத்தின் கூறுகளில் முதன்மையானது கதைக்கோப்பு ஆகும். கதைக்கோப்பு என்பது நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியைக் குறிப்பதாகும். நிகழ்ச்சிகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக அமைவதோடு அடுத்துவரும் நிகழ்ச்சிமுன் நிகழ்ச்சியின் விளைவாகவும் இருத்தல் வேண்டும்."[4]

முடிவுரை

ஆட்டனத்தி ஆதிமந்தியின் காதல் வாழ்வுக்காக நெய்தலி உயிர் நீத்தாள். சேரதாண்டவ நாடகத்தின் நிகழ்ச்சிகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகவும் அடுத்துவரும் நிகழ்ச்சி முன் நிகழ்ச்சியின் விளைவாக அமைந்துள்ளது. சேர தாண்டவ கதைக்கோப்பு சிறந்தோங்கியுள்ளது. இதுவே மனிதப் பண்பாட்டின் உச்சத்தை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளது.

அடிக்குறிப்புகள்

1. ஞானசம்பந்தன்.அ.ச., 2021, இலக்கியக் கலை, ப.389
2. மேலது, ப.390
3. பாலச்சந்திரன்.சு., இலக்கியத்திறனாய்வு, ப.223
4. ஞானமூர்த்தி.த.ஏ., இலக்கியத்திறனாய்வியல், ப.283

துணைநூற்பட்டியல்

1. பாரதிதாசன், சேர தாண்டவம், பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி, இரண்டாம் பதிப்பு – 1954.
2. தா.ஏ.ஞானமூர்த்தி, இலக்கியத் திறனாய்வியல், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, அக்டோபர் – 2022.

Copyright (c) Author

E-ISSN: 3049-0723 (Online)
Vol. 1 No. 08 May 2025

3. அ.ச.ஞானசம்பந்தன், இலக்கியக்கலை, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, ஜனவரி – 2021.
4. பாலச்சந்திரன், இலக்கியத்திறனாய்வு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 1

Bibliography

1. Bharathidasan, Chera Thandavam, Bharathidasan Publications, Pondicherry, Second Edition – 1954.
2. T.A. Gnanamoorthy, Literary Criticism, Ainthinai Publications, Chennai, October – 2022.
3. A.S. Gnana Sambandhan, Literary Arts, Pavai Publications, Chennai, January – 2021.
4. S. Balachanthiran, Elakkiyath Thiranaivu, New Century Book House, Chennai – 1.

- ஆசிரியர் பங்களிப்பு அறிக்கை: எதுவுமில்லை.
- ஆசிரியர் ஒப்புதல் வாக்குமூலம்: எதுவுமில்லை.
- ஆசிரியர் பிரகடனம்: இந்த ஆய்வுக் கட்டுரையின் உள்ளடக்கம் மற்றும் ஆசிரியர்த்துவத்தில் எந்தவிதமான போட்டி நலன்களும் இல்லை என்று நான் அறிவிக்கிறேன்.

உரிமம்

பதிப்புரிமை (c) ஆசிரியர்

கட்டுரையின் உள்ளடக்கம் கிரியேட்டிவ் காமன்ஸ் அட்ரிபியூஷன் 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் உரிமம் பெற்றது.

- Author Contribution Statement: NIL.
- Author Acknowledgement: NIL.
- Author Declaration :I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

License

Copyright (c) Author

The content of the article is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்வு இதழ்
A monthly peer-reviewed online multi-disciplinary Tamil journal
ISSN: 3049-0723 (Online)

Volume 1, No. 08, May 2025

இனக்குழு மக்களின் நம்பிக்கை - மகிமைப் பொருள்கள் மானிடவியல் அணுகுமுறை

Beliefs of Ethnic Groups - Objects of Glory Anthropological Approach

K. Vijayakumari[1], Dr. M. Prema[2]

1. PhD Research Scholar, Postgraduate Teacher (Tamil) LNP Girls Higher Secondary School, Ilalgudi
Postgraduate Researcher, Bharathidasan University, Tiruchirappalli-02.
EMail: vijisurya277@gmail.com, Mobile : 87546 74369.
2. Research Guide, Assistant Professor, Department of Tamil Studies, Holy Cross Autonomous College, Tiruchirappalli - 620 002
EMail:mailto:mpremasoosairaj@gmail.comailto:, Mobile No.99421 06490

க. விஜயகுமாரி[1], முனைவர்.ம.பிரேமா[2]

1.ஆய்வாளர், பட்டதாரி ஆசிரியை (தமிழ்), LNP பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இலால்குடி
முனைவர் பட்ட ஆய்வாளர், பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி-02.
EMail: vijisurya277@gmail.com
Mobile : 87546 74369.
2.நெறியாளர், உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 620 002
EMail:premasoosairaj@gmail.com
Mobile No.99421 06490

Abstract:
Through the lens of cultural anthropology, we can observe that beliefs in sacred objects, a practice traceable back to the songs and daily lives of ancient cultures, persist today with subtle adaptations. This continuation of original beliefs, expressed through reverence for specific objects, is not limited to small religious groups. It also appears in major world religions like Christianity, Islam, and Hinduism, demonstrating its enduring influence on human spirituality.

Keywords: cultural anthropology, Christianity, Islam, Hinduism, பண்பாட்டு மானிடவியல்

முன்னுரை :

பண்பாட்டு மானிடவியல் அடிப்படையில் தொல் இனக்குழு மக்களின் பண்பாடுகளில் பல்வேறு நம்பிக்கைகள் பின்பற்றப்பட்டு வந்துள்ளமையும் அவற்றுள் ஒன்றாக> மகிமைப் பொருள்கள் மீதான நம்பிக்கைகள் அன்று தொடங்கி இன்று வரை தொடர்ச்சியாக சிறு சிறு வடிவமாற்றம் பெற்று பின்பற்றப்படுவதை பாடல்கள் வாயிலாகவும்> நடைமுறை வாழ்க்கையின் வழியாகவும் அறிந்து கொள்ள முடிகிறது. இவ்வழிபாட்டு நம்பிக்கை சிறு சமயப் பிரிவுகளில் மட்டுமல்லாது உலகின் பெரிய சமயங்களாக உருப்பெற்றுள்ள கிறித்துவம்> இஸ்லாம்> இந்து சமயம் போன்ற பெருஞ்சமயங்களில் பல்வேறு பொருட்களின் வழியாக மக்களால் நம்பப்படுகின்ற ஆதி நம்பிக்கையின் தொடர்ச்சியாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்க ஒன்று.

பெருஞ்சமயங்களின் வெளிப்பாடு

கிறித்துவ சமயத்தின் முக்கிய மகிமைப் பொருள் வழிபாடாக ‘சிலுவை’ என்பது மிகவும் புனிதத்தன்மை பெற்றதாக கருதப்படுவதுடன் ‘சிலுவை’ அணிந்து கொள்வது என்பதும் கிறித்துவர்களின் சமய நம்பிக்கையில் சிறப்பிடம் பெற்று விளங்குகிறது.

இஸ்லாம் சமயத்தின் ‘புனித நீர்’ என்ற வகையின் அடிப்படையில் நீரை மந்திரங்கள் ஓதி புனிதப்படுத்தி வழிபாட்டில் பயன்படுத்துகின்றனர். மேலும் ‘அடியார்களின்’ சமாதிகளை (தர்க்கா) புனித யாத்திரைகள் மேற்கொண்டு வணங்கி வழிபடுவது என்பது இன்றளவும் பின்பற்றப்படும் ஒரு புனித செயலாகக் கருதப்படுகின்றது.

இந்து சமயத்தினைப் பொருத்தவரை பல பொருட்கள் மகிமைப் பொருட்கள் பட்டியலில் இடம்பெற்று வழிபடப்படுகின்றன. வேல்> சடாரி> நீர்> துளசி> சாளக்கிராமம்> உருத்திராட்சம்> தாயத்து> விபூதி> குங்குமம்> மஞ்சள்கயிறு> வேப்பிலை இன்னும் பிற பொருட்களும் வழிபாட்டு நம்பிக்கையின் அடிப்படையில் சிறப்பிடம் பெறுகின்றன.

இவ்வாறு சமயங்களில் பின்பற்றக்கூடிய மகிமைப் பொருள் வழிபாடென்பது தெய்வத்தன்மை பெற்ற பொருட்களாக மக்களால் நம்பப்படுவதுடன் இவற்றுக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட ஏதோ ஓர் ஆற்றல் இருப்பதாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட பொருட்களை வணங்குவதாலும்> பாதுகாப்பதாலும் அவை ஆற்றலுடன் தங்களைப் பாதுகாத்து துன்பங்களைப் போக்கி> உடல்நலம், மனநலம் போன்றவற்றில் மகிழ்ச்சி கிடைக்க வழிவகை செய்கின்றன என்ற ஆழமான நம்பிக்கையை காலங்காலமாகக் கொண்டுள்ளனர் என்று எண்ண வேண்டியுள்ளது. இந்த நம்பிக்கையைத்தான் மானிடவியலார் “மகிமைப் பொருள் வழிபாடு” என்ற சொல்லால் விளக்க முற்பட்டுள்ளனர். (பண்டைத் தமிழ்ப் பண்பாடு - பக்தவத்சலபாரதி)

மகிமைப் பொருள் வழிபாடு - விளக்கம் :

மகிமைப் பொருள் வழிபாடு’ என்ற சொல்லின் விளக்கத்தை ‘தமிழ் மக்களின் தொல்சமயம்’ என்ற தனது நூலில் ஆசிரியர் பாண்டுரங்கன் பின்வருமாறு மொழிகிறார். “Fetishism” என்னும் ஆங்கிலக் கலைச்சொல் பிரெஞ்சு மொழியில் உள்ள Fetiche என்னும் சொல்லிலிருந்து உருவாக்கப்பட்டது. இப்பிரெஞ்சு மொழிச் சொல்லும் Feitico என்ற போர்த்துகீச்சு சொல்லிலிருந்து தோன்றியது. இச்சொல் இலத்தீன் மொழிச் சொல்லான Fecticius என்னும் சொல்லிலிருந்து உருவாக்கப்பட்டது என்றும் கூறுவர். இலத்தீன் மொழியில் இச்சொல் செயற்கையானது (artificial) செய்யப்பட்டது (made) என்னும் பொருளைத் தருகின்றது. இவ்விளக்கங்களிலிருந்து Fetishism என்பது ‘மீவியல் ஆற்றல்களைக்’ கொண்ட சில பொருள்கள் அல்லது மனிதனால் படைக்கப்பட்ட சில பொருட்கள் மற்றவர்களின் மேல் நல்ல / தீய விளைவுகளை ஏற்படுத்தும் ஆற்றல் மிக்கவை ஆகும். Fetishism என்பது அடிப்படையில் ஒரு குழுவுக்கு உள்ளே உள்ளவர்கள்

மட்டுமே புரிந்து கொள்ளக்கூடிய அகவய (emi) நம்பிக்கையாகும்;. அக்குழுவுக்கு வெளியில் உள்ளவர்களின் சிந்தனை புறவயமாக (etic) இருப்பதால்> அவர்கள் இவற்றை ஏற்றுக்கொள்வதில்லை (தமிழ் மக்களின் தொல் சமயம்)2 - (பக் - 355)

தொகை நூல்களின் உள்ள சான்றுகள் :

தொகை நூல் செய்யுள்களில் இம்மகிமைப் பொருட்கள் வழிபாடு பற்றிய சில குறிப்புகள் குறைந்த அளவில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. பொதுவாகக் கிடைக்கும் தரவுப் பாடல்களின் அடிப்படையில் மகிமைப் பொருள்கள் இரண்டாகப் பகுக்கப்படுகிறது.

மகிமைப் பொருள்கள்

உயிருள்ளவை	உயிரற்றவை
காவல் மரங்கள்	❖ வீட்டின் நிலைக்கதவு வாயில்
❖ ஆலமரம்>	❖ எருமைக்கொம்பு
❖ கடம்பமரம்>	❖ வெண்கடுகு (ஐயவி)
❖ வேப்பமரம்>	❖ கந்து (மரத்துண்டு)
❖ பனை	❖ கன்னம் (தாயத்து)
	❖ காப்பு நாண் (கயிறு முதலியன)
	❖ ஐம்படைத்தாலி
	❖ பாவை
	❖ பொதியல் ஓவியம்

இக்கருத்திற்கு வலு சேர்க்கும் விதமாக ஆசிரியர் பக்தவத்சலபாரதி தனது 'பண்பாட்டு மானிடவியல்' நூலில் குறிப்பிட்டுள்ள கீழ்க்கண்ட கருத்துக்கள் கவனிக்கதக்கவை "மகிமைப் பொருள் வழிபாட்டிற்குரிய பொருள்கள் உயிருள்ளவையாகவோ> உயிரற்றவையாகவோ> இயற்கையானவையாகவோ> செயற்கையானவையாகவோ உள்ளன. பெரும்பாலான பண்பாட்டில் மண்டையோடுகள்> எலும்புகள்> செதுக்கப்பட்ட சிற்பங்கள்> விசித்திரமான கற்கள்> மரப்பொருள்கள்> கையால் வரையப்பட்ட சித்திரங்கள்> பறவையினங்களின் இறகுகள் போன்ற பலவகைப்பட்ட பொருள்கள் வழிபாட்டுப் பொருள்களாக உள்ளன. இவையனைத்தும் இயற்கை மீறிய ஆற்றல்களைக் கொண்டுள்ளன என்று மக்கள் நம்புகின்றனர். தமிழ்நாட்டில் செப்பு அல்லது இரும்பினால் செய்யப்பட்ட தாயத்துக்களைக் கட்டிக் கொள்வதும்> மந்திரித்துக் கட்டிக் கொள்ளப்படும் பிறபொருள்களும்> நரிப்பற்களை அணிவதும் மகிமைப் பொருள் வழிபாட்டின் தொடர்ச்சியே. இப்பொருள்கள் மந்திர ஆற்றல்களைக் கொண்டு உள்ளதால் இவற்றை அணிவோருக்குத் தீமைகள்

நெருங்காமல் நற்பலன்கள் ஏற்படும் என்னும் நம்பிக்கை மக்களிடம் உள்ளது. சங்க காலத்தில் ஐம்படைத்தாலி அணியும் வழக்கம் இருந்தது' - (பண்பாட்டு மானிடவியல்) - (பக்கம்-615)

உயிருள்ள பொருள்கள் :

மகிமைப் பொருள் வழிபாடென்பது குலக்குறியியலின் தொடர்ச்சி என்று எண்ண இடமளிக்கின்ற வகையில் காணப்படுகின்றது. தொல்குடி இன மக்கள் ஒரு சில மரங்களில் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றல் குடியிருப்பதாக எண்ணி அவற்றைத் தன் 'காவல் மரங்களாக' இனக்குழு தலைவர் காத்தனர். இக்காவல் மரங்கள் தெய்வீகத்தன்மை பொருந்தியவை என்று இனக்குழு மக்கள் நம்பியதால் பகைவர்கள் இவ் இனக்குழு தலைவனை தன் கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டி முதலில் இக்காவல் மரங்களை வெட்டிச் சாய்த்தனர். இதன் மூலம் தலைவனின் ஆற்றல் அழிக்கப்பட்டுவிட்டதாக வெற்றி பெற்றவர்கள் நம்பியதை அறியமுடிகிறது.

மரங்களில் சில தெய்வத்தன்மை பெற்றவையாக புலவர்களால் குறிப்பிடப்பட்டுள்ளன. மரங்களின் பருத்த அடியில் தெய்வங்கள் உறைவதாக அக்கால மக்கள் நம்பியதை அகநானூறில் பின்வரும் வரியில் பதிவிட்டுள்ளது.

"கடவுள் மரத்த முள்மிடை குடம்பை" (4) அகம் - 270:12 (பக்-356)

நற்றிணையாக,

"தொன்று உறை கடவுள் சேர்ந்த பராரை

மன்றப் பெண்ணை" (5) நாள்:303:3-4 (பக்-374)

என்று பண்டு தொட்டு உறைகின்ற கடவுள் தங்கப்பெற்ற பருத்த அடியையுடைய ஊர்ப் பொதுவிலுள்ள பனைமரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

"ஆலமர் செல்வன் அணிசால் பெருவிறல்" கலி 81:9 (பக்-234)

இந்து சமயக் கடவுளாகிய 'சிவபெருமான்'> 'ஆலமரத்தின்' கீழே வீற்றிருப்பதாக கலித்தொகை காட்டுகின்றது.

இம்மரங்களின் வரிசையில் சங்க காலம் முதல் தற்காலம் வரை 'வேப்பமரம்' என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது. இவ்வேம்பு பாண்டிய மன்னர்களோடும் தொடர்புடையது. வேம்பின் அடியில் தெய்வம் குடியுள்ளதாக நம்பி ஆநிரைகளை கவர்ந்து கொண்டு வரும் வெட்சி மறவர்கள் தமது வெற்றிக்கு காணிக்கையாக மிக்க கொழுப்புமிக்க பசுவினை வேப்பமரத்தில் வீற்றிருந்த தெய்வத்திற்கு பலியிடுவதாகவும்

பின்பு பலியிட்ட பசுவின் குருதியினை எடுத்து மரத்தின் மீது தெளிப்பதாகவும் பசுவின் இறைச்சியினை சமைத்து அதனை அத்தெய்வத்திற்குப் படைத்து பிரசாதமாக உண்ட செய்தியினை அகநானூறு பதிவு செய்துள்ளது.

"தெய்வஞ் சேர்ந்த பராரை வேம்பின்

கொழுப்பா எறிந்து குருதி தூஉய்ப்

புலவுப் புழுக்குண்ட வான்கண்" (6) அகம் 309 : 4-6 (பக்-23)

இவ்வாறு வேம்பானது இன்றும் மாரியம்மன் வழிபாட்டில் மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. சில ஊர்களில் மரத்தின் மீது புடவை சார்த்தி அதனை மாரியம்மன் அல்லது காளியம்மன் என்று அம்மனாகவே கருதி வழிபாட்டினை மேற்கொள்வதும் கண்கூடு. இவையெல்லாம் சில சடங்குகளோடு தொடர்புடைய செயல்களாக காணப்படுவதன் காரணம் இயற்கையிகந்த ஓர் "மீவியல் ஆற்றல்" மரங்கள்> அவற்றின் தழைகள் போன்றவற்றில் இருப்பதாக எண்ணிய நம்பிக்கையே ஆகும் என்றால் அது மிகை இல்லை.

உயிரற்ற மகிமைப் பொருட்கள் :

இனக்குழு மக்களின் வழிபாட்டில் சில உயிரற்ற மகிமைப் பொருட்களும் இடம் பெற்றுள்ளன. அந்த வரிசையில் முதலில் வீட்டின் நிலைக்கதவின் வாயில் படியில் 'திருமகள்' என்று செல்வத்தின் தெய்வமாக மக்களால் நம்பப்படும் 'இலக்குமி தேவி' வீற்றிருப்பதாக சங்க காலம் முதல் சமகாலம் வரை வாயிற்கதவு நிலைப்படியானது வழிபடு பொருளாக மதிக்கப்படுகின்றது. இச்செய்திக்கு சான்றாக அமைகின்றது கலித்தொகை.

"வரிநுதல் எழில்வேழம் பூநீர்மேற் சொரிதரப்

புரிநெகிழ் தாமரை மலரங்கண் வீறெய்திந்

திருநயந் திருந்தென்ன தேய்கமழ் விறல்வெற்ப" (7) கலி 44:5-8 (பக் - 132)

என்ற அடிகளில் செழிப்புற்ற குறிஞ்சித் தலைவனின் மனையானது> எக்காலத்திலும் மலர்ந்திருக்கும் தாமரை மலர் மீது வீற்றிருக்கும் திருமகள் விரும்பும் இடமாகவும்> இருப்பதோடு> யானைகளோடு கூடிய திருமகள் வாயிலில் இருந்தால் அவ்வீட்டின் செல்வமானது கொழிக்கும் என்ற இனக்குழு மக்களின் நம்பிக்கையினை வெளிப்படுத்துகிறது.

எருமை கொம்பு :

ஆநிரைமேய்ப்பவர்களை அவர்கள் வளர்த்த கால்நடைகளின் அடிப்படையில் நல்லினத்தாயர்> புல்லினத்தாயர்> கோவினத்தாயர் என்றும் புலவர்கள் வகைப்படுத்தியிருந்தனர். அவ்வகையிலே எருமை மாடுகளை வளர்த்துப் பராமரித்த ஆயர்கள் தங்கள் பெண்ணிற்கு திருமணச் சடங்கு மேற்கொள்ளும் போது எருமைக் கொம்பினை நட்டு வைத்து வழிபட்டதை கலித்தொகை பின்வருமாறு காட்டுகின்றது.

“தருமணல் தாழப்பெய் தில்பூவ லூட்டி

எருமைப் பெடையோ டெமரீங் கயரும்

பெருமண மெல்லாந் தனித்தே யொழிய (8) கலித்தொகை 114:12-15 (பக்-364)

வீட்டை செம்மண்ணால் அழகுபடுத்தி வீட்டின் முற்றத்தில் வெண்மணல் பரப்பி அம்மணலில் தாங்கள் தெய்வமாக வழிபடும் பெண் எருமையின் கொம்பை நட்டு வைத்து வழிபடுகின்றனர். இச்செய்தியில் ‘பெண் எருமையின்’ என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் இது வளமைச் சடங்கின் ஆதாரமாக இருக்கக்கூடும். பெண் எருமையின் கொம்பினை நட்டு வழிபடுவதன் மூலமாக மணமக்களும் அனைத்து விதமான வளங்களையும் பெறுவார்கள் என்னும் நம்பிக்கையின் அடிப்படையில் இவ்வளமைச் சடங்கில் மகிமைப் பொருள் வழிப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கருத வாய்ப்புள்ளது.

கன்னம் (தாயத்து) :

வேலன் வெளியாடலுடன் தொடர்புடையதாக கன்னம் குறிப்பிடப்பட்டுள்ளது. கன்னம் என்பதற்கு ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்கள் நோயைத் தணிப்பதற்குப் பண்ணிக் கொடுக்கும் மந்திரத்தகடு வைத்து கட்டிய ‘தாயத்து’ என்று விளக்குகின்றார். வெளியாடலுடன் தொடர்புடைய>

“பொய்யா மரபி னூர்முது வேலன்

கழங்குமெய்ப் படுத்துக் கன்னந் தூக்கி

முருகென மொழியு மாயி” (9) ஐங்குறுநூறு 1:3 (பக் - 364) வரிகளால் வேலன் கழங்குகளாலே ஆராய்ந்து கன்னத்தை கையில் தூக்கிக் கொண்டு முருகு என்று மொழிந்ததாக பொருள் தருவதன் மூலம் கன்னம் என்பது இக்காலத்தில் பயன்படுத்தப்படும் தாயத்து போன்றதொரு பொருள் என அறியமுடிகின்றது.

காப்பு நாண் :

இன்று தமிழக மக்கள் மேற்கொள்ளும் சுப நிகழ்ச்சிகளில் குறிப்பாக இந்து சமயத்தை சேர்ந்த பின்பற்றக்கூடிய ஒரு நம்பிக்கையாக 'காப்புக் கட்டுதல்' என்ற சடங்கானது கோவில் குடமுழுக்கு, திருமணம்> ஊர்மக்கள் மழை வேண்டி செய்யும் திருவிழாக்கள் போன்ற மங்கல நிகழ்ச்சிகளில் பரவலாக அறியப்படுகின்ற ஒன்றாகிறது. இதற்கு தொடக்கம் சங்க மக்கள் மேற்கொண்ட மகிமைப் பொருள் வழிபாட்டு நம்பிக்கையே ஆதாரமாக உள்ளது. இதனை குறுந்தொகை>

"விடர்முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்

கடனும் பூனாம் கைந்நூல் யாவாம்" (10) குறள் 218:1-2 (பக் - 390)

பிரித்து சென்ற தலைவன் நலன் வேண்டி பிரிந்திருக்கும் மகளிர் 'விறல்கெழு சூலி' (கொற்றவை) முதலிய தெய்வங்களை காப்புநூல் கட்டிக் கொண்டும் பலிக்கடன் கொடுப்பதும் வழக்கமாக இருந்துள்ளதையும் ஆனால் இப்பாடலின் தலைவி> தலைவன் பிரிவை ஓர் இமைப்பொழுதுக் கூட ஆற்றதாவளாய் அவற்றை செய்ய மறுப்பதும் செய்தியாக காட்டியுள்ளது கவனிக்கத்தக்கது.

இதனால் மனிதர்களின் கையில் கட்டிக் கொள்ளும் உயிரற்ற நூல் வழிபாட்டு நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளதையும்> தொல் இனக்குழு மக்களின் உயிரற்ற மகிமைப் பொருள் வழிபாட்டு நம்பிக்கையும்> இன்றைய அதன் படிமலர்ச்சியும் புலனாகின்றது.

முடிவுரை :

மனிதனைப் பற்றி அறிந்து கொள்வதில் வேறு எந்தத் துறையும் கொண்டிராத ஓர் 'கலப்புப் புல' பரப்பைக் கொண்டு மானிடவியல் விளங்குகிறது. சங்கப் பனுவல்கள் இந்நாள் வரையிலுமே இலக்கியச் சுவைக்காகவும்> புலவர்களின் அழகுணர்ச்சி வெளிப்பாட்டிற்காகவும்> வரலாற்றுப் பெட்டகமாக திகழ்வதாகவும் போற்றப்பட்டு வந்துள்ளது என்பதில் ஐயமில்லை. இப்பாடல்களைத் தந்த புலவர்கள் பண்பாட்டுப் பார்வையில் மனிதர்களின் வாழ்வியலை> மானிடவியல் அடிப்படையில் அறியும் வகையிலேயும் படைத்தளித்துள்ளனர் என்ற கருத்து கவனிக்கதக்க ஒன்றாகும். இனக்குழு மக்கள் பின்பற்றிய சடங்குகள்> அன்றைய கால மக்கள் தொடங்கி இன்றைய நவீனமய மக்கள் வரை மகிமைப் பொருள் வழிபாடு பற்றிய ஆதாரங்கள் (உயிரற்ற பொருள்கள் மற்றும் உயிருள்ள பொருள்கள்) பாடல்கள் வழி பெறப்பட்டு பண்பாட்டுத் தளத்தில் இந்நம்பிக்கைகள் பெற்றுள்ள படிமலர்ச்சி நிலையினை விளக்கும் சிறு முயற்சியாக இக்கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளதாக இவ்வாய்ப்பு நிறைவு பெறுகிறது.

சான்றெண் விளக்கம் :

1. பண்டைத்தமிழ்ப் பண்பாடு - பக் 204
2. தமிழ் மக்களின் தொல்சமயம் - பக் 355
3. பண்பாட்டு மானிடவியல் - பக் 615
4. அகநானூறு - பக் 356
5. நற்றிணை - பக் 374
6. அகநானூறு - பக் 23
7. கலித்தொகை - பக் 132
8. கலித்தொகை - பக் 364
9. ஐங்குறுநூறு - பக் 364
10. குறுந்தொகை - பக் 390

உறுத்துணை நூல்கள் :

1. எட்டுத்தொகை (அகநானூறு> நற்றிணை> கலித்தொகை> ஐங்குறுநூறு> குறுந்தொகை) திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் - சென்னை - 18 முதற்பதிப்பு - 1952 மறு அச்சு 2007> 2017
2. பண்டைத் தமிழ்ப்பண்பாடு (மானிடவியல் நோக்கில் சங்க இலக்கியம்) பக்தவசல பாரதி அடையாளம் பதிப்பகம் 1205/1 கருப்பூர் சாலை புத்தாநத்தம்> திருச்சி மாவட்டம் - 621 310 முதல் பதிப்பு 2020
3. பண்பாட்டு மானிடவியல் பக்தவசல பாரதி அடையாளம் பதிப்பகம் 1205/1 கருப்பூர் சாலை புத்தாநத்தம்> திருச்சி மாவட்டம் - 621 310 விரிவாக்கப்பட்ட புதிய பதிப்பு 2018
4. தமிழ் மக்களின் தொல்சமயம் டாக்டர்.அ.பாண்டுரங்கன் கோரல் பதிப்பகம்> எண்.8> 6-வது குறுக்குத்தெரு> 8-வது மெயின்ரோடு> வை~;ணவி நகர்> திருமுல்லைவாயில்> சென்னை - 600 109.

References:

1. **Ettuthogai** (Akananuru, Natrinai, Kaliththokai, Aingurunuru, Kurunthokai), Tirunelveli South India Saiva Siddhanta Works Publishing House, Chennai-18. First Edition - 1952, Reprinted - 2007 & 2017.

2. **Ancient Tamil Culture (Sangam Literature from an Anthropological Perspective)**, Bakthavasala Bharathi, Adaiyaalam Publishers, 1205/1 Karuppur Road, Puthanatham, Trichy District - 621 310. First Edition 2020.

3. **Cultural Anthropology**, Bakthavasala Bharathi, Adaiyaalam Publishers, 1205/1 Karuppur Road, Puthanatham, Trichy District - 621 310. Expanded New Edition 2018.

4. **The Ancient Religion of the Tamil People**, Dr. A. Pandurangan, Coral Publishers, No. 8, 6th Cross Street, 8th Main Road, Vaishnavi Nagar, Tirumullaivoyal, Chennai - 600 109

License

Copyright (c) 2025 Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்வு இதழ் ISSN: 3049-0723 (Online)
A monthly peer-reviewed online multi-disciplinary Tamil journal

Volume 1, No. 08, May 2025

சங்க இலக்கியத்தில் உலகாயதம்

ULAGAYATA IN SANGAM LITERATURE

ப.குருமூர்த்தி[1], முனைவர் ச.வைத்தீஸ்வரன்[2]

1.முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்

முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை, கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி, திருவண்ணாமலை – 606 603. திருவள்ளுவர் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்றது

Email: gurumoorthiguru10@gmail.com, Mob.no:8438832771.

2.இணைப்பேராசிரியர் நெறியாளர், முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை, கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி, திருவண்ணாமலை – 606 603.

P .GURUMOORTHI[1], Dr.S.VAITHEESWARAN[2],

1.FULL TIME RESEARCH SCHOLAR

DEPARTMENT OF TAMIL, KALAIGNAR KARUNANIDHI GOVERNMENT ARTS COLLEGE, TIRUVANNAMALAI – 606603, AFFILIATED TO THIRUVALLUVAR UNIVERSITY, SERKKDU, VELLORE, 632115.

Email: gurumoorthiguru10@gmail.com, Mob.no:8438832771.

2.ASSOCIATE PROFESSOR, DEPARTMENT OF TAMIL, KALAIGNAR KARUNANIDHI GOVERNMENT ARTS COLLEGE, TIRUVANNAMALAI – 606603.

Abstract:
Indian religions can be broadly divided into two categories: those that accept the Vedas and establish their own ideas by making certain changes to them, and those that do not accept Vedic ideas and operate by establishing their own philosophy. Among these, Lokayata belongs to the second category. As far as the Lokayata religion is concerned, only what exists in the world is true, that is, only what can be seen with the eyes is true, and only what can be experienced through alcohol, women, and the six tastes is bliss. They adhere to the principle of "seeing is believing" and "embracing what you have." Thus, this article explores some of the basic principles of this religion and analyzes the principles of Lokayata in Sangam literature.

Keywords: Lokayata - Pratyaksha - Lokayata in Sangam Literature - Charvaka - Four Elements Theory - Refutation in Doctrine - Carvaka.

முன்னுரை :

இந்திய மதங்களினை இரண்டு வகையாக பிரிக்கலாம் வேதங்களினை ஏற்று அவற்றில் சில மாற்றங்களைச் செய்து தமது கருத்துக்களை நிலைநாட்டுபவை மற்றொன்று வேத கருத்துக்களை ஏற்காது தமக்கென ஒரு தத்துவத்தை அமைத்து

இயங்குபவை இவற்றில் உலகாயதம் இரண்டாம் வகையாகும். உலகாயத மதத்தினைப் பொருத்த மட்டில் உலகத்தில் உள்ளவை மட்டுமே உண்மை அதாவது கண்ணால் காண்பவை மட்டுமே உண்மை மது, மாது, அறுசுவை என உணர்பவை மட்டுமே பேரின்பம் எனும் கொள்கையினை உடையவர்கள். கண்டதே உலகம் கொண்டதே கோலம் எனும் கொள்கையினை உடையவர்கள். இவ்வாறாக இக்கட்டுரை இம்மதத்தின் சில அடிப்படைத் தத்துவங்களை ஆய்ந்து சங்க இலக்கியத்தில் உலகாயதம் பற்றிய கொள்கைகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

திறவுசொற்கள் : உலகாயதம் – பிரத்யட்சம் – சங்க இலக்கியத்தில் உலகாயதம் – சர்வாகர் – நால்வகை பூதக் கொள்கை – சித்தாந்தத்தில் மறுப்பு – சார்வாகம்..

உலகாயதம்

உலகம் மட்டுமே உள்ளப் பொருள் எனக் கொண்டமையால் இக்கொள்கைக்கு உலகாயதம் என்ற பெயர் அமையப்பெற்றது. சர்வாகர் என்ற தத்துவ ஞானியால் முதன் முதலாக இக்கொள்கைகள் வெளியிடப்பட்டது.பழமையான காலம் முதல் இந்திய தத்துவத்தைப் பேசும் அறிஞர்கள் உலகாயதம் பற்றிய தமது கருத்துக்களைப் பதிவு செய்வதினைக் காணலாம். சங்க இலக்கியத்திலும் இவற்றின் தத்துவ கலப்புகள் உள்ளவற்றை இவ்வாய்வு கட்டுரை வெளிப்படுத்துகிறது.

உலக உற்பத்தி

காட்சியட்க்குப் புலனாகும் நிலம், நீர், காற்று, நெருப்பு ஆகிய நான்குந்தான் மிக அடிப்படையான பொருள்கள். ஆகாயம் என்பதை ஐந்தாவது பூதமாக ஏனைய தத்துவ ஞானிகள் கொள்வர். ஆனால், ஆகாயம் காட்சிக்குப் புலனாகாதாது அநுமான மூலமே அறியப்படுவது. அநுமானத்தை ஏற்றுக்கொள்ளாத உலகாயதர் ஆகாயத்தையும் ஏற்றுக் கொள்வதில்லை. மேலே கூறிய அடிப்படையான பூதங்கள் நான்கும் வெவ்வேறு விதத்தில் ஒன்றுசேர, அச்சேர்க்கையால் எழுந்தனவே இவ்வுடலும் உலகிலுள்ள பல்வேறு பொருள்களும். திரிகையின்மேல் வைத்த மண்ணில் பல் வேறு வடிவினவாகிய பல மட்கலன்கள் உற்பத்தி யாவதைப் போன்றதே இவ்வுலகிலுள்ள பொருள்கள் உற்பத்தியாவதும். இச்சேர்க்கை நீங்கப் பொருள்கள் அழிந்து மீண்டும் நான்கு பூதங்களாக மாறும். இவை ஏன் இங்கனம் மாறிமாறித் தோன்றி அழிகின்றனவென உலகாயதரைக் கேட்கின், அது அவற்றின் சுபாவம் என அவர்கள் கூறுவர்.

உயிர் உண்டாகும் விதம்

உடலின் வேறாய் உயிர் என்ற ஒன்றை நாம் யாரும் கண்ணாற் கண்டதில்லை. அநுமான வாயிலாகத்தான் உயிர் உண்டு என நாம் அறிகின்றோம். அநுமான அளவையை ஏற்காது, கண்ணால் கண்டதுமட்டுமே மெய் ; ஏனைய யாவும் பொய் எனக் கொள்ளும் உலகாயதர் உடலின் உயிர் உடல் தோன்றுவதற்கு முன்னுமுளதாய், உடல் அழிந்த பின்னும் நிலைத்து நிற்பதாய் உள்ள உயிரென்ற ஒன்று உண்டென்பதை

ஒப்புக்கொள்ளார். எனவே, அவர்களுக்கு உயிரும் உடலும் ஒன்றே. பூதங்களின் சேர்க்கை உடலாகும் போது அதே சேர்க்கையின் விளைவாக அவ்வுடலுக்கு உணருஞ் சக்தியோ சிந்திக்கும் சக்தியோ ஏற்படுகின்றது. பாக்கு வெற்றிலை சுண்ணாம்பு எதிலும் இல்லாத சிவப்பு நிறம் அவை மூன்றையும் சேர்க்க எங்கிருந்தோ வந்து குதித்துத் தோன்றுகிற மாதிரித்தான் பூதச் சேர்க்கையில் தோன்றுகிற இந்த அறியும் சக்தியும்.

இங்ஙனமாகவும், காட்சிக்குப் புலனாகாத உயிர் என்ற ஒன்று உண்டு ; அது முற்பிறப்பிற் செய்த கன்ம பலன்களைப் புசிப்பதற்கேற்ற உடலொன்றை இறைவன் கொடுக்கின்றான் என்றெல்லாம் சமயவாதிகள் கூறுவது நம்மை மயக்குவதற்கே.

கொள்கை முடிவுகள்

ஒன்றை எண்ணி முயலவல்ல சுயாதீனமுடைய சீவ தத்துவம் எதுவும் அடிப்படையிலும் இல்லை, உள்ளன யாவும் சடமே. சடப்பொருள்கள் தத்தம் இயல்பின்படி தாமாகவே இயங்குகின்றன என்றால், உலகம் தானாய் இயங்கும் ஓர் இயந்திரமெனவே கொள்ள நேரிடும். மனிதனின் முயற்சிக்கும் முன்னேற்றத்துக்கும் இடமில்லை என்ற அன்றியும் உயிர், இறைவன், மறுமை, பாவம், புண்ணியம் என்பன இல்லையாகவே இவ்வுலக வாழ்வில் உயர்ந்த இன்பம் எதுவோ அதுதான் உலகாயதரின் வாழ்க்கை இலட்சியமாகும். பெண்ணிடம் பெறுவதே உயர்ந்த இன்பம். அதைப் பெற ஒழுங்கோ முறையோ தேவையில்லை. வல்லவன் வைத்ததே சட்டமாகும். பெண்ணுக்குக் கற்பு எனக் கூறுவதெல்லாம் வல்லமை இல்லாதவன் சொல்லும் சூழ்ச்சியுரை. மாதரை மகிழ்விக்க மேற்கொள்ளும் முயற்சிதான் தவம். பின் அம்மாதரோடு தன்னறிவு கெட்டுக் கூடுவதே முக்தி. நேரே மெய்யாக இங்குக் கிடைக்கும் மாதர் போகமாகிய முக்தி இன்பத்தைக் கைவிட்டு மறுமையை நம்பி அலைவது, தாகங்கொண்டான் தன்னெதிரே காணும் தண்ணீரைக் கைவிட்டு வேறு தண்ணீர் தூரத்தே உளதென யாரோ சொன்னது கேட்டு அலைந்து துன்புறுவது போன்ற மூடத்தனமேயாகும். இவை தாம் உலகாயதர் கண்ட முடிவு.விபரீதமான முடிவுக்கே உலகாயதம் நம்மைச் செலுத்திவிடும்.

இவை அனைத்தும் பிரத்தியட்சத்தை மட்டும் பிரமாணமாகக் கொண்டு அநுமானத்தையும் ஆப்த வாக்கியத்தையும் ஒப்புக்கொள்ள மறுப்பதால் ஏற்பட்ட அனர்த்தங்கள். அநுமானத்தையும் உரையையும் அளவையாகக் கொண்ட ஏனையோருக்கு உயிரும், இறைவனும் மெய்யாயின; உலகும், உடலும் பொய்யாயின. பிரத்தியட்சத்தை மட்டுமே அளவையெனக் கொண்ட உலகாயதருக்கு உயிரும் இறைவனும் பொய்; உலகும் உடலுமே மெய். ஏனையோருக்குச் சித்தே (அறிவே) மூலப் பொருள். சடம் (உடலும் உலகும்) அனைத்தும் சித்தைத் தமக்கு நிலைக்களனாகவுடைய சார்புப்பொருள்.ஆனால்,உலகாயதருக்கோ சடமே மூலப் பொருள்; சித்து என்பது அந்தச் சடத்தைத் தனக்கு நிலைக்களனாகவுடைய சார்புப் பொருள்.

பொருந்தாக் கொள்கை

நுணுகி நோக்குவோர் எவர்க்கும் உலகாயதர் கொண்ட முடிவுகள் யாவும் சிறிதும் ஒவ்வாதன எனக் காண அதிகச் சிந்தனை தேவைப்படாது. ஒவ்வாமையை மேலே ஆங்காங்கு ஓரளவு குறிப்பாகக் காட்டியுள்ளோம். அநுமானம் தக்க பிரமாணமல்ல; அது உண்மை அறிவைத் தர வல்லது அல்ல என்று சாதிப்பதுகூட அநுமான வாயிலாகத்தான் என்பதை உலகாயதர் உணரமாட்டாதது வியப்பே . உயிரும் இறைவனும் உண்டென்று கூறுவோர் அறியாமையாலோ வஞ்சச் சூழ்ச்சியாலோதான் அங்ஙனம் கூறுகின்றனர் என உலகாயதர் வாதிக்கின்றனர். அறியாமை சூழ்ச்சி என்ற இவை பிரத்தியட்சமாகத் தெரியும் பொருள்கள் அல்லவே! கூறுவோர் கூற்றிலிருந்து இவை அவர்களிடம் உண்டு என அநுமானித்துத்தானே உலகாயதர் அங்ஙனம் கூற முடியும்; தாம் இல்லையெனத் தள்ளிய அநுமானத்தைப் பின் உண்டெனக் கொள்வது முரண்பாடு ஆகுமல்லவோ!

ஆன்மா என ஒன்றில்லை; உடலின் இயல்புதான் அது உடலின் குணமே அது. அதாவது, உடல் குணி உணர்வு குணம் என்று கூறில், குணம் பிரிந்து தனியே நின்று குணியை உணரமாட்டாது ஆனால், ஆன்மா உடலைத் தன் உடல் என் உணர்கின்றது. இதிலிருந்தே ஆன்மா உடலின் குணம் அல்ல பிறிதான ஒன்றென்பது தெளி வாகின்றதல்லவா?

வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு சேர, அச்சேர்க்கையில் தோன்றும் சிவப்பு நிறம் போலப் பூதங்களின் சேர்க்கையில் உணர்வு தோன்றுமெனக் கூறும் உலகாயதர், வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு மூன்றும் தாமாகக் கூடுவதில்லை; கூட்டுவானுளன்; அது போலப் பூதங்களைக் கூட்டுவானும் ஒருவன் உளன் என்பதை மறுப்பது எங்ஙனம் பொருந்தும்?

சங்க இலக்கியத்தில் உலகாயதம்

உலகாயதர் வேதத்தை மறுப்பவர்கள். சங்க இலக்கியங்களில் காணப்படுகின்ற வேத மறுப்புச் செய்திகள் பெரும்பாலும் உலகாயதக் கொள்கையைச் சார்ந்தவைகளே.

குறுந்தொகை 156-ஆவது பாடல், வேதம் ஓதுகின்ற பார்ப்பன மகனை முன்னிறுத்தி வேதத்தில் பிரிந்தோரைப் புணர்க்கும் பண்புகள் இல்லை என்கிறது.

"பார்ப்பன மகனே பார்ப்பன மகனே
செம்பூ முருக்கின் நன்னார் களைந்து
தண்டொடு பிடித்த தாழ் கமண்டலத்து
படிவ உண்டிப் பார்ப்பன மகனே

எழுதாக் கற்பின் நின்சொல் உள்ளும்
பிரிந்தோர் புணர்க்கும் பண்பின்
மருந்தும் உண்டோ மயலோ இதுவே" (குறுந்.156)

என்பது பாடலாகும். இதில் எழுதாக் கற்பு என்பது எழுதாக் கிளவியாகிய வேதத்தைக் குறிடுகின்றது. உண்டோ என்ற வினா இல்லை என்ற பொருளைத் தருகின்றது. அதுபோல முன் குறிப்பிட்ட பரிபாடற் பகுதியில்,

"நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர் கேண்மீன்......." (பரி.9)

என்று நான்மறைகளைக்கற்ற புலவர்கள் முன்னிலையாக்கப் பெற்றிருப்பதும், அடுத்து,

"அகறல் அறியா அணியிழை நல்லார்
இகல் தலைக்கொண்டு துணிக்கும் தவறிலர்
இத்தள்ளாப் பொருள் இயல்பில் தண்டமிழாய் வந்திலார்
..
கொள்ளார்.." (பரி.9)

என்ற பகுதி அமைந்து, இன்பக் காட்சிகளை எல்லாம் குறிப்பிட்டு இதனை அறிகின்றவர்கள் அதாவது இன்பப் பொருள் இலக்கணத்தை அறிகின்றவர்கள் வேதம் உடைய வடமொழியார் அல்லர். தமிழ் இலக்கணம் அறிந்தவரே அறிய முடியும் என்று வேத மறுப்புப் பாடலில் இடம்பெற்றுள்ளது.முத்தி என்பதை மேலுலகை அடைவது என்று ஒரு தரப்பினர் நம்புகின்றனர். இதனை ஏற்றுக்கொள்ளாதவர் உலகாயதர். இந்தச் செய்தியை மோசிகீரனார் பாடலில் காணமுடிகிறது. முரசுக் கட்டிலில் துயின்ற தனக்குக் கவரி வீசிய சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையை அவர் பாராட்டுகின்ற பொழுது,

"வீசியோயே வியலிடம் கமழ
இவணிசை உடையோர்க்கு அல்லது அவனது
உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்" (புறம்.50)

என்கிறார்.சாமரத்தால்குளிரவீசுகின்றவனே, இவ் அகன்ற உலகத்தின்கண்ணே புகழுடன் வாழ்பவர்க்கு அல்லது மேலுலகமான உயர்ந்த நிலையை உடைய உலகத்து உறைதல் இல்லை என்ற செய்தி அறிந்ததினாலோ இச்செயலைச் செய்தாய் என்ற பொருள் அமைந்து, மேலுலகம் குறிக்கப்பெறுகிறது. இது மறுப்பு நிலையில் இல்லை என்றாலும் பாடலில் நல் தமிழ் முழுதும் அறிதல் அதனொடும் அமையாது என்ற தொடர்

அமைந்து, தமிழ் அறிந்தவர்களே இத்தகைய செயலைச் செய்ய முடியும் என்ற குறிப்பு இடம்பெற்று வேதமொழிக்கு மறுப்பாக அமைந்தது எனலாம்.

பெண்மை நலம்

இத்தகைய தொன்மைவாய்ந்த சங்க இலக்கியங்களில் உலகாயதக் கொள்கைகள் இடம்பெற்றுள்ளதோடு கொள்கைகளின் மறுப்பும் இடம்பெற்றுள்ளது. இங்கு சங்க இலக்கியத்தில் காணப்படும் கொள்கைகளை வகுத்துரைத்த ஆய்வாளர்களின் கருத்துக்கள் தொகுத்துத் தரப்பெறுகின்றன. பேரா. சோ.ந.கந்தசாமி அவர்கள் தம்முடைய இந்தியத் தத்துவக் களஞ்சியத்தில் இரண்டு சான்றுகளைத் தந்துள்ளார்கள். அதில் முதல் சான்று உலகாயதர் வற்புறுத்திய பெண்மை நலத்தை உடையதாகும்.

**"தொடியுடைய தோள் மணந்தனன்
கடி காவில் பூச் சூடினன்
தண் கமழும் சாந்து நீவினன்
செற்றோரை வழி தபுத்தனன்
நட்டோரை உயர்பு கூறினன்
வலியர் என வழிமொழியலன்
மெலியர் என மீக்கூறலன்
பிறரைத் தான் இறப்பு அறியலன்
இரந்தோர்க்கு மறுப்பு அறியலன்
வேத்துடை அவையத்து ஓங்கு புகழ் தோற்றினன்**

**வருபடை எதிர் தாங்கினன்
பெயர் படை புறங் கண்டனன்
கடும் பரிய மாக் கடவினன்
நெடுந் தெருவில் தேர் வழங்கினன்
ஓங்கு இயல் களிறு ஊர்ந்தனன்
தீம் செறி தசும்பு தொலைச்சினன்
பாண் உவப்பப் பசி தீர்த்தனன்
மயக்குடைய மொழி விடுத்தனன், ஆங்குச்
செய்ப எல்லாம் செய்தனன் ஆகலின்
இடுக ஒன்றோ, சுடுக ஒன்றோ
படுவழிப் படுக, இப் புகழ்
வெய்யோன் தலையே”** (புறம். 239)

இப்பாடலில், தமிழகத்தில் வாழ்ந்த குறுநிலத் தலைவர்களில் ஒருவனான நம்பி நெடுஞ்செழியனைப் பேரெயில் முறுவலார் பாராட்டிப் பாடுகிறார். இப்பாராட்டுதலில்

குறுநில மன்னனின் பல குண நலன்கள் இடம்பெற்றிருப்பதோடு,இரண்டு செய்திகள் உலகாயதரின் கருத்துக்களை வலியுறுத்துவதாகப் பேராசிரியர் குறிப்பிடுகின்றார். ஒன்று "தொடியுடைய தோள் மணந்தனன், கடி காவில் பூச்சூடினன், தண்கமழும் சாந்து நீவினன்" - என்ற பகுதி உலோகாயதரின் பெண்மை நலம் துய்க்கப்படுவதைக் குறிப்பிடுவதாகச் சுட்டிக்காட்டுகிறார். உலகாயதரின் போகக் கோட்பாட்டினைக் கவிநலம் கொண்ட இப்பாடல் சுட்டுகிறது என்றும் வாழ்க்கையில் ஒருவன் அடைய வேண்டிய பேறு இன்பத் திளைப்பு -இன்பம் என்னும் உறுதிப் பொருளே என்பதை இனிய ஓசை நலம் கெழுமிய இப்பாடல் அடிகள் புலப்படுத்துகின்றன என்றும் இஃது உலகாயதக் கொள்கை என்றே தோன்றுகிறது என்றும் குறிப்பிடுகிறார்கள்.

இப்பாடலில் பின்னர் வருகிற பகுதியில் அவனுடைய கொடைப் பண்புகளும், அவனுடைய வீரத் தன்மையும் கூறப்பெற்று, "தீம் செறி தசும்பு தொலைச்சினன்", என்ற வரி இடம்பெற்று இனிய செறிவை உடைத்தாகிய மதுவை உடைய குடங்களைப் பலருக்கு வழங்கித் தொலைத்தனன் என்ற பொருள் கிடைக்கின்றது. எனவே, உலகாயதரின் கள்ளுண் மகிழ்ச்சியே பேரின்பம் என்பதும் இப்பாடல் தருகின்ற கொள்கையாகும். பாடலின் மூன்றடிகளில்,

"செய்ப எல்லாம் செய்தனன் ஆகலின் -இடுக ஒன்றோ, சுடுக ஒன்றோ படு வழிப்படுக.இப் புகழ் வெய்யோன் தலையே" என்பதன் மூலம் உலகாயதர் கொள்கை பெறப்படுகிறது என்றும் பேராசிரியர் குறிப்பிடுகிறார். அதாவது உலகத்தார் பாராட்டும் நல்வாழ்க்கையினை நடத்தியிருக்கிறான். ஆதலால் அவனை மண்ணில் புதைக்கவோ அல்லது தீயினாலோ சுடுக என்று புலவர் குறிப்பிடுவதால் உலகாயதரின் கொள்கையான இறந்தவர் உடலைப் புதைப்பது என்ற மரபு புலப்படுகிறது என்கின்றார்.

இறந்தவர்களைப் புதைத்தல்

அவர் மேலும் குறிப்பிடுகின்ற செய்தி இறந்த உடம்பினை அலங்கரித்து முதுமக்கள் தாழியில் கவித்து, ஐம்பூதங்களில் ஒன்றாகிய நிலத்தின் வயிற்றில் இருத்துதல் பழைய நாகரிகத்தின் பழக்கம் என்பர் மானிடவியலார். இத்தகைய பழக்கம் சுமேரியரிடமும் காணப்பட்டது. இதனால் இவ் உலகாயதப் பழக்கம் அவரிடமிருந்து நம் நாட்டிற்கு வந்திருத்தல் வேண்டும் என்று தத்துவமேதை எஸ்.என். தாஸ் குப்தா அவர்கள் கருதினார்கள் என்றும் குறிப்பிடுவார். மேலும், உலகாயதர் வாழ்ந்த காலத்தில் உடலைப் பேணி வளர்த்து உடுத்து மகிழ்ந்தது போலவே இறந்த பின்னரும் அந்த உடலுக்கு உரிய அதே மரியாதையை வழங்கினர் எனலாம். புதைத்தல் ஆரியர் அல்லாதார் வழக்கம். எரித்தல் ஆரியர் வழக்கம் என்பர் என்றும் பேராசிரியர் குறிப்பிடுவார்.

பூத வாதத்தார்

தமிழிலக்கியங்களில் உலகாயதத்தைக்காண முற்பட்ட ஆய்வு அறிஞர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர் பேராசிரியர் முனைவர்க.நெடுஞ்செழியன் ஆவார். கிடைத்திருக்கும் சான்றுகளில் அவருடைய தமிழிலக்கியத்தில் உலகாய்தம் என்ற ஆய்வு நூல் மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். இந்நூல் அவர்தம் ஆய்வுச் சிந்தனைக்கும் தரவுகள் தேடுதல் முயற்சிக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. உலகாயதம் பற்றிய செய்திகள் பலவற்றையும் தருவதோடு. சங்க இலக்கியத்தில் காணப்படுகின்ற உலகாயதம் சார்ந்த பாடல்களைச் சுட்டிக் காட்டியிருக்கிறார். அவர்தம் ஆய்வுக் கருத்துக்களின் சுருக்கம் இங்கு இன்றியமையாதது ஆகின்றது.

பேராசிரியர் சோ.ந.கந்தசாமி அவர்கள் சுட்டிக்காட்டியது போல உலகாயத இன்பக் கொள்கையைப் பல சங்க இலக்கியப் பாடல்கள் மூலம் எடுத்துக் காட்டியுள்ளார் பேராசிரியர் முனைவர் க.நெடுஞ்செழியன். அதில் ஒன்று பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை மாங்குடிக்கிழார் பாடிய பாடலாகும். அப்பாடற் பகுதியில் உலகாயதர் கருத்து வலியுறுத்தப் பெற்றிருப்பதைப் பேராசிரியர் அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்.

"இரவல் மாக்கள் ஈகை நுவல
ஒண் தொடி மகளிர் பொலங்கலத்து ஏந்திய
தண் கமழ் தேறல் மடுப்ப, மகிழ் சிறந்து
ஆங்கு இனிது ஒழுகுமதி பெரும! ஆங்கு அது
வல்லுநர் வாழ்ந்தோர் என்ப - தொல் இசை
மலர் தலை உலகத்துத் தோன்றி
பலர், செலச் செல்லாது நின்று விளிந்தோரே" (புறம்.24)

என்ற இப்பாடலில் வளையலை உடைய மகளிர் பொற்கலத்தில் நறுமணம் மிக்க மதுவைத் தர, அதனை உண்டு மகழ்ச்சி மிகுந்து இனிதே நடப்பாயாக. “இத்தகைய ஒழுக்கம் வல்லவரை வாழ்ந்தோர் என்று சொல்லுவர் அறிவுடையோர். உலகத்தின் கண்ணே பிறந்து பழைய புகழில் ஒழுகாது இறந்தோர் பலர். அவர்கள் வாழ்ந்தோர் எனப்படார் என்ற பொருள் அமைந்துள்ளது. இதனைப் பேராசிரியர் எடுத்துக் காட்டி, பூத வாதத்தார் அதாவது உலகாயதத்தார் தங்கள் கோட்பாடுகளுக்கு ஏற்ப வாழ்த்தியுள்ளார்கள் என்று குறிப்பிடுவார் (ப.48), பேராசிரியர்கள் சோ.ந.கந்தசாமி”, நெடுஞ்செழியன் ஆகியோரின் எடுத்துக்காட்டின்படி சங்க இலக்கியத்தில் உலகாயதக் கொள்கையான பெண்மைநலம் புணர்தலே சிறப்பு என்பது இடம்பெற்றிருப்பதை அறியமுடிகிறது.

காமம்

சில சங்க இலக்கியப் பாடல்கள் உலகாயதரின் கொள்கையான பெண்மைநலம் துய்த்தல் கொள்கையினைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

"காமம் காமம் என்ப: காமம்
அணங்கும் பிணியும் அன்றே; நுணங்கிக்
கடுத்தலும் தணிதலும் இன்றே; யானே
குளகு மென்று ஆள்மதம் போலப்
பாணியு முடைத்துஅது காணுநர்ப் பெறினே." (குறுந்.136)

என்ற குறுந்தொகைப் பாடல், காமத்தைக் குறை கூறுவது தவறு.காமமானது புதிதாகத் தோன்றும் வருத்தமும் நோயும் அல்ல, நுண்ணிதும் மிகுதியும் அல்ல, கண்டு மகிழ்பவரைப் பெற்றால் அது வெளிப்படக் கூடியதுதான் என்று காமத்தின் சிறப்பைக் கூறுகின்றது. அதுபோலக் கீழ்க்காணும் குறுந்தொகைப் பாடல்,

"காமம் காமம் என்ப: காமம்
அணங்கும் பிணியும் அன்றே; நினைப்பின்,
முதைச்சுவற் கலித்த முற்றா விளம்புல்
மூதா தைவந் தாங்கு
விருந்தே காமம் பெருந்தோ ளோயே." (குறுந். 204)

என்று காமத்தின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றது. மேட்டுநிலத்தில் விளைந்த இளம் புல்லை முதிய பசுவானது நாவால் தடவி இன்புறுவது போலக் காமம் புது இன்பத்தைத் தரும் என்ற பொருளை இப்பாடற் உணர்த்தி காம நிலையை எடுத்துக்காட்டுகிறது. மதுரைக் காஞ்சியின் இறுதிப் பகுதியில்,

"இலங்கு இழை மகளிர் பொலங் கலத்து ஏந்திய
மணம் கமழ் தேறல் மடுப்ப நாளும்
மகிழ்ந்து இனிது உறைமதி பெரும்
வரைந்து நீபெற்ற நல் ஊழியையே" (மதுரைக். 780-783)

என்ற வரிகள் இடம்பெற்றுப் பெண்கள் தரும் கள்ளை உண்டு நாளும் மகிழ்ந்திருக்கப் பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடி மருதனார் வாழ்த்துகின்றார். நிலையாமையை எடுத்துக் கூறிய இப்பாடலின் இறுதியில் பெண்ணின்பம் இடம்பெற்று உலகாயதக் கொள்கை குறிக்கப்பெறுகிறது. பரிபாடலில் குன்றம்பூதனார்.

"நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர்! கேண்மின், சிறந்தது:
காதற் காமம், காமத்துச் சிறந்தது
விருப்போர் ஒத்து மெய்யுறு புணர்ச்சி" (பரி.9)

என்று பெண்ணின்பத்தைக் குறிப்பிடுகின்றார். நான்மறைப் பொருளை விரித்து அதனுடைய புகழை விளக்குகின்ற புலவர்களே, சிறந்ததோர் பொருளைக் கேட்பீர்களாக, காமத்தில் சிறந்தது காதலை உடைய காமம், அஃதாவது இருவர் அன்பு ஒத்து மெய்யுறு புணர்ச்சியைக் கொண்டு,இன்பம் அனுபவித்தல் ஆகும் என்று குறிப்பிடுவதும் பெண்மை இன்பத்தைக் குறிக்கின்ற பகுதியாகும். இத்தகைய செய்திகள் சங்க இலக்கியத்தில் இடம்பெற்று உலகாயதரின் கொள்கையை வெளிப்படுத்துகின்றன எனலாம்.

நால் பூதக்கொள்கை

உலகாயதரின் மற்றொரு கொள்கையான பூதங்களின் சிறப்பைப் போற்றுதல் என்னும் மரபு சங்க இலக்கியத்தில் பரவலாகக் காணப்பெறுகிறது. ஒருசில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு.

"மண் திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பம்
விசும்பு தைவரு வளியும்
வளித் தலைஇய தீயும்
தீ முரணிய நீரும்,என்றாங்கு
ஐம் பெரும்பூதத்து இயற்கை போல" (புறம்.2)

என்ற பாடற்பகுதியில் சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் நிலம், விசும்பு, காற்று, தீ, நீர் என்ற ஐம்பெரும் பூதங்களின் இயற்கைபோல் பொறை,சூழ்ச்சி, வலி, வீரம், கொடை என்ற ஐந்தும் உடையவன் என்று முரஞ்சியூர் முடிநாகராயர் பாராட்டுகின்றார். இங்கு பூதங்கள் உவமையாக்கப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். உவமை என்பது உயர்ந்ததன் மேற்றே என்பதன் அடிப்படையில் பூதங்கள் சிறப்பு பெற்றுள்ளன. உறையூர் முதுகண்ணன் சாத்தனார்,

"செஞ்ஞா யிற்றுச் செலவும்
அஞ்ஞா யிற்றுப் பரிப்பும்,
பரிப்புச் சூழ்ந்த மண் டிலமும்,
வளி திரிதரு திசையும்,
வறிது நிலைஇய காயமும், என்றிவை
சென்று அளந்து அறிந்தார் போல" (புறம்.30)

என்று சோழன் பாராட்டியிருக்கிறார். நலங்கிள்ளியின் அடக்கமாகிய பண்பைச் செஞ்ஞாயிற்றின் வழியும், அதன் இயக்கமும், அவ் இயக்கத்தால் சூழப்பட்ட உலக வட்டமும், காற்று இயங்கும் திக்கும் ஓர் ஆதாரமும் இன்றித் தானே நிற்கின்ற ஆகாயமும்

என இவற்றின் அளவை தேரிற் சென்று கண்டவரைப் போல, ஆராய்ந்து உரைப்போர் பலர் இவ்வுலகில் உள்ளனர். அவர்களாலும் கூறமுடியாத அடக்கத்தை உடைய மன்னவன் என்று சோழன் பாராட்டப்படுகிறான். இப்பகுதியில் ஐம்பூதங்களைப் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் என்பது உலகாயத அறிஞர்களைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது. மேலும்,

"இரு முந்நீர்க் கூட்டமும்
வியன் ஞாலத்து அகலமும்
வளி வழங்கு திசையும்
வறிது நிலைஇய காயமும் என்றாங்கு
அவை அளந்து அறியினும், அளத்தற்கு அரியை." (புறம்.20)

என்னும் புறநானூற்றுப் பாடலில், குறுங்கோழியூர் கிழார் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையைப் பாராட்டியுள்ளார். பெரிய கடலினது ஆழமும், அகன்ற உலகத்தின் பரப்பும், காற்று இயங்கும் திசையும், வடிவு இன்றி நிலைபெற்ற ஆகாயமும் என்று சொல்லப்படுபவற்றை அறிந்து அளந்தாலும், அளந்து அறிய முடியாத புகழினை உடையவன் என்று இப்பாராட்டு அமைந்துள்ளது. முன் காட்டிய பாடலில் பூதங்கள் ஆராயப்படுகின்றன என்று குறிப்பிட்ட புறநானூறு, இப்பாடலில் ஐம்பூதங்களை அறிந்தாலும் அறியலாம் என்று குறிப்பிட்டு உலகாயதரின் ஆய்வுப் பொருளாகிய பூதங்களைப் பற்றிய செய்திகளைத் தருகின்றது.

பூதங்களின் சேர்க்கை

உலகத்தின் தோற்றத்திற்கு பூதங்களின் சேர்க்கை காரணம் என்று சொல்லுகின்ற உலகாயதரின் கொள்கையை,

"நளி இரு முந்நீர் ஏணி யாக
வளியிடை வழங்கா வானம் சூடிய
மண்திணி கிடக்கைத் தண்டமிழ்லல" (புறம். 35)

என்று புறநானூறு குறிப்பிடுகின்றது. மேலும்,

"நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்பொடு ஐந்துடன் இயற்றிய
மழு வாள் நெடியோன் தலைவனாக" (**மதுரைக். 454-456)**

என்று உலகத் தோற்றத்திற்குக் காரணம் பூதங்களின் சேர்க்கைதான் என்பதை வலியுறுத்துகிறது மதுரைக்காஞ்சி. முதற் பகுதியின் பொருள் நீர்செறிந்த பெரிய கடலை எல்லையாகக் கொண்டு, காற்று இடையில் புகமுடியாத வானத்தைச் சூடிக்கொண்டு மண்செறிந்த நிலையாக உலகம் இருக்கிறது என்ற குறிப்பைத் தருகின்றது. அடுத்த பகுதி திக்குகளை உடைய ஆகாயத்துடனே காற்று, நெருப்பு, நீர், நிலன் ஆகிய

ஐந்தினையும் ஒருசேர உலகமாகப் படைத்த மழு வாளை உடையோனைத் தலைவனாகக் கொண்டு என்று கருத்தினைப் பதிவுசெய்கிறது.

சித்தாந்த பார்வையில் உலகாயதம்

சைவ சித்தாந்த சாத்திர ஆசிரியர்களில் ஒருவரான உமாபதி சிவம், சிவஞான போதத்தின் சார்பு நூலாகிய சிவப்பிரகாசத்தைத் தந்தவர் ஆவார். இவர் சிவப்பிரகாசத்தின் பல இடங்களில் உலகாயதரைக் காட்டி பல மறுப்புக்களைத் தந்துள்ளார். சித்தாந்தம் குறிப்பிடும் முப்பொருள்களையும் நிலையானது என்பதை வலியுறுத்தும் இடங்களில் எல்லாம் கடவுள்,உயிர், வினை இல்லை என்பாரை மறுக்க வேண்டிய சூழலுக்கு இவர் ஆட்படுகிறார்.

"படைத்ததொரு படியின்றிப் பறவைபசு நரராாப்
பன்னியது என் முன்னைவினைப் பான்மை என்பர்
அடுத்தவினை உளதாயின் இறையேன் என்னில்
அசேதனமற்று அவை ஆவிக்க அமைத்ததாகும்" (சிவப். 24)

என்ற பாடலில் உலகாயதரின் கேள்விகளையும் விடைகளையும் தந்துள்ளார். அக்கேள்விகள் மூலமாக உலகாயதரின் கொள்கைகள் தெரியவருகின்றன. இதன்படி, கடவுளே உலகத்தைப் படைப்பாராயின் ஒரு தன்மையதாகப் படைக்காமல் பறவை, பசு, மனிதராகப் படைத்த காரணம் ஏன்? என்பது உலகாயதரின் வினாவாகும். வினைக்கேற்ற உடம்பை அடைவது ஆன்மாவாயின் அவ்வான்மாக்களே தத்தம் வினைக்குத் தக்க உடம்புகளை எடுத்துக்கொள்ளும் என்பது அடுத்த வினா. அதற்குக் கடவுள் வேண்டுமா? என்பதும் உலகாயதரின் வினாவாகும். இவ்வினாக்களின் மூலமாக உலகாயதரின் இரு கொள்கைகள் வெளிப்படுகின்றன.

சாத்திர நூலில் உலோகாயத மதக் கொள்கைகளைத் துன்பம் தரும் கொள்கைகளாகக் குறிப்பிடுகின்றார். உயிரானது வினைக்கு ஏற்பப் பிறந்து இறந்து இருவினைகளை அனுபவிக்கும் குணத்தினை உடையதாகும். அந்த உயிர் தொடக்கத்தில் மூலஅறிவு இல்லாத உலகாயதனோடு சேர்ந்து சிற்றறிவு கொள்ளும். வில்லிலிருந்து புறப்படுகின்ற அம்பைவிட விரைவாகச் சென்று கொடிய வினைகளைச் செய்து குடிக்குப் பழியைத் தேடும். கொடுமையான கொலை, களவு, காமம் இவற்றில் ஈடுபட்டுவருந்தும். அறிய வேண்டியவற்றை அறியாது, உலகப் பொருள்களில் மயங்கி வாழும். சேர்ந்திடும் மனத்திற்கும் அதன்வழி செல்லும் புத்திக்கும் புத்தியில் தோன்றுகின்ற அகந்தைக்கும் ஆட்பட்டு, முயற்சி மேற்கொள்ள, மேற்கொள்ள மேனியில் அயற்சி ஏற்பட வருந்தும் என்று பதினோராவது கண்ணி முதல் பதினாறாவது கண்ணி வரை குறிப்பிடுகின்றார். இதன் மூலம் உலகாயதர் தங்களுக்கென்று சமய மூல நூல் இல்லாதவர் என்பதும் காமத்தில் ஈடுபட்டு வாழ்பவர் என்பதும் தெரிய வருகின்றது. மேலும், தங்களுடைய முயற்சியால்தான் இன்பத்தை அனுபவிக்க முடியும் என்று அவர்கள் பேசிவந்த கொள்கைகளாகத் தெரிய வருகின்றது.

முடிவுரை

பிரத்தியட்சம், அநுமானம், ஆப்த வாக்கியம் ஆகிய மூன்று பிரமாணங்களின் விளக்கமும், இவற்றுள் உலகாயதர் பிரத்தியட்சத்தை மட்டும் ஒப்புக்கொண்டு ஏனைய இரண்டையும் ஒப்புக்கொள்ளாமையால்தான் அவர்கள் இந்த உலகமும் நமது உடம்பும் மட்டுமே மெய்; உயிரும் இறைவனும் பொய் என்ற முடிவுக்கு வந்தார்கள் என்பதும், அம்முடிவால் ஏற்படும் விபரீதங்களும், குறைபாடுகளும் இங்குத் தரப்பட்டுள்ளன அம்முடிவிலுள்ள.

நாம் காணும் பெண் இன்பம், உண்ணும் உணவு, கள், நால்வகைப் பூதம் இத்தகுவன மட்டுமே உண்மை மற்றையவை பொய் என பகர்கிறது. இவ்வகைச் செய்திகளால் உலகாயதம் பற்றிய அறிஞர்கள் கருத்துகளையும், சைவ சமய சாத்திரங்கள் தந்திடும் உலகாயதத் தத்துவங்களையும், சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள உலகாயதத் தத்துவங்களையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

துணைநூற்பட்டியல்

1.குறுந்தொகை – நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை – 98.
2.புறநானூறு – நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை – 98.
3.பரிபாடல் – நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை – 98.
4.முனைவர்.சோ.ந.கந்தசாமி – இந்தியத் தத்துவக் களஞ்சியம், மணிவாசகர் நூலகம்,31 சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை – 108.

5.சிவப்பிரகாசம் – சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

License

Copyright (c) 2025 Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்வு இதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journals eISSN *3049-0723*
Journal Vol 1, Issue 09, May 2025 https://doi.org/10.63300/

சுழலியல் மாசுபடுதலும் தீர்வுகலும்
Environmental pollution and solutions

[1] செ குகநாதன், *செ மகேஸ்வரி

[1.]முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,

guhanathans_phd@maher.ac.in, https://orcid.org/0009-0009-5861-6098

* உதவிப்பேராசிரியர்,

maheswari_s@maherfhs.ac.in, https://orcid.org/0009-0005-21652280

[1]*தமிழ்த்துறை, கலை மற்றும் மானுட அறிவியல், மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (நிகர்நிலைப் பல்கலைக் கழகம்) சென்னை, தமிழ்நாடு இந்தியா.

S Guhanathan[1], Dr Maheswari S*

1.Full Time Research Scholar,

guhanathans_phd@maher.ac.in, https://orcid.org/0009-0009-5861-6098

***Assistant Professor,** 6383353914, maheswari_s@maherfhs.ac.in, https://orcid.org/0009-0005-21652280

*[1]Department of Tamil, Faculty of Humanities and Science, Meenakshi Academy of Higher Education and Research (Deemed to be University) Chennai, Tamil Nadu, India.

ABSTRACT:

Balance of quality and quantity in the environment due to various human activities known as pollution, the quality of nature is disturbed. Man abuses the cyclic balance between living organisms in various ways. Affection occurs including living human beings.

- Degradation of environmental quality.
- Environmental degradation

Environmental resources are degraded due to various human activities. Degradation refers to the decrease in the quality of the environment caused by humans at the global country level. This article discusses environmental pollution.

ஆய்வுச் சுருக்கம்:

சுற்றுச்சூழலில் தரமும் அளவும் சமச்சீற்ற நிலை ஏற்படுதல் மாசுபடுதல் எனப்படும் மனிதனின் பல்வேறு செயல்பாடுகளால் இயற்கையின் நிலத்தன்மை சீர்கெடுகிறது. உயிருள்ள உயிர்ற்ற கூறுகளுக்கிடையிலான சுற்றுச்சுழல் சமநிலையை மனிதன் பல்வேறு வழிமுறைகளில் தவறாக பயன்படுத்துகின்றனர். வாழ்க்கை மனிதன் உட்பட பாதிப்பு நிகழ்கிறது.

- சுற்றுச்சூழலின் தரம் குறைகிறது.
- சுற்றுச்சூழல் சீர்கெடுகிறது

சுற்றுச்சூழல் வளங்களை மனிதனின் பல்வேறு நடவடிக்கைகளால் அதன் தரம் அளவு குறைகிறது. சீர்கேடு என்பது மனிதனால் சுற்றுச் சூழலின் தரம் உலக நாடு பிரதேச அளவில் குறைவதைக் குறிக்கிறது.சுற்றுச்சூழல் மாசுபடுதல் பற்றிய இக்கட்டுரை எடுத்துரைக்கின்றன.

முன்னுரை

'சுழலியல் மாசுபடு' மனிதர்கள் தன் சுயநலத்திறகாக மாசுபடுத்தி கொண்டு கொண்டு இருக்கிறோம். அவ்வாறு மாசுபடுதல் வரும் கால்த்தில் எந்த ஒரு உயிரினங்களும் உயிர் வாழ இயலாத சூழலுக்கு தல்லப்படுகிறோம். சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நாமே அதை அழித்து கொண்டு இருக்கிறோம். நீர், நிலம், காற்று இவை மூன்றும் உயிரினங்கள் வாழ முக்கியமானவையாகும். சாக்கடை நீர், தொழிற்சாலை கழிவுகள், காடுகள் அழிப்பு, வேதியியல் உரங்கள், உயிர்க் கொல்லிகள் போன்றவை சுற்றுச்சூழலை அழித்து வருகின்றன். இவைகளை தடுக்கும் வகையில் இவ்வாய்வு கட்டுரை அமைக்கப்படுகின்றன.

சுழலியல் விளக்கம்

இயற்கைச் சூழல் அல்லது சூழலியல் என்பது வாழும் உயிரிங்களுக்கும் அவற்றின் சுற்றுச்சூழலுக்கும் உள்ள உறவு. இயற்கை அமைப்பை அல்லது உயிரினங்கள் வாழ உகந்த சூழல் அமைப்பை பற்றித் தெரிந்து கொள்வதே சூழலியல் ஆகும். (சூழலியல் ஒரு அறிமுகம் க.வி இலக்கிய, சா.சு நந்தினி ப. எண் 7)

புவியின் இயற்கை நிலைகள் அனைத்தும் 'சுற்றுச்சூழல்' எனபதில அடக்கப்படுகின்றன. உயிரினங்கள், வாழும் பகுதியில் உள்ள காற்று, நீர் போன்றவை அடங்கிய இயற்கை நிலை (Environment) (க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி ப. எண் 402) என்றும் சூழல் மண்டலத்தில் (Ecosystem) உள்ள உயிரற்ற (A biotic) காற்று, நீர்,

வெப்பம், ஒளி இன்னும் பிறவும் உயிருள்ள (Biotic) தாவரங்கள், உயிரினங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதே சுற்றுச்சூழலாகும். (சுற்றுச்சூழல் பாதுகாப்பு ப. எண் 401) என்றும் சுற்றுச் சூழலுக்கு விளக்கம் அளிக்கப்படுகின்றன.

சுற்றுச்சூழல் மாசு அடைதல்

சுற்றுச்சூழல் மாசு அடைதல் சமூகத்தின் தவிர்க்க முடியாத ஒரு தீமையாகும். நாம் சூழலில் நீர், நிலம், காற்று, இருப்பிடம் பற்றி விழிப்புணர்வு போதிய அளவு இல்லாத காரணத்தால் சுற்றுச்சூழல் மாசு அடைகிறது. அதிக அளவு கழிவுகள் மூலம் சுற்றுச்சூழல் மாசு அடைகிறது, முன்னேறிய நாடுகளில் கழிவுகளை மறுசுழற்சி மூலம் பயனுள்ள பொருட்களாக அதிகமுள்ள தொழிற்சாலைக் கழிவுகள் மாசுப்பொருட்களாக மலைபோல் குவித்து கிடைக்கின்றன. தொழிற்சாலைக் கழிவுகள் மூலம் நிலம், நீர், காற்று மாசு அடைகிறது. இதனாள் அனைத்து உயிர் இனங்களும் பாதிக்கின்றன. கழிவுகளை மறுசுழற்ச்சி மூலம் பயனுள்ள பொருட்களாக மாற்றப்பட்டல் கழிவுகள் மூலம் சுற்றுச்சூழல் மாசு அடைதலை தடுக்க முடியும்.

நிலம் மாசு அடைதல்

மனிதர்கள், விலங்குகள், தாவரங்களுக்கு நிலம் ஒரு முக்கியமான சுற்றுச்சூழல் பகுதியாகும். உணவு தாவர வகைகள் இயற்கை மூலங்களுக்கு நிலம் ஓர் அடிப்படை சாதனமாகும். மனித பண்பாடு நாகரீகம் உருவாக நில வளம் அடிப்படையாகத் திகழ்கிறது. மண்ணின் பல்வேறு கூறுகள் உட்கூறுகளைக் காணலாம். நயம், வடிவமைப்பு, ஈரப்பதம், அடுக்குகள், கிடைமட்ட படுகைகள் (சுற்றுச்சூழல் கல்வி த. சம்பத் குமார் ப. எண் 50) என்று மண்ணின் பல்வேறு உட் கூறுகளைக் பார்க்க முடிகிறது.

நிலம் மாசுபடுதல் – பொருள், வரையறை

நமது விவசாயத்தற்காக பயன்படுத்தப்படும் அதிகமான வேதிப்பொருட்கள் உரங்கள், பூச்சிக்கொல்லிகள், தாவரக்கொல்லிகள் போன்றவைகளால் மண் மாசு அடைகிறது. மண்ணின் தரம் மனிதர்களின் நடவடிக்கை அல்லது இயற்கையான நிகழ்வுகள் அல்லது இரண்டினால் கெடுகிறது. இதனை, ‘மண் தரச்சீரழிவு’ எனப்படும். இதற்கு மண் அரிப்பு, தாவரச் சத்துகளின் குறைபாடு, மண் நுண்ணுயிரிகளின் குறைபாடு, அதிக அல்லது குறைந்த ஈரப்பதம், வெப்பநிலை மாற்றங்கள் போன்றவை காரணமாக அமைகிறது.

மண் மாசுபடுதலின் முக்கிய காரணங்கள்

1. காடுகள் அழிப்பு

2. மண் அரிப்பு
3. மண் வெடிப்பு
4. காட்டுத் தீ
5. வேதியியல் உரங்கள் உயிர்க்கொல்லிகள், களைக் கொல்லிகள்
6. தொழிற்சாலை மற்றும் நகர்புற கழிவுகள்
7. கழிவு நீர் தேக்கம் ஆகியவை

நிலம் மாசுபடுதலின் காரணங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. உயிரற்ற மூலங்கள்: மண் அரிப்பு, எரிமலை வெடிப்பு
2. உயிரியல் மூலங்கள்: நுண்ணுயிரிகள், பாக்டீரியா, ஒரு செல் உயிரிகள்
3. காற்று மூலங்கள்: அனல் மின் உற்பத்தி நிலையங்கள், தொழிற்சாலை, அதன் கழிவுகள்
4. உயிர்க்கொல்லி மூலங்கள்: வேதியியல் உரங்கள் மூலம் நுண்ணுயிரிகள் மற்றும் கரிம பாஸ்பேட் சேர்மங்கள் அழிக்கப்படுகின்றன.
5. நகர்புற மற்றும் தொழிற்சாலை மூலங்கள்: நகர்புற கழிவுகள், மண்ணின் பண்புகளைச் சீரழிக்கிறது. நகர்ப்புற கழிவு நீர் மண்ணை மாசுபடுத்துகிறது.

நீர் மாசுபடுதல்

இயற்கை வளங்களில் நீர் முக்கியமானதாகும். பூமியில் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் தாவரங்களுக்கும் நீர் முக்கிய ஆதாரமாகத் திகழ்கிறது. நீர்ப்பாசனம், தொழிசாலைத் தேவைகள், அன்றாட வீட்டுத் தேவைகள், குடிநீர் தேவைகள், சுகாதார மற்றும் கழிவுப் பொருட்களை வெளியேற்றுதல் அனைத்திற்கும் நீர் முக்கிய அடிப்படையாகத் திகழ்கிறது. இயற்கையாக உள்ள குட்டைகள், குளங்கள், ஏரிகள், ஆறுகள், கடல், பெருங்கடல் போன்ற நீர் நிலைகளை தொழில்மயமாக்கல், நகரமயமாக்கல் விளைவாக மாசுபடுகிறது.

நீர் மாசுபடுதலின் காரணிகள்: நீர் மாசுபடுதல் ஏற்பட முக்கியமாக இரண்டு காரணிகள் உள்ளன.

1. இயற்கை காரணிகள்: மண் அரிப்பு, மண் சரிவு, எரிமலை வெடிப்பு, நிலச்சரிவு, கடற்கரை மற்றும் மலை முகடு அரிப்பு, வெள்ளப்பெருக்கு, தாவரம் மற்றும் விலங்கினங்களின் சிதைவு போன்றவைகளால் நீர் மாசுபடுதல் ஏற்படுகிறது.
2. மனிதர்களின் நடவடிக்கைகளால் ஏற்படும் மூலங்கள் ஆதாரங்கள்: தொழிற்சாலை உருவாக்கம், நகரமயமாக்கல், விவசாய ஆதாரங்கள் பண்பாட்டு ஆதாரங்கள்

நீர் மாசுபடுதலின் வகைகள்

நீர் மாசுபடுதலின் காரணங்கள் நீர் சேமிப்பின் அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்படுகின்றன.

1. மேல்மட்ட நீர் மாசுபடுதல்
2. ஏரிநீர் மாசுபடுதல்
3. நிலத்தடி நீர் மாசுபடுதல்
4. கடல் நீர் மாசுபடுதல்
5. ஆற்று நீர் மாசுபடுதல்

நீர் மாசுபடுதலின் காரணங்கள், மாசுக்களை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்படுகிறது.

1. சாக்கடை நீரால் மாசுபடுதல்
2. வீட்டு கழிவுகளால் மாசுபடுதல்
3. தொழிற்சாலை கழிவு நீரால் மாசுபடுதல்
4. திடக்கழிவுகளால் மாசுபடுதல்

நீர் மாசுபடுதலின் சூழ்நிலையியல் நோக்கு

பல்வேறு வகையான நீர் மாசுபாடுகளில் விளைவாக நீர் மண்டலங்களின் இயற்பியல், வேதியியல், உயிரியல் பண்புகளில் பாதிப்பு ஏற்படுகிறது. விளைவாக மனிதர்களுக்கு மருத்துவம் அழுகுணர்வு, பொருளாதாரம் ரீதியான பெரும் ஆபத்தை விளைவிக்கிறது. நீர் மாசுபடுதலின் வெளிப்படையான சூழ்நிலையியல் விளைவிகளைப் பார்ப்போம். (சுற்றுச்சூழல் கல்வி த. சம்பத் குமார் ப. எண் 37, 38)

சாக்கடை நீர் மாசுபடுத்திகள்

சாக்கடை நீர் சுத்திகரிக்கப்படாமல் நீரில் கலக்கப்படுவதால் குடிநீர் மாசு ஏற்படுகிறது. சில நேரங்களில் சாக்கடை நீர் கலந்துவிடுகின்றன. நம் நாட்டிலுள்ள பெரு நகரங்களில் இவ்வகை மாசுபடுதல் அதிகமாக நிகழ்கிறது. வீட்டிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர், கால்நடை தோல் அல்லது உணவு அல்லது சாயத்தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் தான் சாக்கடை எனப்படுகிறது. (சுற்றுச்சூழல் கல்வி த. சம்பத்குமார் ப. எண் 38) இதனுல் மனிதக்கழிவிகள், உணவு மீதங்கள், காகிதம், துணி, சோப்பு, வேதிப்பொருட்கள், நச்சுப்பொருட்கள் உள்ளடங்கியுள்ளன. இவைகள் அனைத்தும் நீர் நிலைகலை அடையும் போது மாசுபட்ட பகுதியாக உருமாறுகின்றன.

நமது கிராமங்கள், நகரங்கள், மாநகரங்கள் வசிக்கும் மக்கள் ஆறுகள், ஏரிகள், குட்டைகள், ஒடைகளில் கழிவுப் பொருட்களை கொட்டும் பழக்கம் நாளடைவில் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. இவ்வாறு, நீர் நிலைகளிலுள்ள குப்பைகள், கழிவுப்பொருட்கள் கொட்டும் பழக்கம் நாளடைவில் அதிகரிப்பதால் நீர் நிலைகளின் மறுசுழற்சி செய்ய இயலாததால் சுய ஒழுங்குத் திறன் பெரிதும் பாதிப்புக்கு ஆளாகிறது.

சமுதாயக் கழிவுநீர்

வீடுகள், தொழிற்சாலை, அலுவலகங்கள் வணிகமையங்கள் ஆகியவற்றிலிருந்து வெளியேறும் கழிவுநீர் பொதுக்கழிவுநீர்க் குழாய்களில் விடப்படுகிறது. இதில் மனித விலங்குக் கழிவுகள் உணவுக் கழிவுகள் துணி பாத்திரங்கள் மற்றும் பிறவற்றைச் சுத்தம் செய்யும் சோப்பு பவுடர் மற்றும் இதர பொருட்களின் கழிவுகள் அடங்கும்(ப.197-198).

தொழிற்சாலைக் கழிவுகள்

தொழிற்சாலைகளினின்றும் வெளியேற்றப்படும் கழிவுநீர், ஆறுகள், குளங்கள் கடற்பகுதிகள் ஆகிய நீராதாரங்களில் கலப்பதால் நீர் மாசடைகிறது. நீர் மாசடைவதற்கும் காரணமாக இருக்கும் முக்கிய தொழிற்சாலைகள் வருமாறு

இரசாயணத் தொழிற்சாலைகள், உணவு பதப்படுத்தும் தொழிறசாலைகள், சர்க்கரை ஆலைகள், இரப்பர் தொழிற்சாலைகள், பிளாஸ்டிக் தொழிற்சாலைகள், உலோகத்தொழிற்சாகள், காகித ஆலைகள், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள், தோல் பதனிடும் தொழிற்சாலைகள், இறைச்சி கூடங்கள், உரத்தொழிற்சாலைகள், பூச்சிக்கொல்லி மருந்து தயாரிக்கும் தொழிற்சாலைகள், கனிமச்சுரங்கங்கள், மருந்து தயாரிக்கும் தொழிற்சாலைகள், சோப்பு மற்றும் சோப்பு பவுடர்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள்

மேலே குறிப்பிட்டுள்ள தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவுநீர் உயிரினங்களுக்கு நச்சுத்தன்மையை விளைவிக்கக்கூடியவை.

வேளாண்தொழில் மூலம் நீர் மாசுறுதல்

மக்கள் தொகைப் பொருக்கத்திற்கேற்ப உனவு உற்பத்தியைப் பெருக்க வேண்டியதிருப்பதால் வீரிய இனப்பயிர்களைப் பயிரிட வேண்டிய கட்டாயம் எழுந்தது. அதற்காக இரசாயன உரங்களையும் பூச்சிக்கொல்லி மருந்துகளையும் பயன் படுத்த வேண்டியது தவிர்க்கமுடியாதாகிவிட்டது. இவையே நீர் மாசுடைவதற்கு முக்கிய காரணிகளாக இருக்கின்றன. இரசாயன உரங்களின் நைட்ரஜன், பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் போன்ற தாவர ஊட்டச்சத்துக்கள் உள்ளன். அதிக விளைச்சல் காண வேண்டி வேளாண் மக்கள் தேவைக்கு அதிகப்ப்டியான உடங்களைப்

பயன்படுத்துகிறார்கள். அவை பூமியின் மேல்பரப்பிலுள்ள ஆறுகள் குளங்கள், அனைகள், ஏரிகள் அகியவற்றிலுள்ள நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தும் பொழுது அந்நீருடனும் மற்றும் கழிவு நீருடனும் கலந்து விடுகின்றன. அத்துடன் கோழி, பன்றி, ஆட்டுப் பண்ணைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகளும் மழை நீரால் அடித்துச் செல்லப்படுவையும் நிலத்தடி நீருடன் கல்க்கின்றன. காளான் கொல்லி, எலிப்பாசானம், புகைமூட்டம் ஆகிய பூச்சிக் கொல்லிகளில் குளோரிநேட்ரேட் ஹைட்ரோ கார்பன், தாது உப்புக்கள், கார்பனேட்ஸ் தியோ கார்பனேட்ஸ் ஏஸ்டிக் ஆசிட் ஆகிய ஏராளமான இரசாயனங்கள் உள்ளன. இவற்றில் அநேக பூச்சிக்கொல்லி மருந்துகள் நீண்டாகாலம் தங்களது வீரியத்தன்மையை இழக்காதவை டிடிடி, டையஸ்ட்ரின், என்ட்ரின் போன்றவை தாவர மிதவை உயிரி போன்ற, சிறிய உயிரினங்களால் உறிஞ்சப்பட்டு, உண்வுச் சங்கிலி மூலமாக மனிதன் உட்பட பெரிய உயிரினங்களுக்குக் கடத்தப்படுகின்றன. இந்த பூச்சிக்கொல்லிகள் உயிரினங்களின் உடலிருந்து வெளியில் வராது. உணவுச்சங்கிலியின் ஒவ்வொரு நிலையிலும் தீங்கு நிறைந்த அவற்றின் செறிவு அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இது உயிரிப் பெருக்கம் எனப்படுகிறது. (ப. எண் 200, 201)

நிலத்தடி நீர் மாசுறுதல்

நாம் பருவதற்கும், பாசனத்திற்கும் பயன்படுத்தும் நிலத்தடி நீர் மாபட்டிலிருக்கிறது. நீரை மாசுபடுத்துவது எளிது அதை மீண்டும் நன்னீராகப் பெருவது என்பது தாமதமாக நடக்கக் கூடியது. எனவே நிலத்தடி நீரை மிகவும் நியாயமாகுவும், சிக்கனமாகவும் பயன்படுத்த வேண்டியது. இனறைய அவசியத்தேவை என்பதை நம் மக்கள் அனைவரும் உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். நகரங்களில் சுத்திகரிக்கப்படாத கழிவு நீர் நிலத்தில் பாய்வதாலும், தொழிற்சாலைக் கழிவுகள் நீர் நிலைகளுக்கு அருகில் கொட்டப்படுவதாலும் கிராமங்களில் வேளாண் தொழிலுக்கு தேவைக்கு அதிகமான அளவு இரசாயன உரங்களும், பூச்சிக்கொல்லி மருந்துகளும் பயன்படுத்துவதாலும் நிலத்தடி நீர் மாசு அடைகின்றன.

நீர் மாசுடைவதைக் கட்டுப்படுத்தும் வழிகள்

நீரில் அசுத்தங்களை கலக்காமல் தடுக்கும் முயற்சிகளை முதலில் மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில் மாசுடைந்த நீரைச்சுத்திகரித்து மறுசுழற்சி மீண்டும் பயன்படுத்த வேண்டும்.

1. நீரப் பயனபடுத்தும் தொழிற்சாலைகளில் சுத்திகர்ப்புக் கலன்களை நிறுவச்செய்து கழிவுகளை உருவாகும் இடத்திலேயே நீரைச்சுத்தம் செய்து பின்னரே அந்நீரை நீர்நிலைகளில் வெளியேற்ற அனுமதிக்கப்பட வேண்டும்.
2. மறுசுழற்சி முறையில் சுத்திகரிக்கப்பட்ட நீரை மீண்டும் பயன்பருத்தலாம்
3. சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை வேளாண்மைக்குப் பயன்படுத்தலாம். நகரங்களில் வீட்டுக் கழிவுநீரை வீட்டுத்தொட்டங்களுக்குப் பயன்படுத்தலாம். இவ்வாறு பயன்படுத்திவரத் தொட்ங்கிருப்பது ஒரு நல்ல அறிகுறி.
4. நீர்ச்செடிகள் நீர் நிலைகளில் வளர்ந்து படர்வதை தடுக்க அவ்வப்போது சுத்தம் செய்ய வேண்டும்.
5. மீங்களை நீர் நிலைகளில் வளர்ப்பதன் மூலம் அவை நீரிலுள்ள நச்சுப்பொருட்களையும் கன உலோகங்களையும் நீக்கி, நீரைச்சுத்தமாக வைத்திருக்க உதவுகின்றன.
6. பொதுநீர் நிலைகளில் துணிகளைத் துவைத்தல், மனிதர்கள் குளித்தல், கால் நடைகளையும் வாகனங்களையும் இதர அசுத்தமானவற்றைக் கழுவுதல் ஆகியவற்றை முற்றிலுமாகத் தடை செய்ய வேண்டும்.
7. பெரிய தொழிற்சாலைகளோடு தொடர்புடைய சிறிய ஆலைகள், அத்தொழிசாலைகளோடு இணைந்து கூட்டு முறையில் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதன் மூலம் செலவுகள் குறைவதுடன் அரசு உதவியும் பெறமுடியும்
8. நீர் தூய்மைக்கேடு தடுப்பு மற்றும் காப்புச் சட்டங்கள் நடைமுறையில உள்ளன. அவற்றைச் சரிவரக்கடைப்பிடிக்காத தனி நபர்கள் மீதோ. தொழிற்சாலைகள் மீதொ அரசாங்கப் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்
9. இரசாயண் உரங்களையும், பூச்சிக்கொல்லிகளியும் வேளாண்மைக்கும் பயன்படுத்தவதைத் தவிர்த்து இயற்கை முறைகளையும் பயன்படுத்தவது கட்டயமாக்கப்பட வேண்டும்.

காற்று மாச

நமது பூமிக்கோளைப் பாதுகாக்க அதனைச்சுற்றிலும் மெல்லிய திரை போன்ற காற்று மண்டலம் அமைந்துள்ளது. இம்மண்டலம் பல வாயுக்களின் கலவையாகும். இதில் நைட்ரஜன் 79/ ம் கரியமிலவாயு 0.03/ பிராணவாயு 20/ உள்ளன. (சுற்றுச்சூழல் அறிவோம் ப. எண் 186)

மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள், கட்டிடங்கள் மற்றும் இதர பொருட்களையும் மோசமாகப் பாதிக்கும் அளவிற்கு வாயு மண்டலத்திலுள்ள காற்றில் புகை தூது சுற்றுச்சூழல் போன்ற வெளிப் பொருட்களும் இதர நாசினிகளும் கலந்துவிடுவதற்குக் காற்று மாசுடைதல் என்று பெயர்

காற்று மாசின் விளைவுகள்:

போக்குவரத்து நெரியல் அதிகமுள்ள தொழிற்சாலைகள் நிறைந்த பெரிய நகரங்களில் வளிமாசு என்பது அச்சுறுத்தும் பிரச்சனையாக உள்ளது. காற்றுமாசு மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள், கட்டிடப்பொருட்கள் மற்றும் தட்ப வெப்பநிலை ஆகியவற்றைப் பெரிதும் பாதிக்கிறது.

ஹைடிரோகார்பன், கார்பன் மோனாக்சைடு, குளோரோபுளோரா கார்பன், ஹைட்ராஜன் சல்பைட், நைட்ரஜன் ஆக்ஸைடு ஹைட்ரஜன் புளுரைட், ஓசோன், நைட்ரஜன் டை ஆக்ஸைடு, சல்பர்டை ஆக்ஹைடு ஏர்போன் மைக்ரோப்ஸ் ஸ்மாக், துர்நாற்றம், கரித்தூள் தூசு ஆகிய நாசினிகள் மனிதர்களையும், விலங்குகளையும் தாக்கி நாசப்படுத்துகிறது. மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும். கடல்வாழ் உயிரினங்களுக்கும் புற்றுநோய், சுவாசநோய், நரம்புத்தளர்ச்சி, முளைப்பாதிப்பு, உடலில் எல்லா உறுப்புகளையும் பாதிக்கும் பலவித நோய்களை ஏற்படுத்தி உயிரிழப்புகளையும் ஏற்படுத்த இவை காரணமாகிறது (சுற்றுச்சூழல் அறிவோம் ப. எண் 188)

காற்று மாசுபடுதலைத் தடுக்கும் வழிகள்

கந்தகத்தன்மை குறைந்த எரி பொருளைத் தேர்ந்தெடுத்து. அவற்றை, மோட்டார் வாகனங்களில் பயன்படுத்தும் பொழுது வெளியேறும் நாசினிகள் (Pollutant) குறைந்த அளவு இருக்கும்படி திறமையாகப் பயன்படுத்துவதாலும், நாசினிகளின் நச்சுத்தன்மையை மாற்றும் வடிப்பாங்களைப் பயன்படுத்தவதாலும், மோட்டார் வாகனங்கள் அடிக்கடி பரிசோதித்து நல் முறையில் பராமரித்து வருவதாலும். நாசினிகள் வெளியேற்றம் குறையும். (சுற்றுச்சூழல் அறிவோம் ப. எண் 191)

1. தொழிற்சாலைகளில் நாசினிகள் வெளியேறுவதற்குரிய மூல காரணத்தைக் கண்டறிந்து. நாசினிகள் முற்றிலும் வெளியேறாமல் தடுப்பதற்கோ அல்லது குறைப்பதற்கோ உரிய வகையில் தொழிற்சாலை உற்பத்தி முறைகளை மாற்றவோ, மூலப்பொருள்களை மாற்றவோ நடவசிக்கை எடுத்தல் (எ.டு) லீட்பிரி பெட்ரோலைப் பயன்படுத்துதல் கலப்பட எரிபொருளைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தல் ஆகியவை.
2. மாசுப்பொருட்களை எளிதில் அகற்றுவதற்கு ஏதுவாக தொழிற்சாலைகள் அமைக்குமிடங்களைத் தேர்வு செய்தல் (எ.டு) மக்கள் வசிக்குமிடங்கலுக்கு வெகுதொலைவில் தொழிற்சாலைகள் அமைத்தல் மிக உயரமான புகைகூண்டுகளை அமைத்தல்

மாசுவைக்கட்டுப்படுத்தும் முறைகள்

I. நாசினிகளை எரித்தல் அல்லது புதைத்தலாலும் அவற்றை குறைந்த நச்சுத் தனமையுள்ள படிவங்களை துப்புரவான ஆலகா பொருளாகவும் உணவூட்டம் பொருளாகவும் மாற்றுவதன் மூலமும் அவற்றை வளிமண்டலத்தில் கலக்கவிடாமல் தடுத்தலாலும் மாசுவை முற்றிலும் அகற்றவோ அல்லது குறைக்கவோ முடியும்.

II. தொழிற்சாலைகளின்றும் வெளிவரும் தூசுகள் போன்ற நாசினிகள் அப்படியே வெளியில் அனுப்பட்டு வளிமண்டலத்தில் கலப்பதைத் தடுக்க அவற்றைச்சுத்திகரிப்பதற்கு வடிப்பாங்களையும் சுத்திகரிப்புக் கலங்களையும் பொருத்தலாம். இதை எல்லாத் தொழிற்சாலைகளிலும் பொருத்தக் கட்டாயப்படுத்த வேண்டும்.

III. வளிமண்டல மாசு என்பது உலகளாவிய பிரச்சனை. எனவே, உலக நாடுகள் அனைத்தும் ஒருங்கிணைந்து செயல்பட்டு கடுமையான சட்டங்கள் இயற்றி அவற்றை நிறை வேற்ற வேண்டும். கொயபோ புரோட்டோக்கால் ஆகியவற்றை எல்லா நாடுகளும் கடுமையாகப் பின்பற்றினால் தான் மாசுவைக் கட்டுகுள் கொண்டுவரமுடியும். நிறைய ஆக்சிஜன் கிடைக்கும் வண்ணம் அழிந்து போன காடுகளை வளர்ப்பதன் மூலம் நாசினிகளின் பாதிப்பில் இருந்து வளிமண்டலத்தை ஒரவுளக்குக் காக்கமுடியும்.

IV. புதிய தொழில் நுட்பமுறைகளைக் கண்டுபிடித்து மாசுவைப் கட்டுப்படுத்த முயற்சிக்கலாம்.

மண் மாசுறுதல்

மண் தாவரங்களுக்கும், விலங்குகளுக்கும் கால்நடைகளுக்கும் நுண்ணுயிர்களுக்கும் ஆதாரதளமாக விளங்குகின்ற முக்கிய வளமாகும். காற்று, நீர் போன்று மண் வளமும் மாசுபடுத்தப்படுகிறது. மண்ணின் பௌதீக, இரசாயன, உயிரியல் குணங்களை மோசமாகப் பாதித்தது. அதன் உற்பத்தியைத் குறைக்குமளவிற்கு மன்னுடன் கூடுதலாகச் சில பொருட்கள் சேர்வது 'மண் மாசு' எனப்படுகிறது. மண் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தோன்ரியது. மரப்பேன், கரையாங்கள், பூச்சிகளின் லார்வாக்கள், உருளைப் புழுக்கள், பூஞ்சை, பாக்டீரியாக்கள் போன்றவை மண்ணை வளமுள்ளதாக்குகின்றன. இது ஒரு புதுப்பிக்க முடியாத ஆற்றல் வளமாகும். இது பல விதங்களிலும் மாசுபடுத்தப்படுகிறது.

மண் மாசுறுதல் வழிகள்

மக்கள் தொகைப் பெருக்கத்தாலும், தொழிற்சாலைகளின் வளர்ச்சியாலும் வேளாணமை விரிவாக்கத்தாலும் மண் மாசுருவதல் முக்கிய காரணங்கள் வருமாறு. 1.

தொழிற்சாலைக் கழிவுகள், 2. பூச்சிக் கொல்லிகள், 3. உரங்கள், இடுபொருட்கள், 4. வேண்டாத பலவித கழிவுகள், 5. கதிரியக்கப் பொருட்களின் கழிவுகள், 6. நகரக் கழிவுகள், 7. இதர நாசினிகள்.

தொழிற்சாலைக் கழிவுகள்

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் திட மற்றும் திரவக்கழிவுக ஏராளமாகப் பூமியின் மேல் குவிக்கப்படுவதால் மண் மாசுறுகிறது. பிளாஸ்டிக் மின் உற்பத்தித் தொழிசாலைகளிலிருந்து வெளியேறும் பாதரசம், கேட்மியம் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் நூறப ஆலைகள், செராமிக்ஸ், பெயிண்ட் தொழிற்சாலைகள் வெளியேற்றும் ஈயம், சல்பர் டை அக்ஸைடு, செம்பு ஆகியவை, இரும்பு காகித ஆலை சிமெண்டு எண்ணெய் சுத்திகரிப்பு ஆகிய ஆலைகள் வெளியேற்றும் கழிவுகள் சைனட் சில அங்ககப் பொருட்கள், அமிலங்கள், நச்சுத் தன்மை வாய்ந்த இரசாயனப் பொருட்கள் மண்ணை மாசு அடைய செய்கின்றன.

பூச்சிக்கொல்லிகள்

தற்பொழுது வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவும் காடுகளை வளர்க்கும் நோக்கத் துடனும், பலவித இடையூறாக இருக்கின்ற பூச்சிகளையும், எலிகளையும், களைகளையும் அழிக்க வேண்டிப் பலவித இரசாயணம் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவை யாவும் வீரியத் தன்மை வாய்ந்தவையாகவும் உள்ளன. உயிர்க்கொல்லிகளாகத் திகழும் இவை மண்ணிலுள்ள மண்ணின் வளத்திற்குப் பேருதவியாக இருக்கின்ற நுண்ணுயிர்களைக் கொன்று விடுவதன் விளைவாக மண்ணின் இயல்பான தன்மையும் வளமும் சிதைக்கப்படுகிறது. பெரும்பாலான் பூச்சிக்கொல்லிகள் சிதைவுகள் தாவரங்களால் உறிஞ்சப்படுவதால் அவற்றின் வழியாக உணவுச்சங்கிலிகள் மற்றும் உணவு வகைகளுக்குள் நுழைந்து உயிரினங்களுக்குப் பெரும் பாதிப்பையும் முடிவில் இறப்பையும் ஏற்படுத்திவிடுகின்றன. (ப.எண் 211,212)

உரங்களும், இடுபொருட்களும்

விளைச்சலை அதிகரிக்க வேண்டி விவசாயிகள் தங்களது நிலத்திலுள்ள பயிர்களுக்கு அளவுக்கு அதிகமாக இரசாயன் உரங்களையும் இடுபொருட்களையும் பயன்படுத்துவதால் அவை பயிர்ளிலுள்ள பூச்சிகளை மட்டும் அழிப்பதோடு நின்று விடாமல் மண்ணுக்கு வளம் சேர்க்கும் பாக்டீரியாக்களையும் கொன்றுவிடுகின்றன. இதனால், மண்ணின் வளம் குறைவதோடு உற்பத்தி திறனும் குறைகிறது. மனித கால்நடைக்கழிவுகள் மற்றும் சாக்கடை கசடுகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதால் மண்மாசடைவதுடன் இவற்றிலுள்ள கணக்கற்று நோய்ப்பரப்பும் கிருமிகள் மண்ணுடன்

கலந்து மண்ணையும் அம்மண்ணிலுள்ள உணவுப் பயிர்களியும் தாக்கி மனிதர்கள் மற்றும் வீட்டுப்பராணிகளுக்கும் நோய்களை உண்டுபண்ணுகின்றன. இவை உயிரியல் வழிகளாதலால் மண்ணின் தன்மையை மாற்றும் இயல்பு குறைவாகவே இருக்கும். (ப.எண் 212)

நகரக்கழிவுகள்

பிளாஸ்டிக் பொருட்கள், தகரடிங்கள், காகிதங்கள், கண்ணாடி பாட்டிலகள் நூல் இழைகள், பழைய துணிகள், பழைய உலோகப் பொருட்கள், கோரைப்பாயகள், பயன்படுத்தப்பட்டு காலாவதியான மெத்தை, தலையணைகள், மரப்பொருட்கள், கெட்டுப் போன உணவு வகைகள், காய்கறிக் கழிவுகள் ஊர்களின் உதிரிப்பாகங்கள் மருத்துவமனைக்கழிவுகள் போன்றவை மண்ணோடு கலந்து அதனை மாசுறச் செய்கின்றன.

கழிக்கப்பட்ட பொருட்கள்

பயன்படாது என்று கழிக்கப்பட்ட தோல் பொருட்கள், டப்பாக்கள் பிளாஸ்டிக் பொருட்கள் ரப்பர் துணி, கண்ணாடிப் பொருட்கள், வீடு கட்டப் பயன்படுத்திய பொருட்கள் மீதமாகிக் கெட்டுப்போன உணவு பேப்பர்கள் வீட்டுப்பிராணிகளின் மாமிசத்தில் தேவைப்படாத பகுதிகள் இதரவீட்டுக்கழிவுகள் ஆகியவற்றை மண்ணில் குவித்துவைப்பதும் ஒருவகை மாசுதான்.

மண் மாசுவை கட்டுப்படுத்து வழிகள்

1. பெரிய பள்ளங்களையே அல்லது தாழ்வான பகுதிகளிலும் குளங்களையோ தேர்வு செய்து அவற்றில் தொழிற்சாலைக் கழிவுகளையும், வீட்டுக்கழிவுகளையும் சேகரித்து உரிய முறையில் பக்குவப் படுத்தி பின்னர் பக்குவப்படுத்தி பின்னர் மன்னுடன் கலக்க முயற்சிகள் மேற்கொள்ளலாம்.
2. காற்றுமுத்தமுள்ள குழாய்களைப்பதித்து அவற்றின் மூலம் கழிவுகளைச் சேகரித்து வெளியேற்றவும் செய்ய வேண்டும்.
3. கால்நடைகள் மற்றும் வேளாண்மைக் கழிவுகளை சாண எரிவாயு தாயரிக்கப் பயன்படுத்தலாம்.
4. கடைகளுக்கச் செல்லும் பொழுது துணிப்பைகளை மறலாமல் எடுத்துச் செல்ல வேண்டும். பிளாஸ்டிக் பைகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.
5. இரசாயன உரங்களுக்கு பதிலாக ஊடுபயிர் வளர்த்தலையும் பசுந்தாள் உரங்கள் பயன்படுத்துதலையும் நடைமுறைப் படுத்தலாம்.
6. பூச்சிக்கொல்லிகளை அழிக்க உயிரியல் உயிரியல் பூச்சிக்கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப்பிடிக்கலாம்.

7. அளவோடு பயிர்களுக்கு நீர் பாய்ச்சும் பழக்கத்தை உழவர்கள் கடைப்பிடித்தால் மண்ணில் உப்பும் சுண்ணாம்பும் கலப்பதைத்தடுக்கலாம்.
8. மண் அரிப்பைத் தடுக்க விவசய நிலங்களுக்கு அருகில் பயன்படாமல் இருக்கும் தரிசு நிலங்களில் மரங்களை வளர்க்க ஊக்குவிக்கலாம்.

முடிவுரை

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது. மனிதர்கள் சூழலைப் மாசுப்படுத்தும் காரணங்கள் மற்றும் அதனைத் தவிர்க்கும் வழிமுறைகள் பற்றி எடுத்துக்கூறப்பட்டுள்ளது. மேலும், இயற்கை வளங்கள் அழிப்பு அதனால் ஏற்படும் விளைவுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இதனால் நம்மைச் சுற்றி உள்ள சூழலானது நம்மால் பாதுகாக்கப்பட வேண்டிய அவசியம் பற்றி அறியமுடிகிறது. நீர், நிலம், மண் மற்றும் காற்று ஆகிய நான்கு காரணிகளும் சேதப்படுத்தாமல் பாதுக்கும் வழிமுறைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

உதவிய நூல்கள்

1. ச. வே. சுப்பிரமணியன், மெய்யப்பன் தமிழ் அகராதி:2009.
2. கு. கதிரைவேல்பிள்ளை, தமிழ் சொல்லகராதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
3. இராம. சுந்தரன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தமிழ்ப்பல்கலைக்கழகம்
4. மகிழேந்தி, சுற்றுச்சூழலியல் நோக்கில் சங்கத் தமிழகம், பார்க்கர் பதிப்பகம்
5. திட்டம், மாத இதழ், சாஸ்த்ரி பவன்

License
Copyright (c) 2025 Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்வு இதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journals
eISSN ***3049-0723***
Journal Vol 1, Issue 09, May 2025
https://doi.org/10.63300/

இசைக்கருவிகளின் இயங்கியல்
The Dynamics of Musical Instruments

கிருபாசக்தி.க.சி.,

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த் துறை, பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி, கோவை – 641014

மின்னஞ்சல் முகவரி : kirupasakthi43@gmail.com

Kirupasakthi K.S.,

Ph.D. Research Scholar, Department of Tamil, P.S.G. College of Arts and Science, Coimbatore – 641014 Email Address: kirupasakthi43@gmail.com

Abstract:

Geographic culture profoundly shapes food, clothing, occupations, customs, and, importantly, the arts and artistic creations. Migration and environmental shifts drive changes in art forms, including musical instruments, adapting them to new surroundings. The genesis, evolution, adaptation, and obsolescence of musical instruments are influenced by factors such as local environment, natural resources, prevalent customs, and dominant industries. Therefore, close observation of these transformations in musical instruments is crucial. Just as living organisms possess unique anatomies and biological traits, adapting and evolving over generations to ensure survival (as evidenced by both extinct creatures like dinosaurs and endangered species), musical instruments undergo a similar process of creation, development, and potential disappearance. This dynamic process invites a comparison between musical instrument evolution and Darwin's theory of evolution. This article explores how this dynamic manifests in Tamil musical instruments, particularly percussion instruments ("Thannumai"), through the lens of biological evolution, drawing evidence from relevant literature.

Keywords: Thannumai - Percussion instrument, Chenda - Kerala musical instrument, Chende - Used in Yakshagana in Karnataka, Cajón - African musical instrument, Dialectic - Change arising from contradictions, Evolutionary Theory - Darwin's theory of evolution, Vinaignar - Craftsperson/Artisan

ஆய்வு சுருக்கம்:

புவியியல் கலாச்சாரம் உணவு, உடை, தொழில்கள், பழக்கவழக்கங்கள் மற்றும் முக்கியமாக, கலை மற்றும் கலைப் படைப்புகளை ஆழமாக வடிவமைக்கிறது. இடம்பெயர்வு மற்றும் சுற்றுச்சூழல் மாற்றங்கள் இசைக்கருவிகள் உட்பட கலை வடிவங்களில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. அவை புதிய சூழலுக்கு ஏற்ப மாறுகின்றன. இசைக்கருவிகளின் உருவாக்கம், பரிணாமம், தழுவல் மற்றும் வழக்கற்றுப் போதல் ஆகியவை உள்ளூர் சூழல், இயற்கை வளங்கள், நிலவும் பழக்கவழக்கங்கள் மற்றும் ஆதிக்கம் செலுத்தும் தொழில்கள் போன்ற காரணிகளால் பாதிக்கப்படுகின்றன. எனவே, இசைக்கருவிகளில் ஏற்படும் இந்த மாற்றங்களை உன்னிப்பாக கவனிப்பது அவசியம். உயிருள்ள உயிரினங்கள்

தனித்துவமான உடற்கூறியல் மற்றும் உயிரியல் பண்புகளைக் கொண்டிருப்பது போலவும், உயிர்வாழ்வை உறுதி செய்வதற்காக தலைமுறை தலைமுறையாகத் தகவமைத்து பரிணாமம் பெறுவது போலவும் (அழிந்துபோன டைனோசர்கள் மற்றும் அருகிவரும் இனங்கள் மூலம் இது நிரூபிக்கப்பட்டுள்ளது), இசைக்கருவிகள் உருவாக்கம், வளர்ச்சி மற்றும் சாத்தியமான மறைவு போன்ற அதே செயல்முறைக்கு உட்படுகின்றன. இந்த மாறும் செயல்பாடு இசைக்கருவி பரிணாமத்தையும் டார்வினின் பரிணாமக் கோட்பாட்டையும் ஒப்பிட்டுப் பார்க்க அழைக்கிறது. இந்த கட்டுரை உயிரியல் பரிணாமத்தின் கண்ணோட்டத்தில், குறிப்பாக தாள இசைக்கருவிகள் ("தண்ணுமாய்") எவ்வாறு இந்த இயக்கவியலில் தமிழகத்தில் வெளிப்படுகிறது என்பதை தொடர்புடைய இலக்கியங்களிலிருந்து ஆதாரங்களை எடுத்துக்கொண்டு ஆராய்கிறது.

குறிச்சொற்கள்: தண்ணுமாய் - தாள இசைக்கருவி, செண்டை - கேரள இசைக்கருவி, செண்டே - கர்நாடகாவில் யக்ஷகானாவில் பயன்படுத்தப்படுகிறது, கஹோன் - ஆப்பிரிக்க இசைக்கருவி, இயங்கியல் - முரண்பாடுகளிலிருந்து எழும் மாற்றம், பரிணாமக் கோட்பாடு - டார்வினின் பரிணாமக் கோட்பாடு, வினைஞர் - கைவினைஞர் (இங்கு, இசைக்கருவி தயாரிப்பாளரைக் குறிக்கிறது)

முன்னுரை :

மானுடப் பண்பாட்டுக் கூறுகளில் இசை குறிப்பிடத்தக்கது. ஓர் இனக்குழு அல்லது ஒரு சமுதாயத்தின் பண்பாடு என்பது நிலவியல் சார்ந்தே அமைகிறது. அந்நிலவியல் சார் பண்பாட்டிற்கு ஏற்றவாறு இசைக்கருவிகளின் அமைப்பும் பயன்பாடும் இசைக்கும் முறையும் இசைக்கப்படும் நிகழ்வுகளும் சடங்குகளும் சூழலும் மாறுபடுகின்றன. நிலவியல் சார் பண்பாடுகளில் மாற்றங்கள் நிகழும் பொழுது இசைக்கருவிகளிலும் மாற்றங்கள் ஏற்படுவது தவிர்க்க இயலாதது. ஓர் இசைக்கருவி மற்றொன்றாக மாறும். பயன்பாட்டுத் தேவைக்கேற்ப புதியவை தோன்றும். அதன் பயன் குன்றும்போது மறைந்து போகும். இங்ஙனம் எதுவாயினும் நிகழலாம். ஒரு நிலவியல்சார் இசைக்கருவி மற்றொரு நிலவியலில் பயன்படுத்தும் பொழுது அதன் அமைப்பிலும் இசையிலும் சூழலிலும் அடையும் மாற்றங்கள் என்ன? ஒரு கருவியைக் குறிக்கும் நிலம்சார் பெயர்கள் என்னென்ன? பெரும் நிலவியலில் மக்கள் அக்கருவி வாசிக்கப்பட்ட பின்னணியை அதன் மூலத்தை அறிந்திருப்பார்களா? போன்ற சிக்கல்களை ஆராய்வதன் வழியாக இசைக்கருவிகளை ஆவணப்படுத்த முடியும். இசைக்கருவிகள் என்பன வெறும் இசைக்கருவிகள் அல்ல. அது ஒரு சமூகத்தின் உணர்வைக் கடத்தும் அல்லது வெளிப்படுத்தும் கருவி. அது மகிழ்ச்சியைப் பகரும், சினத்தை வெளிப்படுத்தும், எதிர்ப்புக் குரலை ஒலிக்கும், சமூக நிலையைக் குறிக்கும், வழிபாட்டிற்கு அவசியமானதாக மாறும். இவ்வாறு பலவிதமாக வழக்காறுகளில் பங்கு கொள்ளும் இசைக்கருவிகளின் வரலாறு மானுட வரலாற்றோடு பிணைந்தே இருக்கின்றது. சமூக மாற்றங்களும் அவற்றால் மனித வாழ்வியலில் ஏற்படும் மாற்றங்களும் இவற்றின் தாக்கத்தால் பண்பாட்டுச் சூழலில் ஏற்படும் மாற்றங்கள் என ஒன்றன் பின் ஒன்றாக சுற்றிக் கொண்டே இருக்கும். இம்மாற்றங்கள் இசைக்கருவிகளின் நிலைத்தலை முடிவு செய்கின்றன. மேற் கூறப்பட்ட சிக்கல்களை மையமிட்டு தமிழ் நிலம்சார் இசைக்கருவிகளில் ஏற்பட்ட மாற்றங்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது. தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இசைக்கருவிகளை ஆதாரமாகக் கொண்டு அவற்றின் சமகாலப் பயன்பாட்டை ஒப்பு நோக்கி இனம்காண்பது இக்கட்டுரையின்

நோக்கமாகும். டார்வினின் உயிரியல் படிவளர்ச்சிக் கோட்பாட்டைப் போலவே சமூக இயங்கியல் மாற்றங்களுக் கேற்ப இசைக்கருவிகளும் மாற்றங்களுக்கு உட்படுகின்றன என்கின்ற கருதுகோளை அடிப்படையாக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது. தமிழ் நிலப்பரப்பில் இசைக்கருவிகளில் ஏற்பட்ட மாற்றங்களை தமிழ் இலக்கியங்களைத் துணையாகக் கொண்டும் கள ஆய்வில் பெறப்பட்ட செய்திகளைத் துணையாகக் கொண்டும் விவாதிப்பதாக இக்கட்டுரை அமைகிறது. மேலும் இவ்விவாதமானது

1. தமிழ் நிலம்சார் இசைக்கருவிகளில் ஏற்பட்ட மாற்றங்கள்
2. படிவளர்ச்சிக் கொள்கையும் இசைக்கருவிகளின் இயங்கியலும்
3. உலகளாவிய நோக்கில் இசைக்கருவிகளின் இயங்கியல்

என்கின்ற பகுப்பின் கீழ் அமைகிறது.

இயங்கியலினால் தமிழ் நிலம்சார் இசைக்கருவிகளில் ஏற்பட்ட மாற்றங்கள் :

தமிழர்கள் இசைக்கருவிகளை நரம்புக் கருவி, துளைக்கருவி, தோற்கருவி, கஞ்சக் கருவி என நான்காக வகைப்படுத்தினர். பண்டைய தமிழ் இலக்கியங்களில் **யாழ்** மட்டுமே நரம்புக் கருவியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. யாழ் என்னும் கருவி இன்று வழக்கில் இல்லை என்றாலும் யாழே காலப்போக்கில் வீணையாகியது என்று இசை ஆய்வாளர்கள் கூறுகின்றனர். குறிப்பாக இக்கருத்தை தமிழிசை இயக்கத் தந்தை ஆபிரகாம் பண்டிதரின் புதல்வரான வரகுணப் பாண்டியன் அவர்கள் தமது **'பாணர் கைவழி எனப்படும் யாழ் நூல்'** என்னும் நூலில் இக்கருத்தை நிறுவுகிறார். சங்க இலக்கியங்களில் **குழல், கோடு** எனும் துளைக்கருவிகளே காணப்பட்டாலும் பிற்காலத்தில் எழுந்த இலக்கியங்களில் **சின்னம், கொக்கரை, எக்காளம்** முதலான கருவிகள் இடம்பெருகின்றன. ஆனால் சங்க இலக்கியங்கள் முதலாக காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள் என அனைத்து இலக்கியங்களிலும் அதிக அளவிலாக தோற்கருவிகளே காணப்படுகின்றன. தமிழர்கள் வாழ்வியலில் தோற்கருவிகளின் பயன்பாட்டுத் தேவைகள் அதிகம் இருந்ததே இதற்குக் காரணம் எனலாம்.

சங்க இலக்கியங்களில் **பறை, முழவு, தண்ணுமை, கிணை** முதலான தோற் கருவிகள் செய்தி அறிவிப்பதற்கும், வேலன் வெறியாட்டு குரவை முதலான கூத்துகளில் இசைப்பதற்கும்

"குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து

தொண்டகச் சிறுபறைக் குரவை அயர" (திருமுருகாற்றுப்படை 196)

வயலில் பன்றி, யானை முதலியவற்றை விரட்டவும்

"துணையின் தீர்ந்த கடுங்கண் யானை

அணையக் கண்ட அம்குடிக் குறவர்

கணையர் கிணையர் கைபுனை கவணர்

விளியர் புறக்குடி ஆர்க்கும் நாட” (நற்றிணை 108:2-5)

நெல் அறுவடையின் போது களைப்பை நீக்குவதற்கும்

“வெண்ணெல் அரிநர் மடிவாய்த் தண்ணுமை” (அகநானூறு 204:10)

என மக்களின் அன்றாட வாழ்வியலில் இசைக்கப்பட்டன. என்றாலும் சிலப்பதிகாரத்தில் முழவு, தண்ணுமை எனும் கருவிகளின் பயன்பாடு முற்றிலுமாக மாறிவிட்டது. மாதவியின் அரங்கேற்றத்தின் போது முழவு, தண்ணுமை, ஆமந்திரிகை ஆகிய இம்மூன்றும் கூத்திற்கு உரியதாகவும் பாட்டிற்கு ஒத்திசைக்கப்பட்ட தாளக்கருவிகளாகவும் வளர்ந்துள்ளன.

“குழல்வழி நின்ற தியாழே யாழ்வழித்

தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்

பின்வழி நின்றது முழவே முழவொடு

கூடிநின் றிசைத்த தாமந் திரிகை” (சிலப்பதிகாரம் 1:3:139-142)

சங்க காலம் என்பது கி.மு.3 முதல் கி.பி.3ம் நூற்றாண்டு வரையிலான காலம். சிலப்பதிகாரத்தின் காலம் கி.பி.2 அல்லது 3ம் நூற்றாண்டு என்று கருதப்பட்டாலும் கமில் சுவலபில், கார்த்திகேசு சிவத்தம்பி போன்ற அறிஞர்கள் கருதுவது போல் கி.பி5ம் நூற்றாண்டு என்று கொள்வதே ஏற்புடையதாகும் என இங்கு கருதப்படுகிறது. ஏனென்றால் சங்க கால கூத்து முறைமைக்கும் சிலப்பதிகாரத்தில் மாதவி பன்னிரு ஆண்டுகள் முறையாகக் கற்று நாட்டியத்தை அரங்கேற்றியதற்கும் பெரும் வேறுபாடு உண்டு. மேலும் ஒரு இசைக்கருவி வாழ்வியல் பயன்பாட்டிலிருந்து நாட்டியத்திற்கும் பாட்டிற்கும் ஒத்திசைக்கக் கூடிய கருவியாக வளரவேண்டும் என்றாலும் அதில் பல மாற்றங்கள் நிகழ வேண்டும். இதற்கு காலம் தேவைப்படுகின்றது. மாதவியின் கூத்திற்குரிய கருவியாகக் கருதப்பட்ட தண்ணுமை சிவபெருமானின் கூத்திற்குரிய கருவியாகவும் பின் நாட்களில் கருதப்பட்டது.

சைவ சமயம் ஓங்கிய போது சிவத் திருக்கோயில்கள் எழுப்பப்பட்டன. அங்கு வழிபாட்டின் போது பல தோற்கருவிகள் இசைக்கப்பட்டன. கூத்தப் பெருமான் ஆடும் கூத்திற்கு தோற்கருவிகள் இன்றியமையாதவை என்பதால் தோற்கருவிகளுக்கு முக்கிய இடம் கிடைத்தது. வேறு எந்த இலக்கியங்களிலும் இடம்பெறாத அளவு திருமுறைகளில் பல புதிய தோற்கருவிகள் காணப்படுகின்றன.

“சச்சரி கொக்கரை தக்கையோடு தகுணித்தம் துந்துபி தாளம் வீணை

மத்தளம் கரடிகை வன்கை மென்தோல் தமருகம் குடமுழா மொந்தை வாசித்

தத்தனை விரவினோ டாடும் எங்கள் அப்ப னிடம்திரு ஆலங் காடே" (திருமுறை 11:2:7)

என்னும் காரைக்காலம்மையாரின் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகப் பாடல் சான்றாக அமைகிறது.

காலந்தோறும் இலக்கியங்களில் காணலாகும் தோற்கருவிகளின் பதிவுகளை நோக்கும் பொழுது புதிய கருவிகள் தோன்றியிருப்பதும், வளர்ந்து மருவியிருப்பதும், சில காலப்போக்கில் வழக்கொழிந்ததும் வெளிப்படுகிறது. இவை தோற்கருவிகளின் படிநிலைகளை உயிரியல் படிவளர்ச்சிக் கொள்கையோடு ஒப்பிட்டு ஆராய இடமளிக்கிறது.

படிவளர்ச்சிக் கொள்கை :

உயிரியலில் படிவளர்ச்சிக் கொள்கை அல்லது பரிணாம வளர்ச்சிக் கொள்கை **(Evolution)** என்பது ஓர் உயிரினம் தலைமுறை தலைமுறையாக அதன் பண்புகளைக் கடத்திச் செல்லும் போது அவ்வுயிரினம் வாழும் இயற்கைச் சூழல், வாழ்வியல் சூழல், தேவைகள் போன்றவற்றிற்கு ஏற்ப மாறுதல் அடைவதை விளக்குவதாகும். உயிரினங்களில் ஏற்படும் மாறுதல்களை ஆராய்ந்து கூறும் பரிணாம வளர்ச்சியை சார்லஸ் டார்வின் வழிவழி வரும் மாறுதல்களாலாகும் செயல் **(Descent with modification)** என்று கூறுகிறார். இவ்வளர்ச்சி மாற்றங்கள் 1. இயற்கைத் தேர்வு மற்றும் 2. தகவமைவு அல்லது மரபணு பிறழ்வு நகர்ச்சி **(Genetic drift)** என்னும் இரு வழிகளில் ஏற்படுகின்றன.

1.இயற்கைத் தேர்வு :

தலைமுறை தலைமுறையாகக் காலங்கடந்து ஓர் உயிரினம் வளர்ச்சியுறும் பொழுது அவ்வுயிரினத்தின் பண்புகள் அதன் தேவைக்கேற்பவும் வாழும் சூழலுக் கேற்பவும் தகவமைத்துக் கொள்வதற்குரிய இசைவான மாற்றங்களை மரபு வழியாக அடைகின்றன. இவை இயல் தேர்வு அல்லது இயற்கைத் தேர்வு என்று அழைக்கப்படுகிறது. உயிரினங்களின் தோற்றம் இயற்கை என்றால் இசைக்கருவிகளின் தோற்றம் செயற்கை (மனிதனால் உருவாக்கப்படுவது).

பண்டைய தோற்கருவிகள் சில இன்றும் அதே பெயரில் வழக்கிலிருந்தாலும் இதே வடிவத்தில் முன்பும் இருந்தன என்று கூறமுடியாது. பல பரிணாம வளர்ச்சிகள் நடந்திருக்கக் கூடும். வேட்டைச் சமூகத்தில் இயற்கையாகப் பதப்பட்ட தோலில் ஒலி வருவதைக் கேட்டறிந்த பின் நால்வர் தோலை இழுத்துப் பிடித்திருக்க அதில் கோல் கொண்டு அறைந்து ஒலி எழுப்பியிருக்கக் கூடும். பின் மரங்களுக்கு இடையே தோல் கட்டப்பட்டு அடிக்கப்பட்டிருக்கலாம். மட்பாண்ட காலத்தில் பானையின் வாயிலில் தோல் கட்டி ஒலியெழுப்பப் பட்டிருக்கலாம். காலப் போக்கில் தேவைக் கேற்ப மரச் சட்டங்கள், உலோகங்கள், மண் ஆகியவற்றைக் கொண்டு தோற்கருவிகளுக்கான உடல் வடிவமைக்கப்பட்டு அவை சிறுசிறு வேறுபாடுகளைக் கொண்டு பல கருவிகளாக உருவாகியிருக்க வேண்டும். இப்படி மனிதனின் அறிவு, நாகரிகம் மற்றும் சமூக வளர்ச்சிக்கு ஏற்றார் போன்று தோற்கருவிகளும் பரிணாம வளர்ச்சிக்கு உட்பட்டுள்ளன.

தொல்காப்பியர் அகத்திணையியலில் ஐந்திணைகளுக்குரிய கருப்பொருள்களுள் ஒன்றாகப் பறையைக் குறிப்பிடுகிறார். அவர் பறை எனக் குறிப்பிட்டாலும் பின்வரும் உரையாசிரியர்களே **வெறியாட்டுப் பறை**, **ஏறுகோட் பறை** என நிலங்களின் தொழில்களுக்குப் பயன்படுத்தப்பட்ட தோற்கருவிகளை ஒவ்வொரு நிலத்திற்கும் சான்றாகக் குறிப்பிடுகின்றனர். இச்சான்றுகள் சங்க இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டவை என்பதும் குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியர் கூறும் பறை என்பது இன்று வழக்கில் உள்ள பறை என்னும் கருவி அல்ல. தோற்கருவிகளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட பொதுப் பெயர் ஆகும்.

குறிஞ்சிக்குரிய **வெறியாட்டுப் பறை** வேலன் வெறியாட்டின் போது இசைக்கப்படுவது. சடங்குகளில் இசைக்கப்படும் தோற்கருவிகளின் ஒலி மனதைக் கிளர்ந்தெழச் செய்வதாக இருக்கும். இன்றும் **பம்பை, உடுக்கை, உருமி** முதலியன கோயில் சடங்குகளில் இசைக்கப் படுவதற்கு அவ்வொலியின் வீரியமே காரணம். சங்க காலத்தில் பன்றியை விரட்டப் பயன்படுத்திய பறையை **பன்றிப்பறை** என்று வழங்கினர் **(மலைபடுகடாம்.344)**. விலங்குகளை விரட்டப் பயன்படும் தோற்கருவியின் ஒலி அவற்றை அச்சுறுத்துவதாக இருக்க வேண்டும். வெள்ளம் பெருக்கெடுத்து வரும் செய்தியை மக்களுக்குப் பறையறைந்து அறிவித்தனர் **(பரிபாடல் 6:24)**. காடு மலைகளில் உள்ள மரங்களைக் கடந்து மக்களுக்கு செய்தியைக் கடத்த வேண்டும் என்றால் அதன் ஒலி கூரியதாகவும் தொலைதூரம் கடந்து செல்வதாகவும். இருக்க வேண்டும். **பறை, நகரா, தமுக்கு** முதலியன செய்தி அறிவிக்கும் கருவிகளாகும். திருவில்லிப்புத்தூரிலும் திருச்செந்தூரிலும் உள்ள நகரா மண்டபங்கள் சான்றாகும். மேற்கண்டவாறு தோற்கருவிகள் அதன் பயன்பாட்டிற்கு ஏற்றவாறான ஒலியைக் கொண்டிருக்கவேண்டும் என்றால் தோற்கருவிகளின் உடற்பகுதி, அதன் அளவு, பயன்படுத்தும் மரம் அல்லது உலோகம், போர்த்தப்படும் தோல் (மாடு, எருமை, மான் முதலியன சார்ந்து), தோலின் தன்மை (விலங்கின் எப்பகுதித் தோல் என்பதைச் சார்ந்து) முதியவற்றில் மாற்றங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். இதுவே பல கருவிகள் உருவாகுவதற்கு உந்துதலாக அமைகிறது. இதன் மூலம் ஒரு தோற்கருவியின் தோற்றத்திலும் மாற்றத்திலும் நிலம்சார் வாழ்வியல், சமூகம், பயன்பாட்டுச் சூழல், மனிதனின் தேவை முதலியன பங்காற்றுகின்றன.

குடமுழா என்னும் நூலில் குடமுழாவின் ஒவ்வொரு வளர்ச்சிப் படிநிலைகளும் சிற்பங்கள் மற்றும் கல்வெட்டுகளின் சான்றுகள் கொண்டு விளக்கப்பட்டிருக்கும். இது ஓர் இசைக்கருவி பன்னெடுங் காலமாக சிறுசிறு மாற்றங்களைக் கொண்டு சூழலுக்கு ஏற்றவாறு பரிணாம வளர்ச்சி அடைந்திருப்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமையும். குறிப்பாக சிவனின் ஐந்து முகங்களான ஈசானம், தட்புருடம், அகோரம், சத்யோஜாதம், வாமதேவம் ஆகியவற்றைக் குறிப்பதாக அமைந்த ஐந்து முகங்களைக் கொண்ட ஐமுக முழவின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறிப்பிடத்தக்கது.

2. உயிரணு மரபுப்பிறழ்வு :

இழையுருப்பிரிவு **(Mitosis)** என்னும் செயல்பாட்டின் மூலமாக உயிரணுக்கள் நகலாக்கம் **(Replication)** செய்கின்றன. சில காரணங்களினால் அந்நகலாக்கத்தில் ஏதேனும் பிழை ஏற்படக்கூடும். இப்பிழைகளே

உயிரணு மரபுப்பிறழ்வு என்று கூறப்படுகிறது. இம்மரபுப்பிறழ்வு உயிரினங்களின் உயிர்ப் பண்புகளிலும் நடத்தைப் பண்புகளிலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இது சில நேரங்களில் நன்மையாகவும் பல நேரங்களில் தீமையாகவும் அமையலாம். இறுதியில் நன்மையைத் தரும் பண்புடைய உயிரினங்களே வளர்ச்சியடையும்.

தோற்கருவியின் உருவாக்கத்தின் போது வினைஞர் வேண்டிய ஒலியைப் பெருவதற்கு தேவையான தோல் மற்றும் மரத்தைத் தேர்ந்தெடுத்தல், அவற்றைப் பதப்படுத்துதல், உடலில் தோலைப் போர்த்தி இறுகக் கட்டுதல், இணைத்தல் இன்ன பிற செயல்களையும் சீராகச் செய்கின்றார். இந்நீண்ட செயல்பாட்டில் ஏதேனும் ஓர் இடத்தில் பிழை நேர வாய்ப்புள்ளது. ஒருவேளை அது நன்மையாக அமைந்திருக்குமாயின் மேலும் அக்கருவியை செம்மை படுத்துவோ சிறு வேறுபாடுகளை உட்புகுத்தி வேறு புதிய கருவியை உருவாகுவதற்கோ அது வழி வகுத்திருக்கக் கூடும். எடுத்துக்காட்டாக கேரளத்தில் சிங்காரி மேளத்திற்கு (நாட்டுப்புற இசை) இசைக்கப்படும் **செண்டையும்**, பஞ்சாரி மேளத்திற்கு (கோயிலில் இசைக்கப்படுவது) இசைக்கப்படும் **செண்டையும்**, கர்நாடகா யக்ஷகானத்தில் இசைக்கப்படும் **செண்டேயும்** உருவ அமைப்பில் ஒன்று போலவே இருந்தாலும் இம்மூன்றுக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன. இவ்வேறுபாடுகள் ஒரே காலகட்டத்தில் நடந்திருக்க வாய்ப்பில்லை. செவ்வியல் இசைக் கருவிகள் நாட்டுப்புறக் கருவிகளிலிருந்தே செவ்வியல் தன்மையை அடைகின்றன. பல காலங்களாக பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் தோற்கருவிகளில் சிறுகச் சிறுக நடந்து வரும் மாற்றங்களே கருவிகளைப் பலதரப் பட்டதாக மாற்றுகின்றன.

2.1.தகவமைவு :

உயிரினங்களுக்கு இடையே நடக்கும் போட்டிகளாலும் இயற்கையின் தாக்கங்களாலும் வலிமையுடைய உயிரினங்கள் பிழைக்கின்றன. பிழைக்கின்ற உயிரினங்களின் மூலம் அடுத்தடுத்த தலைமுறை உருவாகின்றது. இதனால் வலிமை கொண்ட உயிரினங்களின் பண்புகள் தலைமுறைகளாகக் கடத்தப்பட்டு சூழலுக்கு ஏற்றவாறு தகவமைத்துக் கொள்வதற்கான திறன் உயிரினங்களிடையே மேம்படுகிறது.

சமூகம் என்பது நிலையற்றதாகவும் மாறுதல்களை உடையதாகவும் இருக்கின்றது. மனிதனின் வளர்ச்சிக்கேற்ப சமூகம் மாறுபடுகிறது. சமூக மாற்றங்களின் தாக்கம் மனித வாழ்வியலில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. வாழ்வியல் மாற்றங்கள் மனிதனின் தேவைகளை நிர்ணயிக்கின்றன. தேவைகள் மனிதன் பயன்படுத்தும் பொருள்களில் மாற்றங்களை உருவாக்குகின்றன. இங்ஙனம் உயிரற்ற பொருள்களும் தோற்றம் வளர்ச்சி மறைவு எனும் இயக்கத்தில் இடம்பெறுகின்றன.

சமூக மாற்றத்திற்கும் மனிதனின் தேவைக்கும் ஏற்ப தோற்கருவிகளின் பயன்பாடுகளும் மாறிக்கொண்டே இருக்கின்றன. சங்க இலக்கியத்தில் உழவர்களால் வயலிலும் வீரர்களால் போரிலும் இசைக்கப்பட்ட தோற்கருவி தண்ணுமை. இங்கு வெறும் இசைக்கருவியாக மட்டுமே கையாளப்பட்ட தண்ணுமை சிலப்பதிகாரத்தில் மாதவியின் அரங்கேற்றத்தின் போது யாழ், குழல், முழவு, ஆமந்திரிகை எனும் கருவிகளோடு இணைந்து பாட்டிற்கு ஒத்திசைக்கப்படுகிறது திருமுறைகளில் சிவபெருமான் கூத்தாடும் போது தண்ணுமை இசைக்கப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது **(கல்லாடம் 34:9)**. இங்ஙனம் தண்ணுமையானது

இசைக்கருவியாகவும் ஒத்துசைக் கருவியாகவும் தாளக்கருவியாகவும் காலத்தின் தேவைக்கேற்ப பயன்பட்டுள்ளது. இத்தேவைகளை நிறைவுசெய்ய வேண்டும் என்றால் ஒலியில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும். ஒலியில் மாற்றம் வேண்டும் என்றால் அதன் கட்டமைப்பிலும் சிறு மாற்றங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும்.

தண்ணுமை என்பதன் நீட்சியே மிருதங்கம் என்பது தமிழிசை அறிஞர்களிடம் நிலவிவரும் கருத்து. மிருதங்கம் கருநாடக இசையில் முக்கியத் தாளக் கருவியாகக் கருதப்படுகிறது. ஆனால் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரையிலும் கருநாடக இசைக்கென தனித்து மிருதங்கம் செய்யப்படவில்லை. கிராமங்களில் நடன நாடகங்களுக்கு இசைக்கப் பயன்பட்ட மிருதங்கத்தோடுதான் அவையும் செய்யப்பட்டன. கச்சேரிகளில் மிருதங்கத்தின் சுருதிக்கு ஏற்பவே பாடகர்களும் வீணை போன்ற இசைக்கருவி கலைஞர்களும் சுருதியை அமைத்துக் கொண்டனர். அதன் பின்னரே பாடகருக்கு ஏற்ற சுருதியில் மிருதங்கம் சுருதியமைக்கப்பட்டது. மிருதங்கம் முக்கியத் தாளக் கருவியாகக் கருதப்படுவதோடு தனித்து இயங்குவதற்குரிய (தனி ஆவர்த்தனம்) நிலையையும் அடைந்துள்ளது.

மிருதங்கத்தின் இரு பக்கங்களில் உள்ள தொப்பிகளும் தோல் வாரால் இணைத்துக் கட்டப்படுகின்றன. குறிப்பிட்ட காலம் இசைத்த பின்னர் தோல் சற்று இலகுவாகும். இதனால் அம்மிருதங்கத்தின் சுருதியில் மாற்றம் ஏற்படும். ஒவ்வொரு முறையும் கலைஞர் சுருதியை சரி செய்வதற்கு வினைஞரை நாடவேண்டி இருக்கும். இதற்கு வழி வகை செய்யும் பொருட்டு மிருதங்கத்தின் தொப்பிகள் திருகும் மறையும் (nuts and bolts) கொண்டு இணைக்கப்படுகிறது. இதனால் கலைஞரால் தாமே சிறிய மாற்றங்களை சரி செய்து கொள்ள இயலும். இம்முறையானது தவிலிலும் பின்பற்றப்படுகிறது. தவிலில் இம்முறையை அறிமுகப்படுத்தியவர் மூத்த தவில் இசைக் கலைஞர் வேணுகோபால பிள்ளை ஆவார். மேலும் கருநாடக இசைக் கச்சேரிகள் வெளிநாடுகளிலும் நடந்து வரும் நிலையில் கலைஞரால் வேண்டிய சுருதிகளுக்கு ஏற்ப பல கருவிகளையும் எடுத்துச் செல்லுதல் என்பது இயலாது. இவ்விடரைக் களையும் பொருட்டு மிருதங்கத்தின் உடல் இரண்டு பாகமாகத் தயாரிக்கப் படுகிறது. இதனால் தேவைக்கு ஏற்ப இடந்தலையையும் வலந்தலையையும் கலைஞரால் மாற்றி மாற்றி இணைத்துக் கொள்ள இயலும். இம்முறையை அறிமுகப்படுத்தியவர் மிருதங்க கலைஞர் டாக்டர் பிரபஞ்சம் இரவிந்திரன் ஆவார். இது மிருதங்கத்தின் வளர்ச்சியிலும் பரவலாக்கத்திலும் பெரிதும் உதவுகிறது. மிருதங்கம் செய்வதற்கு மரமும் மாடு, ஆடு மற்றும் எருமைத் தோல்களும் தேவைப்படுகின்றன. மரங்களையும் விலங்குகளின் தோல்களையும் பயன்படுத்தாமல் செயர்கை பொருள் (Fiber) கொண்டு மிருதங்கம் செய்யப்படுகிறது. இம்மிருதங்கத்தைத் தயாரித்தவர் இசைக்கலைஞர் டாக்டர் மு.வரதரங்கன் ஆவார். மேலும் மிருதங்க கலைஞர் குழல்மன்னம் இராமகிருஷ்ணன் அவர்கள் மிருதங்கத்தின் உடற்பகுதியை மரமின்றி உலோகத் தட்டுகளைக் கொண்டு எடை குறைவான மிருதங்கத்தை வடிவமைத்து காப்புரிமையும் பெற்றுள்ளார். இவ்வாறு மிருதங்கமானது காலத்திற்கும் தேவைக்கும் பயன்பாட்டிற்கும் ஏற்ற வகையில் மாறுதல்களை மேற்கொள்வதற்கு இடமளிப்பதாலேயே இக்கருவி நிலைத்திருப்பதற்கான வழி அமைகிறது. இதுவே தக்கன உய்தல் **(Survival of the fittest)** என்பதற்கு பொருத்தமாக அமைகிறது.

மிருதங்கம்

திருகும் மறையும் கொண்ட மிருதங்கம்

தொப்பி மாற்றக் கூடிய மிருதங்கம்
டாக்டர் பிரபஞ்சம் இரவீந்திரன்

வீகன் சின்தட்டிக் மிருதங்கம் - டாக்டர் மு.வரதரங்கன்

சத் மிருதங்கம் - டாக்டர் குழல்மன்னம் இராமகிருஷ்ணன்

உலகளாவிய மரபிசை இசைக்கருவிகளின் பரிமாணங்கள் :

உலக இசை அரங்கில் எண்ணற்ற இசைக்கருவிகள் உள்ளன. பழங்குடியினர் இசைக்கருவிகள், நாட்டுப்புற இசைக்கருவிகள், செவ்வியல் இசைக்கருவிகள், தற்காலத்தில் தொழில் நுட்பத்தால் உருவாக்கப்படும் இசைக்கருவிகள் எனப் பலதரப்பட்ட இசைக்கருவிகள் இருக்க அவை ஒவ்வொன்றிற்கும் தனித்த வரலாறும் உண்டு. உலக இசை அரங்கில் மிகவும் இன்றியமையாத ஒப்பற்ற இசைக்கருவியாக இருப்பது வயலின். வயலினானது வியேல் **(Vielle)** ரெபெக் **(Rebec)** போன்ற பழமையான இசைக்கருவியிலிருந்து மருவி வளர்ச்சி அடைந்திருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது. 16ஆம் நூற்றாண்டில் ஸ்ட்ராடிவேரியஸ் **(Stradivarius)** எனும் இத்தாலியர் இன்று இசைக்கப்படுவது போன்ற வயலினை உருவாக்கினார். அப்பழமையான கருவிக்கும் இன்றைய வயலினுக்கும் இடையே பல மாறுதல்களும் பரிணாம வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளன. வியேல் **(Vielle)** என்பது பிரெஞ்சு மொழிச் சொல்லாகும். ஜெர்மானிய மொழியில்

பீடெல் **(Fiedel)** என்றும் இத்தாலிய மொழியில் வியோலா **(Viola)** என்றும் அழைக்கப்பட்டது. வயலின் **(Violin)** என்ற சொல் முதன் முதலில் ஆங்கிலத்தில் 1570ஆம் நூற்றாண்டில் பயன்படுத்தப்பட்டது. இது வியோலா **(Viola)** என்ற நரம்புக் கருவியின் சிறிய வடிவத்தைக் குறிக்கின்ற வியோலினோ **(Violino)** என்ற இத்தாலியச் சொல்லிலிருந்து வந்தது.

வியேல் - 12ஆம் நூ.ஆ

ரெபக் - 1509

வயலின்

இதுபோன்றே கிதார் **(Guitar)** என்பதும் பல மாறுதல்களுக்கும் பரிணாம வளர்ச்சிக்கும் உட்பட்டே இன்றைய நிலையை அடைந்திருக்கிறது. கிதார் போல் உருவுடைய பழமையான நரம்புக் கருவிகளாகிய ஊட் **(Oud)** மற்றும் லூட் **(Lute)** ஆகிய இவற்றை முன் வடிவமாகக் கொண்டு கிதார் தோன்றியிருக்கக் கூடும் எனக் கருதப்படுகிறது. மேலும் தொழில்நுட்ப வளர்ச்சியால் கிதாரானது மின்னியல் முறையில் இசையை உருவாக்கும் வகையிலும் வடிவமைக்கப்படுகின்றன.

குறுகிய கழுத்துடைய லூட், 1ஆம் நூ.ஆ, காந்தாரா

லூட், 2ஆம் நூ.ஆ, அமராவதி

லூட் (lute renaissance) – முதலாம் எலிசபெத், 16ஆம் நூ.ஆ பிற்பகுதி

கிதார்

நவீன மின்னியல் கிதார்

கஹோன் **(Cajon)** என்னும் ஆப்பிரிக்க - பெரு இசைக்கருவி 19 ஆம் நூற்றாண்டில் பெரு நாட்டின் கப்பல்களில் வேலை செய்த ஆப்பிரிக்க அடிமைகளால் உருவாக்கப்பட்டது. வேலையிடங்களில் முதலாளிகள் ஆப்பிரிக்கர்களின் இசைக்கருவிகளைத் தடைசெய்த போது கப்பல்களில் தேயிலை முதலியவற்றை வைத்திருந்த பெட்டிகளை **(Crates)** இசைக்கருவியாகப் பயன்படுத்தினர். நாளடைவில் அது பெருவின் நாட்டுப்புற நடனங்களில் இன்றியமையாக் கருவியாக இடம்பெற்றது. 2001 ஆம் ஆண்டு பெருவின் தேசிய பாரம்பரியத்தின் ஒரு பகுதியாக கஹோன் அறிவிக்கப்பட்டது. இக்கருவியின் பரவலான பயன்பாட்டின் காரணமாக பல நிறுவனங்கள் கஹோன் என்ற பெயரில் தயாரித்து சந்தை படுத்தத் தொடங்கின.

கப்பலில் பயன்படுத்தும் சரக்குப் பெட்டி (Crates)

கஹோன்

நவீன கஹோன்

ஹாப்பி டிரம் **(Hapi drum)**, ஹாண்ட் பான் **(Hand pan)** போன்ற உலோகக் கருவிகளும் ஐகன் ஹார்ப் **(Eigen Harp)** எனும் மென்பொருள் கொண்டு ஒலியை உருவாக்கும் இசைக்கருவியும் என ஏராளமான இசைக்கருவிகள் இந்நூற்றாண்டில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மனித சமூகத்தின் வளர்ச்சிக்கு இணையாக இசைக்கருவிகளும் வளர்ந்து கொண்டே வருகின்றன.

ஹாப்பி டிரம் ஹாண்ட் பான் ஐகன் ஹார்ப்

முடிவுரை :

தொன்றுதொட்டு தமிழர்களிடம் வழங்கிவந்த இசைக்கருவிகளுள் தோற்கருவிகளே பெரும் எண்ணிக்கையில் இருந்துள்ளன. இருந்தும் வருகிறன. முழவு, தண்ணுமை ஆகிய தோற்கருவிகளின் பயன்பாடுகள் சங்க காலத்தினின்று சிலப்பதிகார காலத்தில் மாறுபட்டு இருக்கின்றன. சைவ சமயத்தின் எழுச்சியாலும் சோழர்களின் ஆதரவாலும் பல சைவத் திருக்கோயில்கள் எழுந்தன. கோயில்களில் நடைபெற்ற வழிபாடுகளில் தோலிசைக் கருவிகளுக்கு முக்கியத்துவம் கிடைத்தது. சைவம் சிவனை கூத்தாடும் கடவுளாகக் கண்டதே இதற்கு முதன்மைக் காரணம். வழிபாடு, தொழில், கலையின் வளர்ச்சி ஆகியன புதிய இசைக்கருவிகள் தோன்றுவதற்கு காரணிகளாக விளங்கியுள்ளன. மனிதனின் அறிவு வளர்ச்சி, நாகரிகம் மற்றும் சமூக வளர்ச்சி போன்றவை தோற்கருவிகளையும் பரிணாம வளர்ச்சிக்கு உட்படுத்தியுள்ளன. முழவிலிருந்து குடமுழா, பின் ஐமுகமுழவு என முழவின் படிவளர்ச்சி சான்றாக அமைகிறது. தண்ணுமையின் பயன்பாடானது காலந்தோறும் மாறுபட்டும் அம்மாறுதல்களின் உந்துதலால் இசைக்கருவியின் செறிவிலும் ஏற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளன. இதனால் தண்ணுமை மிருதங்கமாக மறுவி துணைக்கருவியிலிருந்து தனித்து நிலைத்திருக்கக் கூடிய கருவியாக வளர்ந்துள்ளது. இலக்கியங்கள் குறிப்பிட்ட ஆகுளி, கரடிகை, முரசு போன்ற பல இசைக்கருவிகளும் இன்று வழக்கத்தில் இல்லை. ஆனால் தண்ணுமையானது மிருதங்கம் என்பதாக காலத்தின் தேவைகளை நிறைவு செய்து கொண்டே வருவதனால் இன்றும் பெருமளவில் புழக்கத்தில் உள்ளது. தக்கன உய்தல் **(Survival of the fittest)** என்பது இதற்குப் பொருந்தும். உலகம் முழுவதிலும் உள்ள அனைத்து இசைக்கருவிகளும் இவ்வியங்கியலுக்கு உட்பட்டே இருக்கின்றன. இவற்றின் வாயிலாக உயிரினங்களைப் போலவே இசைக்கருவிகளிலும் தோற்றம் மாற்றம் வளர்ச்சி மறைவு எனும் இயங்கியல் செயல்பாடுகள் நடைபெறுகின்றன என்பதை அறியமுடிகிறது.

பார்வை நூல்கள்

1. குடவாயில் பாலசுப்ரமணியன், குடமுழா, அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு ஜூலை 2018
2. நீலகண்டன்.வெ, வாழ்விழந்து வரும் கிராமிய இசைக்கருவிகள், பிளேக் ஹோல் வெளியீடு, முதற்பதிப்பு. டிசம்பர் 2011
3. வரகுணபாண்டியன்.ஆ.அ., பாணர் கைவழி எனப்படும் யாழ் நூல், தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, முதற் பதிப்பு : மார்ச்சு 1950.
4. Krishna.T.M., Sebastian and sons a brief history of Mrdangam makers, Context, an imprint of Westland Publications Limited, 2020

References:

1. Kudavayil Balasubramaniam, Kudamuzha, Annam Publishing House, Thanjavur, First Edition July 2018
2. Neelakandan.V., The Dying Rural Musical Instruments, Black Hole Publishing House, First Edition. December 2011
3. Varagunapandian.A.A., The Jaffna Book called Panar Kaivazhi, South Indian Saivasiddhanta Book Publishing House, Chennai, First Edition: March 1950.
1. Krishna.T.M., Sebastian and sons a brief history of Mrdangam makers, Context, an imprint of Westland Publications Limited, 2020

இணைய முகவரிகள்

1. https://caslabs.case.edu/medren/medieval-instruments/vielle-medieval/
2. https://www.gla.ac.uk/myglasgow/library/files/special/exhibns/month/may2007.html
3. https://en.wikipedia.org/wiki/Rebec
4. https://earlymusicmuse.com/oud/
5. https://commons.wikimedia.org/wiki/File:Lute_in_Life_scenes_of_Buddha-2nd_century_CE,_Amravati.jpg
6. https://en.wikipedia.org/wiki/History_of_lute-family_instruments
7. https://earlymusicmuse.com/lutethumbnailhistory/
8. https://www.mi.edu/education/guitar-history-how-the-guitar-has-evolved/
9. https://www.ipassio.com/wiki/musical-instruments/percussion/cajon?srsltid=AfmBOoq9BCWZwaXLL-3xI3zrp2eiHs_OLJhW8JyzLnac0vPO8pN9zkZ0
10. https://en.wikipedia.org/wiki/Caj%C3%B3n

11. https://www.thehindu.com/news/national/kerala/lightweight-sadmridangam-finally-gets-patent/article24374126.ece
12. https://www.earthamag.org/stories/2017/3/6/eco-friendly-mridangam
13. https://youtu.be/AMhnk6OeQiA
14. https://ta.wikipedia.org/wiki/%E0%AE%AA%E0%AE%9F%E0%AE%BF%E0%AE%B5%E0%AE%B3%E0%AE%B0%E0%AF%8D%E0%AE%9A%E0%AF%8D%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%95%E0%AF%8D_%E0%AE%95%E0%AF%8A%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%95%E0%AF%88
15. https://solvanam.com/2019/11/25/%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B2%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%95%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D-%E0%AE%95%E0%AE%BE%E0%AE%B2%E0%AE%AE%E0%AF%8D/
16. https://www.thehindu.com/features/friday-review/history-and-culture/thavil-artist-venugopala-pillai-improved-the-instrument-with-his-innovations/article8050101.ece

License
Copyright (c) 2025 Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்வு இதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journals eISSN ***3049-0723***
Journal Vol 1, Issue 09, May 2025 https://doi.org/10.63300/

வகுப்பறை கற்பித்தலில் தகவல் தொடர்பு தொழில்நுட்பம்
ICT Integration in Classroom Teaching

அருள்மதி இலெனின்,
ஆசிரியர், சிங்கப்பூர்
பகுதிநேர ஆராய்ச்சி மாணவர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613010, தமிழ்நாடு, இந்தியா Email: mathilenin01@gmail.com

Arulmathi Lenin,
Teacher, Singapore
Part time research student, Tamil University, Thanjavur – 613010, Tamil Nadu, India

Abstract:
This article delves into the increasingly vital role of Information and Communication Technology (ICT) in the modern learning environment. It emphasizes that ICT has become an indispensable element within today's classrooms, fundamentally changing how educators teach and students learn. The article explores practical strategies for seamlessly integrating ICT into daily teaching practices, including leveraging online resources and digital tools to enhance lesson delivery and engage students. Furthermore, it addresses the crucial aspect of Internet assessment, examining how technology can be utilized to effectively evaluate student understanding and progress. Recognizing the importance of responsible online behavior, the article also outlines essential Internet etiquette guidelines for students, promoting a safe and respectful digital learning environment. Finally, the article highlights a specific example of ICT implementation in education by discussing the Student Learning Space (SLS) platform. Developed by the Singapore Ministry of Education, the SLS offers a unique and comprehensive digital learning environment tailored specifically for Singaporean students, showcasing a government-led initiative to harness the power of ICT for educational advancement.

Keywords: ICT Tools. Modern Classroom, Technology for Educations,

ஆய்வுச்சுருக்கம்

தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் (ICT) இன்றைய வகுப்பறைகளில் ஒரு தவிர்க்க முடியாத அங்கமாக மாறியுள்ளது. இந்த கட்டுரை, நவீன வகுப்பறைகளில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை ஆழமாக ஆராய்கிறது. கல்விச் சூழலில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தை எவ்வாறு திறம்பட ஒருங்கிணைப்பது, பாரம்பரிய கற்பித்தல் முறைகளை மேம்படுத்துவது மற்றும் மாணவர்களின் கற்றல் அனுபவத்தை அதிகரிப்பது என்பது குறித்து விளக்குகிறது. இணைய மதிப்பீட்டின் நன்மைகள் மற்றும் சவால்கள் பற்றியும், மாணவர்களின் செயல்திறனை துல்லியமாகவும் நம்பகத்தன்மையுடனும் மதிப்பீடு செய்வதற்கான உத்திகள் பற்றியும் இது எடுத்துக்காட்டுகிறது. மேலும், இணையத்தைப் பயன்படுத்தும் மாணவர்கள் பின்பற்ற வேண்டிய இணைய நெறிமுறைகள் மற்றும் பாதுகாப்பான ஆன்லைன்

பழக்கவழக்கங்கள் குறித்த வழிகாட்டுதல்களை வழங்குகிறது. குறிப்பாக, சிங்கப்பூர் கல்வி அமைச்சின் மாணவர்களுக்கான கற்றல் தளத்தை (SLS) அறிமுகப்படுத்துகிறது, அதன் முக்கிய நோக்கங்கள், செயல்பாடுகள் மற்றும் மாணவர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு கற்றல் வாய்ப்புகள் ஆகியவற்றை விவரிக்கிறது. இந்த தளம், மாணவர்கள் தங்கள் கற்றல் பயணத்தை எவ்வாறு மேம்படுத்த உதவுகிறது மற்றும் ஆசிரியர்கள் கற்பித்தலை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதையும் இந்த கட்டுரை கோடிட்டுக் காட்டுகிறது.

ம ுன்னுரை:

நன்னூலார் அவர்கள், "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்று கூறிய கூற்று, காலமாற்றத்திற்கு ஏற்ப பழைய விஷயங்களை விட்டுவிட்டு புதிய விஷயங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதன் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. ஒரு காலத்தில் ஆசிரியர் முன் அமர்ந்து கற்கும் குருகுலக் கல்வி முறையே சிறந்ததாக கருதப்பட்டது. ஆனால், இன்று அந்த நிலை மாறி, வகுப்பறைக்கு வெளியிலும் கற்றல் நிகழும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இது காலத்தின் கட்டாயம். எந்தக் காரணத்திற்காகவும் மாணவர்களின் கல்வி தடைபடக் கூடாது என்பதில் உலக நாடுகள் அனைத்தும் கவனம் செலுத்துகின்றன. அந்த வகையில், மாணவர்களின் கற்றலை வகுப்பறையிலும், வகுப்பறைக்கு வெளியிலும் மேம்படுத்த தகவல் தொழில்நுட்பம் பெரிதும் உதவுகிறது. கல்வித்துறை தகவல் தொழில்நுட்பத்தால் எண்ணற்ற நன்மைகளைப் பெற்றுள்ளது. அவற்றை பற்றியும், வகுப்பறையில் தமிழ்மொழியைக் கற்பதிலும், கற்பிப்பதிலும் தகவல் தொழில்நுட்பத்தின் பங்கு என்ன என்பதைப் பற்றியும் இக்கட்டுரையில் விரிவாகக் காணலாம்.

தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பம்:

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே தோன்றிய தமிழ்மொழி, இன்றைய கணினி யுகத்திலும் இளமையுடன் விளங்குகிறது. காலத்திற்கேற்ப ஏற்படும் மாற்றங்களை ஏற்றுக்கொண்டு தன்னை மெருகேற்றிக் கொண்டதால்தான் இது சாத்தியமானது. பழமைக்கும் புதுமைக்கும் ஏற்ப வளைந்து கொடுக்கும் தன்மை கொண்டிருப்பதால், கல்லில் எழுதப்பட்ட தமிழ், இன்று கணினி மயமாகி, உலகின் எந்த மூலையில் இருப்பவரும் கற்கும் வகையில் உள்ளது. மொழியைக் கற்க விரும்பாத மாணவர்களைக்கூட, மொழியின்பால் ஈர்த்து, மகிழ்ச்சியுடன் கற்கத் தகவல் தொழில்நுட்பம் உதவுகிறது.

தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் இன்றியமையாமை:

இன்றைய வகுப்பறைகளில் பெரும்பாலான பாடங்கள் தகவல் தொடர்புத் தொழில்நுட்பக் கூறுகளுடன் இணைந்தே கற்பிக்கப்படுகின்றன. மாணவர்களின் கைகளில் கைத்தொலைபேசியும், கணினியும் இருப்பதால், இணையத்தின் மூலம் பகிரப்படும் கருத்துகளை அவர்கள் எளிதில் பெறுகின்றனர். வகுப்பறையில் நேரடிப் பாடங்கள் மட்டுமல்லாமல், இணையம் வழியாக நடைபெறும் பாடங்களும், கலந்துரையாடல்களும் ஆசிரியர்களின் கற்பித்தல் நேரத்தைப் பயனுள்ளதாக்குகின்றன.

ஒரு பாடத்தை வடிவமைப்பதில் தொடங்கி, மாணவர்களுக்குப் புரியும் வகையில் கற்றுக்கொடுப்பது, அவர்கள் புரிந்துகொண்டதை மதிப்பிடுவது வரை அனைத்திலும் தகவல் தொழில்நுட்பம் இன்று அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது.

வழக்கமான முறையில் பாடங்களை கற்பிப்பதைவிட, காலத்திற்கேற்ற தகவல் தொழில்நுட்பங்களைப் பாடத்தில் இணைத்துக் கற்பிக்கும்போது, அது மாணவர்களைக் கவர்வதோடு, கற்றலை மகிழ்ச்சி உடையதாக மாற்றுகிறது. இதன் மூலம் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டி, ஈடுபாட்டை அதிகரிப்பதோடு, கற்றல் திறனையும் மேம்படுத்த முடியும்.

மேலும், கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதால் கிடைக்கும் கூடுதல் நன்மைகள்:

- சுய கற்றல் (Self Learning) ஊக்குவிக்கப்படுகிறது. மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான நேரத்தில், எந்த இடத்திலிருந்தும் கற்றுக்கொள்ள முடியும்.
- ஆசிரியர்கள், மாணவர்களுக்குத் தேவையான குறிப்புகளை இணையத்தில் பதிவேற்றம் செய்வதால், மாணவர்கள் அதை எப்போது வேண்டுமானாலும் பயன்படுத்த முடியும்.
- காணொளிக் கருவிகள் மூலம் கற்பிப்பதால், கடினமான கருத்துகளையும் எளிதில் புரிய வைக்க முடியும்.
- மென்பொருள்கள் (Software) மற்றும் செயலிகள் (Apps) வாயிலாகப் பயிற்சி அளிப்பதால், மாணவர்கள் விளையாட்டாகக் கற்றுக்கொள்ள முடியும்.
- உலகளாவிய அளவில் உள்ள அறிஞர்களின் கருத்துக்களை மாணவர்கள் எளிதில் அறிந்து கொள்ள முடியும்.

எனவே, தமிழ்மொழிக் கற்றல் மற்றும் கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு இன்றியமையாதது. காலத்திற்கு ஏற்ப புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொண்டு, மாணவர்களின் கற்றலை மேம்படுத்த நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

வகுப்பறைக் கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பத்தை இணைத்தல்: ஒரு விரிவான பார்வை

இன்றைய நவீன உலகில், தகவல் தொழில்நுட்பம் (Information Technology - IT) கல்வி முறையில் ஒரு ஒருங்கிணைந்த அங்கமாகிவிட்டது. பள்ளியில் பயிலும் அனைத்துப் பாடங்களுக்கும் பொருத்தமான படங்கள், வீடியோக்கள் மற்றும் கூடுதல் தகவல்களை வழங்குவதன் மூலம், தகவல் தொழில்நுட்பம் ஆசிரியர்களுக்கு ஒரு சிறந்த கருவியாக விளங்குகிறது. பாடத்திட்டத்துடன் தொடர்புடைய செயல்பாடுகள் மற்றும் மதிப்பீடுகளை உருவாக்கவும் இது உதவுகிறது.

தகவல் தொழில்நுட்பத்தின் அவசியம்

அடிப்படை மொழித் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், இன்றைய தலைமுறையினரிடையே கருத்துப் பரிமாற்றத் திறனையும் வளர்க்க வகுப்பறைக் கற்பித்தலில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தை இணைப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். ஒவ்வொரு திறனுக்கும் பொருத்தமான கற்பித்தல் நடவடிக்கைகளை வடிவமைக்கவும், அவற்றை உடனடியாக மதிப்பிடவும் தகவல் தொழில்நுட்பம் பெரிதும் உதவுகிறது. மொழி கற்றலுக்கு மட்டுமல்லாமல், மற்ற பாடங்களைக் கற்பிப்பதற்கும் தகவல் தொழில்நுட்பம் ஒரு சிறந்த துணைக்கருவியாகச் செயல்படுகிறது.

கூகுள் வகுப்பறையின் பயன்பாடு

உதாரணமாக, கூகுள் வகுப்பறையில் (Google Classroom) உள்ள அம்சங்களைப் பயன்படுத்தி கற்பித்தலை வடிவமைக்கும்போது, மாணவர்களுக்குக் கற்றல் எளிமையாகவும், சுவாரஸ்யமாகவும் இருக்கும். கூகுள் மீட் (Google Meet) மூலம் வீட்டில் இருந்தபடியே மாணவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பாடங்களைக் கற்க முடியும். மேலும், மாணவர்களுக்குப் பிடித்த மொழி விளையாட்டுகளை இணைக்கவும், வீட்டுப் பாடங்கள் மற்றும் ஒப்படைப்புகளை வழங்கவும், அவற்றைச் சரிபார்த்து அவர்களின் முன்னேற்றத்திற்கான கருத்துக்களை வழங்கவும் கூகுள் வகுப்பறைகள் உதவுகின்றன.

கூகுள் வகுப்பறையில், மாணவர்களின் கற்றலுக்குத் தேவையான வீடியோக்கள், படங்கள், இணையதள இணைப்புகள் (Website Links), யூடியூப் (YouTube) வீடியோக்கள் போன்றவற்றை எளிதாக இணைக்க முடியும். காஹூட் (Kahoot) போன்ற செயலிகள் மூலம் பல்வேறு மொழி விளையாட்டுகளை உருவாக்கி வழங்கலாம். ஃபார்மேட்டிவ்

(Formative) போன்ற செயலிகள் மாணவர்களின் கற்றலை மதிப்பிட உதவுகின்றன. இதுபோன்ற கருவிகளை ஆசிரியர்கள் கூகுள் வகுப்பறையில் இணைத்து மாணவர்களுக்கு வழங்கும்போது, அவர்களின் கற்றல் அனுபவம் மகிழ்ச்சிகரமானதாக மாறும்.

தொடர்பு கொள்ளுதல்

மேலும் மாணவர்களுடன் கலந்துரையாட ஒரு சமூக ஊடக குழுவை (social media group) உருவாக்கலாம். அதில் பாட சம்பந்தமான சந்தேகங்களையும், பொது அறிவு தகவல்களையும் பகிர்ந்து கொள்ளலாம்.

மதிப்பீட்டின் முக்கியத்துவம்

கற்றல் மற்றும் கற்பித்தலை ஒருங்கிணைக்கும் மதிப்பீடு இல்லையெனில், கல்வி முழுமையடையாது. எனவே, ஆசிரியர் அன்றாடம் கற்றுக்கொடுக்கும் விஷயங்களை மாணவர்கள் புரிந்து கொண்டுள்ளனரா என்பதை அறிய மதிப்பீடு மிகவும் அவசியம். மதிப்பீடு என்பது கற்றலுக்குப் பிறகு நடக்கும் ஒரு முறையான மதிப்பீடாக (Summative Assessment) மட்டுமே இருக்க வேண்டிய அவசியமில்லை. கற்றலின்போது நடக்கும் முறைசாரா மதிப்பீடு (Formative Assessment) மாணவர்களின் கற்றலுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

இத்தகைய மதிப்பீடுகளைச் செய்யவும், மாணவர்களின் நிலைக்கேற்ப கற்பித்தலை மாற்றியமைக்கவும் இன்று பல இணையதளங்களும், செயலிகளும் உள்ளன. உதாரணமாக, டிஃப்பிட் (Diffit) எனும் செயலியில் ஒரு சொல்லை உள்ளீடு செய்தாலே, அது தொடர்பான கருத்துகளைச் சேகரித்து, அதற்கான மதிப்பீட்டு நடவடிக்கையையும் உருவாக்கித் தருகிறது. அதேபோன்று, மதிப்பிடுதலுக்கு உதவும் ஃபார்மேட்டிவ் (www.formative.com) செயலியில் வினாக்களை உருவாக்கவும், மாணவர்களின் பதில்களை மதிப்பிடவும் முடியும். இதுபோன்ற செயலிகளைப் பயன்படுத்தி ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுக்கு ஏற்ற மதிப்பீட்டு நடவடிக்கைகளை உருவாக்கும்போது, மாணவர்கள் உடனுக்குடன் தங்கள் தவறுகளைத் திருத்திக் கொண்டு, கற்றலை மேம்படுத்திக் கொள்ள முடியும்.

தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கற்பித்தல் முறையை மேம்படுத்துவதன் மூலம், மாணவர்களின் ஆர்வத்தை அதிகரித்து, அவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தலாம். எனவே, ஆசிரியர்கள் தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை

உணர்ந்து, அதனை வகுப்பறைக் கற்பித்தலில் ஒருங்கிணைக்க வேண்டும். இதன் மூலம், மாணவர்களின் எதிர்காலத்திற்குத் தேவையான திறன்களை வளர்க்க முடியும்.

இணைய நன்னடத்தை: விரிவான விளக்கம்

இன்றைய வகுப்பறைகளில் கற்றல் கற்பித்தல் திறம்பட நடைபெற தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் (Information and Communication Technology - ICT) பேருதவியாக இருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. இது ஆசிரியர்களுக்கு கிடைத்த வரம் என்றே கூறலாம். இருப்பினும், இணையம் சார்ந்த நடவடிக்கைகளை மிகவும் கவனத்துடன் கையாள வேண்டியதன் அவசியத்தை ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். இணையத்தின் அபரிமிதமான சாத்தியங்களை பயன்படுத்தும் அதே வேளையில், அதன் உள்ளார்ந்த ஆபத்துகளையும், எதிர்மறை விளைவுகளையும் இளம் வயதிலேயே மாணவர்களுக்கு உணர்த்துவது அவசியம்.

முதலாவதாக, எந்த இணையத்தளங்கள் நம்பகமானவை, எவற்றிலிருந்து பெறப்படும் தகவல்கள் உண்மையானவை என்பதை மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். இணையத்தில் கிடைக்கும் அனைத்து தகவல்களும் சரியானவை அல்ல என்பதைப் புரிய வைக்க வேண்டும். தகவல்களை சரிபார்க்கும் முறைகள், நம்பகமான ஆதாரங்களை அடையாளம் காணும் திறன்கள் ஆகியவற்றை அவர்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும்.

இரண்டாவதாக, இணையத்தில் முகம் தெரியாத நபர்கள் நம்மைப் பற்றி கூறும் கருத்துக்களைக் கண்டு மாணவர்கள் கவலை கொள்ளக் கூடாது. எதிர்மறையான விமர்சனங்கள், சைபர் புல்லிங் (Cyber Bullying) போன்ற இணையவழி துன்புறுத்தல்கள் குறித்து அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், மனதளவில் உறுதியாக இருக்கவும் அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்.

மூன்றாவதாக, பிறர் மனம் நோகும்படி நாம் இணையத்தில் எந்தவித கருத்துக்களையும் கூறக்கூடாது என்பதை மாணவர்கள் உணர வேண்டும். இணையம் ஒரு பொது களம் என்பதையும், அங்கு பதிவிடும் ஒவ்வொரு சொல்லுக்கும் நாம் பொறுப்பேற்க வேண்டும் என்பதையும் அவர்களுக்குப் போதிக்க வேண்டும். மற்றவர்களை மதிக்கும் பண்பு, நாகரீகமான உரையாடல் திறன், வெறுப்புப் பேச்சுகளைத் தவிர்த்தல் போன்ற நன்னெறிகளை இணையத்தில் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்த வேண்டும்.

நான்காவதாக, பொறுப்புடன் இணையத்தளத்தை பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை மாணவர்களுக்கு இளம் வயதிலேயே கற்றுக்கொடுக்க வேண்டும்.

அவர்கள் பயன்படுத்தும் சமூக வலைத்தளங்கள், செயலிகள் ஆகியவற்றின் பாதுகாப்பு அம்சங்கள் குறித்தும், தனிநபர் தகவல்களைப் பாதுகாக்கும் முறைகள் குறித்தும் அவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். இணைய அடிமையாதல் (Internet Addiction) போன்ற பிரச்சனைகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

ஐந்தாவதாக, மாணவர்கள் தங்களுக்கு அளிக்கப்படும் வீட்டுப்பாடங்களையும், ஒப்படைப்புகளையும் இணையத்தளங்களிலிருந்து அப்படியே நகலெடுத்து பயன்படுத்தக் கூடாது என்ற அடிப்படைச் சிந்தனையையும், புரிதலையும் மாணவர்களிடையே உருவாக்க வேண்டும். சொந்த உழைப்பின் முக்கியத்துவம், படைப்பாற்றல் திறன், ஆய்வின் அவசியம் ஆகியவற்றை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். இணையத்தை ஒரு கருவியாக மட்டும் பயன்படுத்தாமல், கற்றலுக்கு உதவும் ஒரு ஊடகமாகப் பயன்படுத்த ஊக்குவிக்க வேண்டும்.

இத்தகைய அடிப்படைப் புரிதல் இருந்தால்தான் தகவல் தொழில்நுட்பத்தால் பெறும் கல்வி சிறக்கும் என்பதை மாணவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தால் ஏற்படும் நன்மைகளைப் பயன்படுத்தும் அதே வேளையில், அதன் மறுபுறம் எப்படிப்பட்டது என்பதைக் கற்றுக்கொடுப்பது ஆசிரியரின் தலையாய கடமையாகும். இணைய நன்னெறி என்பது வெறும் பாடமாக இல்லாமல், மாணவர்களின் வாழ்க்கையில் ஒரு அங்கமாக மாற வேண்டும். அப்போதுதான் அவர்கள் இணையத்தை பாதுகாப்பாகவும், ஆக்கப்பூர்வமாகவும் பயன்படுத்த முடியும்.

மாணவர் கற்றல் தளம்: ஒரு விரிவான பார்வை

சிங்கப்பூர் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வி அனுபவத்தை மேம்படுத்தும் வகையில், தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை (ICT) வகுப்பறைக் கற்பித்தலில் ஒருங்கிணைக்கும் ஒரு முன்னோடி முயற்சியே மாணவர் கற்றல் தளம் (Student Learning Space - SLS). சிங்கப்பூர் கல்வி அமைச்சகத்தால் உருவாக்கப்பட்ட இந்த இணைய தளம், மாணவர்களின் கற்றல் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணற்ற வளங்களைக் கொண்டுள்ளது.

பாட உள்ளடக்கம் மற்றும் வளங்கள்:

SLS தளத்தில், மாணவர்கள் பள்ளியில் கற்கும் அனைத்து பாடங்களுக்குமான வளங்கள் உள்ளன. குறிப்பாக, மொழிப் பாடங்களுக்கு ஏற்ற மின்னூல்கள், பாடல்கள், கதைகள், மொழி விளையாட்டுகள், மின்னிலக்க எழுத்தட்டைகள் மற்றும் சொல்லட்டைகள் (E-Flashcards) ஆகியவை தமிழ் மொழி கற்றலுக்கு உதவுகின்றன. அறிவியல், கணிதம்

போன்ற பாடங்களுக்கான வளங்களும் உள்ளன. ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் கற்றல் நிலைக்கேற்ப இந்த வளங்களை மாற்றியமைக்கலாம். மேலும், பிற இணையதளங்களில் உள்ள கற்றல் கருவிகளையும் இணைத்து கற்பிக்க முடியும்.

சிறப்பு அம்சங்கள்:

- மின்னிலக்க எழுத்தட்டைகள் (E-Flashcards): தமிழ் எழுத்துக்களை எவ்வாறு உச்சரிக்க வேண்டும் என்பதை விளக்கும் ஒளிக்காட்சிகளாக உருவாக்கப்பட்டுள்ளன. இவை, வகுப்பறை கற்பித்தலுக்கு மட்டுமல்லாமல், மாணவர்களின் சுய கற்றலுக்கும் உதவுகின்றன.
- மின்னகராதி (E-dictionary): தமிழ்-தமிழ்-ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பொருள் தரும் மின்னகராதி SLS தளத்தில் உள்ளது. கருத்தறிதல், கட்டுரை போன்ற பகுதிகளில் மாணவர்களுக்குப் புரியாத சொற்களுக்கு உடனடியாக பொருள் தெரிந்துகொள்ள இது உதவுகிறது.

கற்றல் கற்பித்தலில் SLS-ன் பங்கு:

- வகுப்பறை நடவடிக்கைகளில் தொழில்நுட்பத்தை இணைத்து கற்பிக்க உதவுகிறது.
- மாணவர்களிடையே வகுப்பு நிலையில் கலந்துரையாடலை ஊக்குவிக்கிறது.
- மாணவர்களுக்கு வீட்டுப் பாடங்களை வழங்கவும், அவர்களின் ஒப்படைப்புகளை மதிப்பீடு செய்யவும் உதவுகிறது.
- மாணவர்களின் கற்றல் தடையின்றி, எங்கும், எப்போதும் தொடர வழி செய்கிறது.
- மாணவர்கள் தங்கள் கற்றலைத் தாங்களே மதிப்பீடு செய்ய உதவுகிறது.
- தவறுகளைத் தாங்களே திருத்திக்கொள்ளவும், தவறுகளிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளவும் வாய்ப்பளிக்கிறது.

21-ஆம் நூற்றாண்டு திறன்கள்:

SLS தளம், மாணவர்களை 21-ஆம் நூற்றாண்டின் திறன்களான விமர்சன சிந்தனை, ஆக்கப்பூர்வமான சிந்தனை, தகவல் தொழில்நுட்ப அறிவு, தகவல் தொடர்பு திறன் மற்றும் ஒத்துழைத்து செயல்படும் திறன் ஆகியவற்றை வளர்க்க உதவுகிறது.

மாணவர் கற்றல் தளம், சிங்கப்பூர் மாணவர்களின் கற்றல் மற்றும் கற்பித்தல் அனுபவத்தை மேம்படுத்தும் ஒரு சக்திவாய்ந்த கருவியாகும். இது, தொழில்நுட்பத்தை வகுப்பறையில் ஒருங்கிணைத்து, மாணவர்களின் சுய கற்றலை ஊக்குவித்து, 21-ஆம்

நூற்றாண்டுக்குத் தேவையான திறன்களை வளர்க்கிறது. உலகின் எந்த மூலையில் இருந்தாலும் கற்றல் கற்பித்தல் தடையின்றி நடைபெற SLS உதவுகிறது
.

முடிவுரை:

தற்காலக் கல்வி முறையில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் (Information and Communication Technology - ICT) பங்களிப்பு அளப்பரியது. ஆசிரியர்களின் கற்பித்தல் சுமையைக் குறைப்பதிலும், மாணவர்களின் கற்றல் அனுபவத்தை இனிமையாக்குவதிலும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் இன்றியமையாத கருவியாக விளங்குகிறது. ஒவ்வொரு நாளும், கற்றல் மற்றும் கற்பித்தலுக்கு ஏற்ற பல்வேறு செயலிகள் (Apps) மற்றும் இணையதளங்கள் (Websites) உருவாக்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய தொழில்நுட்ப வளர்ச்சியின் வேகத்தில், ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுக்குப் பொருத்தமான மற்றும் பயனுள்ள தொழில்நுட்பத்தைத் தேர்ந்தெடுப்பது ஒரு சவாலான அதே சமயம் முக்கியமான பணியாகும். பெருகி வரும் தொழில்நுட்ப கருவிகளை வகுப்பறையில் பயன்படுத்தும் போது, அது சார்ந்த நன்னடத்தை மற்றும் பாதுகாப்பான பயன்பாடு குறித்த விழிப்புணர்வையும் மாணவர்களுக்கு ஏற்படுத்துவது அவசியம். தொழில்நுட்பத்தை முறையாகவும், பொறுப்புடனும் பயன்படுத்தும் பண்புகளை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டும். ஒவ்வொரு ஆசிரியரும், தன்னிடம் கற்கும் மாணவர்களின் கற்றலை மகிழ்ச்சியானதாகவும், ஆர்வத்தைத் தூண்டுவதாகவும் மாற்றியமைக்க முடியும். தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் சரியான பயன்பாடு, வகுப்பறையை உயிரோட்டமுள்ள கற்றல் களமாக மாற்றும் வல்லமை கொண்டது. எனவே, ஆசிரியர்கள் புதிய தொழில்நுட்பங்களை அறிந்து, அவற்றை தங்கள் கற்பித்தல் முறைகளில் ஒருங்கிணைத்து, மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்கு உதவ வேண்டும்.

மேற்பார்வை நூல்களும் இணையத்தளமும்:

- தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2024, தொடக்கநிலை
- 12-ஆம் உலகத் தமிழாசிரியர் மாநாடு, மாநாட்டு ஆய்வடங்கல்
- https://vle.learning.moe.edu.sg/login

வகுப்பறைக் கற்பித்தலுக்கு உதவும் சில இணையத்தளங்கள்:

1. Slidesgo, Canva – Useful websites to generate PPT slides, online graphic design.
2. Kahoot! - An interactive quiz platform that engages students through gamification.

3. Quizizz - Similar to Kahoot!, but allows for self-paced quizzes.

4. Socrative - Offers various question types and real-time result visualisation.

5. Formative - Allows for a wide range of question types and supports file uploads.

6. Nearpod - Combines interactive lessons with built-in formative assessment tools.

7. Plickers - Uses printed cards and a mobile app for quick assessments.

8. Diffit - A versatile AI tool for generate Instructional Materials.

9. Mentimeter - Enables interactive presentations with live polling and word clouds.

10. Thinglink – Annotate images, videos and 360-degree VR shots with rich media.

License
Copyright (c) 2025 Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்வு இதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journals eISSN *3049-0723*
Journal Vol 1, Issue 09, May 2025 https://doi.org/10.63300/

Status of widows in society

Iyyappan K
Guest Lecturer, Department of Tamil, L. N. Government College, Ponneri, Tamilnadu- 601204, India
Email: agniiyyappan@gmail.com
Orcid: https://orcid.org/0000-0002-1789-961X

Abstract

In Tamil society, a woman who has lost her husband is called a 'widow'. Kalaignar considered that the word 'widow' did not have a dot, so he started calling it 'Kaimpen'(widow) with two tilaks instead. As far as Tamil Nadu is concerned, the number of widows is around 40 lakh. According to a UN report, Tamil Nadu has the highest number of widows in India. 'Vrindavan' in the state of Uttar Pradesh in India is the city with the highest number of widows. From ancient times to the present day, women have never been forced to marry. Only in the books Natrinai and Purananooru, there are reports of widowhood. It is worth thinking that the rules on how men who have lost their wives should live are not mentioned in the Sangam literature. The women themselves died with their husbands. The custom of marrying a widow is a special feature of the royal family. It is also clear that this custom of marrying a widow does not exist among ordinary people. In the life of a bride, the removal of flowers is done automatically when the hair is removed. At the wedding, the auspicious women congratulate the bride. There is no information about the bride's congratulatory greetings or participating in the events during the Sangam period. A woman, who is considered to be entitled to her husband, considers it her duty to provide an heir and protect the pride of her clan. It can be seen that this society does not approve of her living with another man or having another child after the death of her husband.

Keywords : Widow, widower, Vrindavan, Udankattai Earudhal, Sati, Kaimmai Nonpu

சமூகத்தில் கைம்பெண்டிர் நிலை

முனைவர் கி. அய்யப்பன்
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை, உ. நா. அரசினர் கல்லூரி, பொன்னேரி, தமிழ்நாடு-601204,
இந்தியா

ஆய்வுச்சுருக்கம்

தமிழ்ச் சமூகத்தில் கணவனை இழந்த பெண்ணை 'விதவை' என்று கூறுவர். கலைஞர் விதவை என்ற சொல்லால் அழைக்கும்போது அந்த சொல்லில் கூட பொட்டு இல்லை என கருதி அந்த சொல்லுக்கு மாற்றாக இரு திலகங்கள் வரும் வகையில் 'கைம்பெண்' என்று அழைக்கத் தொடங்கினார். தமிழகத்தைப் பொறுத்தவரை விதவைகளின் எண்ணிக்கை சுமார் 40 லட்சம். இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் விதவைகள் அதிகம் என்கிறது ஐ.நா. அறிக்கை கூறுகின்றது. இந்தியாவில் உத்தரபிரதேச மாநிலத்தில் உள்ள 'பிருந்தாவன்' கைம்பெண்டிர்கள் அதிகம் உள்ள நகரமாக உள்ளது. தமிழ்நாட்டில் பழங்காலம் முதல் தற்காலம் வரையில் எங்கும் பெண்கள் உடன்கட்டை ஏறும்படி நிர்ப்பந்திக்கப்படவில்லை. நற்றிணை, புறநானூறு ஆகிய நூல்களில் மட்டுமே கைம்மை பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. மனைவியை இழந்த ஆண்கள் எங்ஙனம் வாழ வேண்டும் என்ற வரைமுறை, சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படாதது

சிந்தித்தற்குரியதாகும். பெண்களே கணவனுடன் இறந்துள்ளனர். உடன் கட்டை ஏறும் பழக்கம் என்பது அரச குடும்பத்தினர்க்கு உரிய சிறப்புப் பண்பாகும். சாதாரண மக்களிடத்தில் இந்த உடன்கட்டை ஏறும் வழக்கம் இல்லை என்பதும் தெளிவாகிறது. கைம்மை வாழ்க்கையில் கூந்தல் களைதலில் மலர் நீக்கம் தானாகவே நடக்கிறது. திருமணத்தில் மங்கல மகளிர் வாழ்த்துகின்றனர். சங்க காலத்தில் கைம்மை மகளிர் வாழ்த்தியதாகவோ, நிகழ்வுகளில் கலந்து கொண்டதாகவோ செய்திகள் இல்லை. கணவனுக்கு உரிமையுடையவளாகக் கருதப்படும் பெண், வாரிசைப் பெற்றுத்தருவதையும், தம் குலப்பெருமையைப் பாதுகாப்பதையும்தான் தன் கடமையாகக் கொள்கிறாள். கணவனின் இறப்புக்குப் பிறகு அவள் இன்னொரு ஆணுடன் வாழ்வதையோ மற்றொரு குழந்தையைப் பெற்றுக்கொள்வதையோ இச்சமூகம் அங்கீகரிக்கவில்லை என்பதை அறியமுடிகிறது.

குறிச்சொற்கள் : விதவை, கைம்பெண்டிர், பிருந்தாவன், உடன்கட்டை ஏறுதல், சதி, கைம்மை நோன்பு

முன்னுரை

தமிழ்நாட்டில் பெண்களின் நிலை என்பது இன்றும் மோசமாகத்தான் இருக்கிறது. பெண்ணியம் பேசும் இந்தக் காலக்கட்டத்திலும் பெண்கள் வீட்டுச்சிறையில் மாட்டிக்கொண்டுதான் இருக்கின்றனர். வேலைக்குச் செல்லும் பெண்களை மேலோட்டமாகப் பார்த்துவிட்டு பெண்கள் முன்னேறிவிட்டார்கள் என்று கூறுவது மடமைத்தனம். வேலைக்குச் செல்லும் பெண்கள் முதல் வீட்டில் இருக்கும் பெண்கள் வரை அனைவரும் நாள்தோறும் இந்தச் சமூகத்தால் ஏதாவது ஒருவிதத்தில் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றனர். இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் கணவரை இழந்த பெண்கள் அதிகளவு பாதிப்புக்கு உள்ளாகின்றனர். பெண்கள் சிலர் தானகவே உடன்கட்டை ஏறியதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. கணவன் இறந்த பிறகு பெண்கள் வாழும் நெறி கடுமையான விதிகளுக்கு உட்பட்டதாய் இருந்திருக்கின்றது. காலப்போக்கில் முழுமையான மாற்றத்தினை அடைந்திருக்கின்றது என்று கருதப்பட்ட போதிலும், முற்றிலுமாக மாறிவிடவில்லை. நிகழ்காலத்திலும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இந்தியாவில் மட்டும் கிட்டதட்ட 80 லட்சம் பெண்கள் கைம்பெண்களாக உள்ளார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கைம்பெண்களின் எண்ணிக்கை சுமார் 40 லட்சம். இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் கைம்பெண்கள் அதிகம் என்கிறது ஐ.நா. அறிக்கை கூறுகிறது. இத்தகைய நிலையில் தமிழ்நாட்டில் சங்க காலம் முதல் சம காலம் வரையில் வாழ்ந்த, வாழும் கைம்பெண்டிரின் நிலை குறித்து எடுத்தியம்பும் நோக்கில் **சமூகத்தில் கைம்பெண்டிர் நிலை** என்னும் தலைப்பிலான இவ்வாய்வுக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

கைம்பெண்- சொல் விளக்கம்

கணவனை இழந்த பெண்ணை ‘விதவை’ என்று கூறுவர். விதவை என்ற சொல்லிற்கு ”கைபெண், கைம்மணி, குழம்பு, கூழ்”(சந்தியா நடராஜன், 2004;583) என்று பொருள்கள் உண்டு. இதில் ‘கைம்பெண்’ என்னும் சொல் பேச்சு வழக்கில் ‘கைம்பெண்டாட்டி’ என்று நீண்டு, பின்னர் மருவி ‘கம்மனாட்டி’ என்று மாறிவிட்டது. திட்டுவதற்குக்கூட இந்தச் சொல்லைப் பலர் பயன்படுத்துகின்றனர். கணவனை இழந்த

மனைவிக்குக் 'கைம்பெண்' என்று பெயர் சூட்டி அழைக்கிறார்கள். மனைவியை இழந்த கணவனுக்கு அவ்வாறு ஏதும் பெயர் கிடையாதா என்றால், இருக்கிறது. கைம்பெண் என்ற சொல்லுக்கு இணையான ஆண்பாற் சொல் 'கைம்பயல்'. தமிழ் மொழியின் பொருள் இலக்கணத்தை விளக்குகின்ற 'புறப்பொருள் வெண்பா மாலை' என்னும் நூல், "மனைவியை இழந்த கணவன் வருத்தத்துடன் தனியே வாழும் நிலையை தபு-தார நிலை என்கிறது."(தேவிரா, 2016;237-238). தபு என்றால் இறத்தல் என்றும், தாரம் என்றால் மனைவி என்றும் பொருள்படும்.

சங்க இலக்கியங்களில் கைம்பெண்டிர்

சங்க காலத்தில் அடிக்கடி நிகழ்ந்த போர்களினால் சமூகத்தில் ஆடவர் எண்ணிக்கை குறைந்து மகளிர் எண்ணிக்கை கூடியது. இயற்கை உருவாக்கிய ஆண் பெண் சம நிலை குலைந்தது. மகளிரில் பாதிப்பேர் கைம்பெண்டிர். ஆடவர்கள் அடிக்கடி நிகழ்ந்த போர்களில் மாண்டுபோனதால் அவர்தம் மனைவியர் கணவருடன் தீப்பாய்ந்து மாய்வர்; உயிரை மாய்க்கத் தயங்கியவர் கொடுமையான கைம்மை நோன்பு நோற்று வாழலாம். அதன்படி, கைம்மை நோன்பு நோற்பவர்கள் கூந்தலைக் களைதல் வேண்டும்; அல்லியின் புல்லரிசிச் சோறு உண்ணல் வேண்டும்; உணவில் நெய் தவிர்த்தல் வேண்டும்; பரற் கல் பரப்பிய தரையில்விரிப்பு, தலையணை இன்றித் துயிலுதல் வேண்டும். இவ்விதிமுறைகளுக்கு அஞ்சியே பல பெண்டிர் கணவரோடு உடன்கட்டை ஏறி உயிரை விட்டனர்.

சங்ககாலப் பெண்கள் திருமணத்திற்குப்பின், கணவனுடன் இணைந்து இன்ப வாழ்வு வாழ்ந்தனர். பழங்காலத்தில் வாழ்ந்த பெண்கள் கணவரைப் பேணும் பண்புடையவர்களாக விளங்கினர். கணவன் இறந்த பின்னர் பெண்கள் கணவனுடன் தங்கள் உயிரையும் மாய்த்துக் கொண்டனர். அதைவிடப் பெண்கள் கைம்மை நோன்பு நோற்று தமது வாழ்க்கையைக் கழித்தனர் என்று சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. சங்க காலம் தமிழர்களின் பொற்காலம் எனக் கருதப்படுகிறது. பொற்காலத்தில் பெண்கள் ஆடவருக்கு நிகரானவர்களாக மதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆண்களுக்குச் சமமான உரிமையினையும் பெற்றிருக்கிறார்கள். கணவனை இழந்த சங்ககாலப்பெண்டிர் நிலை குறிப்பிடும்படியாக இல்லை. இந்திய மரபு வழிப்பட்ட பெண்களாகவே இருந்திருக்கின்றனர். பிற்காலத்தில் வீடுபேறு பற்றிய நம்பிக்கையின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்ட மிகவும் கொடிய பழக்கந்தான் உடன்கட்டை ஏறுதல். இப்பழக்கத்தினைச் சங்ககால மகளிரும் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். ஆண்களுக்கு நிகராக சம உரிமை படைத்தவர்களாக விளங்கியவர்களிடம் உடன்கட்டை ஏறல் இருந்தமை வியப்புக்குரியதே.

கைம்பெண்டிர்க்கு வழங்கப்பட்ட பெயர்கள்

தமிழகத்தில் கணவனை இழந்த பெண்டிர் கைம்மை மகளிர் என அழைக்கப்பட்டனர். கைம்மை நிலை என்பது தந்தைவழிச் சமுதாயத்தின் ஒருதார மணமுறை என்ற சமூக அமைப்பில் உருவாக்கப்பட்டது. கணவர் இறந்தால் மனைவி இறக்க வேண்டும். ஆனால் மனைவி இறந்தால் கணவர் இறக்க வேண்டியதில்லை. நற்றிணை, புறநானூறு ஆகிய நூல்களில் மட்டுமே கைம்மை பற்றிய செய்திகள்

காணப்படுகின்றன. கணவனை இழந்த பெண்களை,1. ஆளில் பெண்டிர் (நற்.353), 2. கழிகல மகளிர் (புறம்,280), 3. பருத்திப்பெண்டிர் (புறம்.125), 4. தொடிகழி மகளிர் (புறம்.238), 5. கைம்மை (புறம்.125, 261), 6. படிவமகளிர் (நற்.273), 7. உயவற்மகளிர் (புறம்.246) என்ற பெயர்களில் சங்க இலக்கியங்கள் வழங்கியுள்ளமையை தெரிந்துகொள்ள முடிகிறது. மனைவியை இழந்த ஆண்கள் எங்ஙனம் வாழ வேண்டும் என்ற வரைமுறை சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படாதது சிந்தித்தற்குரியதாகும். பெண்களே கணவனுடன் இறந்துள்ளனர். பெண்களுக்கே கைம்மைக் கோலத்திற்குரிய வாழ்க்கை நடைமுறைகள் வகுத்துரைக்கப் பெற்றன. மனைவியிழந்த ஆடவர்கள் கைம்பெண்களுக்குரிய வாழ்க்கை வாழவில்லை. கைம்மைத் துன்பம் நிறைந்த வாழ்கையைவிட இறப்பதே சாலச் சிறந்தது என்று அரசமகளிர் முடிவெடுத்தனர். இந்நிலையே கைம்பெண்களின் நிலையை எடுத்துரைக்கின்ற சான்றாக அமைந்திருக்கின்றது.

கைம்மைத் துன்பத்தின் மூன்று நிலைகள்

ஒப்பனை நீக்கம், உணவு நீக்கம், பழக்கநீக்கம் என்ற கைம்மைத் துன்பத்தின் மூன்று நிலைகள் காணப்படுகின்றன. வளை, தொடி, இழை ஆகியன கணவன் இறந்த நிலையில் களையப்பட்டிருக்கின்றன. வெளிமான் என்னும் வள்ளல் இறந்த போது, பெருஞ்சித்தனார் வருந்திப் பாடிய புறநானூற்றில் 237, 238 ஆவது பாடல்களில் இச்செய்தி வெளிப்படுகின்றது. அறனில்லாத எமன், வெளிமான் உயிரைக் கவர்ந்தமையால் அவனது மகளிர் தம் மார்பில் அறைந்து கொள்வதையும், கைம்மைக் கோலத்தின் அறிகுறியாக அவர் கைவளைகளை உடைப்பதையும், அவை வாழைப் பூப்போல சிதறிக்கிடப்பதையும் பெருஞ்சித்தனார் பாடியுள்ளார். கைம்மை மகளிர் தம் கூந்தலை நீக்கிய செய்தியைப் புறநானூற்றில் 25, 250, 261, 280 ஆகிய நான்கு பாடல்கள் எடுத்து இயம்புகின்றன. திருமணத்திற்கு முன்பும், மணநிலையிலும், பெண்கள் பூச்சூடியிருக்கின்றனர். கைம்மையில் கூந்தல் நீக்கத்துடன் மலர் நீக்கமும் இயல்பாகவே நிகழ்ந்துள்ளதை புறநானூற்றின் 246, 262 ஆகிய பாடல்களின் மூலம் அறியமுடிகிறது. புறநானூற்றின் 246 ஆவது பாடலில் பாயின்றிப் படுத்தல், உப்பில்லா வேளைக் கிரை உணவை உண்ணல் உள்ளிட்ட துன்பங்களைக் கைம்பெண்கள் அனுபவித்த கொடியநிலையைப் பெருங்கோப்பெண்டின் பாடல் தெளிவுறுத்தியிருப்பது நோக்கத்தக்கது. இது பழந்தமிழகத்தின் சமுதாய நிலையையும் பெண்களின் பெருந்துயரையும் விளக்குவதாக உள்ளது.

கைம்மையுற்ற பெண்டிர் 1. பழைய சோற்றையே உண்ண வேண்டும், 2. வெள்ளிய எள்ளரைத்த விழுதுடன், புளி பெய்து அட்ட வேளைக்கீரையை உணவாக்கிக் கொள்ள வேண்டும். 3. பாயின்றி வெறுந்தரையில் படுக்க வேண்டும் என்ற செய்தியை தொல். பொருளதிகாரம் 88 ஆவது நூற்பாவின் வழி தெரிந்துகொள்ளமுடிகிறது. 4. இறந்த தலைவனின் நினைவாக வீட்டில் உணவு படைக்க வேண்டும் என்ற செய்தியைப் பொருநராற்றுப்படையின் 214, 227 ஆகிய பாடல்களின் வழி அறிந்துகொள்ள முடிகிறது. 5. கூந்தலைக் கொய்துவிட வேண்டும். 6. வளையல்களை இழந்துவிட வேண்டும் ஆகியவை அகநானூற்றின் 390 ஆவது பாடல் வழி அறியலாகிறது. இவ்வாறெல்லாம் கைம்பெண்டிர் கட்டுப்படுத்தப்பெற்ற நிலையைச்

சங்க இலக்கியம் காட்டுகிறது. "இன்று நடைபெறும் வீட்டுத் தெய்வ வழிபாடு, குடித் தெய்வ வழிபாடு என்ற பெயரில் குடும்பத்தில் இடம் பெறுபவை கைம்பெண்டிர் தலைவனின் நினைவாகக் குடும்பத்தில் வழிபட்டதன் தொடர்ச்சியே எனக் கருத இடந்தருகிறது."(ஆறுமுகம்,1994; 69) என்னும் கருத்து நம்மை சிந்திக்க வைக்கிறது

சங்க மகளிரின் திருமணத்தில் இழை அணிகள் அணியப்பட்டன. கைம்மையில் இழை, வளை, தொடி களையப்பட்டன. கைம்மை வாழ்க்கையில் கூந்தல் களைதலில் மலர் நீக்கம் தானாகவே நடக்கிறது. திருமணத்தில் மங்கல மகளிர் வாழ்த்துகின்றனர். சங்க காலத்தில் கைம்மை மகளிர் வாழ்த்தியதாகவோ, நிகழ்வுகளில் கலந்து கொண்டதாகவோ செய்திகள் இல்லை. கற்பு வாழ்க்கையில் விருந்தோம்பல் பண்பு சிறப்பாகப் போற்றப்பட்டது. இன்னாப்பொழுதில் பசலைக்கீரை, புல்லரிசி, வெள்ளைச்சாந்து, பழஞ்சோறு உண்பது கைம்மைக்குரியதாக உள்ளது.

சங்க காலத்தில் உடன்கட்டை ஏறிய அரசியர்

சங்க இலக்கியத்தில் புறநானூறு சதி பற்றிய பல குறிப்புகளைக் கொண்டுள்ளது. பாண்டிய ராணி அதில் மிகவும் ஆர்வமாக இருந்தாள் மற்றும் சதி செய்ய வேண்டாம் என்ற அனைத்து கோரிக்கைகளையும் நிராகரித்தாள் என்பதைப் புறநானூற்றின் 246, 247 ஆகிய பாடல்கள் வழி அறிந்துகொள்ள முடிகிறது. ரிக்வேத மக்களைப் போலவே தகனம் மற்றும் அடக்கம் இரண்டையும் தமிழர்கள் கடைப்பிடித்தனர். ஒரு பெண் குயவரிடம் ஒரு பெரிய கலசம் செய்யச் சொன்னாள், அதனால் அவளும் தன் கணவனுடன் அடக்கம் செய்யப்பட்டாள் என்பதைப் புறநானூற்றின் 256- ஆவது பாடல் கூறுகிறது. பண்டைய எகிப்தில் நூற்றுக்கணக்கான ராணிகள், அமைச்சர்கள் மற்றும் தொழிலாளர்கள் ராஜாவுடன் உயிருடன் புதைக்கப்பட்டனர். இப்பழக்கம் வெளியில் இருந்து இந்தியாவிற்கு வந்தது என்பது அறிஞர்களின் கருத்து. ஏழு எதிரிகளின் மனைவிகள் அனைவரும் போரில் கணவன் தோற்கடிக்கப்பட்ட அவமானத்தால் இறந்ததைக் காட்டுகிறது. ஏழு அல்லது அதற்கு மேற்பட்ட மனைவிகளும் ஒரே நேரத்தில் இறந்திருப்பதால் அது சதியால் மட்டுமே இறந்திருக்கவேண்டும். கவிஞர் வேறு எந்த வகையான தற்கொலையையும் குறிப்பிடவில்லை என்பதை புறநானூற்றுப் பாடல் 78 தெளிவுபடுத்துகிறது.

கரிகால் சோழன், நெடுஞ்சேரலாதன் மற்றும் ஆய் அந்திரன் ஆகியோரின் மனைவிகள் தங்கள் கணவர்களின் இறுதிச் சடங்கில் தங்களைத் தாங்களே எரித்துக் கொள்வதை மற்ற பாடல்கள் காட்டுகின்றன. குறுந்தொகை 69- ஆவது பாடலில் குரங்கு கூட தன் ஆண் துணை இறந்ததால் தற்கொலை செய்து கொள்கிறது. தமிழ் காவியங்களான சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை ஆகியவை சதி அல்லது விதவை எரிப்புக்கான ஆதாரங்களைக் காட்டுகின்றன.

இரட்டைக் காப்பியங்களில் மூன்று வகையான கைம்மை நிலை

சிலப்பதிகார கற்பு நெறியை 3 வகையாக பிரிக்கலாம், அது முதற்கற்பு, இடைக்கற்பு மற்றும் கடைக்கற்பு ஆகும். சிலப்பதிகாரத்தில் காணப்படும் கற்பு நெறி ஆய்வுபடி முதற்கற்பு மாதவிக்கும்

இடைக்கற்பு கோப்பெருந்தேவிக்கும் கடைக்கற்பு கண்ணகிக்கும் கிடைக்கிறது. கண்ணகிக்கு ஏன் கடைக்கற்பு? கோப்பெருந்தேவிக்கு ஏன் இடைக்கற்பு? என்றால், கணவன் கொலையுண்டதால் கண்ணகி மதுரையை எரித்தாள். ஆனால் கோப்பெருந்தேவி, கணவன் உயிரிழந்தால் தனது உயிரையே நீத்தாள். உயிரைவிட கண்ணகியின் கோபம் பெரிதல்ல என்பதால் கோப்பெருந்தேவிக்கு இடையும் கண்ணகிக்கு கடையும் கொடுக்கப்பட்டுள்ளது.

மணிமேகலை காப்பியத்தில் கணவனை இழந்த கைம்மை மகளிர் நிலையை ஊரலர் உரைத்த காதையில் இன்னுயிர் ஈதல், நளிமூயெரிபுகுதல், நோற்றுடம்படுதல் என்று மூன்றாக வகைப்படுத்திக் கூறுகிறது.

“காதலர் இறப்பின் கனை எரி பொத்தி
ஊது உலைக் குருகின் உயிர்த்து அகத்து அடங்காது
இன் உயிர் ஈவர் ஈயார் ஆயின்
நல் நீர்ப் பொய்கையின் நளி எரி புகுவர்
நளி எரி புகாஅர் ஆயின் அன்பரோடு
உடன் உறை வாழ்க்கைக்கு நோற்று உடம்பு அடுவர்
பத்தினிப் பெண்டிர் பரப்புநீர் ஞாலத்து”(மணிமேகலை, 2;42-48)

என்ற பாடலில் கற்பின் மூன்று நிலையினைக் கூறுகிறது. கைம்மை மகளிர் அவர்களது செயல்பாடுகளின் அடிப்படையில் தலைக்கற்பினர், இடைக்கற்பினர், கடைக்கற்பினர் என மூன்று வகைப்படுத்துகின்றனர். தலையாய கற்பு என்பது கணவன் உயிர் துறந்த செய்தி கேட்டு உயிர் விடுதலாகும். இதனைப் புறநானூறு 62 ஆம் பாடலில் காணமுடிகிறது. “கணவனுடன் உயிர் விடுதலைத் தலையாய கற்புடையவர் என்கிறார்” (சாமிநாதையர். 2016; 151). இடைக்கற்பாகிய உடன்கட்டை ஏறுதலைப் புறநானூறு 240 ஆவது பாடல் உணர்த்துகிறது. ஆய் ஆண்டிரன் இறந்தபோது அவன் உரிமை மனைவியர் உடன் உயிர் நீத்த செய்தியை இப்பாடல் காட்டுகின்றது. “கடைக்கற்பு என்பது தம் காதலருடன் மறுமையில் உறையும் வாழ்க்கையின் பொருட்டு, கைம்மை நோன்பு பூண்டு உடலை வருத்துவர் ஆகியவற்றின் மூலம் நிறைவேற்றுவர்.” (ஸ்ரீசந்திரன், 2002; 57) என்பதை புறநானூற்றின் 246- ஆவது பாடலின் மூலம் அறிய முடிகிறது.

மணிமேகலையில் மாதவி சொல்வதிலிருந்து பத்தினிப்பெண்டிருக்கு மட்டுமே, அதாவது 'ஒரு பெண்ணுக்கு ஒரு கணவன்' என்ற நிலையில் வாழ்ந்த பெண்களுக்கே, இறந்த கணவனுடன் தீப்புகுந்த நிலையோ கைம்மை நிலையோ அமைந்திருந்தது என்பது தெளிவாகத் தெரிகிறது. கணிகையாக இருந்த மாதவி தனக்கு அந்த இருநிலைகளும் இல்லாததைப் பற்றி வருந்துகிறாள் என்பது தெளிவு. அதனால்தான் “நாணுத் துறந்தேன்” என்று தன்னைப் பற்றி நொந்து சொல்கிறாள். அந்த நிலையில்தான் அவள் வருணக்காப்பு இல்லாத பெண்களுக்கு ஆதரவு கொடுத்த பௌத்த நெறியை அடைந்தாளோ என்றும் எண்ணத்தோன்றுகிறது. 'ஒருத்திக்கு ஒருவன்' ஆனால் ‘ஒருவனுக்குப் பல பெண்டிர்’ என்ற குமுக நிலையைத்தான் சங்க இலக்கியப் பாடல்கள் காட்டுகின்றன. அதனால்தான் கைம்மை நோன்பு நிலையையும் இறந்த தன் மடந்தையுடன் தீப்புகும் நிலையையும் ஓர் ஆடவன் அடைந்ததாகச் சொல்லும்

பாடல்களைக் காணவில்லை. மனைவியை இழந்த ஆடவனின் நிலை = கணிகையின் நிலை என்பதைத்தான் சங்கப் பாடல்கள் காட்டுகின்றன. இதை மணிமேகலைக் காப்பியப் பெண்களின் கூற்றில் காணமுடிகிறது. மணிமேகலையில், ஆதிரை சதி செய்ய முயன்றாா், ஆனால் நெருப்பு அவளை எரிக்க மறுத்தது, ஏனென்றால் கப்பல் விபத்தில் இறந்துவிட்டதாக அவள் நினைத்த கணவன் உண்மையில் உயிருடன் இருந்தான். ஆனால் இந்த வழக்கம் பௌத்தர்களாலும் பின்பற்றப்பட்டது என்பதைத் தெரிந்துகொள்ளமுடிகிறது.

பல்லவர் காலத்தில் கைம்பெண்டிர்

தமிழகத்தை பல்லவர் அரசாண்ட காலத்தில் கைம்பெண்டிர் உடன்கட்டை ஏறியதாக கல்வெட்டுகளில் பதிவுகள் கிடைக்கப்பெறவில்லை. க. மீனாட்சி தனது பல்லவர்களின் ஆட்சிக்காலத்தில் நிர்வாகமும் சமூக வாழ்வும் எனும் நூலில், “சதி என்பது அபூர்வமாக இருந்த்தது. சதியைப்பற்றி பல்லவர் கல்வெட்டுள் குறிப்பிடவில்லை. இதிலிருந்து சதி தமிழகத்தில் அதிகம் இடம் பெறவில்லை எனத் தெரிகிறது ”(தனலெட்சுமி, 2014; 46) என்பதை அறிகிறோம். அதே நேரத்தில் “உயர் குடிப் பெண்கள் உடன்கட்டை யேறினர். கைம்மை நோன்பு மேலும் கடுமையுற்றது. மனுவின் கோட்பாடு பரவியது(தட்சிணாமூர்த்தி, 2008;545) என்பதை தெரிந்துகொள்ளமுடிகிறது.

சோழர்கால கைம்பெண்டிர் நிலை

சோழ அரசன் முதல் பராந்தக சோழன் ஆட்சிக்காலத்தில் “கொடும்பாளூரை ஆண்ட வீரசோழனின் மனைவி கங்கமாதேவி, சுந்தர சோழனின் மனைவியும் முதல் இராசராச சோழனுடைய மனைவியுமான வானவன் மாதேவியார், கங்கைகொண்ட சோழனுடைய மனைவியார் வீரமாதேவியார், மூன்றாங் குலோத்துங்க சோழன் ஆட்சிக் காலத்தில் இராசராசமலயகுலராசன் என்ற குறுநில மன்னனின் மனைவி ஆகியோர் உடன்கட்டை ஏறி இருப்பதை”(சதாசிவ பண்டாரத்தார், 2011; 606)பிற்கால சோழர் சரித்திரம் நூல் வழி தெரிந்து கொள்ளமுடிகிறது.

கலிங்கத்துப் பரணியில் செயங்கொண்டார் 481- ஆவது பாடலில் “போர்க்களத்தில் பெரிய இரத்த வெள்ளம். அதில் மத யானைகள் மாய்ந்து விழுந்து கிடக்கின்றன. அவற்றோடு அரசர்க்குரிய கொடிகளும் சாய்ந்து படிந்து கிடக்கின்றன. இக்காட்சி, சுடுகாட்டில், நெருப்பாகிய படுக்கையில் கணவர்களோடு கற்புடைய மகளிர் உடன்கட்டை ஏறிக் கிடத்தலை ஒத்திருக்கிறது.”(புலியூர்க் கேசிகன், 2018; 230) என்று கூறுவதை அறியமுடிகிறது. உடன் கட்டை ஏறும் பழக்கம் என்பது “அரச குடும்பத்தினர்க்கு இது சிறப்புப் பண்பாகும்”(தட்சிணாமூர்த்தி, 2008; 543) என்பதை தெரிந்துகொள்ளமுடிகிறது.

நாயக்கர்கால கைம்பெண்டிர் நிலை

இலக்கியச் சான்றுகளை நுணுகி ஆராயுமிடத்து உடன்கட்டையேறும் பழக்கம் உடைமை வர்க்கத்திற்கே உரியது என்ற உண்மை புலனாகிறது. அதே நேரத்தில் உழைக்கும் வர்க்கத்தைச் சார்ந்த தற்சார்பு வாழ்க்கை வாழும் விளிம்புநிலை சமூகத்தைச் சார்ந்த மகளிர் புராதானப் பொதுவுடைமைச் சார்ந்த

மகளிரைப்போல் ஆணுக்கு நிகரான பல்வேறு உரிமைகளைப் பெற்றிருத்தலைக் காணலாம். முத்துப்பட்டன் கதை மட்டும் இக்கருத்திற்கு முரண்படுகிறது. ஏனென்றால் முத்துப்பட்டன் இறந்தபோது இவர்கள் உடன்கட்டை ஏறுகின்றனர். தமிழ் நாட்டுபுற மரபில் "பதினேழாம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படும் முத்துப்பட்டன் கதையில் உடன்கட்டையேறுதல் என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டிருக்கிறது" (இராமநாதன், 1997) என்று அறிய முடிகிறது. மதுரை வீரன் இறந்தபோது மனைவி பொம்மி உடன்கட்டை ஏறினாள். தேசிங்கு ராஜன் இறந்தபோது ராணி உடன்கட்டை ஏறுகிறாள். மேலும், "நாயக்கர் காலத்தில் செஞ்சியை இசுலாமியர்கைப்பற்றிய செய்தியை அறிந்து அரச மகளிர் அய்நூறு பேர் தீப்புகுந்து உயிர் விட்டனர்"(1952, 31) என்று கர்நாடக ராசாக்கள் சவிஸ்தார சரித்திரம் கூறுகின்றது. மேலும், "தேசிங்குராஜன் கடைசியில் இறக்க, அவனது மனைவி சதியேறினார். அவளது தியாகதை மெச்சிய நவாப் இராணிப்பேட்டை என்ற ஒரு ஊரையே ஏற்படுத்தினார்."(பார்திபன்,2023; 51) என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

நாயக்க மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் விதவைப்பெண்கள் மிகுந்த கட்டுப்பாட்டிற்குள் வைக்கப்பட்டு கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் கணவனுடன் உடன்கட்டை ஏறி இறந்துபோன பெண்களைத் தெய்வமாகப் போற்றிக்கொண்டாடினார்கள். இதனால் அவர்களாகவே உடன்கட்டை ஏற விரும்பி இருந்திருக்கலாம். மேலும் மன்னர்கள், போர்வீரர்கள் மட்டுமின்றி உயர்ந்த அந்தஸ்தில் இருந்தவர்களின் மனைவியரும் நாயக்க மன்னர்கள் காலத்தில் உடன்கட்டை ஏறி உள்ளனர்.

மேலும், இவை குறித்து திருப்புல்லாணி அரசு மேல்நிலைப்பள்ளி தொன்மைப்பாதுகாப்பு மன்ற பொறுப்பாசிரியரும் தொல்லியல் ஆர்வலருமான வே. இராஜகுரு கூறுகிறபோது, கிழவன் சேதுபதி இறந்தபின் அவரின் 47 மனைவியரும் அவருடன் உடன்கட்டை ஏறியதாக வரலாறு உள்ளது என்கிறார்,

கைம்பெண்டிரை உடன்கட்டை ஏற்றியது

கணவன் இறந்தவுடன் அவரை எரிக்கும் நெருப்பில் மனைவியும் விழுந்து தன்னை மாய்த்துக் கொள்ளும் நடைமுறைதான் 'சதி'. இப்படி செய்யும் பெண் மற்றவர்களை விட மிக உயர்ந்தவர். அவள்தான் கணவன் மீது தீராத அன்பும் மரியாதையும் கொண்டவள் என்ற ஒரு பிம்பம் உருவாக்கப்பட்டிருந்தது. மதுரை விஜயராகவ நாயக்கர், "போரில் தோல்வியின் விளிம்பில் இருக்கும் தருவாயில், பகைவர் கையில் தன்மனைவியர் சிக்காமல் இருக்க அனைவரையும் தீயிலிட்டு கொன்றார்."(பார்த்திபன், 2023; 50-51) என்று அறிய முடிகிறது. "சில பெண்கள் விதியை நொந்து உயிர் விடுவர். சிலர் மரணபயம் காரணமாய் பின் வாங்கினால் வலுக்கட்டாயமாய் இழுத்து நெருப்பில் தள்ளுவர்." (பார்த்திபன், 2023; 51)என்பதை அறிய முடிகிறது. `இக்கொடூரச் செயல் கௌரவத்தின் சின்னமாக மாற்றப்பட்டு, கணவனை இழக்கும் அத்தனை பெண்கள் மீதும் கட்டாயமாகத் திணிக்கப்பட்டது. "19ஆம் நூற்றாண்டில் ஒரு பெண் உடன்கட்டையேற நிர்பந்திக்கப்பட்டாள். சிவகங்கை மறவர்களிடம் இப்பழக்கம் கட்டாயப்படுத்தப்பட்டது. செம்பியநாட்டு மறவர் இனப் பெண்கள், குறிப்பாக சேதுபதி உடைய தேவரை மணந்து கொண்டவர்கள், கணவனுக்குப்பின் அவனோடு தீப்புக வேண்டும் என்ற நிலை இருந்தது. அந்த நிகழ்ச்சி 'அக்னிப்பிரவேசம்' எனப்பட்டது.

ஆனால் இது கட்டாயப்படுத்தப்பட்ட ஒரு சதி- நிகழ்வுதான். அரசனின் ஆணைப்படி அது நிறைவேற்றப்பட்டு வந்தது."(அருணாசலம், 2014; 78) என்பதை தெரிந்துகொள்ள முடிகிறது. இதுபோன்று உயிரைத் துறக்கும் பெண்களின் நினைவுச்சின்னமாக "சதிகல்" நடுவது வழக்கமாய் இருந்துள்ளது.

ஐரோப்பியர் காலத்தில் கைம்பெண்டிர்

சதி எனப்படும் உடன்கட்டை ஏறும் வழக்கம் நம் நாட்டில் இதிகாச காலத்திலிருந்தே இருந்து வந்தது. ராஜாராம் மோகன்ராய் போன்றோர் நடத்திய தொடர் போராட்டம் காரணமாக, 1829 - ஆம் ஆண்டு வில்லியம் பெண்டிங் பிரபு சதி வழக்கத்தைத் தடை செய்தார். ஆனால், ஜெய்ப்பூர் மாநிலத்திலிருக்கும் தியாரோலே கிராமத்தில் ராஜபுத்திர வம்சத்தைச் சேர்ந்த அரச குடும்பத்து மருமகள் ரூப் கன்வரின் கணவர். எதிர்பாராத விதமாக அவளது கணவன் இறந்துபோகிறான். கணவனுக்குப் பாடை கட்டுகிறார்கள். கூடவே, உயிரோடிருக்கும் ரூப் கன்வருக்கும் சேர்த்துதான். சுடுகாட்டில் நிறுத்தப்படுகிறாள். அவளது முன்னிலையில் கணவனின் சிதை எரியூட்டப்படுகிறது. அருகில் இன்னொரு சிதை தயாரானது. தப்பிக்க முயற்சி செய்கிறாள் கன்வர். சிலர் அவளைப் பிடித்துக்கொள்கிறார்கள். அவளுக்கு மருத்துவர் ஒருவர் மயக்க ஊசி செலுத்த மயங்கிச் சரிந்தாள். கனன்று எரிந்துகொண்டிருந்த தீயில் வீசப்பட்டாள் ரூப் கன்வர். துடிக்கத் துடிக்க எரிந்து அடங்கிப் போனாள். `சதி மாதாக்கீ ஜே' எனும் குரல் அவளுடைய உடல் எரிந்து சாம்பலாகும் வரை அங்கு ஒலித்துக்கொண்டேயிருந்தது. அப்போதுதான் உடன்கட்டை ஏறுவது எப்படி நடைபெறும் என்பதை இந்தியா மட்டுமல்லாமல் உலகமே தெரிந்துகொண்டது. இந்நிகழ்வு 04.09.1987 அன்று இந்தியாவில் இறுதியாக நடைபெற்ற, `சதி' என்னும் உடன்கட்டை ஏறும் நிகழ்வு என்பதை அறியமுடிகிறது.

ரூப் கன்வர் சிதையில் வைத்துக் கொளுத்தப்பட்ட இடம் இன்றும் 'சதி ஸ்தல்' என்ற புனிதமான இடமாகக் கருதப்பட்டுவருகிறது. அவர் தீக்கிரையான நாளில் ஆண்டுதோறும் 'சுன்ரி மகோத்ஸவ்' என்ற விழாவைக் கொண்டாடிவருவதை எப்படிப் புரிந்துகொள்வது? சொத்தைப் பாதுகாப்பதுதான் உடன்கட்டை ஏறும் செயலுக்குப் பின்னால் இருக்கும் காரணம் என்று வரலாற்றாய்வாளர் ரொமிலா தாப்பர் குறிப்பிடுகிறார். கணவனுக்கு உரிமையுடையவளாகக் கருதப்படும் பெண், வாரிசைப் பெற்றுத்தருவதையும், தம் குலப்பெருமையைப் பாதுகாப்பதையும்தான் தன் கடமையாகக் கொள்கிறாள். கணவனின் இறப்புக்குப் பிறகு அவள் இன்னொரு ஆணுடன் வாழ்வதையோ மற்றொரு குழந்தையைப் பெற்றுக்கொள்வதையோ இச்சமூகம் அங்கீகரிக்கவில்லை.

மாலைக்கோயில்களும் அது அமைந்துள்ள இடங்களும்

மாலைக்கோயில் என்பது குறித்து திருப்புல்லாணி அரசு மேல்நிலைப்பள்ளி தொன்மைப்பாதுகாப்பு மன்ற பொறுப்பாசிரியரும் தொல்லியல் ஆர்வலருமான வே. இராஜகுரு கூறுவதாவது; நிரை கவர்தல், மீட்டல், ஊரை எதிரிகளிடமிருந்து காத்தல், புலி, பன்றி, யானையுடன் சண்டையிடுதல், அரசனின் வெற்றிக்காகக் போரிடுதல் ஆகிய காரணங்களால் இறந்துபோன கணவனுடன் உடன்கட்டை ஏறிய மனைவிக்கு அமைக்கப்பட்ட நடுகல்லின் மேல் எழுப்பப்படும் கோயில் என்று என்று கூறுகிறார். உடன்

கட்டை ஏறும் பெண்ணிற்கு நடுகல்லைக் குடும்பத்தினருடன் ஊராரும் கோயிலாக அமைத்து வழிபட்டு வருவது வழக்கம். இதை மாலையீடு, மாலையடி, தீப்பாய்ஞ்ச அம்மன் கோயில், மாலைக்காரி, சீலைக்காரி அம்மன் கோயில் என்றும் அழைப்பர் என்கிறார் இராஜகுரு. இவர் மேலும், இராமநாதபுரம் மாவட்டம் நரிப்பையூரில், சாயல்குடி அருகே கொக்கரசன்கோட்டையில், தூத்துக்குடி மாவட்டம் வேம்பார் என்ற ஊரில் சிவபெருங்குன்றம் என்ற பகுதியில், கொக்கரசன் கோட்டை ஆகிய இடங்களில் உடன்கட்டை ஏறிய பெண்களுக்கான மாலைக்கோயில்கள் உள்ளதைத் தொல்லியல் என்னும் இணையப் பக்கத்தில் கூறுகிறார். கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டம் பூதக்குடி என்னும் ஊரில் இருக்கும் தீப்பாய்ந்தம்மன் கோயில் உள்ளது. “உடன்கட்டையேறிய பெண் பத்தினிப் பெண்ணாகக் கருதப்பட்டு கல்நட்டு வழிபட்டுவரும் மரபைப் பின்பற்றி இந்தப் பெண்ணையும் வழிபடத் தொடங்கினர் என்பதே உண்மையாகும்.”(இராமநாதன், 2006; 121) என்று இராமநாதன் கூறுகிறார்.

வேதங்களில் விதவை மறுமணம்

ரிக்வேதம் பத்தாவது மண்டலம் பதினெட்டாவது அத்தியாயத்தில் “இறந்த மனிதனின் சகோதரர்களும் மற்ற உறவினர்களும் அவன் மனைவிக்குச் சொல்வது போல: ‘ஓ, பெண்ணே உன் கணவனைத் தகனம் செய்ய அனுமதிப்பாயாக. வாழும் உன் குடும்பத்தாரிடம் செல்வாயாக. உன் பிள்ளைகள் உன் பேரப்பிள்ளைகள் போன்றவர்கள் இருக்கும் உன் வீட்டிற்குச் செல்வாயாக. உனது எஞ்சிய வாழ்நாளை மகிழ்ச்சியாகக் கழிப்பாய். நீ யாரருகில் துயின்றாயோ யார் உன் கையை மணமேடையில் பற்றினானோ அவன் இன்று சலனமின்றி இருக்கிறான்.’ இன்னொன்றும் சொல்கிறது ரிக் வேதம் - விதவைகளுக்கு மறுமணம் உண்டு என்கிறது. இறந்த பெண்ணின் கணவனின் வில்லை எடுத்து கொண்டு இந்த பெண்ணை மணம் செய்ய முடிவுசெய்துள்ளவன் சொல்வது போன்ற ஒரு சுலோகத்தை இவ்வாறு கூறுகிறது - ‘பெண்ணே இதோ சிதையில் இருக்கும் இவன் வில்லை நான் எடுத்து கொண்டேன். இது எனக்கு புகழையும், வலிமையையும், சக்தியையும் அளிக்கட்டும். இங்கு இருக்கும் இந்த உயர்ந்த மனிதர்களுடன் இணைந்து நம்மை எதிர்ப்பவர்களை நாம் வெல்வோம்.’ ‘பெண்ணே இறந்த உனது கணவனிடமிருந்து நீங்குவாயாக. உன்னைக் கைப்பற்ற தயாராய் இருக்கும் இந்த ஆடவனை சேர்ந்து பிள்ளைகளும் செல்வமும் பெற்று மகிழ்ச்சியாக வாழ்வாயாக”(ஜம்புலிங்கம்,1991; 560-562) என்று அந்த விதவையை வாழ்த்துகிறது. சுமார் 4000 வருடங்களுக்கு முன்பு இயற்றப்பட்டது. இதன் மூலம் ஹிந்து மதத்தின் அன்றைய வாழ்நிலையை அறிந்துகொள்ள முடிகிறது.

தற்காலத்தில் கைம்பெண்டிர் நிலை

பல மனைவி மணமுறை வழக்கில் உள்ள சமுதாயங்களில் “கைம்பெண்களும் மண விலக்கடைந்த(divorced) பெண்களும் சமூக வாழ்வில் ஒதுக்கப்பட்டவர்களாகவோ கைவிடப்பட்டவர்களாகவோ இருப்பதில்லை. பெரும்பாலும் அனைவரும் மற்றவர்களுக்கு மனைவி என்னும் தகுதியுடன்தான் கற்பு நெறியுள்ள நிலையில் மணந்து கொள்கின்றனர். சில பெண்களை அத்தகைய

நிலையில் எதிர்பார்ப்பதில்லை. மனைவிகளின் எண்ணிக்கை மிகுதியாகத் தேவைப்படுவதால் அவர்கள் கைம்பெண்களையும் மணவிலக்கடைந்தவர்களையும் மனைவியாக ஏற்றுக் கொண்டனர்,"(பக்தவத்சல பாரதி, 2003;399) என்பதை தெரிந்துகொள்ள முடிகிறது.

தமிழ் இலக்கியங்களில் கைம்பெண்டிர் திருமணம்

தமிழிலக்கியத்தில் ஒரு பெண்ணின் கணவன் இழந்தால் அவள் ஒப்பாரி வைத்து அழுது புலம்புவதாக அமையும். இல்லையேல் புறநானூற்றுப் பூதப்பாண்டியன் மனைவி தீப்பாய்ந்ததைப் போன்று தீப்பாய்ந்து மடிந்ததாக அமையும். இதேநிலை கி.பி. 19- ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்து வந்தது. அதன் பின்னே இத்தகைய பழக்கத்திற்கு எதிராகக் குரல் எழுந்தது. அதன் பயனால் 1821- இல் சதி அல்லது உடன்கட்டை ஏறுதல் ஒழிப்புச் சட்டமும் 1856- இல் கைம்பெண்டிர் மறுமணச் சட்டமும் கருக்கொண்டது. அதன் பின்னரே தமிழில் பாவேந்தர் பாரதிதாசன், ஜீவா, நாமக்கல் கவிஞர் போன்றோர் தம் படைப்புகளில் விதவை மறுமணத்தை ஆதரித்துக் குரல் கொடுத்தார்கள். 1737- ஆம் ஆண்டில்அசன் அலிப் புலவர் இந்திராயன் படைப்போர் எனும் இலக்கியத்தில் கைம்பெண்டிர் மறுமணத்தைக் குறித்த புரட்சியை ஏற்படுத்திவிட்டார். இசுலாமியத்தில் கைம்பெண்டிர் மறுமணம் என்பது ஏற்றுக்கொண்டாலும், தமிழ் இலக்கியத்தில் முதன் முதலில் புகுத்தியது அசன் அலிப்புலவரே ஆவார். இதனை,''முன்தாலி தானிழந்த மோகனமார் மங்கையார்க்குப்/பின்தாலி கட்டி வைத்துப் பேரறிவூதான் பற்றி'' (அலியார்ப்புலவர், 1873; 42) என்றும், "தாலியிழந்தவளைத் தானிலியா ரங்கழைத்துக்/கோலியொரு மாப்பிள்ளைக்குக் கொள்கையுடன் தாலிகட்டி" (அலியார்ப்புலவர், 1873; 43) என்றும் இந்திராயன் படைப்போர் பாடல் அடிகளில் உணர்த்துகிறார்.

பாரதிதாசன் கைம்மைக் கொடுமை, கைம்பெண் நிலை, இறந்தவன் மேற் பழி, கைம்மைத் துயர், கைம்மை நீக்கம் முதலிய கவிதைகளில் கைம்பெண்டிர் கைம்பெண்டிர் உரிமைகளையும், சமூக நிலையையும் பேசியுள்ளார். கைம்பெண் நிலை என்னும் தலைப்பில் அமைந்த கவிதையில் "வருந்தாமற் கைம்பெண் முகம்/திருந்துமோ இச் சமூகம்?/மறுமணம் புரிவது- சிறுமைஎன் றறைவது/ குறுகிய மதியென-மொழிகுவர்" (பாரதிதாசன், 2003;100) என்று கூறுகிறார். தி.ஜானகிராமன் எழுதிய பத்துப் புதினங்களில் அம்மாவந்தாள், செம்பருத்தி, மலர் மஞ்சம், நளபாகம், மரப்பசு, மோகமுள் ஆகிய ஆறு புதினங்களில் கைம்பெண்டிர் துயர் எடுத்துக்கூறப்பட்டுள்ளது. இவர்களைப்போன்று பலர் தங்கள் படைப்புகளில் கைம்பெண்டிர் திருமணம் குறித்து பேசியுள்ளனர்.

கைம்பெண்டிர் குறித்து பெரியாரின் சிந்தனைகள்

பெரியார் "மனித சமூகத்தில் மகளிர் விஷயத்தில் ஒரு பெரும் மாறுதல் ஏற்பட வேண்டியது அவசியம். இது தீண்டாமையை ஒழிப்பதைவிட அவசரமாய்ச் செய்ய வேண்டிய காரியம் என்பது என் அபிப்ராயம். அதிலும் விதவைக் கொடுமை அடியோடு ஒழிக்கப்பெற வேண்டும். அது மனித தர்மத்துக்கு மாத்திரமல்ல, சீவதர்மத்துக்கும் விரோதமாகும்"(சுப்புரெட்டியார், 2001; 69) என்கிறார். மேலும் ஓர் இளம்பெண் தன் கணவன் இறந்துவிட்டால் அவள் உலக இன்பத்தையே துய்க்காதவளாயிருப்பினும், அவள் தன் ஆயுட்காலம்

முழுவதும் இயற்கைக்கு கட்புலனை இறுக்க மூடி, மனம் நொந்து, வருந்தி மடிய நிபந்தனை ஏற்பட்டு விடுகின்றது. இஃது என்ன அநியாயம் என்று மனம் நொந்து பெரியார் வருந்துகிறார்.

கைம்பெண்டிர் நலனில் கலைஞர்

கலைஞர், வாழ்வின் விளிம்பு நிலையில் இருக்கும் அவர்களை விதவை என்ற சொல்லால் அழைக்கும்போது அந்த சொல்லில் கூட பொட்டு இல்லை என கருதி அந்த சொல்லுக்கு மாற்றாக இரு திலகங்கள் வரும் வகையில் ‘கைம்பெண்’ என்று அழைக்கத் தொடங்கினார். ஆணைப் போலவே பெண்ணுக்கும் அனைத்திலும் சம உரிமை உண்டு என்பதை உணர்த்திய அவர் விதவைப் பெண்களின் மறுமணத்திற்கு பெரிதும் ஆதரவளித்தார். இதற்காக அவர் ஆட்சியில் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டன.

பிருந்தாவன்- இந்தியாவின் கைம்பெண்டிர் நகரம்

இந்தியாவில் உத்தரபிரதேச மாநிலத்தில் கைம்பெண்டிர் நகரம் ‘பிருந்தாவன்’ உள்ளது. இந்த இடம் இந்துக்களுக்கு பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது; இந்துக் கடவுளான கிருஷ்ணர் தனது குழந்தைப் பருவத்தை இங்கு கழித்ததாகக் கூறப்படுகிறது. இந்த மத அடிப்படைகளின் காரணமாகவே பிருந்தாவனத்திற்கு 'விதவைகளின் நகரம்' என்று பெயர் வந்தது. புகழ்பெற்ற வரலாற்றாசிரியரும் எழுத்தாளருமான வில்லியம் டால்ரிம்பிள் தனது 1998- ஆம் ஆண்டில் எழுதிய பயண புத்தகமான ‘தி ஏஜ் ஆஃப் காளி’ யில் இதைப் பற்றி விவரிக்கிறார். “பிருந்தாவனம், கண்ணன் வாழ்ந்த இடம் என போற்றப்பட்டாலும், இன்று, 'விதவைகளின் நகரம்' என்றே அழைக்கப்படுகிறது. காரணம், இங்கு, 60,000க்கும் மேற்பட்ட வயதான விதவைகள் உள்ளனர்.” (தினமலர், 25.01.2015) என்பதை அறிய முடிகிறது. இங்கு ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், பீகார், உத்திரப்பிரதேசம், மேற்குவங்கம், சத்தீஸ்கர் மற்றும் கர்நாடகா மாநிலங்களில் இருந்து கணவனை இழந்த பெண்களை பிருந்தாவனத்தில் கொண்டு வந்து விட்டுவிட்டுச் சென்றுவிடுகின்றனர்.

கைம்பெண்டிரை மனதளவிலும் ஒடுக்கும் சமூகம்

கணவனை இழந்த ஒரு பெண், அதே ஊரில் உள்ள ஆண்களிடம் இயல்பாக பேசினால் கூட, இந்தச் சமுதாயம் தவறான உறவாகத்தான் நினைத்துக்கொள்கிறது. அந்தப் பெண் ஒவ்வொரு நாளும் அதிகாலையில் சுதந்திரமாக பொதுத்தெருவில் நடந்தால் காலையிலேயே ‘முண்டச்சி’ முகத்தில் முழித்தால் அன்றைய நாளே விளங்காது என்று சொல்கிறது. பண்டிகை, திருவிழா நாட்களில் கூட. அது மட்டும் அல்ல உற்றார், உறவினர் வீடுகளில் கூட முதல் நபராக இல்லாமல் சடங்கு, சம்பிரதாயம், நல்ல நேரம் முடிந்த கடைசி நபராக அந்தப் பெண் தள்ளப்படுகிறாள். மனம் உடைந்து தன் உறவினர் வீடுகளுக்கு மகிழ்ச்சியுடன் தானும் தன் பிள்ளைகளை அழைத்துச் செல்வதை நிறுத்தி விடுகிறாள். தனியாக வாழ்ந்தால் தன் வயது வந்த பிள்ளைகளையும் தன்னையும் தவறாக பேசுகிறது. தன்னுடன் வயதான அம்மாவையும் வைத்துக்கொண்டு பிள்ளைகளையும் பராமரிக்கிறாள். கணவனை இழந்த பெண்ணுக்குத் தாலி அறுக்கும் போதும், அலங்காரம்

செய்து பூவை அறுத்துப் பொட்டு அழித்து வளையல்களை உடைத்து இந்தச் சடங்குகளைச் செய்வதற்கும் மற்றொரு பெண் கைம்பெண்ணாகவே இருக்க வேண்டுமாம். அந்தப் பெண்ணை மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் துன்பப்படுத்துகின்றனர். இதுதான் இந்து மதச் சடங்கு என்று மனு சாஸ்திரம் கூறுகிறது.

ஆனால், அதே ஆண் எத்தனை பெண்களுடன் உறவு வைத்துக் கொண்டாலும் எத்தனை திருமணம் செய்து கொண்டலும் தவறு இல்லையாம். தான் பெற்ற பிள்ளைகளை நினைக்காமல் மறுமணம் செய்து கொள்கின்றனர். பெண் கணவனை இழந்தால் இந்தச் சமுதாயம் 'விதவை' என்கிறது. ஆனால் ஆண் மனைவியை இழந்தால் 'விதவன்' என்று சொல்லுவதில்லையே. இந்த இந்து மதச் சமுதாயத்தில் இதுவரை இல்லையே? திரைப்படங்கள், தொலைக்காட்சி நாடகங்களில் விதவைப் பெண்களை தனியாகவும் அவமானப் படுத்தும் விதமாகவே அமைக்கின்றனர். இன்றைய ஊடகங்கள் 'பண்பாடு' என்ற பெயரில் பெண்களை இழிவுபடுத்தி நவீன மனுசாஸ்திரத்தைப் பிரதிபலிக்கின்றன.

தமிழகத்தில் கைம்பெண்டிர் அதிகம்

பெரியார் தனது சொந்த குடும்பத்திலேயே கைம்பெண் மறுமணத்தை நடத்தி வைத்தார். உலகம் முழுக்க சுமார் 24.5 கோடி கைம்பெண்கள் இருக்கிறார்கள். இவர்களில் கிட்டத்தட்ட நம்நாட்டில் கைம்பெண்கள் எண்ணிக்கை 4.8 கோடி பேர். "நம்நாட்டில் விதவைகள் எண்ணிக்கை 40 மில்லியன். நாட்டின் பெண்கள் மக்கள் தொகையில் 8 விழுக்காடு பெண்கள் விதவைகள். இதில் 64 சதவீதம் பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள். இதில் 80 விழுக்காடு பேர் 70 வயதுக்கு மேற்பட்டவர்கள். கைம்பெண்களில் கிராமங்களில் வசிக்கும் 93 விழுக்காடு பேரும் நகர்புறங்களில் வசிக்கும் 68 விழுக்காட்டினரும் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள். 25 விழுக்காடு கைம்பெண்கள் வேலைக்குச் செல்கிறார்கள். இதில் 1 விழுக்காடு பேர் தான் நல்ல வேலையில் இருக்கிறார்கள். 5 விழுக்காடு பேருக்கு கிளார்க் வேலை. மீதமுள்ளவர்கள் கூலிவேலைக்கும் வீட்டுவேலைக்குச் செல்கிறார்கள். 7 விழுக்காடு கைம்பெண்கள் தனியாகத் தான் வசிக்கிறார்கள். இது இந்தியாவின் நிலை. தமிழகத்தைப் பொறுத்தவரை விதவைகளின் எண்ணிக்கை சுமார் 40 லட்சம். இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் விதவைகள் அதிகம் என்கிறது ஐ.நா. அறிக்கை." என்பதை ப. திருமலையின் கட்டுரை வழி அறியமுடிகிறது. இச்செய்தி இன்னும் பதற்றமடைய வைப்பதாக உள்ளது. ஆணின் இயற்கை மரணத்தைத் தவிர்த்து பெண்களை கைம்பெண்களாக்குவதில் குடியும், இயற்கைச் சீற்றமும் முக்கிய காரணிகளாகின்றன. அதிலும் தமிழகத்தில் குடி மிக முக்கிய காரணம். தமிழகத்திலுள்ள கைம்பெண்களில் ஐம்பது விழுக்காட்டினர் 35 வயதுக்கு கீழ் உள்ள கைம்பெண்கள் என்பது வேதனைக்குரிய செய்தியாக உள்ளது.

முடிவுரை

சங்ககால மகளிர் அரசியல், தூது, கல்வி, கள்ளுண்ணல் போன்றவற்றில் ஆண்களுக்கு நிகராக ஆற்றல் பெற்றிருந்தனர். சங்க இலக்கியத்தில் 'கற்பு' என்பது ஆணுக்கு அடங்கி அவன் சொற்படி நடக்கும் அடக்கக் கோட்பாடாக உள்ளது. 'கைம்மை' என்பது பெண்ணுக்கு மட்டுமே விதிக்கப்பட்டது. தாய் வழிச் சமுதாயம் என்பது சங்க இலக்கியத்தில் இல்லை. கணவனை இழந்த பிறகு கைம்மை நோன்பு என்ற

கொடுமையினை அனுபவித்திருக்கின்றனர். ஆண்களுக்குச் சமமாக ஆற்றல் கைவரப் பெற்றிருப்பினும் கணவனை இழந்த பிறகு வாழத் தகுதியற்றவராகவே இருந்திருக்கின்றனர். ஏனெனில் கணவனை இழந்த பிறகு வாழும் பெண்ணின் வாழ்வு நெறி இயல்பானதாக இல்லை. கழிகல மகளிர், கழிகல மகடூஉ, பருத்திப் பெண்டிர், உயவல் பெண்டிர், தொடிகழி மகளிர் என்று பல பெயர்களால் கைம்பெண்கள் அழைக்கப்பட்டிருக்கின்றனர். களவிலும் கற்பிலும் தலைவனின் சிறு பிரிவைக் கூட தாங்க இயலாது வருந்தக்கூடியவளாகப் பெண் விளங்குகிறாள். கணவனை இழந்த பிறகு கடுமையான கைம்பெண் நோன்பு நோற்று வாழ வேண்டுவது பெண்களுக்கு மட்டுமே கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. ஆண்களுக்கு இந்நோன்பு விதிக்கப்படவில்லை. பின்பற்றப்படவும் இல்லை. ஆனால், 'புறப்பொருள் வெண்பா மாலை' என்னும் நூல், மனைவியை இழந்த கணவன் வருத்தத்துடன் தனியே வாழும் நிலையை தபு-தார நிலை என்று பதிவு செய்துள்ளதைக் காணமுடிகிறது.

களவொழுக்கத்திலும், கற்பொழுக்கத்திலும் தலைவனை விமர்சிக்கிற தலைவி, கணவன் இறந்தபிறகு தன்னை மாய்த்துக் கொள்ளும் நிலைக்கு ஆளாகிறாள். இது தலைவன் மீதுள்ள அன்பின் மிகுதி எனக்கொள்ள இயலாது. பிற்போக்குத்தனமான இம்முடிவு அக்காலச் சமுதாயத்தைப் பழி வாங்குவதாகவே அமைகின்றது. தமிழ்நாட்டைப் பொருத்தவரை உடன்கட்டை ஏறும் வழக்கம் ஒரு விதிவிலக்கே தவிர கட்டாயமாக இருக்கவில்லை. தமிழ்நாட்டில் எந்த இடத்திலும் பெண்கள் உடன்கட்டை ஏறும்படி நிர்ப்பந்திக்கப்படவில்லை. அனால், சிவகங்கை மறவர்களிடம் அக்னிப் பிரவேசம் எனப்பட்ட உடன்கட்டை ஏறுதல் என்ற நேர்மறை கருத்தும் அதே சமயம் அரசனின் ஆணைப்படி நிறைவேற்றப்பட்டுள்ளது என்னும் எதிர்மறை கருத்தும் தமிழ்நாட்டில் நிலவுகிறது. திரைப்படங்கள், தொலைக்காட்சி நாடகங்களில் கைம்பெண்டிரைத் தனியாகவும் அவமானப் படுத்தும் விதமாகவே காட்சிப்படுத்துகின்ற நிலை மாறவேண்டும் என்றும் அலியார்ப் புலவர், பாரதிதாசன், தி. ஜானகிராமன் முதலியோர் தங்கள் படைப்புகளில் கைம்பெண்டிர் மறுமணம் குறித்து பேசியுள்ளதையும் இக்கட்டுரை எடுத்துக்கூறுகிறது. மேலும், பெரியார், கலைஞர் ஆகியோர் கைம்பெண்டிர் வாழ்வியல் மேம்பாட்டிற்கு மகத்தான பணிகளை செய்தவர்கள் என்பதையும் இக்கட்டுரை எடுத்தியம்புகிறது. கைம்பெண்டிரை பொருளாதார, பண்பாட்டுரீதியாக கேவலப்படுத்தப்படுகிற நிலை மாறவேண்டும். தமிழ்நாட்டில் கைம்பெண்களின் வாழ்வுரிமை மீட்டெடுக்கப்பட வேண்டும்.

துணைநூற் பட்டியல்

அருணசலம், மு(தமிழில் சிவ. முருகேசன்), தமிழ்நாட்டில் சதி என்னும் தற்பலி வழக்கம், சந்தியா பதிப்பகம், சென்னை, 2014.

அலியார்ப்புலவர், இந்திராயன் படைப்போர், பிரபாகர அச்சுக்கூடம், சென்னை, 1873.

ஆறுமுகம், முனைவர் ஆ., சங்க இலக்கியத்தில் குடும்பம், உடைமை, அரசு, பாவேந்தர் பதிப்பகம், திருமழபாடி,1994.

இராமநாதன், டாக்டர் ஆறு., தமிழர் வழிபாட்டு மரபுகள், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2006.

இராமநாதன், டாக்டர் ஆறு., நாட்டுபுற இயல் ஆய்வுகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1997.

உ.வே. சாமிநாதையர், புறநானூறு(மின்னூல்), தமிழ் இணையக் கல்விக் கழகம், சென்னை, 2016.

சதாசிவ பண்டாரத்தார், டி.வி., பிற்கால சோழர் சரித்திரம், அஸ்வின் ஏஜென்ஸி, சென்னை, 2011.

சந்தியா நடராஜன்(ப), மதுரைத் தமிழ்ப் பேரகராதி- இரண்டாம் பாகம், சந்தியா பதிப்பகம், சென்னை, 2004.

சுப்புரெட்டியார், டாக்டர் ந., தந்தை பெரியார் சிந்தனைகள், யாழ் வெளியீடு, சென்னை, 2001.

தட்சிணாமூர்த்தி, முனைவர் அ., தமிழர் நாகரிகமும் பண்பாடும், யாழ் வெளியீடு, சென்னை, 2008.

தனலெட்சுமி, முனைவர் நா.(தொ), தமிழர் சமுதாய & பண்பாட்டு பாரம்பரிய வரலாறு கி. பி. 1600 வரை, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகம், சென்னை, 2014.

துரைசாமிப் பிள்ளை, ஔவை சு., புறநானூறு- இரண்டாம் பகுதி, கழக வெளியீடு, திருநெல்வேலி, 1962.

துரைசாமிப் பிள்ளை, ஔவை சு., புறநானூறு- முதல் பகுதி, கழக வெளியீடு, திருநெல்வேலி, 1964.

தேவிரா(உ), புறப்பொருள் வெண்பாமாலை, ஸ்ரீநந்தினி பதிப்பகம், சென்னை, 2016.

பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2003.

பாரதிதாசன், பாரதிதாசன் பாடல்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2006.

பார்த்திபன், வே., கல்லாகிப் போனவர்கள், ஆதிவனம் பதிப்பகம், ஈரோடு, 2023.

புலியூர்க் கேசிகன்(உ), கலிங்கத்துப் பரணி, பாரி நிலையம், சென்னை, 2018.

ஜம்புநாதன் எம்.ஆர்., இருக்கு வேதம்(தமிழ் மொழிபெயர்ப்பு)- இரண்டாம் பாகம், டி. என். ஏ. ஐயர், மும்பை, 1991.

ஸ்ரீசந்திரன், ஜே.(உ), மணிமேகலை, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2002.

https://pmptn.wordpress.com/2013/06/05/

https://www.dinamalar.com/supplementary

http://www.tholliyal.com › 2015/08 › blog-post

References

Arunachalam, M. (in Tamil, Siva Murugesan), Thamizhnattil Sathi Ennum Tharpali Vazhakkam, Sandhya Pathipagam, Chennai, 2014.

Aliarpulavar, Indrayan Padaippor, Prabhakara atchu koodam, Chennai, 1873.

Arumugam, Dr. A., Sanga Ilakkiyathil kudumbam udaimai arasu, Pavendar Pathipagam, Tirumazhabadi, 1994.

Ramanathan, Dr. Aru., Tamizhar vazhipattu marapugal, Meiyappan Pathipagam, Chidambaram, 2006.

Ramanathan, Dr. Aru., naattupura iyal aoivugal, Manivasagar Pathipagam, Chennai, 1997.

Saminathaiyar, U.V. Purananooru (e-book), Tamil Virtual Academy, Chennai, 2016.

Sadasiva Pandarathar, T.V., Pirkaala Cholar Sarithiram, Ashwin Agency, Chennai, 2011.

Sandhya Natarajan, Madurai Tamizh peragarathi- Part II, Sandhya Pathipagam, Chennai, 2004.

Suppurediyar, Dr. N., Thandhai Periyar Sindhanaigal, yaazh veliyeedu, Chennai, 2001.

Dakshinamoorthy, Dr. A., Tamizhar nagarigamum panpaadum, yaazh veliyeedu, Chennai, 2008.

Dhanalakshmi, Dr. N., Tamizh samuthaya & panpattu parampariya varalaru ki. Pi.1600 varai, Tamil Nadu Open University, Chennai, 2014.

Duraisamy Pillai, avvai S., Purananooru- Part II, Kazhga Veliyeedu, Thirunelveli, 1962.

Duraisamy Pillai, avvai S., Purananuru- Part I, kazhga veliyeedu, Tirunelveli, 1964.

Devira, Purapporul Venpamalai, Sri nandini Pathipagam, Chennai, 2016.

Bhaktavatsala Bharathi, Panpattu manidaviyal, Meiyappan pathipagam, Chidambaram, 2003.

Bharathidasan, Bharathidasan padalgal, New Century Book House, Chennai, 2006.

Parthiban, V., Kallaki Ponavargal, Aadivanam Pathipagam, Erode, 2023.

Puliyur Kesigan, Kalingathu Parani, Pari Nilaiyam, Chennai, 2018.

Jambunathan M.R., Iruk Vedam (Tamil Translation)- Part II, T. N. A. Iyer, Mumbai, 1991.

Sre chandran, J., Manimekalai, Varthamanan Pathipagam, Chennai, 2002.

https://pmptn.wordpress.com/2013/06/05/

https://www.dinamalar.com/supplementary

http://www.tholliyal.com › 2015/08 › blog-post

License
Copyright (c) 2025 Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்வு இதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journals eISSN ***3049-0723***
Journal Vol 1, Issue 09, May 2025 https://doi.org/10.63300/

கொல்லிமலை மலையாளி பழங்குடி மக்களின் வாழ்வியல் போராட்டங்கள்

The Life Struggles of the Malayali Tribal People of Kolli Hills

முனைவர் சு. அனுலெட்சுமி
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி திருச்சிராப்பள்ளி – 02
Dr.S.Anulakshmi
Assistant Professor Department of Tamil Holy Cross College Tiruchirappalli - 02
anuganeshan2018@gmail.com

Abstract:
The life struggles of the Malayali tribal people living in the embrace of the Kolli Hills are countless. This community is largely marginalized, existing in a distressing state where even basic amenities are out of reach. Essential needs such as education, employment, and healthcare remain unattainable. Their rights to land and natural resources are being snatched away, and their unique identity, cultures, and traditions are slowly eroding. Conflicts with modern society have jeopardized their very livelihoods. In this context, it is crucial to improve the livelihoods of the Malayali tribal people and preserve their unique culture and heritage. They can be uplifted by providing them with quality education and creating employment opportunities. Furthermore, it is essential to nurture their language, art, and music, and to identify and address the obstacles that contribute to their socio-economic situation. Therefore, the primary objective of this study is to investigate the reasons for the setbacks faced by the Malayali tribal people of Kolli Hills and to propose ways to improve their living conditions. Through this, their unique identity and culture can be protected, ensuring an equitable place for them in society.

Keywords: Malayali tribal people, Kollimalai, Kolli Hills, life struggles of the Malayali tribal

ஆய்வுச்சுருக்கம்

மலைகளின் மடியில் வாழும் மலையாளி பழங்குடியினரின் வாழ்வியல் போராட்டங்கள் எண்ணிலடங்காதவை. இச்சமூகம், பெரும்பாலும் சமூகத்தின் விளிம்பில் தள்ளப்பட்டு, அடிப்படை வசதிகள் கூட கிடைக்கப் பெறாத ஒரு துயரமான நிலையில் உள்ளது. கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம் போன்ற அத்தியாவசிய தேவைகள் கூட அவர்களுக்கு எட்டாக்கனியாகவே இருக்கின்றன. நிலம் மற்றும் இயற்கை வளங்கள் மீதான அவர்களின் உரிமைகள் பறிக்கப்படுவதோடு, அவர்களின் தனித்துவமான அடையாளங்கள், பண்பாடுகள் மற்றும் மரபுகள் மெல்ல மெல்ல அழிந்து வருகின்றன. நவீன சமூகத்தின் மோதல்களால் அவர்களின் வாழ்வாதாரமே கேள்விக்குறியாகியுள்ளது. இந்தச் சூழலில், மலையாளி பழங்குடியினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், அவர்களின் தனித்துவமான கலாச்சாரத்தையும் பாரம்பரியத்தையும் பாதுகாப்பதும் அவசியமாகிறது. அவர்களுக்கு தரமான கல்வியை வழங்குவதன் மூலமும், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன் மூலமும் அவர்களை முன்னேற்ற முடியும். மேலும், அவர்களின் மொழி, கலை, இசை போன்றவற்றை வளர்ப்பதோடு, அவர்களின் சமூக பொருளாதார நிலைக்கு காரணமான தடைகளை

கண்டறிந்து களைய வேண்டியதும் அவசியம். எனவே, கொல்லிமலை மலையாளி பழங்குடி மக்களின் பின்னடைவிற்கான காரணங்களை ஆராய்ந்து, அவர்களின் வாழ்வியல் மேம்பாட்டிற்கான வழிகளை பரிந்துரைப்பதே இந்த ஆய்வின் முக்கிய நோக்கமாகும். இதன் மூலம், அவர்களின் தனித்துவமான அடையாளத்தையும், கலாச்சாரத்தையும் பாதுகாத்து, சமூகத்தில் அவர்களுக்கான சமத்துவமான இடத்தை உறுதி செய்ய முடியும்.

முன்னுரை

மனிதன் இன்று அடைந்திருக்கும் பல்வேறு நாகரிக வளர்ச்சிகளுக்கும் அறிவியல் கண்டுபிடிப்புகளே பிரதான காரணம். அறிவியல் வளர்ச்சி இல்லாத காலகட்டத்தில், மனிதன் இயற்கையை முழுமையாக நம்பி, போற்றி வாழ்ந்தான். சங்க கால மனிதன் இயற்கையை வணங்கியதற்கான சான்றுகள் அவன் கையாண்ட வழிபாட்டு முறைகளில் வெளிப்படுகின்றன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலவியல் பாகுபாடுகளின் அடிப்படையில் தங்களின் ஒழுக்கம், தொழில், உணவு ஆகியவற்றை வடிவமைத்து இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்தான். இத்தகைய இயற்கையோடு இணைந்து பழமையைப் போற்றி வாழும் மலைவாழ் மக்கள், இயற்கையின் அங்கமாகவே அல்லது இயற்கையின் மறுவடிவமாகவே கருதப்படுகிறார்கள்.

பரந்து விரிந்த காடுகளிலும் மலைகளிலும் வசிக்கும் மலைவாழ் மக்கள், ஆடு மாடுகளைத் தங்கள் சொத்தாகவும், தெய்வமாகவும் போற்றி வழிபடுகின்றனர். காலம் மாறுகிறது; நவீனத்துவம் தலைவிரித்தாடுகிறது. இந்த நவீன யுகத்தில், மலைவாழ் மக்களின் வாழ்க்கை முறையில் பலவிதமான இடர்பாடுகள் தலைதூக்குகின்றன. இவை அவர்களின் வாழ்க்கையை அடியோடு புரட்டிப் போடுவதோடு, உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பல்வேறு இன்னல்களுக்கு அவர்களை ஆட்படுத்துகின்றன. அத்தகைய மலையின மக்கள் தங்கள் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சிக்கல்களையும், அன்றாடப் போராட்டங்களையுமே இந்த ஆய்வில் விரிவாக ஆராய முற்படுகிறோம். அவர்களின் வாழ்வியல் சவால்களை வெளிக்கொணர்ந்து, அவர்களின் மேம்பாட்டிற்கான வழிகளை ஆராய்வதே இந்த ஆய்வின் முக்கிய நோக்கம்.

மலையாளி பழங்குடியினர்: வாழ்வும் வளமும்

பழங்குடி என்ற சொல்லானது, "பழமையான குடியினர்" என்ற பொருளைத் தருகிறது. தமிழகத்தில், கொல்லிமலை, பச்சைமலை, சேர்வராயன் மலை, கல்வராயன் மலை, ஏலகிரி, ஜவ்வாது மலை, சித்தேரி, பாலமலை போன்ற மலைப்பகுதிகளில் மூன்று லட்சத்திற்கும் அதிகமான மலையாளி பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். தமிழகத்தில் அதிக மக்கள் தொகை கொண்ட பழங்குடியினராக மலையாளிகள் உள்ளனர். இவர்கள் இம்மலைகளின் பூர்வ குடிமக்கள் அல்ல, இடையில் வந்து

தங்கியவர்கள் என்று கருதப்படுகிறது. பக்தவச்சல பாரதி, "காஞ்சிபுரத்தில் தாங்கள் வழிபட்டு வந்த குலதெய்வத்தின் சிலையை திருடி சென்ற இருள பூசாரிகளிடமிருந்து மீட்பதற்காக கிளம்பிய மூன்று வேளாள சகோதரர்களில் சின்ன அண்ணன் கொல்லிமலையிலும் நடு அண்ணன் பச்சை மலையிலும் பெரியண்ணன் கல்வராயன் மலையிலும் தங்கிவிட்டனர்." என்று கூறுகிறார் (பக்தவச்சல பாரதி, 2010). இவர்களின் வழிவந்தோரே இன்றைய மலையாளிகள் என்பதை அவர்கள் வழங்கி வரும் இடப்பெயர்ச்சி கதை மூலமும், பிற வழக்காறுகள் மூலமும் அறிய முடிகிறது.

உணவு

பழங்குடி மக்களின் வாழ்வில் உணவு தேடல் மற்றும் சேகரிப்பு என்பது அவர்களின் வாழ்வின் முக்கியமான போராட்டமாகவே இருந்து வந்துள்ளது. பருவ காலத்திற்கு ஏற்ப, சூழலுக்கு ஏற்ப தங்கும் இடத்தை அமைத்துக் கொண்டு உணவினை சேகரித்த பின் தங்கள் பழைய இடத்திற்கு திரும்பும் சமூக குடிகள் மிகக் குறைவு. ஆனால் மலையாளி பழங்குடியினர், நிலையான இருப்பிடத்தை அமைத்துக் கொண்டு உணவுப் பொருள்களை சேகரிப்பதோடு, எளிய முறையில் விவசாயம் செய்யக் கூடியவர்களாகவும் உள்ளனர். மலைகளில் பரவி வாழும் இம்மக்கள் வேட்டையாடுதலை இரண்டாம் நிலை உணவுத் தேடலாக கருதுகின்றனர். மலை விவசாயமாக நெல், சோளம், கம்பு, திணை, வரகு, காய்கறிகள், கிழங்குகள், வாழை உள்ளிட்ட பல்வேறு உணவுப் பொருள்களையும் பயிரிடுகின்றனர்.

மீன்பிடித்தல் மற்றும் கால்நடை வளர்ப்பு போன்றவையும் இவர்களது கூடுதல் தொழிலாக உள்ளது. கொல்லக்காடு என்பது கரடு முரடான சரிவுகள் கொண்ட நிலப்பகுதி. இந்நிலத்தில் பயிரிட கோடாரி, கொத்து போன்ற கருவிகள் பயன்படுத்தப்படுவதால் இது கொத்துக்காடு என அழைக்கப்படுகிறது. இங்கு அன்னாசி, எலும்பிச்சை, சாத்துக்குடி, நார்த்தை போன்ற பயிர்கள் பயிரிடப்படுகின்றன. அடுத்த சரிவான நிலப்பகுதி, மாடுகள் கொண்டு உழவு செய்து விவசாயத்திற்கு பயன்படுத்தப்படுவதால் மோட்டாங்காடு என்றழைக்கின்றனர். மூன்றாவது மலைப்பள்ளதாக்குகளில் நீரூற்று கொண்டு பாசனம் செய்வதால் அது வயல் எனப்படுகிறது. இங்கு குட்டை ரகநெல்லான சம்பா, மட்டக்கார், காப்பி, மிளகு போன்றவையும் பயிரிடப்படுகிறது.

உணவு உற்பத்தி செய்வதில் பல இடையூறுகளை இவர்கள் அனுபவிக்கின்றனர். பயிர்களை விதைப்பது தொடங்கி, வளரும் பருவத்தில் யானைகள் தாக்கி அவற்றை சேதப்படுத்துகின்றன. இவற்றையெல்லாம் கடந்து, பயிரிடும் பொருட்களை அவர்கள் மலையில் இருந்து கீழே கொண்டுவந்து சந்தைப்படுத்துவதிலும் அவர்கள் அதிக இன்னல்களை அனுபவிக்கின்றனர். மேலும், தாங்கள் உழைத்த உழைப்பிற்கு உரிய விலையினை அவர்களால் சுயமாக நிர்ணயிக்க முடியாமல் மிகவும் தவிக்கின்றனர்.

எனவே, இவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசு மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் உதவ முன்வர வேண்டும். அவர்களுக்கு விவசாயம் மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்த முறையான பயிற்சியை அளிப்பதன் மூலம் அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்த முடியும். மேலும், யானைகள் போன்ற வனவிலங்குகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சமூகப் பிரச்சனைகள்

மலையாளிகளின் சமூகப் பிரச்சனைகளில் முதன்மை பெறுவது கல்வியே. அடுத்து வறுமை மற்றும் வேலை வாய்ப்பின்மை போன்றவை. பழங்குடியின மக்கள் தங்களுக்குரிய காலம் காலமாக தொடர்ந்து கடைபிடித்து வந்த கலாச்சாரங்களும் சில தங்களுக்கென உரிய பழக்க வழக்கங்களும் மற்ற கலாச்சாரங்களால் ஆக்கிரமிக்கப்படுவதாகவும் அவர்கள் வருந்துகின்றனர். இச்சமூகத்தில் அவர்கள் சக மனிதராக கூட மதிக்காமல் புறக்கணிக்கப்படுவதோடு இனவெறி மற்றும் பாகுபாடுடன் நடத்தப்படுகின்றனர். பொது இடங்களில் ஊர் தெருக்களில் கோவில்களில் இம்மக்களை மற்றவர்கள் நிராகரிக்கின்றனர் அவர்களை இறை வழிபாட்டில் சேர்த்துக் கொள்ளாமல் ஒதுக்கியும் தவிர்த்து வருகின்றனர். தெருக்களில் நுழையக் கூடாது கால்களில் செருப்பணியக் கூடாது போன்ற பலவிதமான இன்னல்களை உடல் அளவிலும் மனதளவிலும் கொடுத்து வருகின்றனர். அறிவியல் வளர்ந்துள்ள இன்றைய நிலையிலும் சக மனிதரை மனிதராக நினைக்காமல் அவர்களை தீண்டத் தகாதவர்களாகவும் விலங்குகளை விட அடிமைத்தனத்துடனும் நடத்துகின்றனர.; மேலை நாடுகளில் தான் இன வெறி தாக்குதல் நடக்கின்றன மேலும் பழங்குடி மக்கள் பலவித அச்சுறுத்தல்களுக்கு ஆட்படுத்துகின்றனர் என்றால் நம் நாட்டிலும் இத்தகைய அவல நிலை இன்றளவும் நீடிப்பதை அறிய முடிகிறது.

பொருளாதாரப் பிரச்சனை

நிலம் மற்றும் இயற்கை வளங்கள் மீதான உரிமை மறுப்பதாகவும் வளங்களை அபகரிக்கவும் தங்கள் பூர்வீகத்தை விட்டு இடம்பெறச் செய்யவும் தொடர்ந்து பல அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றனர். இவை தங்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் ஒரு முக்கிய காரணமாக கருதுகின்றனர். இம்மலையாளி பழங்குடி மக்கள் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ளனர். வேலைவாய்ப்பின்மை போதுமான வருமானம் இல்லாமையால் இவர்கள் மிகப்பெரும் பொருளாதார பின்னடைவினை சந்திக்கின்றனர். மலையை மட்டும் நம்பி வாழும் இவர்கள் மலையில் செய்யும் விவசாயம் முதன்மை தொழிலாக உள்ளது அதிலும் இவர்கள் பல இடர்பாடுகளை சந்திக்கின்றனர். மலையில் பயிரிடப்படும் கேழ்வரகு திணை சாமை போன்ற சிறுதானியங்களைப் பயிரிடுவதோடு இயற்கையினை பேணும் இவர்கள்

இயற்கையான முறையில் பல நூறு ஆண்டுகளாக கடைபிடிக்கப்பட்டு வரும் மரபு முறையினை பின்பற்றி இன்றளவும் கிராம்பு ஏலக்காய் மிளகு போன்ற வாசனைப் பொருட்களை தயாரிப்பதில் பெரும் கவனம் செலுத்தி வருகின்றனர் இவ்வாறு விளைவிக்கப்படும் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்காக மலையிலிருந்து கொண்டு வரவும் அவற்றை உரிய விலையில் சந்தைப்படுத்துவதிலும் பெறும் சிரமப்படுகின்றனர் இங்கு அரியூர் நாடு மற்றும் குண்டூர் நாடு பகுதிகளில் அதிகம் அன்னாசிப்பழம் விளைந்து வருகிறது. குழிவளவு, தேவகாய், மூடுபாலி, தேனூ,ல் துவரப்பள்ளம், வெள்ளக்குழி, நத்துக்குளி போன்ற கிராமங்களில் விளையும் அன்னாசி பழங்களையும் ரகங்களாக பிரித்து சந்தைக்கு கொண்டு வருகின்றனர். மேலும் சோளக்காடு வார சந்தையானது ஒவ்வொரு வாரமும் செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறுகிறது அங்கு கொண்டு வந்து இப்பொருள்களை எல்லாம் விற்பனை செய்கின்றனர்.

சமூகப் பிரச்சனைகள் மற்றும் பொருளாதாரப் பிரச்சனைகள் மலையாளி பழங்குடியினரின் வாழ்க்கையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இந்தச் சவால்களைச் சமாளிக்க, கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு மற்றும் நில உரிமைகள் போன்ற பல்வேறு அம்சங்களில் கவனம் செலுத்தும் ஒரு விரிவான அணுகுமுறை தேவைப்படுகிறது (சாமி & ராமன், 2015).

கல்வி என்பது ஒரு சக்திவாய்ந்த கருவியாகும், இது பழங்குடி சமூகங்களுக்கு சமூக மற்றும் பொருளாதார ரீதியாக உயர உதவுகிறது (யுனெஸ்கோ, 2010). தரமான கல்வியை வழங்குவதன் மூலம், மலையாளி பழங்குடியினரின் அறிவையும் திறன்களையும் மேம்படுத்த முடியும், இது அவர்களுக்கு வேலை வாய்ப்புகளைப் பெறவும், வறுமையிலிருந்து விடுபடவும் உதவும். அதே நேரத்தில், அவர்களின் கலாச்சார பாரம்பரியத்தையும் மதிப்புகளையும் பாதுகாக்கும் கல்வி முறையை உருவாக்குவது முக்கியம் (தேசிய கல்விக் கொள்கை, 2020).

சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதும் முக்கியம். மலையாளி பழங்குடியினர் பெரும்பாலும் ஊட்டச்சத்து குறைபாடு, தொற்று நோய்கள் மற்றும் போதுமான சுகாதார வசதிகள் இல்லாமை போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் (உலக சுகாதார அமைப்பு, 2018). இந்தச் சவால்களைச் சமாளிக்க, சுகாதார சேவைகளை மேம்படுத்துதல், ஊட்டச்சத்து திட்டங்களை வழங்குதல் மற்றும் சுகாதார கல்வி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் அவசியம்.

வேலைவாய்ப்பின்மை மலையாளி பழங்குடியினர் எதிர்கொள்ளும் மற்றொரு முக்கியமான பிரச்சினையாகும். அவர்களுக்கு நிலையான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம், அவர்களின் பொருளாதார பாதுகாப்பை மேம்படுத்த முடியும். சுய வேலைவாய்ப்பு மற்றும் தொழில் முனைவோர் ஆகியவற்றை ஊக்குவிப்பதோடு,

திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புத் திட்டங்களை வழங்குவது அவசியம் (சர்வதேச தொழிலாளர் அமைப்பு, 2019).

நில உரிமைகள் மலையாளி பழங்குடியினரின் வாழ்வாதாரத்திற்கு இன்றியமையாதவை. அவர்களின் நில உரிமைகளை அங்கீகரிப்பதன் மூலமும், அவர்களின் நிலத்தையும் இயற்கை வளங்களையும் பாதுகாப்பதன் மூலமும், அவர்களின் பொருளாதார பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும். அதே நேரத்தில், அவர்களின் நிலத்தை சுரண்டுவதைத் தடுக்கவும், அவர்களின் கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாக்கவும் சட்ட மற்றும் கொள்கை கட்டமைப்புகளை உருவாக்குவது அவசியம் (ஐக்கிய நாடுகள் சபை, 2007).

மலையாளி பழங்குடியினரின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக அரசாங்கம், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். அவர்களின் தேவைகளையும் அபிலாஷைகளையும் பூர்த்தி செய்யும் திட்டங்கள் மற்றும் கொள்கைகளை உருவாக்குவதில் அவர்களின் பங்கேற்பு முக்கியமானது. அவர்களின் உரிமைகளை நிலைநாட்டவும், அவர்களின் குரல்களைக் கேட்கவும், அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தவும் நாம் அனைவரும் உறுதி பூண வேண்டும்.

கல்வி, சுகாதாரம் மற்றும் கலாச்சாரப் பிரச்சினைகள்: மலையாளி பழங்குடியினரின் எதிர்காலத்திற்கு ஒரு சவால்

கல்வி, சுகாதாரம் மற்றும் கலாச்சாரம் ஆகியவை ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கும், எதிர்காலத்திற்கும் முக்கியமான அம்சங்களாகும். இருப்பினும், மலையாளி பழங்குடியினர் இந்த மூன்று துறைகளிலும் பல சவால்களை எதிர்கொள்கின்றனர், இது அவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்குகிறது.

கல்வி

மலையாளி பழங்குடியினருக்கு போதுமான கல்வி வசதி இல்லாதது அவர்களின் எதிர்காலத்தை மிகப் பெரிய கேள்விக்குறியாக்குகிறது. இவர்கள் பள்ளிப் படிப்பை தொடர முடியாமல் போகவும், கைவிடவும் பல காரணங்களை முன்னிறுத்துகின்றனர். அதில் முக்கியமானது பொருளாதாரமே. போதுமான அளவு பொருளாதாரம் இல்லாத சூழலால் காட்டு வேலைக்கு மலையிலிருந்து இறங்கி பிற பகுதிகளில் கூலி வேலைக்குச் செல்கின்றனர் (பாரதி & ஜெயா, 2018).

அரசு எவ்வளவு முயற்சி எடுத்தாலும் காலை உணவு, மதிய உணவு, சீருடை என வழங்கினாலும் பழங்குடியினருக்கான பள்ளியில் இம்மாணவர்களுக்காக பெரும் முயற்சி எடுத்து அவர்களை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்ல யாரும்

முன்வருவதில்லை. பள்ளியில் போதிய வசதியின்மை, தண்ணீர், கழிப்பிடம் போன்ற வசதியின்மையால் பெண்பிள்ளைகள், அதுவும் பருவம் வந்த பெண் பிள்ளைகள் மிகவும் இன்னல்களுக்கு ஆளாகின்றனர். தங்களுடைய ஊரில் இருந்து பள்ளி பல கிலோமீட்டர் தொலைவில் இருப்பதாலும் போக்குவரத்து வசதி சரியாக இல்லாத காரணத்தினால் இவர்கள் கல்வி தடைபடுகின்றது. காலை, மாலை என இருவேளை மட்டும் பேருந்து இயக்கப்படுவதால் சில நேரங்களில் மாணவர்கள் பேருந்து தவறவிட்டால் நடந்தே பள்ளிக்கு வர வேண்டிய அவல நிலையும் நிலவுகிறது. அதனாலேயே பெரும்பாலும் பள்ளிப் படிப்பை பாதியிலேயே விடுகின்றனர். உடல் ரீதியாக பெரும் துன்பத்திற்கு ஆளாகின்றனர். தொடக்கப்பள்ளி முதல் உயர்நிலைப்பள்ளி வரை இத்தகைய நிலையே நீடிக்கின்றன. இவர்கள் பள்ளிக்கு செல்லவில்லையெனில் இடைநின்ற மாணவர்களை மீட்கவும், பள்ளியில் சேரவும் கல்வியை தொடரவும் யாரும் எந்த முயற்சியும் எடுப்பதில்லை. பள்ளியின் சார்பில் ஆசிரியர்களின் பங்கு இங்கு குறைவாகவே உள்ளன. இதனால் கல்வியில் ஓர் உயரிய நிலையை அடைய கல்லூரி மேற்படிப்பு என இவர்களை அடுத்த கட்டத்திற்கு போக முடியாமல் மீண்டும் மலையிலேயே தங்கள் வாழ்க்கையைத் தேடிச் செல்கின்ற துயரநிலை நிலவுகிறது (குமார் & ரவி, 2020).

சுகாதாரப் பிரச்சினைகள்

சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பது இவர்களின் வாழ்வியல் பிரச்சனைகளில் முதன்மை பெறுகிறது. ஊட்டச்சத்து குறைபாடு, மருத்துவ வசதியின்மை, தொற்றுநோய், மழை பாதிப்பு என பல பிரச்சனைகளை பருவ காலங்கள் தோறும் இவர்கள் எதிர்கொள்கின்றனர். மழைக்காலங்களில் மலேரியா, காய்ச்சல் போன்ற நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். மேலும், காட்டில் விஷப் பூச்சிகளின் தாக்குதலுக்கும் ஆட்படுகின்றனர். மகப்பேறு போன்ற காலங்களில் பெண்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். வயது முதிர்ந்த பெண்ணே பிரசவம் பார்க்கும் நிலையும் காணப்படுகிறது. போதிய மருத்துவ வசதியின்மையாலும் இவர்கள் உயிர்க்கு ஆபத்தாகும் நிலையும் உள்ளன. சரியான சாலை வசதி மற்றும் போக்குவரத்துகள் இல்லாததால் இத்தகைய நிலைமையே காணப்படுகிறது (செல்வம் & பாண்டி, 2019).

கலாச்சாரப் பிரச்சனை

கலாச்சாரம், மொழி, பண்பாடு ஆகியவை காலமாற்றத்தால் அழிவினை நோக்கி செல்வதாக கருதுகின்றனர். தங்களின் பாரம்பாரியத்தை பாதுகாக்கவும் அவற்றை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு சென்று மேம்படுத்தவும் அவசியமாகிறது. நவீன காலத்தில் அறிவியலின் அளப்பரிய வளர்ச்சியினால் இணையம், கைப்பேசி, சமூக ஊடகம் போன்றவை அவர்களின் வாழ்வில் பெரிய தாக்கத்தையும் மாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளன. இவற்றால் தங்களின் பழமையினை அழித்தும் மறந்தும் போய்விடுமோ என்று அச்சம் கொள்கின்றனர் (ராஜா & தேவி, 2021).

முடிவுரை

மலையாளி பழங்குடியினரின் கல்வி, சுகாதாரம் மற்றும் கலாச்சாரப் பிரச்சினைகளைத் தீர்க்க அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். கல்வி வசதிகளை மேம்படுத்துதல், சுகாதார சேவைகளை வழங்குதல் மற்றும் கலாச்சாரத்தை பாதுகாப்பதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும். மேலும், அவர்களின் தனித்துவத்தையும், உரிமைகளையும் மதித்து, அவர்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகை செய்ய வேண்டும்.

தொகுப்புரை (Conclusion)

பழங்குடி சமூகங்கள் தமக்கென ஒரு தனித்துவமான பண்பாட்டையும், ஆழமான சமய நம்பிக்கைகளையும், பாரம்பரிய சட்டதிட்டங்களையும் கொண்டு விளங்குகின்றன. அவர்கள் எதிர்கொள்ளும் நிலப்பறிப்பு, வறுமை, கல்வியறிவின்மை, போதிய மருத்துவ வசதியின்மை, பழங்குடி சான்றிதழ் பெறுவதில் உள்ள சிக்கல்கள் போன்ற பிரச்சனைகள் அவர்களின் ஒட்டுமொத்த வாழ்வாதாரத்தையும் கேள்விக்குறியாக்குகின்றன. அதே சமயம், இப்பிரச்சனைகளே அவர்களை ஒன்றிணைத்து, தங்களின் அடையாளத்தையும், கலாச்சாரத்தையும் பாதுகாப்பதற்கான உந்து சக்தியாகவும் அமைகின்றன. எனவே, இத்தகைய சவால்களைக் களைந்து, அவர்களை சமூகத்தின் பிரதான நீரோட்டத்தில் இணைப்பதோடு, அவர்களின் தனித்துவமான கலாச்சாரத்தையும், பாரம்பரிய அறிவையும் பாதுகாப்பது நமது கடமையாகும்.

பழங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், அவர்களின் உரிமைகளை நிலைநாட்டவும் அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இருப்பினும், இத்திட்டங்கள் முழுமையாக அவர்களை சென்றடைய தன்னார்வலர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் பங்களிப்பு இன்றியமையாதது. குறிப்பாக, பழங்குடி மக்களின் நில உரிமையை பாதுகாத்தல், அவர்களுக்கு தரமான கல்வி மற்றும் மருத்துவ வசதிகளை உறுதி செய்தல், அவர்களின் தயாரிப்புகளுக்கு சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தி தருதல் போன்ற நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்பட வேண்டும். மேலும், அவர்களின் கலாச்சாரத்தை மதித்து, அவர்களின் பாரம்பரிய அறிவை நவீன தொழில்நுட்பத்துடன் இணைத்து, நிலையான வளர்ச்சிக்கு பயன்படுத்த வேண்டும்.

மலைவாழ் மக்களின் வாழ்வை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், மலைப்பகுதிகளின் வளங்களை பாதுகாப்பதும் மிக முக்கியம். காடுகளை அழித்தல், சுரங்கப்பணிகள், அதிகப்படியான சுற்றுலா போன்ற நடவடிக்கைகளால் மலைப்பகுதிகளின் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது. இது பழங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த சமூகத்தின் நலனையும் பாதிக்கிறது.

எனவே, நிலையான சுற்றுலாவை ஊக்குவிப்பதோடு, காடுகளை பாதுகாப்பதற்கும், நீர்நிலைகளை பேணி காப்பதற்கும் அரசு மற்றும் தன்னார்வலர்கள் இணைந்து செயல்பட வேண்டும். இதன் மூலம், மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதோடு, இயற்கை வளங்களையும் பாதுகாத்து, எதிர்கால சந்ததிகளுக்கு ஒரு வளமான பூமியை விட்டுச் செல்ல முடியும்.

முடிவாக, பழங்குடி மக்களின் பிரச்சனைகளை புரிந்து கொண்டு, அவர்களுக்கு ஆதரவு கரம் நீட்டுவது ஒவ்வொருவரின் சமூகப் பொறுப்பாகும். அரசு, தன்னார்வலர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்றிணைந்து செயல்பட்டால், பழங்குடி மக்களின் வாழ்வை மேம்படுத்த முடியும். அதே நேரத்தில், அவர்களின் தனித்துவமான கலாச்சாரத்தையும், பாரம்பரிய அறிவையும் பாதுகாத்து, ஒரு சிறந்த சமூகத்தை உருவாக்க முடியும்.

மேற்கோள்கள்

- சாமி, பி., & ராமன், ஆர். (2015). பழங்குடி மக்களின் சமூகப் பொருளாதார மேம்பாடு: சவால்களும் வாய்ப்புகளும். இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சி இதழ், 24(2), 145-162.
- தேசிய கல்விக் கொள்கை. (2020). மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு.
- யுனெஸ்கோ. (2010). கல்வி: மாற்றத்திற்கான சக்தி. யுனெஸ்கோ உலக அறிக்கை.
- ஐக்கிய நாடுகள் சபை. (2007). பழங்குடி மக்களின் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் பிரகடனம்.
- உலக சுகாதார அமைப்பு. (2018). உலக சுகாதார அறிக்கை.
- சர்வதேச தொழிலாளர் அமைப்பு. (2019). வேலைவாய்ப்பு மற்றும் சமூக கண்ணோட்டம்: உலக போக்குகள்.
- பாரதி, S., & ஜெயா, M. (2018). *பழங்குடியினரின் கல்வி நிலை*. சென்னை: அடையாளம் பதிப்பகம்.
- குமார், P., & ரவி, K. (2020). *மலைவாழ் மக்களின் வாழ்வியல் சவால்கள்*. மதுரை: மீனாட்சி பதிப்பகம்.
- செல்வம், R., & பாண்டி, L. (2019). *பழங்குடியினர் சுகாதாரம்: ஒரு ஆய்வு*. கோவை: பாரதி பதிப்பகம்.
- ராஜா, V., & தேவி, S. (2021). *பண்பாட்டு மாற்றங்கள் மற்றும் பழங்குடியினர்*. திருநெல்வேலி: ஷண்முகா பதிப்பகம்.

பார்வை நூல்கள்

1. பக்தவசல பாரதி. (2019). *தமிழர் மானிடவியல்*. அடையாளம் பதிப்பகம்.
2. பக்தவசல பாரதி. (2019). *பண்பாட்டு மானிடவியல்*. அடையாளம் பதிப்பகம்.
3. பக்தவசல பாரதி. (2017). *தமிழக பழங்குடிகள்*. அடையாளம் பதிப்பகம்.
4. மகேசுவரன், சி. (2024). *தமிழ்நாட்டுப் பழங்குடிக் குழுக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

5. லெட்சுமி. (2020). *ஜவ்வாது மலைவாழ் மலையாளிப் பழங்குடியின மக்களின் வாழ்வும் மொழியும்*. மதன்மோனிகா பதிப்பகம்.

Reference Books

1. Bhaktavasala Bharathi. (2019). Tamil Anthropology. Identity Publishing House.
2. Bhaktavasala Bharathi. (2019). Cultural Anthropology. Identity Publishing House.
3. Bhaktavasala Bharathi. (2017). Tamil Nadu Tribes. Identity Publishing House.
4. Maheswaran, C. (2024). Problems faced by tribal groups in Tamil Nadu. New Century Book House.
5. Letsumi. (2020). Life and language of the Javathu hill tribe Malayali people. Madanmonica Publishing House.

License
Copyright (c) 2025 Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்வு இதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journals
eISSN *3049-0723*
Journal Vol 1, Issue 09, May 2025
https://doi.org/10.63300/

ஜி. நாகராஜன் சிறுகதைகளில் உணர்வுகளால் சிறக்கும் கதைகள் – ஓர் ஆய்வு

Analysis of story of impression of G .Nagarajan's Short stories

திருமதி. சு. லாவண்யா[1], முனைவர் இரெ. இளங்கோவன்[2]

[1].முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, டாக்டர். எஸ்.என்.எஸ்.இராஜலட்சுமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, (தன்னாட்சி) கோயம்புத்தூர்.

Email: lavanyaguruvayurappan2010@gmail.com

[2].ஆய்வு நெறியாளர், உதவிப் பேராசிரியர்,தமிழ்த்துறை, டாக்டர். எஸ்.என்.எஸ்.இராஜலட்சுமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, (தன்னாட்சி) கோயம்புத்தூர்..

Mrs. S. Lavanya[1], Dr. R. Ilangovan[2]

[1]Ph.D. Research Scholar, Department of Tamil, Dr. SNS Rajalakshmi College of Arts and Science, (Autonomous) Coimbatore. Email: lavanyaguruvayurappan2010@gmail.com

[2]Dr. R. Ilangovan Research Supervisor, Assistant Professor, Department of Tamil, Dr. SNS Rajalakshmi College of Arts and Science, (Autonomous) Coimbatore.

Abstract:
The emergence of fiction in Tamil literary history significantly expanded the readership of literature. Among the two major divisions of fiction, short stories played a crucial role in transforming the literary landscape. The length, style, narrative techniques, and adaptability of short stories to the fast-paced modern world have contributed to keeping this literary form vibrant. G. Nagarajan is a distinctive writer in modern Tamil literature. From the late 1950s to the 1970s, he wrote novels and short stories. His uniqueness lies in portraying the lives of marginalized individuals—those often overlooked or ignored by society—through his narratives. His works stand out for capturing the essence of these lives in a realistic manner. The purpose of this article is to analyse the stories of impression based on Robert Louis Stephensen's classification among the 36 short stories of G. Nagarajan.

Keywords: Prose, fiction, marginalised individuals, style of short story.

ஆய்வுச்சுருக்கம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் புனைகதைகளின் தோற்றம் இலக்கிய வாசகர்களின் பரப்பை பெருமளவில் விரிவுபடுத்தியது. புனைகதைகளின் இரு முக்கிய பிரிவுகளில் ஒன்றான சிறுகதைகள் இலக்கியத் தளத்தை வேறொரு களத்திற்கு இட்டுச்சென்றது உண்மை. சிறுகதைகளின் அளவு, நடை, கையாளப்படும் உத்திகள், அவசர உலகிற்கும் வளைந்து கொடுக்கும் அமைப்பு போன்ற தன்மைகளே சிறுகதை இலக்கியத்தினை இன்னும் உயிர்ப்புடன் வைத்திருக்க காரணங்களாகும். நவீன தமிழ் இலக்கியப் படைப்பாளிகளில் தனித்துவம் வாய்ந்த ஓர் எழுத்தாளர் ஜி நாகராஜன் ஆவார். இவர் 1950-

களின் பின்பாதியில் இருந்து 1970-கள் வரை நாவல்களும் சிறுகதைகளும் எழுதிவந்தவர். அதுவரை யாரும் திரும்பிப் பார்க்காத, கவனிக்கத் தவறிய விளிம்பு நிலை மாந்தர்களை தம் கதைகளின் கருப்பொருளாக்கி அவரது வாழ்வியலை படம் பிடித்துக் காட்டுவது இவரது படைப்பின் தனிச்சிறப்பு. இவரது 36 சிறுகதைகள் புனைவு இலக்கிய ஆய்வாளர் இராபர்ட் லூயிஸ் ஸ்டீபன்சன் அவர்களின் வகைப்பாட்டின் படி பிரித்து அறியப்பட்டுள்ளது. அவற்றுள் பாத்திரத்தின் உணர்வுகளால் சிறக்கும் சிறுகதைகளை ஆய்வதே இதன் நோக்கமாகும்.

முன்னுரை:

இலக்கியம் என்பது மனித சமூகத்தின் பிரதிபலிப்பாகவும் மக்கள், அவர்தம் பண்பாடு, வாழ்வியல் போன்றவற்றை காட்டும் கண்ணாடியாகவும் காலந்தோறும் நிற்பவை ஆகும். இலக்கியத்தை நுகருங்கால் உவகையளிப்பது அல்லது உணர்ச்சிவயப்படுவது இயல்பாகையால் இலக்கியம் நுண்கலைகளுள் ஒன்றாக கருதப்படுகிறது. இவற்றுள் படைப்பிலக்கியம் என்பது அவற்றுள் ஒரு முக்கிய வகையாகும்.

படைப்பிலக்கியம் பற்றி விளக்க முற்படின் திரு கி. சிவக்குமார் அவர்களின் விளக்கம் தெளிவு கொடுக்கிறது. ***'சங்க இலக்கியம் முதலான இலக்கிய வகைகளிலிருந்து வேறுபட்டு அமைவது படைப்பிலக்கியம். பிற இலக்கியங்கள் கற்று நுகர்ந்தும், நின்றும் (கடைபிடித்தும்) பயன் துய்க்கத் தக்கவை. படைப்பிலக்கியம் அப்பயன்களோடு மேலும் ஒரு பயனையும் தரவல்லது. இது போலவும், இதனின் சிறப்பாகவும் படிப்போரில் திறனுடையோரைப் படைக்கத் தூண்டுவது'***[1] என்று அழகாக விளக்குகிறார்.

படைப்பிலக்கியங்கள் அனைத்தும் இயல், இசை, நாடகம் என்ற முப்பெரும் பிரிவுகளுக்குள் அடங்கி விடுபவை. அவற்றுள் கவிதை என்பது பாவடிவம் கொண்டது. நாடகம் என்பது தனித்ததொரு இலக்கிய பிரிவு என்று கொள்வோமாயின் இயல் என்னும் உரைநடை வடிவம் கொண்ட படைப்பிலக்கியத்தினையே நாம் 'புனைவு அல்லது புனைகதைகள்' என்கிறோம்.

'புனைகதை அல்லது புனைவு என்பது, உண்மை அல்லாத கதைகளைக் குறிக்கும். அதாவது புனைகதைகள் கற்பனையாக உருவாக்கப்படுபவை. எனினும் புனைகதைகள் முழுமையாகவே கற்பனையாகவே இருக்க வேண்டும் என்பதில்லை. புனைகதைகளில் உண்மையான மனிதர்கள், இடங்கள், நிகழ்வுகள் என்பவையும் இடம் பெறுவதுண்டு.'[2]

புனைகதை என்னும் பெரும் பிரிவில் ஒன்றாகக் கருதப்படுவது சிறுகதையாகும். சிறுகதை என்பது உரைநடை வடிவில் அமைந்த ஒரு புனைவு இலக்கியம். இதைப் பற்றிய அறிஞர்களின் விளக்கத்தை காணலாம்.

நாவல் சிறுகதை இவ்விரண்டும் புனைகதைகளின் (fiction) இரு வேறு வடிவமே ஆகும்[3]

சுருக்கமும் செறிவும் சிறுகதையின் முக்கியப் பண்புகள் என்று ஜேம்ஸ் கூப்பர் லாரன்ஸ்க் கூறுகிறார்.

மனித உணர்ச்சிகளில் ஏதாவது ஒன்றைத் தொட்டு உலுக்குவதுதான் சிறுகதை என்று விந்தன் அதன் இலக்கணம் கூறுகிறார்.

பழங்காலத்தில் தன்னுணர்ச்சிப் பாடல்கள் பெற்றிருந்த இடத்தைத் தற்காலத்தில் சிறுகதை என்ற இலக்கிய வகை பெற்றுள்ளது என்று கூறியுள்ளார் மு.வ.

சிறுகதைகளின் வகைப்பாடு

சிறுகதைகளின் தோற்றக்காலத்தைப் பொறுத்து அவற்றை பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

1. **முதல் கால கட்டம் (1900- 1920)**
2. **இரண்டாம் கால கட்டம் (1926-1945)**
3. **மூன்றாம் கால கட்டம் (1946- 1970)**
4. **நான்காம் கால கட்டம் (1970- இன்று வரை)**

சிறுகதையின் அமைப்பு

சிறுகதையின் அமைப்பை ஆராயும் கால், பி . எஸ். இராமையாவின் விளக்கம் தெளிவு தருகிறது. '***சிறுகதைகள் அனைத்தும் தொடக்கம், உச்சகட்டம், முடிவு என்ற ஒரே அமைப்பைக் கொண்டிருந்தாலும் தங்களுக்குள் நுட்பமான வேறுபாட்டினைக் கொண்டிருக்கும்.***' என்கிறார் இவர். ஆகவே, சிறுகதைகளைப் பொறுத்த வரை,அதன் தலைப்பு, தொடக்கம் மற்றும் முடிவு ஆகியவை முக்கியத்துவம் வாய்ந்தவையாக கருதப்படுகின்றன.

அது மட்டுமல்லாது காலந்தோறும் உதிக்கும் ஆயிரக்கணக்கான சிறுகதைகளில் ஒரு படைப்பாளியை மற்றொரு படைப்பாளியிடமிருந்து தனித்து காட்டுபவை அவர்கள் கையாளும் படைப்பாக்க உத்திகளே. அந்த வகையில் ஒரு சிறுகதை சிறப்பாக அமைய மொழி நடை, நோக்கு நிலை மற்றும் பாத்திரப் படைப்பு போன்றவை முக்கிய பங்கு பெறுகின்றன.

சிறுகதைகளின் வகைப்பாடு

'புகழ் பெற்ற ஐரோப்பிய நாவல் ஆசிரியர் ராபர்ட் லூயிஸ் ஸ்டீபன்சன் சிறுகதைகளை 3 பிரிவுகளாக வகைப்படுத்துகிறார்.

1) கருவால் வந்த கதை (The story of plot)

2) கதாப்பாத்திரத்தால் உருவான கதை (The story of character)

3) பாத்திரங்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் கதை (The story of impression)

இவற்றோடு நிகழ்ச்சிகளால் சிறக்கும் கதை என்ற வகைப்பாட்டினையும் சேர்த்துக் கொள்ளலாம்'[4] என்கிறார் முனைவர் சி. பிரேமா அவர்கள்.

1. **கருவால் வந்த கதை (The Story of plot)**

   சின்னஞ்சிறு கதைக்குள் மிக சுவாரஸ்யமான கதைக்கருவினை கொண்டு கதை சொல்வது இவ்வகையாகும். இவ்வகையில் கதையின் முடிச்சோ அல்லது அது அவிழ்க்கப்படும் முடிவோ சுவாரஸ்யம் தரும் அம்சமாக இருக்கும்.

2. **கதாப்பாத்திரத்தால் உருவான கதை (The story of Character)**

   படைப்பாளிகள் தான் படைத்த கதாபாத்திரத்தையே வேரெனக் கருதி அவர்களை புனைவதையே கதை புனைவதாகக் கொள்ளும் வகையே பாத்திரக்கதைகளாகும்.

3. **பாத்திரங்களின் உணர்வுகளை வெளிப்படும் கதை (The Story of impression)**

   காதல், பசி, வறுமை, சோகம், துக்க, விரக தாபம், நகைச்சுவை என்ற உணர்ச்சிகளை மையமாக கொண்டு படைக்கப்படும் கதைகள் இவ்வகையைச் சார்ந்தவை. இவ்வகை கதைகளில் படைப்பாளிகள் தன் எழுத்தின் மூலம் அவ்வுணர்ச்சிகளை வாசகர்களுக்கும் ஏற்படுத்துவதில் அவர்களது எழுத்தின் வெற்றி அமைகிறது. இவ்வாறு மனித உணர்வுகளை முக்கியப்படுத்தி சிறுகதைகள் அமைத்த முக்கிய படைப்பாளிகள் தமிழ் சிறுகதை வரலாற்றில் காலம் தோறும் உள்ளனர்.

4. **நிகழ்ச்சிகளால் சிறக்கும் கதை (The story of incidents)**

   ஆழமான கருவோ, மனதில் நிற்கும் பாத்திரங்களோ இல்லாத போதும் சில சிறுகதைகள் குறிப்பிட்ட சில சம்பவங்களை நம் கண் முன்னே நிறுத்தும் வகையில் அமைந்திருக்கும். அவையே நிகழ்ச்சிக் கதைகள் எனலாம். இவை நிகழ்ச்சியினை விவரணப்படுத்தும் நோக்கில் பல காலம் சார்ந்த, பண்பாடு கலாச்சாரம் சார்ந்த, நினைவுகள் சார்ந்த உணர்வுகளை சொல்லிச் செல்லும்.

சிறுகதைகள், தமிழிலக்கியத்தில் மிளிரத் தொடங்கிய காலந்தொட்டு இன்று வரை இவ்விலக்கியத்தை வாசகர்களிடையே உயிர்ப்புடன் நிலைத்திருக்கச் செய்தவர்கள் பல்வேறு சிறுகதை ஆசிரியர்கள் ஆவர். அவர்களுள் ஜி. நாகராஜன் அவர்கள் நான்காம கால கட்டத்தைச் சேர்ந்த சிறுகதை ஆசிரியர் ஆவார்.

ஜி நாகராஜன் பற்றிய அறிமுகம்

ஜி. நாகராஜன் (1, செப்டம்பர் 1929 – 19, பிப்ரவரி 1981), தமிழ்நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர் ஆவார். பொதுவாக இலக்கியத்தால் கவனிக்கப்படாத விளிம்புநிலை மனிதர்களை தன் கதையின் முக்கிய கதாப்பாத்திரங்களாக்கி தன் படைப்புகளில் உலவ விட்டார்.

தமிழ் இலக்கிய உலகம் இவரைப் பற்றிய அறிமுகக் குறிப்பை பின்வருமாறு தருகிறது. ***நவீனத்துவம் தமிழுக்கு உருவாக்கியளித்த முக்கியமான கலைஞர். பாலியல் தொழிலாளர்கள், குற்றவாளிகள் ஆகியோரின் அடித்தள உலகை சித்தரிப்பவை இவருடைய எழுத்துக்கள். மனிதாபிமான நோக்கோ, விமர்சனப்பார்வையோ இல்லாமல் அங்கதப்பார்வையுடன் அவ்வுலகை உருவாக்கிக் காட்டுபவை. கட்டற்ற வாழ்க்கைமுறை கொண்டவர் என்பதனாலும் ஒரு தீவிரமான ஆளுமைப்பிம்பம் இவருக்கு உள்ளது***[5]

ஜி. என். அவரகளின் முதல் சிறுகதை `அணுயுகம்’ ஜூன் 8, 1957 அன்று `ஜனசக்தி' வார மலரில் வெளியானது. ஜனசக்தி', `சாந்தி', `சரஸ்வதி' போன்ற இடதுசாரி இதழ்களில் ஜி.நாகராஜன் தொடர்ந்து எழுதினார். ஜி நாகராஜன் தனது இலக்கிய வாழ்வில் 2 நாவல்கள், 36 சிறுகதைகள் (4 நிமிஷக் கதைகள் உட்பட), 3 கவிதைகள், உரைநடைப் பகுதியில் கட்டுரைகள், வாசகர் கடிதங்கள், வாசக அனுபவக் கட்டுரைகள், கடிதங்கள் ஆகியவற்றை எழுதியுள்ளார். இவரது மொத்த படைப்புகளையும் சேர்த்து ***‘ஜி நாகராஜன் படைப்பாக்கங்கள்’*** என்ற நூலினை 2023-இல் காலச்சுவடு பதிப்பகம் வெள்யிட்டது. இதன் தொகுப்பாசிரியர் ராஜமார்த்தாண்டன் ஆவர்.

ஜி. நாகராஜன் சிறுகதைகளின் பொருண்மைச் சுருக்கம்

ஜி நாகராஜனின் 36 சிறுகதைகளும் *ராபர்ட் லூயிஸ் ஸ்டீபன்சன்* வகைப்பாட்டின் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தப் பட்டுள்ளது. இவ்வகைப்பாடானது ஆய்வுக் கூறுகளை ஆராய்வதை எளிமையாக்கும்.

கருவால் வந்த கதை	**கதாப்பாத்திரத்தால் உருவான கதை**	**பாத்திர உணர்வுகளை வெளிப்படுத்தும் கதை**	**நிகழ்ச்சிகளால் சிறக்கும் கதை**
1) வெகுமதி 2) அணுயுகம் 3) போலீஸ் உதவி 4) பூர்வாசிரமம்	1)கல்லூரி முதல்வர் மிஸ்.நிர்மலா 2)மிஸ். பாக்கியம்	1)அக்கினிப் பிரவேசம் 2)அங்கும் இங்கும் 3) தீராக்குறை 4) சுழற்சி	1)பச்சக்குதிரை 2) சம்பாத்தியம் 3) எங்கள் ஊர் 4)போலியும் அசலும்

5) வாழ்வும் எழுத்தும் 6) மயக்கம் 7) யாரோ முட்டாள் சொன்ன கதை 8) ஜுரம் 9) பூவும் சந்தனமும் 10) மனச்சிறை	3) நடிகன் 4)அப்படி ஒரு காலம்! அப்படி ஒரு பிறவி! 5)நான் புரிந்த நற்செயல்கள் 6)இளிந்த சாதி 7) ஆண்மை 8)நிலவொளி யிலெ	5) ஆண்டுகள் 6) இருளிலே 7) கயிற்று நுனி 8)துக்க விசாரணை 9) மனச்சிறை 10)ஓடிய கால்கள் 11)டெர்லின் ஷர்ட்டும் எட்டு முழ வேட்டியும் அணிந்த மனிதர் 12)கிழவனின் வருகை 13)இலட்சியம்	5) மனிதன் 6)நிமிஷக் கதைகள்

மேற்கண்ட வகைப்பாட்டினை நோக்கும் போது, ஜி. நாகராஜனின் சிறுகதைகள் பெரும்பாலும் மனித உணர்வுகளையே மையமாக வைத்து எழுதப்பட்டுள்ளதாக தெரிகிறது. காதல், பசி, வறுமை, சோகம், துக்க, விரக தாபம், நகைச்சுவை என்ற உணர்ச்சிகளை மையமாக கொண்டு ஜி நாகராஜன் எழுதிய சிறுகதைகளைப் பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

1. அக்கினிப் பிரவேசம் (சாந்தி, மார்ச் 1967)

’மெரினா ஸ்டோர்’ என்ற குடியுருப்பு வீடுகளில் இருக்கும் பலதரப்பட்ட மக்களை வேடிக்கை பார்த்துக் கொண்டே செல்லும் ஒரு கதை சொல்லி ஒவ்வொரு வீடுகளையும் எட்டிப் பார்த்தபடி செல்கிறார். அதில் ஒரு வீட்டில் வசிக்கும் தாய் - மகள் சம்பாஷணைகளை கூறுகிறது இக்கதை. ஒண்டுக்குடித்தனத்தில் இருக்கும் ஏழை விதவைத் தாய் மகளிடம் அவளின் தகாத உறவு பற்றி பேசுகிறாள். அவள் வயிற்றில் உண்டாகி இருக்கும் கருவைப் பற்றி கவலைப்பட்டு இனி என்ன செய்வது என்று இருவரும் விவாதிப்பதாக கதை அமைகிறது.

தன் மனமும் உடலும் அறியாமல் ஓர் ஏழைப் பெண் தான் கர்ப்பமாகி இருப்பதாக அம்மாவிடம் தயங்கித் தயங்கிச் சொல்கிறாள். பதறிய படியே தாய் ஏதேதோ முணகுகிறாள். தன் மகளுக்கு தலை முழுகி அவள் அழுக்கைப் போக்க முயல்கிறாள். ஆனால் மனதில் பட்ட அழுக்கை எப்படித் துடைப்பது என்று குழம்புகிறாள் அப்பெண்.

இப்பிரச்சனைக்கு அந்த ஆணே காரணம் என்று ஒரு சராசரி தாய் புலம்பும் போது பெண்ணும் தான் காரணம் என்ற உணர்வை வெளிப்படுத்தும் வகையில் அப்பெண் தன் தாயிடம், ***இப்ப அவனெத் திட்டி என்னம்மா பண்றது? கார்ல ஏறியிருக்க்க்க் கூடாது. அப்ப்டை ஏறினபெறவும் அவன் தப்பா நடந்துகிறான்னு தெரிஞ்சதும் ஓடற கார்லேந்து குதிச்சாவது செத்து மடிஞ்சிருக்கணும் ஏம்மா, நான் மனசால் தப்புப்***

பண்ணலைனியே, அது எப்படிம்மா உண்மையாகும்? மனசு திடமா இருந்திருந்தா இப்படி நடந்திருக்குமா?[6] என்று கூறுகிறாள்.

ஒரு பெண்ணின் கற்பு கேள்விக் குறியாகும் வேளையில் பெண்கள் அனைவரும் அதற்கு காரணமான ஆணைச் சாடுவதையே பொதுவாக இச்சமூகம் கண்டிருக்கும். கதைகளும் அவற்றையே வெளிப்படுத்தும். ஆனால் இக்கதையில் பாதிக்கப்பட்ட பெண், தானும் இந்நிலைக்கு ஒரு காரணம் என்ற உணர்வை வெளிப்படுத்துகிறாள். தன் மனது திடமாக இருந்திருந்தால் உடலை நான் காப்பாற்றி இருப்பேன் என்று நினைக்கிறாள். ஆகவே மனக் கட்டுப்பாட்டை இழந்த தானும் இத்தவறுக்கு ஒரு காரணம் என்று ஒத்துக் கொள்வது பெண்ணின் நடுநிலையையும் அவளைப் பற்றிய ஆழ்ந்த புரிதலையும் விளக்குகிறது.

2. அங்கும் இங்கும் (சரஸ்வதி, ஏப்ரல் 1959)

அடுத்தடுத்த வீடுகளில் வசிக்கும் இரு வேறு தம்பதிகளின் வாழ்க்கையை ஒருவர் கண்ணோட்டத்தில் இருந்து பார்க்கும் கதை. பார்த்தசாரதி- கமலம் தம்பதியினரில் பார்த்த சாரதி படித்த அறிவார்ந்த ஒரு கல்லூரிப் பேராசிரியர். புத்தகப் புழு. அவரது மனைவி கமலம் அழகும் வனப்பும் கொண்டவள். தன் கணவனுடன் ஆசையாய், காதலாய் தாம்பத்யம் கொள்ள முடியவில்லையே என்ற கவலையில் ஆழ்கிறாள். அடுத்த வீட்டில் இருக்கும் 50 வயதைக் கடந்த வீராச்சாமி- வேலாயி தம்பதியினரின் அந்நியோந்ய காதல் வாழ்க்கை கமலத்தை கவலை அடையச் செய்கிறது.

இரவில் வீராச்சாமியும் வேலாயியும் பேசும் சம்பாஷனைகள் கமலம் காதில் விழுவதுண்டு. அப்படி ஒரு நாள் கவனிக்கையில் வனப்பும் அழகும் இல்லாத இடத்தும் காதல் துளிர்க்கும். அது பசுமையாக நிலைத்தும் நிற்கும் என்று அவளுக்கு விளங்கியது. ***இதை, 'வீராசாமியின் உருவமும் வேலாயியின் உருவமும் அவளது கண்கள் முன்பு பளிச்சென்று வந்து நின்றன. பாவம், சருகு போல் காய்ந்து போன உடலும், சவம் போல உணர்ச்சியற்ற முகமும் கொண்ட வேலாயியிடத்து அவளால் அனுதாபப்படாமல் இருக்க முடியவில்லை. அனுதாபம் மட்டுமில்லை. பொறாமையும் கூட. அவனுக்கு என்ன அவள் மீது அப்படி பாசம். அவளுக்குப் புரியவில்லை. ஆனால் வேலாயியின் கண்களில் ஏக்கம் இல்லை; அது மட்டும் கமலத்துக்குப் புரிந்தது.***[7] என்ற வரிகளில் விளக்குகிறார் ஜி. நாகராஜன்.

வெகு சுமாரான உடல் வனப்பு கொண்ட வேலாயி மீது தீராக் காதல் கொள்ளும் வீராச்சாமி அங்கு, அலங்கரிக்கப்பட்ட பதுமையாய் இருக்கும் கமலம் இங்கு. அறிவும் புகழும் சில சமயங்களில் காதலை மழுங்கச் செய்து விடுவது துரதிஷ்டமானது தான் என்பது எப்படி உண்மையோ ஆழமான காதலுக்கு வனப்பும் வயதும் ஒரு பொருட்டில்லை என்ற உண்மையையும் இக்கதை விளங்க வைக்கிறது. கமலத்தின் மனதில் மறைந்து கிடக்கும் காதல் பற்றிய புரிதலை வெளிப்படுத்தும் விதமாக 'அங்கும் இங்கும்' என்ற இச்சிறுகதை அமைந்துள்ளது.

3. தீராக்குறை (சரஸ்வதி)

சோமுப் பிள்ளை மரணப்படுக்கையில் கிடக்கிறார். அவரது 4 மகன்கள், 3 மகள்கள் அவரது இறுதி நாட்கள் நெருங்கி விட்டதை அறிந்து அங்கும் இங்குமாய் சிதறி இருந்தவர்கள் சோமுப் பிள்ளையின் வீட்டில் முற்றுகையிடுகின்றனர். அவரவர் தம் அன்றாட வாழ்க்கையின் மீதான அதிருப்தியையும் அது அமைய தெரிந்தோ, தெரியாமலே அப்பா தான் காரணம் என்ற தொணியில் பேசுகின்றனர். சிறியதாகவோ, பெரியதாகவோ தன் சக்தியை மீறி எல்லாரையும் கரையேற்றி விட்டோம். மீதம் இருப்பவரையும் கரையேற்றி விட அவசரத்தில் ஓடிக் கொண்டிருந்த சோமுப் பிள்ளை திடீரென படுக்கையில் விழுந்த பின்புதான் தன் இன்ப துன்பங்களில் எல்லாம் இடைவிடாமல் பயணித்த தன் மனைவி பங்கஜத்தைப் பற்றிய கவலை அவரை ஆட்கொள்ளத் தொடங்குகிறது. இந்த சுயநலம் பிடித்த நன்றியுணர்வு இல்லாத பிள்ளைகளின் பிடியில் எப்படி தன் வாழ்நாளை அவள் கழிப்பாளோ என்ற ’தீராக்குறையுடனேயே’ சோமுப் பிள்ளை மூர்ச்சை அடைகிறார். தான் இது நாள் வரை தனக்காகவும் தன் பிள்ளைகளுக்காகவுமே மொத்த வாழ்க்கையையும் கரைத்த மனைவியின் மகத்துவத்தை உணரத் தவறி விட்டோமே என்ற சோமுப்பிள்ளையின் குற்ற உணர்வை இவ்வாறு விளக்குறார் ஜி. நாகராஜன். ***”மகாலெஷ்மி மாதிரி என் வீட்டுக்கு வந்தே…. நீ வலாட்டி நான் இவ்வளவு காலம் இருந்திருக்கவே மாட்டேன்.. எல்லாம் கனவு போல போயிருச்சு… ஒனக்கு நான் ஒண்ணுமே செய்யலே… இன்னிக்கு நிலாதரவா நிறுத்திட்டு…”***[8] என்று கூறிக்கொண்டே மூர்ச்சையாகிறார். சோமுப்பிள்ளை.

4. சுழற்சி (சரஸ்வதி, செப்டம்பர் 1959)

பாயி திருவிழா காலங்களில் ராட்டினம் சுற்றி பிழைப்பவன். ராட்டினம் சுற்றி சுற்றி வரும் போது அவனுக்கு பலவிதமான நினைவோட்டங்கள் வந்து போகும். தினமும் கிடைக்கும் சொற்ப காசை எடுத்துக் கொண்டு விலை மாதுவிடம் செல்லும் வழக்கம் உள்ளவன். ஆனால் அங்கு சென்று வந்த பிறகு வெட்கமும் அதிருப்தியும், அவமானமும் அவனைப் பிடுங்கி தின்னும். ஆனாலும் அவன் எதிர்பார்க்கும் காதல் தீண்டல் இன்னும் கிடைக்கப் பெறவில்லை என்பதால் மீண்டும் மீண்டும் அங்கு சென்று கொண்டேதான் இருக்கிறான். மாயிவின் இந்த மன நிலையை அவன் தினமும் சந்திக்கும் சுப்பன் என்ற கதாபாத்திரத்தோடே ஆசிரியர் ஒப்பிடுகிறார். சுப்பன் தினமும் அந்த ராட்டினத்தில் ஏறி சுற்றுகிறான். ஒவ்வொரு முறை சுற்றி இறங்கும் போதும் அவனுக்கு தலைசுற்றி குமட்டலும் வாந்தியும் வருகிறது. ஆனாலும் மற்றவருக்கெல்லாம் கேளிக்கை தரும் இந்த ராட்டினம் நம்மை மட்டும் ஏன் வதைக்கிறது? என்றாவது மற்றவரைப் போல் ராட்டினம் தரும் இன்பத்தை அனுபவித்து விட வேண்டும் என்ற எண்ணத்தில் மீண்டும் மீண்டும் ராட்டினம் ஏறுகிறான். இராட்டினத்தில் அவனை வைத்துச் சுற்றும் பாயி கூட அப்படித்தான் தான் ஒரு நேரத்தில் கீழாக நினைக்கும், அவமதிக்கும் செயலை மறு நேரத்தில் மீண்டும் செய்ய விழைகிறான். இதை இக்கதையின் கடைசி வரிகள்

விளக்குகின்றன. ***'கால்கள் 'தெரு'வை நோக்கி விரைந்தன. மனமும் குழம்பிக் குழம்பிப் பின் தொடர்ந்தது. அதிருப்தியும், வெட்கமும், மனக் கிலேசமும் நிரம்பத்தான் திரும்பி வருவான். இருந்தாலும் அவனும் சுப்பனைப் போல் ராட்டினத்தில் ஏறிச் சுற்றத்தான் வேண்டும்'*[9]** என்பவை அவ்வரிகள்.

வெறுப்பும் சந்தோஷமும்; பிடித்ததும் பிடிக்காததும் ராட்டினம் போல் மேலும் கீழும் வரத்தான் செய்யும். இருந்தாலும் எல்லாரும் வாழ்க்கை என்னும் ராட்டினத்தில் ஏதோ ஒன்றை எதிர்பார்த்து ஏறிப் பயணித்துக் கொண்டே தான் இருக்கிறார்கள் என்ற அஞ்ஞானத் தத்துவத்தை ஓர் எளியவன் வழி நின்று எடுத்துக் காட்டுகிறார் ஜி. நாகராஜன்.

5. இலட்சியம் (கணையாழி, அக்டோபர் 1974)

படைப்பாளியே கதை சொல்லியாக அமைந்த கதை. கதை சொல்லி ஓர் ஊர் திருவிழாவினை காண்கிறான். திருவிழாவின் உள்ளார்ந்த நுட்பங்களை அணு அணுவாக அனுபவிக்கிறான். ஒரு பெரும் திருவிழாவிற்கான விவரணைகள மிக அற்புதமாக அமைந்துள்ளன. திருவிழாவில் எல்லாரும் பார்ப்பதை தானும் பார்க்க, எல்லாரும் தேடுவதை தானும் தேட, எல்லாரும் எதிர்பார்ப்பதை தானும் எதிர்பார்க்கத் தலைபடுகிறான் கதைசொல்லி. தம் மனம் சொன்ன வாறே செய்யவும் முயல்கிறான். ஆனால் அவன் உள்மனது திருவிழாவின் அடிப்படையை அதன் காரண காரியத்தைப் புரிந்து கொள்ள முயற்சிக்கிறது. ஆனால் சிரமத்துடன் தோற்றுப் போகிறது. பின்பு கூட்டம் செல்லும் திசையிலேயே கேள்விகளின்றி தானும் பயணிக்க முடிவு செய்து பயணத்தைத் தொடர்கிறான்.

***'ஓடினேன். என்னோடு ஓடி வந்த பலரை இப்போது என்னைச் சுற்றிக் காண முடியவில்லை. அவர்கள் எல்லோரும் எங்கே? புதுப்புது முகங்கள் என்னைக் கடந்து ஓடின. 'வேடிக்கையான ஓட்டம்! ஆளுக்கொரு அவசரம், ஆளுக்கொரு வேகம் என நினைத்துக் கொண்டேன்.'*[10]** என்ற வரிகள் அவனது உள்மன உணர்வுகளை விளக்குறது. இக்கதை வெளிப்பார்வைக்கு ஒன்றைச் சொல்வதாயினும் மிக ஆழமான உளவியல் கருத்தைச் சொல்ல வந்ததாகவே தெரிகிறது.

6. டெர்லின் ஷர்ட்டும் எட்டு முழ வேட்டியும் அணிந்த மனிதர். (கண்ணதாசன், நவம்பர் 1973)

தேவயானை என்ற பாலியல் தொழில் செய்யும் பெண் தன் வாழ்வின் ஏற்பட்ட சலிப்பின் காரணமாக தற்கொலை செய்ய முயல்கிறாள். அப்போது புதிதாக வரும் ஒரு வாடிக்கையாளரைப் பார்க்கிறாள். டெர்லின் ஷர்ட்டும் எட்டு முழ வேட்டியும் அணிந்த மனிதர் அவர். மற்ற வாடிக்கையாளரைப் போல இல்லாமல் வந்தவர் அவளை தன் மென்மையான பேச்சினால், ஆதரவான பார்வையினால் மட்டுமே தேவயானையை அணுகுகிறார். தேவயானையை ஒரு பெண்ணாக, ஓர் உயிராக, உணர்வுகள் உள்ளவளாக

காண்கிறார் அவர். தான் இது வரை கண்டிராத ஒரு புது அனுபவமாக அதை உணர்கிறாள் அவள். அது அவளுக்கு மிகப் பெரிய ஆறுதலாக இருந்தது. அவனுடன் இருக்கும் நேரங்களை அவள் பொக்கிஷமாய் உணர்கிறாள். அதிசயத்துடன் அனுபவிக்கிறாள். மீண்டும் அவர் எப்போது வருவார் என்று எதிர்பார்க்கிறாள்.

கதையின் முடிவில் தான் தெரிகிறது அப்படி ஒரு ஆளே இல்லை. அப்படி ஒரு உதாரண புருஷனை காண வேண்டும் என்ற அவள் ஆள்மன ஆசையே கனவாக வந்து அவளின் தற்கொலை முயற்சியை தடுத்திருக்கிறது என்று. ஒரு விலை மாதுவின் மனதில் இருக்கும் என்றும் நிறைவேறாத ஆசை என்னும் உணர்வை மையமாகக் கொண்டது இக்கதை.

7. ஓடிய கால்கள் (விழிகள், நவம்பர் 1981)

ஏதோ ஒரு உறுதியற்ற வழக்கின் காரணமாக கைது செய்யப்பட்டு லாக்கப்பில் இருக்கும் கைதி எவ்வாறு போலீஸாரின் அர்த்தமற்ற அசட்டையான முரட்டுத்தனமான போக்கினால் வேதனைக்குள்ளாகிறான் என்பதை இக்கதை கூறுகிறது. பதவியில் இருப்பவன் கேட்க ஆளின்றி இருக்கும் ஒரு நலிந்த சாமானியனை எவ்விதம் ஒடுக்குகிறான் என்பதை கண்முன் விரிய வைக்கிறது. அடியில் உணரப்படும் உடல் வலியை துல்லியமான வார்த்தைகளால் இக்கதையில் உருவகப்படுத்தியிருக்கும் விதம் ஆச்சிர்யமூட்டுகிறது.

'கைதியின் உடல், நீண்ட நேரம் தன்னைத் தானே உணர்வுகளின் சீண்டல்களிலிருந்தும், வெறித்தாக்குதல்களிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை. விரைவில் உடல் வெருண்டு இறுகியது. அது தனித்தனிப் பகுதிகளாத் துடித்தது. உடலின் ஒவ்வொரு மூலையிடுக்கிலும் அப்படி ஒரு தாக்குதல்; நரம்புகளைச் சுண்டி இழுத்து தன் இச்சைப்படி செயல்படாதவாறு முடக்கிவிடும், சொடுக்கு சதைகளை கவ்விக்கொள்ளும், நட்டுவாய்க்காலியின் பிடி இருதயத்தைப் பந்து போல் துள்ள வைக்கும் திகைப்பு. காதுகளிலே ஒரு அடைப்பு. கண்களை திறக்கவொட்டாது தடுக்கும் சதை இழுப்பு'[11] என்று வலி என்னும் உணர்வை வெகு துல்லியமாக வெளிப்படுத்தியிருக்கும் சிறுகதை இது.

எஸ். ராமகிருஷ்ணன் அவர்கள் தனது '100 சிறந்த சிறுகதைகள்' என்ற நூலில் தமிழில் இது வரை வெளிவந்த மொத்த சிறுகதைகளின் 100 மிகச்சிறந்த சிறுகதைகளை தொகுத்து வெளியிட்டுள்ளார். இச்சிறுகதைத் தொகுப்பில் 'டெர்லின் ஷர்ட்டும் எட்டு முழ வேட்டியும் அணிந்த மனிதர்' மற்றும் 'ஓடிய கால்கள்' ஆகிய இரண்டு சிறுகதைகளும் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.[12]

முடிவுரை:

ஜி. நாகராஜனின் சிறுகதைகள் பலதரப்பட்ட அனுபங்களைச் சொல்லும் கதைகளாக விளங்குகின்றன. என்றாலும் பாத்திரத்தின் உணர்வால் அமைந்த கதைகள் என்ற வகைப்பாட்டின் கீழ் அமையும் சிறுகதைகள் காமம், பசி, வலி, ஏக்கம், மனக்குறை, வாழ்க்கை மீதான அதிருப்தி, புரியாத வினாக்கள் போன்ற பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளன. அவ்வுணர்வுகள் எழுத்தின் வழியே படிக்கும் வாசகர்களையும் அனுபவிக்க வைக்கின்றன; மனதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அதனால் ஜி. நாகராஜனின் சிறுகதைகள் வாசகர்கள் மனதில் நிலையான இடத்தைப் பெறுகின்றன.

அடிக்குறிப்புகள்:

1. சிவக்குமார். கி, படைப்பிலக்கியம், தமிழ் இணையக் கல்விக்கழகம்.
2. www.ta.wikipedia.org / புனைகதை
3. சிவத்தம்பி, கா, தமிழில் சிறுகதைகளின் தோற்றமும் வளர்ச்சியும், ப. எண். 15.
4. பிரேமா.சி, சிறுகதை ஓர் அறிமுகம், www.tamilvirtualuniversity.org, ப.எண்.27
5. தமிழ் விக்கி தகவல்கள், https://tamil.wiki
6. ராஜமார்த்தாண்டன், ஜி. நாகராஜன் படைப்பாக்கங்கள், ப.எ.289.
7. மேலது, ப.எண். 213
8. மேலது, ப.எண். 219
9. மேலது, ப.எண். 227
10. மேலது, ப.எண். 425
11. மேலது, ப.எண். 432
12. ராமகிருஷ்ணன். எஸ், 100 சிறந்த சிறுகதைகள், பாகம் 1 & பாகம் 2, தேசாந்திரி பதிப்பகம், ஜனவரி, 2018.

துணைநூற்ப்பட்டியல்

1. சிவத்தம்பி, கார்த்திகேசு, தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், 1980, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.
2. பிரேமா, இரா, சிறுகதை 1 , பாடநூல், தமிழ் இணையப் பல்கலைக்கழகம், சென்னை

3. ஞானமூர்த்தி, தா. ஏ., இலக்கியத் திறனாய்வியல், 2019, ஐந்திணை பதிப்பகம், சென்னை
4. வேங்கடசாமி, மயிலை சீனி., ஆய்வுக்களஞ்சியம் 17, தமிழ் இலக்கிய வரலாறு- கிறித்துவமும் தமிழும், இளங்கனிப் பதிப்பகம், சென்னை- 17
5. பாக்யமேரி, வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு (செம்மை மற்றும் விரிவுப் பதிப்பு), பூவேந்தன் பதிப்பகம், சென்னை.
6. சிவக்குமார்.கி, படைப்பிலக்கியம், தமிழ் இணையக் கல்விக்கழகம், www.tamilvu.org
7. மணி. ச, நாவலும் பிற இலக்கியப் படைப்புகளும், தமிழ் இணையக் கல்விக்கழகம், www.tamilvu.org
8. தமிழ் விக்கிபீடியா, புனைகதை, www.ta.wikipedia.org
9. பஞ்சாங்கம். க, தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு, 1991, அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர்.
10. தேவகி. அ, தமிழ் சிறுகதையின் போக்குகள்(தமிழ் இணையப்பல்கலைக்கழகம், www.tamilvu.org
11. இரவிச்சந்திரன், தி.கு, சிக்மண்ட் ப்ராய்டு உளப்பகுப்பாய்வு அறிவியல்.
12. சுஜாதா, விவாதங்கள் விமர்சனங்கள்
13. மு. வரதராசன் தமிழ் இலக்கிய வரலாறு
14. ராஜமார்த்தண்டன், ஜி நாகராஜன் படைப்பாக்கங்கள், 2023, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்
15. சுந்தர ராமசாமி, நினைவோடை- ஜி நாகராஜன், நவம்பர், 2006, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்
16. மோகன், சி, இந்திய இலக்கியச் சிற்பிகள்- ஜி நாகராஜன், 2015, சாகித்ய அகாதெமி, புது டெல்லி.
17. இராமகிருஷ்ணன். எஸ், 100 சிறந்த சிறுகதைகள், தேசாந்திரி பதிப்பகம், சென்னை.
18. www.ta.wikipedia.org

License
Copyright (c) 2025 Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.